# கறுப்புச் செய்தி

சுபா



ON

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | கறுப்புச் செய்தி | 5 |
| 2 | உயிராசை | 111 |
| 3. | திரவியம் தேடு | 190 |


# கறுப்புச் செய்தி

## முன்னுரை 1

அவன் நல்ல உயரம். ஆறடிக்குச் சற்றுக் குறைவாய் இருந்தான். கொஞ்சம் ஒல்லியாய் அந்நாளைய நாகேஷை யும், இந்நாளைய மைக்கேல் ஜாக்ஸனையும் நினைவுப் படுத்தினான். ஜீன்ஸ் பாண்ட் நிச்சயம் ஐந்தாறு வருட சரித்திரம் கொண்டது. அங்கங்கே வெளுத்திருந்தன. ஷூ அவன் கால்களை இறுகப் பற்றியிருந்தது. மிகவும் டைட்டான ஷூ. அதன் தையல் போடப்பட்டிருந்த இடத்தில் எல்லாம் நூல் அதன் நிறத்தை இழந்திருந்தது. ஷூ 'இப்போதா, இன்னும் சிறிது நேரத்திலா?' 'எப்போது பிய்ந்து போகட்டும்' என்று கேட்டுக் கொண்டிருந்தது.

அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் ஒரு வேதனை வெளிப்பாடாக சிய்யீங்க், சிய்யீங்க் என்ற ஷூத்தோல் முனகியது. அவன் அணிந்திருந்த ஜெர்கின் காரணமாக அவன் கொஞ்சம் நவீனமாகத் தெரிந்தான்.

ஜெர்கினின் ஜிப் மார்பில் பாதி வரை இறங்கி இருந்தது. திறந்திருந்தது. ஏதோ ஒரு பூப்போட்டச் சட்டை அணிந்திருந் தான்.

தலை கலைந்திருந்தது. அவன் நடந்து கொண்டிருந்தான், நிதானமாக. தெருவிளக்கு ஒவ்வொரு முறை அவன் முகத்தில் பாதி வெளிச்சம் விழுந்தபோதும் அவன் முகம் சாதாரணமாகத்தான் தெரிந்தது. தெரிந்த கண்ணில் லேசான பயமும் கலக்கமும். மூக்கின் நேர் சீர், மோவாயின் வளைவில் ஒரு சின்னக்குழி அவனுடைய முகத்திற்கு லேசாகப் பெண் மையைப் பூசியது. அவன் மூச்சிரைத்தான். யாரோ துரத்தி வந்ததால் அவன் ஓடியதால் ஏற்பட்ட மூச்சிரைப்பில்லை அது. உணர்ச்சி வசப்பட்டவனின் மூச்சிரைப்பாக இருந்தது அவனுடைய மூச்சிரைப்பு. கூண்டில் அடைபட்ட புலி இந்த மூலையையும், அந்த மூலையையும் தொட்டுத் தொட்டுத் திரும்பி நடக்கும்போது என்ன மன நிலையில் இருக்குமோ அந்த மனநிலையில் இருந்தான்.

அவன் நடந்து கொண்டிருந்தது மேற்கு மாம்பலத்தின் ஓர் அமைதியான சந்தில். அது ஒன்றும் பணம் நிறைந்த சந்து இல்லை. ஏழ்மை எதிரொலிக்கும் தெருக்குழாயும் அதன் அதூய்மையான சுற்றுப்புறமும். மாடு ஒன்று கட்டியிருந்த தலையை விட்டு விடுபட முடியாமல் அது ஏற்படுத்திய அசுத்தத்தில் கண்ணீருடன் வீற்றிருந்தது. குடிகாரன் ஒருவன் சந்தின் இரு கரைகளையும் தொட்டுத் தொட்டு நடந்தான். மேலே சூரியன் இல்லை. நிலா இல்லை. நிலா பணக்கார வீட்டுக் குழந்தை சாப்பிடுவதற்காகக் காட்சி தரப் போய் விட்டதோ என்னவோ!

மேகங்கள், மேகங்கள், மேகங்கள், நட்சத்திரங்கள். நட்சத் திரங்கள்.

அவன் சந்தில் இருந்த ஒரு சின்ன வீட்டுக் கதவை மெல்லத் தட்டினான். கதவு உடனே திறக்கப்பட்டது.



திறந்தவள் அப்படி ஒன்றும் சிருங்காரி இல்லை. தடித்த உதடுகள் கொண்டிருந்தாள். தடித்த உதடுகளைக் கொண் டிருக்கும் பெண்களைப் பற்றி வாத்ஸ்யாயனர் என்ன கருத்து வைத்திருக்கிறாரோ அதற்கு 100ங்கீழ் 100 ஒத்துப் போகக் கூடியவளாகத் தெரிந்தாள். பவுடர், மட்டமான சென்ட். சூழ்நிலையின் வினோத மணம். அவள் உடலின் அனுபவச் சுருக்கங்கள் எல்லாமே அந்த இடத்தின் தரத்தைப் பார்ப்பவர் களுக்குத் தெரிவித்தன.

''வாங்க. நீங்க எல்லாம் வர்ரதுக்கு நாங்க ரொம்பக் குடுத்து வச்சிருக்கணும் சாரு'' என்றாள். கதவை அவன் மேல் சரிந்து விழுந்து சார்த்தினாள். அவன் சற்று ஒதுங்கினான். அவள் தன் மேல் பட்ட இடத்தை உடனே துடைத்தான். அவள் அதைக் கவனிக்கவில்லை.

கதவைச் சார்த்திவிட்டுத் திரும்பியவள் அவன் கையைப் பற்றப் பார்க்க, அவன் அதை மறுக்கப் பார்க்க, ''இவ்ளோ தூரம் வந்துட்டு வெக்கப்பட்டா எப்படி. உள்ள வாங்க. உங்களுக்கு என்னா வேணுமோ எடுத்துக்குங்க'' என்றாள். அவன் கைப் பற்றி உள்ளே அழைத்துப் போனாள்.

கட்டில் இருந்தது. மட்டமான ஊதுவத்தியின் மணம் மூச்சைத் திணறடிக்கும் போல் இருந்தது. பூக்கள் இறைந் திருந்தன. அவன் வருகைக்காக ரூம் அழகு படுத்தப்பட் டிருந்தது போல் இருந்தது.

அவன் உள்ளே நுழைந்தான்.

''இருங்க சாரு. கொஞ்சம் பால் கொண்டு வரேன்.''

அவள் உள்ளே போனாள். அவன் பாண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு சர்ஜிகல் கையுறை செட் எடுத்தான். கைகளில் மாட்டிக் கொண்டான் பின் மற்றொரு பாக்கெட்டில் இருந்து ஒரு நைலான் கயிற்றை எடுத்தான். கைகளைப் பின்னால் வைத்து மறைத்துக் கொண்டான்.

அவள் பால் டம்ளருடன் உள்ளே வந்தாள். கட்டிலுக்கு அருகில் இருந்த ஸ்டூலில் அந்தப் பாலை வைத்தாள். திரும்பினாள்.

''இந்தப் புஸ்தகத்தைப் படிச்சிருக்கீங்களா?'' என்று ஒரு புஸ்தகத்தை நீட்டினாள்.

அதிவீர பாண்டியன், கொக்கோகர், வாத்ஸ்யாயனர் மூன்று பேரும் சேர்ந்து எழுதிய புத்தகம் போல் அட்டைப்படம். ஒரு பெண்ணும் இரு இளைஞர்களும்.

அவன் முகம் லேசாக வியர்த்தது.

''புதுசா?'' என்று கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

''இருங்க. நான் இன்னொரு புஸ்தகம் காட்றேன். அதைப் பாத்தீங்கன்னா அப்படியே அசந்து போய்டுவீங்க. அது இதுக்கு மேல இருக்கும்'' அவள் வைத்திருந்த புத்தகத்தை அருகே கட்டிலில் வைத்து விட்டு, அறையில் சுவரிலேயே ஷெல்ஃப் மாதிரி அமைந்திருந்த ஓர் அமைப்பின் பக்கம் சென்றாள். அந்த அறையில் இருப்பவர் அறிவாளி என்று காட்டுவதற்காகவோ என்னவோ ஷெல்ஃபில் நிறைய புத்தகங்கள். எல்லாம் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. முதுகு காட்டின. முதுகில் தலைப்புகள் ஏறி இருந்தன. வினோதமான புத்தகத் தலைப்புகள். தி செக்ஸ் லைஃப் ஆஃப் இன்செக்ட்ஸ். ஓஷோ. தி மெஸன்ஜர் ஆஃப் தி அல்மைட்டி, அலிபாபா அண்ட் ஃபார்ட்டி தீவ்ஸ். ஹிந்தித் தலைப்பு. மலையாளத் தலைப்பு, குஜராத்தித் தலைப்பு. எல்லா மொழிகளிலும் எல்லா பொருள்களிலும் புத்தகங்கள்.



நான்தான் உண்மையான தேசீயவாதி என்று அந்தப் பெண் சொன்னால் அவன் மறுத்திருக்க மாட்டான்.

அவள் குனிந்தாள். அவனுக்கு அவளுடைய பின் பக்கத்தைக் காட்டிக் கொண்டு ஷெல்ஃபில் கலைத்து அவள் அவனுக்காகக் காட்டுவதற்காக ஏதோ பிரத்யேகப் புத்தகம் ஒன்றைத் தேடினாள்.

''எல்லாம் நம்ப நண்பருங்க குடுத்தது. அதான் எல்லா பாஷையிலயும் புஸ்தகங்க இருக்குது'' என்று சிரிப்பினூடே சொன்னாள்.

அவன் சட்டென்று எழுந்தான். அவளை நெருங்கினான். அவள் மேல் படர்ந்தான்.

''மூடு வரதுக்கு இவ்ளோ நேரமாச்சா?'' என்று அவள் வினவினாள். இன்னும் புத்தகம் தேடினாள்.

அவன் கையை முன்னுக்குக் கொண்டு வந்தான். நைலான் கயிற்றை சட்டென்று அவள் கழுத்தின் முன் தாலி மாதிரி ஊஞ்சலாட வைத்து ஒரு சுற்று சுற்றி...

சாவுடி, சாவுடி, சாவுடி, சாவுடி.

ஒரே இறுக்க்க்க்க்.

அவளால் குரல் எழுப்ப முடியவில்லை. அவள் கைகள் அந்தரத்தில் அல்லாடின. ஆதாரம் தேடின. ஷெல்ஃபில் இருந்த புத்தகங்கள். அத்தனையும் கலைந்தன. சரிந்தன. கீழே விழுந்தன. விரிந்தும், விரியாமலும் அவள் தொய்ந்தாள்.

அவளை அவன் விடுவித்தான். நைலான் கயிற்றை எடுத்து பழையபடி தன் பாண்ட் பாக்கெட்டில் போட்டுக்

கொண்டான். அங்கிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான்.

அவனுள் அலைகள் ஓய்ந்து கொண்டிருந்தன. இதயத் துடிப்பு சீராகிக் கொண்டிருந்தது. மூச்சிரைப்பு அடங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய கீழுதட்டில் ரத்தம் தெரிந்தது. அவனுடைய பல் அழுந்தி, உதடு கிழிபட்டதால் வெளிப் பட்ட ரத்தம், அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.

அந்த அறையிலிருந்து வெளியே வந்தான். வீட்டிலிருந்து வெளியே வந்தான். வெளியில் பனி இறங்கிக் கொண்டிருந்த மார்கழிப் பனி.

அந்தப் பனியில் நனைந்து கொண்டே அவன் விரைவாக நடந்து சென்றான். மாடு 'அம்மாஹ்ஹ்ஹ்' என்று தீனமாக அலறியது.

## முன்னுரை 2

அது ஒரு அடுக்கு மாடிக் கட்டிடக் குடியிருப்பு. கடற் கரைப் பிரதேசத்தில் அமைந்திருந்தது. சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டவை. அந்தப் பிரதேசமே புதிதாக உரு வாக்கப்பட்ட பிரதேசம். அதனால் எல்லா சாலைகளும் நேர்க்கோடாக அமைந்திருந்தன. சுத்தமாக இருந்தன. சாலையின் இரு புறங்களிலும் மணல் பார்டர். பிரதேசத்தில் துள்ளி விளையாடிய கடல்காற்று விடாமல் சுருதி போட்ட கடல் அலைகள்.

அந்த அடுக்கு மாடிக்குடியிருப்புக்கு காம்பவுண்ட் சுவர் இருந்தது. வாசலில் காபின் இருந்தது. காபினில் கூர்க்கா இருந்தான். கூர்க்கா மனைவி சுட்டுத் தந்த ரொட்டியை பச்சை



வெங்காயம், பச்சை மிளகாய் சகிதம் சாப்பிட்டுக் கொண்டிருந் தான்.

அவன் உள்ளே நுழைந்ததைப் பார்த்தான். ஆனால் சாப்பிடுவதை விட்டு விட்டு எழுந்து வரவில்லை. காரணம் வந்தவன் படித்தவனாகத் தெரிந்தான். ஷூ, ஜீன்ஸ், ஜெர்கின்.

முன்பு இதுபோலத்தான் ஒருவனை நிறுத்தி வைத்து விசாரித்து அவன் மந்திரி ஒருவனுக்குத் தூரத்துச் சொந்தமாய் இருக்க நேர்ந்து, அதனால் சில சிக்கல்களை கூர்க்கா அனுப விக்க நேர்ந்ததால் இப்போதெல்லாம் கொஞ்சம் படித்தவர்கள் போல் யார் தோன்றினாலும் அவன் கேள்விகள் கேட்பதில்லை.

அவன் உள்ளே நுழைந்தான்.

காலுக்குக் கீழே கிரானைட் தரை வழுக்கியது. கட்டிடத் தின் வெளிப்புறப் புல்வெளி, சறுக்கல்கள், ஊஞ்சல், சீசா, குழந்தைகள், சின்னப் பெரிய குழந்தைகள் அத்தனைப் பேரும் அவரவர் வயதிற்குரிய ஆட்டங்கள் ஆடிக் கொண்டிருந்தனர்.

இவன் ரிசப்ஷன் மாதிரியான ஒரு ஹாலில் பிரவேசித் தான். காலுக்குக் கீழ் இன்னும் கிரானைட் ஓர் ஓரத்தில் செயற்கை நீரூற்று. நீரூற்றிக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் சுவரில் பெரிய போர்டு. சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷ னில் அரைவல் - டிபார்ச்சர் போர்டு சைஸில் இருந்தது. எந்தெந்த மாடியில் எந்தெந்த ஃப்ளாட்டில் யார் யார் வசிக்கிறார்கள் என்ற தகவலை சுமந்த போர்டு அது. அவன் அதில் ஒவ்வொரு பெயராகப் பார்த்துக் கொண்டே வந்தான்.

நர்த்தகி E. 5 என்று பார்த்தவுடன் மற்ற பெயர்களைப் பற்றிக் கவலைப்படாமல் லிஃப்ட் இருக்கும் திசை நோக்கி நடந்தான். இரண்டு லிஃப்ட்கள் இருந்தன. திறந்து மூடும் கொலாப்சிபிள் கேட் வசதி கொண்ட லிஃப்ட்கள் இரண்டும் கீழே இருந்தன. அவன் ஏற்றிச் செல்வதற்காகக் காத்திருந்தது போல் தோன்றின.

இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க அவன் சற்று நேரம் யோசித்தான்.

'ஆக் பாக் வெற்றிலை பாக்டாம் டூம் டை' என்று சிறு வயது மனனம் ஒன்றை உபயோகித்து விரலால் இரண்டு லிஃப்டுகளையும் மாற்றி மாற்றிச் சுட்டிக் காட்டிக் கடைசியில் ஒரு லிஃப்டைத் தேர்ந்தெடுத்தான்.

இடது பக்க லிஃப்ட்.

அதன் கொலாப்சிபிள் கேட்டைத் திறந்தான். கிரீஸ் எல்லாம் போட்டு பராமரிக்கப்பட்ட லிஃப்ட் என்பதால் ஒரு சத்தமும் இன்றி கதவு நழுவியது.

லாக்கெட்டில் பிஸ்டன் ஒரு சிரமுமின்றி நழுவுவது போல.

அவன் லிஃப்டில் நுழைந்து மூடிக் கொண்டான்.

லிஃப்டின் பித்தான்களில் ஏ.பி.ஸி.டி.ஈ.

அவன் E பித்தானை அழுத்தினான். லிஃப்ட் 'கொய்ங்க்' என்ற ரீங்காரத்துடன் மேலேறியது.

Eயில் நின்றது. கதவைத் திறந்து வெளிப்பட்டு கதவை மூடினான்.

காலுக்குக் கீழே மார்பிள் தரை. நடந்தான். அவன் ஷூக்கள் முனகின. அவன் தேடி வந்த E.5 வந்ததும் நின்றான். நல்ல பணம் இழைக்கப்பட்ட கட்டிடம், கதவு தேக்கு, கதவில் சில அலங்காரங்கள். சிம்பிளி மார்வலஸ்.

மணிப்பித்தான் உள்ளங்கை அகலத்திற்கு இருந்தது.

அழுத்தினான். உள்ளே பட்சி கத்தியது.

திறந்தவள் வெகு அலங்காரமாய் இருந்தாள். நர்த்தகி!

அவனைப் பார்த்ததும் கண்களை அகல விரித்தாள். வியப்பு, மகிழ்ச்சி இரண்டையும் இணைத்துக் கண்களில்



காட்டினாள். சில பெண்கள் கண்களாலேயே எதையும் பேசு கிறார்கள். கண்களாலேயே அடிமைப்படுத்துகிறார்கள். கண்களாலேயே பெரிய பெரிய சாம்ராஜ்யங்களை வீழ்த்து கிறார்கள். கிளியோபாட்ரா போல. சீதையைப் போல. திரௌ பதியைப் போல.

அவனுக்கு சமீபத்தில் படித்த ஒரு கவிதை மனதின் மேல் தளத்தில் பரவியது. கவிதை எழுத்துக்கள் மங்கலாய்த் தெரிந்தன. என்ன கவிதை அது? நினைத்துப் பார்த்தான். சட்டென்று நினைவிற்கு வரவில்லை. இந்த இடத்தை விட்டுப் போவதற்குள் கவிதை நினைவிற்கு வராவிட்டால் இந்த இடத்தை விட்டுப் போவதில்லை என்று மனதிற்குள் மூர்க்கமாக நினைத்தான். என்ன ஆனாலும் சரி. இந்த நேரத்தில் கவிதையை மறந்து என்னை மாட்டவா பார்க் கிறாய்? உனக்காயிற்று. எனக்காயிற்று. நான் உன்னோடு பொருவேன். சமர் புரிவேன். களம் புகுவேன். நீ ஒளித்து வைத்தக் கவிதையை மீட்பேன். வாயால் உச்சரிப்பேன். அதன் பின்பே இந்த இடத்தை விட்டு அகலுவேன். அதுவரை நான் மாட்டினாலும் சரி. ஜெயிலுக்குப் போனாலும் சரி. தூக்கில் தொங்கினாலும் சரி.

"ஓ... ஹலோ... வெல்கம்... வெல்கம்" என்றாள் நர்த்தகி.

அவன் பதிலுக்குச் சிரித்தான். நல்ல கவர்ச்சியான சிரிப்பு. அவன் முகத்தில் ஒளிர்ந்த லேசான பெண்மை நர்த்தகியின் உடலில் சில அந்தரங்க நரம்புகளை மீட்டது.

"உள்ளே வாருங்களேன். கூடாதா?" அவளின் வாக்கியத் தில் கெஞ்சல் இருந்தது. கொஞ்சல் இருந்தது.

அவன் நுழைந்தான்.

கதவைக் கொஞ்சம் பிரயத்தனப்பட்டு அவன் தள்ளிக் கொண்டு வர வேண்டி இருந்ததற்குக் காரணம், கதவில் பொருத்தப்பட்டிருந்த டோர் க்ளோஸர். அவன் உள்ளே

நுழைந்ததும் அவனுக்குப் பின்னால் கதவு தானாக மெல்ல நகர்ந்து 'கிளிக்டக்' என்று மூடிக் கொள்ள, அவன் திடுக் கிட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தான்.

அவனது திடுக்கிடல் கண்டு அவள் கலகலவென்று சிரித்தாள்.

''என்ன, பயமா?'' என்று கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

''இங்கே யாரும் வரமாட்டார்கள். என்னையும் உங்களை யும் தவிர வேறு யாரும் இங்கே இல்லை. என் ஹஸ்பண்ட் இப்போதுதான் துபாயில் இருந்து போன் பண்ணினார். திரும்பி வர இன்னும் ஒரு மாதமாகும்.''

''இல்லை. உன் கணவன் நாளை வந்து விடுவான்'' என்றான் அவன்.

''ஹௌ கம். எப்படி? எப்படி?'' என்று கேட்டாள். குரலில் போலியான ஒரு வியப்பைத் தடவி இருந்தாள்.

''உன்னைப் போன்றவளை விட்டு விட்டு வெளியூரில் ஒரு மாதம் இருக்க எந்தக் கணவனாலும் முடியாது.''

அவள் சிரித்தாள். போலியோ, உண்மையோ, அவள் சிரிப்பில் ஒரு வசீகரம் இருந்தது. முத்துக்களை ஒரு ஓலைக் கூடையிலிருந்து பளிங்குத் தரையில் கொட்டினால் என்ன சத்தம் கிடைக்குமோ அந்த சத்தம் - ஸாரி - சங்கீதம் பிறந்தது.

''கம் மை டியர் லவர் பாய். உள்ளே வாங்களேன்.''

போனான். அவள் நேரே அவனை படுக்கையறைக்கு இட்டுப் போனாள். அவள் நடையில் அவசரம் இருந்தது.

எத்தனை ஆண்கள் இந்த நெருப்பில் எரிந்திருப்பார்கள்? எத்தனை விட்டில் பூச்சிகள் தங்கள் வாழ்க்கையை இழந்திருக்கக் கூடும். எத்தனை இளம் பிள்ளைகள் மனம் மாசு பட்டிருப்பார்கள்!



என்ன கவிதைடா அது? என்ன கவிதை? எப்படித் தொடங் கும்? சொல்... சொல்... சொல்லேன். மனமே சொல்லேன்.

அந்தரத்தில் உப்பரிகை.

அப்புறம், சொல்லேன்.

அந்தரத்தில்...

உப்பரிகை!

அவள் அவன் தோளைத் தொட்டுத் திருப்பினாள். அவன் திரும்பினான்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்?''

''எனக்குப் பசியில்லை.''

''ஏதாவது சாப்பிடுங்களேன்.''

''சரி. ஒரு ப்ளேட் கவிதை.''

''என்னது?'' என்று புரியாமல் கேட்டாள் நர்த்தகி.

''கவிதை போன்ற நீ'' என்றான் அவன்.

''இவ்வளவு பேசத் தெரியுமா உங்களுக்கு? முதலில் உங் களைப் பார்த்தபோது நான் என்ன நினைத்தேன் தெரியுமா?''

''என்ன நினைத்தாய்?''

''ரிஷ்யசிருங்கருக்கு நேர் வாரிசு என்று. உங்கள் முகம் அவ்வளவு தூரம் சலனம் எதுவும் காட்டாமல் என்னைப் பார்த்தது.''

''அப்புறம் நான் ரிஷ்யசிருங்கன் இல்லை என்று எப்படித் தெரிந்து கொண்டாய்?''

''என்னைப் பொறுத்த வரைக்கும் எந்த ஆணும் ரிஷ்ய சிருங்கன் இல்லை. ரிஷ்யசிருங்கன் கூட கடைசியில் பெண்மையிடம் தோற்றுத்தானே போனான்?''

''அப்படி என்றால் நான் தோற்று விட்டேனா?''

''இல்லை. இல்லை. என்னால் சில பேரைப் பார்த்தால் தாங்க முடிவதில்லை. எப்படி இருப்பார்கள் அவர்கள் என்று யோசிப்பேன்? மனதுக்குப் பிடித்து விட்டால் அவர்களை எப்படியும் அடைந்து விடுவேன். நான் அடைவது நான் விரும்புகிறவர்களிடம் தோற்றுப் போகத்தானே? என்னிடம் மயங்குபவர்கள் கடைசியில் என்னை ஜெயித்துத்தானே என்னை சந்தோஷப்படுத்துகிறார்கள்?''

''எனக்குப் புரியவில்லை.''

''வேண்டாம். ஏதாவது சாப்பிடுங்கள். அப்போதுதான் நன்றாக இருக்கும். ட்ரிங்க்ஸ் சாப்பிடுகிறீர்களா?''

''ம்.''

''என்ன வேண்டும்?''

''உனக்கு எது பிடிக்கும்?''

''வோட்கா.''

''அதையே எனக்கும் கொடேன்.''

''லெமனேட் சேர்த்து?''

''ஆம். லெமனேட் சேர்த்து. நிறைய ஐஸ் போட்டு.''

''நான் உங்களுக்கு வோட்கா கலந்து தருகிற மாதிரி இதுவரை யாருமே உங்களுக்கு வோட்கா கலந்து கொடுத்திருக்க மாட்டார்கள்.''



''எப்படிச் சொல்கிறாய்?''

''பாருங்களேன்.''

திரும்பி அவள் நடந்து ஃப்ரிட்ஜை அடைந்து அதைத் திறக்க ஃப்ரிட்ஜின் உள் விளக்கு எரிந்தது. அவள் குனிந்தாள். வோட்காவைத் தேடினாளா? இல்லை அவனைத் தூண்டினாளா? தெரியவில்லை.

அவன் கைகள் விரிந்து விரிந்து மூடின. மூச்சிரைத்தது. நரம்புகள் அத்தனையும் துடித்தன. கவிதை எங்கே? அது என்ன கவிதை.

அவன் பாக்கெட்டில் இருந்து கையுறைகள் எடுத்தான். அணிந்தான். நைலான் கயிற்றை எடுத்தான். அவனது மேல் பற்களில் ஒன்று கீழுதடை அழுத்தியது. அழுத்தினான். ரத்தம் வந்தது. வலிக்கவில்லை. நாக்கில்பட்ட ரத்தத்தின் சுவை அமுத சுவையாக இருந்தது. அபரிமிதமான சுவை. இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும். வேண்டும். வேண்டும்.

*ச்ச, ச்ச, ச்ச, ஐ காண்ட் ஸ்டாப் லவிங் யூ.*

*ஐ காண்ட் ஸ்டாப் ஸீயிங் யூ.*

*ஐ காண்ட் ஸ்டாப் ப்ரீதிங் யூ.*

*ச்ச, ச்ச, ச்ச.*

*ச்ச, ச்ச, ச்ச.*

இது இல்லை அவன் கவிதை. அவனது அழகு தமிழ்க் கவிதை.

அவன் சட்டென்று முன்னால் ஒரே ஒரு மௌனப் பாய்ச்சல் பாய்ந்தான். அவன் கையில் இருந்த நைலான் கயிறு

சினிமா ஹீரோவின் கையில் தாலிக் கொடி போல் ஊச லாடியது. அவன் அதை இரண்டு கைகளிலும் பற்றினான். விர், விர், விர் என்று சின்னப் பிள்ளைகள் சுற்றுவது போல் சுற்றினான்.

அவள் கழுத்தில் போட்டான்.

பாட்டில் நழுவி கார்ப்பெட்டில் விழுந்தது. ஒரு கண் ணாடிக் கோப்பை ஃப்ரிட்ஜில் இடித்து சிலுங் என்றது.

அவள் கைகளை அகல விரித்து உயரத் தூக்கி என்னவோ சொல்ல நினைத்து, என்னவோ கத்த நினைத்து, 'ஹெக்' என்ற விநோதமான ஒலியை அவளது தொண்டையி லிருந்து நழுவ விட்டாள். கண்கள் அகன்றன.

மரண பயம் என்பது மனிதனுக்குப் பொதுவான விஷயம். ஆண், பெண் பேதமின்றி அனைவரையும் ஆட்கொள்ளும் ஓர் உணர்வு. பய உணர்வின் காரணமாக மனிதர்கள் நடந்து கொள்ளும் விதங்களுக்கு எந்தவித அர்த்தமும் கற்பிக்க முடியாது. பய உணர்வின் காரணமாக விலங்குகள் இங்கு மங்கும் ஓடினால், சிறுநீர் கழித்தால், மற்ற கழிவுகளை வெளிப் படுத்தினால் நாம் பார்க்கும் போது எந்தப் பரிதாபமும் நம்மைத் தாக்குவதில்லை. கரப்பான் பூச்சி வெள்ளை ரத்தத்தை இழக்கும். தவளை ஏதோ ஒரு பிசினை இறைத்தோடித் தாவும். நாய், கேட்கவே வேண்டாம். மனிதர்கள் மரண பயம் உணர் விலும் மிருகங்களைப் போலத்தான் நடந்து கொள்வார்கள். கற்காலத்திற்குப் போய் விடுவார்கள். அவர்களது நாகரீகம். கோட் சூட் அணிந்து பிடித்தப் பெண்ணுடன் நுனிக்கால் கீழ் அமுந்த இசைக்கு ஏற்ப ஆடும் நடன நளினம், ஃபோர்க்கால் குத்தியெடுத்து, லிப்ஸ்டிக் கலையாமல், உறைமாட்டிய



கையில் அழுக்குக் கலவாமல் சாப்பிடும் நாசூக்கு எல்லாமே அடிபட்டுப் போகும்.

நர்த்தகி அந்த நேரத்தில் அப்படித்தான் ஆகிவிட்டாள். செண்ட் இல்லாமல் இருக்கவே இருக்காத அவளை மரணத் தின் துர்நாற்றம் தாக்கியது. தலையலங்காரம் கலைந்து விடும் என்பதற்காக, ஆசீர்வதிக்கும் பெரியவர்கள் தங்கள் உள்ளங்கைகளை அவள் தலைமேல் வைப்பதை அனுமதிக் காத நர்த்தகி இப்போது தலையை உலுக்கினாள். உலுக் கினாள். உலுக்கினாள். அப்படி உலுக்கினாள். அவனது சட்டைப் பித்தான்களில் முடி சிக்கியது. அவள் கேசம் பாழ். கேசம் தலையின் சதையை இழுத்தது. ஆனால் உயிர்... உயிர்... அது போகப் போகிறது. பாழாய்ப் போன கேசம் இருந்தால் என்ன? போனால் என்ன?

அவன் பலம் அசாத்தியமானது. இதனால் எல்லாம் அவன் கலங்கவில்லை. மனம் தளரவில்லை. அவள் கண்களில் தெரிந்த பயத்தையும் கெஞ்சலையும், 'என்னைக் காப்பாற்றேன்' எனும் திரௌபதி பிரார்த்தனையையும் அவன் உதாசீனம் செய்தான்.

பாம்புகளும், தேள்களும், நட்டுவாக்கிளிகளும், ஆண் தின்னிகளும் கொல்லப்பட வேண்டியவர்கள். தண்டிக் கப்பட வேண்டியவர்கள்.

ம்.

ம்.

ம்ம்ம்.

அவனுடைய கைகளின் இறுக்கம் அதிகரித்துக் கொண்டே போய், அவளது நாக்கு வெளியே வந்து ரத்தம் கசிய விட்டது.

கண்களில் சிவப்பு ஏறிக் கொண்டே போய் ஒரு நிலையில் அவளது இரு விழிகளில் ஒன்று கண் குழிவை விட்டு 'ப்ளக்' என்ற சின்னச் சத்தத்துடன் வெளிப்பட்டது.

போடீ. எங்கே போக வேண்டுமோ அங்கே போ. உன் ஆட்டத்தை என்னிடமா காட்டுகிறாய்? நானா இதற்கெல்லாம் மசிபவன். நான் நீட்ஷேவின் அடிமை. சவுக்குடன் அலைபவன். என் சவுக்கிற்கு நானூறு கூர் நாக்குகள். நாசமாக்குவேன். ஜாக்கிரதை.

அவள் எப்போதோ செத்துப் போயிருந்தாள். அவன் அவளை விட்டான். அரிசி மூட்டை முதுகிலிருந்து கீழே விழுவதுப் போல் விழுந்தாள் அவள்.

அவன் கட்டிலில் உட்கார்ந்தான். ஃப்ரிட்ஜின் மேல் ஒரு கோப்பையில் வோட்காவும் ஐஸும் லெமனேடும் கலந்திருந்தன. அந்தக் கோப்பையை எடுத்தான். குடித்தான். உதடில் இருந்த காயத்தில் ஆல்கஹால் பட்டு எரிந்தது.

அவனவன் இவர்களிடம் இருந்து எல்லாம் எப்படித் தப்புவது என்று பேகான்ஸ்ப்ரே தெளிக்கப்பட்ட கரப்பான்களாய் அலைகிறான். உதடு எரிகிறதாம். எரிந்து விட்டுப் போகட்டும். அனுபவி. உதட்டு எரிச்சலை அனுபவி. சாவை அனுபவிக்கிறாயே. இதையும் அனுபவி.

அவன் உதடில் காயம் பட்ட இடத்தைக் கடித்துப் பார்த்த போது சுவிட்ச் போட்ட மாதிரி கவிதை நினைவிற்கு வந்து விட்டது.

அப்பாடி. நான் ஜெயித்து விட்டேன்.

மனமே. அந்தக் கவிதையை உன்னால் எங்கே கொண்டு போய் ஒளித்து வைத்து விட முடியும்? கடைசியில் நான் கண்டு பிடித்து விட்டேன் பார்த்தாயா?



அவன் எழுந்தான்.

நடந்தான். கதவைத் திறந்தான். வெளிப்பட்டான்.

வராந்தா காலி. கதவு அவனுக்குப் பின்னால் ஆட்டோமாடிக் டோர்க்ளோஸரின் உதவியால் மெல்லச் சாத்தியது.

லிஃப்ட் நோக்கி நடந்தான்.

லிஃப்ட் அவன் விட்டு வந்ததற்குப் பின் யாராலும் அழைக்கப்படாமல் அதே மாடியில் அப்படியே இருந்தது. அவன் லிஃப்ட் கதவைத் திறந்தான். உள்ளே நுழைந்து பித்தானை அழுத்தினான். சிகப்பு பட்டனில் இருந்த சிகப்பு G கிரவுண்ட்.

தரைக்கு இறங்க வேண்டும்.

வானில் இருந்து மீள வேண்டும்.

உப்பரிகைகளை இனிமேல் உதாசீனம் செய்ய வேண்டும்.

அடடே. அந்த உப்பரிகைக் கவிதையை மறுபடியும் உதாசீனப்படுத்தி விட்டேனே. சொல்லிப் பார்க்க வேண்டும்.

எவ்வளவு அழகான கவிதை அது!

**அந்தரத்தில்**

**உப்பரிகை.**

**அதில் ஓர்**

**சொப்பனத்துச்**

**சுந்தரி!**

**நேர் கீழே...**

**பொருதிப் பார்க்க**

இரு மல்லர்கள்.
நெருங்கி வந்தார்.
கிசு கிசுத்தார்.
நீச மகள்!
ஞான மிலா
வெற்றழகுப்
பிண்டம்!
இதைப்
பெற்று விடப்
போரிடவா
அறிவு தாங்கு மிரு
பேரகலப்
புயங்கள்?
விட்டு விடு
என்று சொன்னார்.
விலகி
நின்றார்.
உப்பரிகை
நிலா
உள் முற்றம்
போயிற்று.

வெரிகுட். வெரிகுட். கவிதையை இன்னொரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான். தமிழ் நாவில் இனித்தது. கவிதை மனதில் தேனாய்த் தடவியது.

உப்பரிகை
நிலா
உள்முற்றம்
போயிற்று.



ஆமாம்.

உப்பரிகை நிலா, முற்றம் - உள் போய்விட்டது.

ஒரேயடியாக - ஒரேயடியாக.

இப்படி இன்னும் எத்தனை உப்பரிகைகள்? எத்தனை நிலாக்கள்? இன்னும் எத்தனை நிலாக்களை முற்றத்துள் அனுப்ப வேண்டும்?

அவன் குரலெடுத்துப் பாடிய கவிதை இன்னும் லிஃப்ட்டில் எதிரொலித்துக் கொண்டிருக்க அவன் ரிசப்ஷன் போன்ற இடம் வந்தான். செயற்கை நீரூற்று நீரில் ஒரு முறை கைகழுவி னான். கழுத்தில் பட்டிபோல் போட்டிருந்த கைக்குட்டையை எடுத்துக் கையைத் துடைத்தான்.

மறுபடி அதே இடத்தில் கைக்குட்டையை வைத்து விட்டு, அந்தக் கட்டிடத்தில் இருந்து வெளிப்பட்டு, விளை யாடிக் கொண்டிருந்த சிறுவர், சிறுமியரின் ஊடே நடந்து, காம்பவுண்ட் கேட் விட்டு வெளியே வருகையில், கூர்க் காவின் காபினைப் பார்க்க, கூர்க்கா இப்போது கண்களை மூடி ஒரு பீடியின் புகையை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அவன் சாலையில் இறங்கி, கடல் காற்றை சுவாசத்துக்குள் நிரப்பிக் கொண்டே, கடற்கரை மணல் நோக்கி நடந்தான்.

# 1



அந்த விசாலமான அறை அரசாங்கத்திற்குச் சொந்த மானது. அறையின் அமைப்பையும் அதில் குழுமி இருந்த வர்களையும் பார்த்தாலே அந்த விஷயம் தெரிந்து விடும்.

அறையில் சுவர்கள் இளம் பச்சை நிறத்தில் இருந்தன. ஜன்னல்களில் திரைகள் கரும்பச்சையில் தொங்கின. கரும்பச்சை திரைகள் முழுக்க இழுத்து விடப்பட்டிருந்ததால், வெளி வெளிச்சம் அறையின் கண்ணாடிச் சட்டங்களை ஊடுருவ முடியாமல் தவித்தது. அறைக்குள் செயற்கை இருட்டு. அந்த இருட்டை விலக்குவதற்காக எரிந்து கொண்டிருந்த மறைவான இடங்களில் பொருத்தப்பட்டிருந்த டியூப் லைட்கள். அறை நடுவே ஒரு மேஜை இருந்தது. பத்தடி நீளம், ஐந்தடி அகலம், அதன் மேற்பரப்பில் பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டு, அதன் மேல் கண்ணாடிப் பரப்பில், பிம்பங்கள் பிரதிபலிக்கும் வண்ணம் பூச்சாடி. தேநீர்க் கோப்பைகள். கண்ணாடி நீர் டம்ளர்கள். இரண்டொரு பேனாக்கள். எழுதுவதற்கு வசதியாக ஸ்கிரிப்ளிங் பாட்கள்.

அவ்வளவு பெரிய மேஜை அறையின் விஸ்தாரத்தில் அடிபட்டுச் சின்னதாகத் தெரிந்தது. மேஜையின் அந்தப் பக்கம் இரு நாற்காலிகளில் சீனியர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் சுவர் ஓரம் நின்றிருந்தார். அவர் காக்கி பேண்ட்டும் வெள்ளைச் சட்டையும் அணிந்து கையில் ஒரு ரோஸ்வுட் கழி வைத்திருந்தார்.

பின்னணியில் சுவரில் ஒரு தமிழ் நாட்டின் வரை படம் தெரிந்தது. மேஜையின் முன்னால் ஒரு கூட்டம் குழுமியிருந்தது. அத்தனைப் பேரும் நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். எல்லோருக்கும் சிக்கனமாக முடி. அனைவரும் காக்கி பேண்ட்டிலும், வெள்ளைச் சட்டையிலும் பார்ப்பதற்கு பளிச் என்று தெரிந்தார்கள். பொதுவாக எதிர் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்கள் அனைவரும் நடுத்தர வயதினராகவும், இளம் வயதினராகவும் தெரிந்தார்கள். எல்லோரும் சின்னதும், பெரியதுமான மீசை வைத்திருந்தார்கள். எல்லோர் முகத்திலும் இயல்பாகவே ஒரு கடுமை இருந்தது. அனைவரும் கைகளில் தேநீர்க் கோப்பை வைத்திருந்தார்கள். ஏ.சி. அறையான போதிலும் புகைப் பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். சிலர் புகைப் பிடித்தார்கள். சிலர் ஆவலுடன் தமிழ் நாட்டின் வரைபடம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்களில் கொஞ்சம் வயதானவராகத் தெரிந்தவர் எழுந்தார். அவரது மீசை சீராக நரைத்திருந்தது. காதோரங்களில் நரை இருந்தது. அவர் கால்களுக்குக் கொடுக்கும் வேலையை விட மூளைக்குக் கொடுக்கும் வேலை அதிகம் என்பதாலோ என்னவோ லேசாகத் தொந்தி.

கனைத்துக் கொண்டார்.

"நான் சொல்லட்டுமா? நீங்கள் சொல்கிறீர்களா தீனன்?" என்று பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து அவர் கேட்க, "இல்லை சபாநாயகம். நீங்களே சொல்லுங்கள்" என்றார் உட்கார்ந்திருந்தவர்.

சபாநாயகம் ஒரு சிகரெட்டை மேஜை மீதிருந்த சிகரெட் பாக்கெட்டில் இருந்து உருவி எடுத்துப் பற்ற வைத்தார். அந்த சிகரெட்டிற்கு நெருப்பு வைப்பதுதான் வாழ்க்கையிலேயே மிக முக்கியமான காரியம் போல் செய்தார். ஒரு முறை புகையை உள்ளே இழுத்து ஆழமாக வெளியே விட்டார்.

'டியர் ஆபீஸர்ஸ்' என்றார்.

அவருக்கு முன்னால் இருந்த ஆபீஸர்ஸ் நிமிர்ந்து உட்கார்ந்து அவரை அறிவுக் கூர்மையுடன் கவனிக்கத் தொடங்கினார்கள்.

'நாம் சட்டம் ஒழுங்கைக் காப்பதற்காகப் பதவியில் இருப்பவர்கள். காக்கிச் சட்டை போட்டுக் கொண்டு நம்மில் சிலர் போலீஸ்காரர்கள் என்று மக்களால் அறியப்படுகிறோம். நாம் அப்படி அறியப்படாமல் சாதாரண மனிதர்களாக சமூகத்தில் ஊடுருவி நம் வேலையைச் செய்து கொண்டிருக்

கிறோம். நம் வேலை சிக்கலானது யூனிஃபார்ம் மாட்டிக் கொண்டால் எந்த சமூக விரோதியும் நம்மைப் பார்த்துப் பயப்படுவான். ஓரளவிற்காவது யூனிஃபார்மிற்குள் இருக்கும் மனிதனுக்குப் பயப்படா விட்டாலும், யூனிஃபார்மிற்காவது பயப்படுவான். நம்மைப் பார்த்து எந்த சமூக விரோதியும் பயப்பட மாட்டான்.

காரணம், நாம் யூனிஃபார்ம் இல்லாதவர்கள். க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர்கள். பொது மக்களிடம் இருந்து கூட நமக்கு ஆதரவு கிடைக்காது. நாம் குற்றவாளியைத் துரத்தினால், ஏதோ தெருச் சண்டை என்று நினைத்து, மக்கள் அவரவர் வேலையைக் கவனித்துக் கொண்டிருப்பார்களே தவிர நமக்கு யாரும் உதவ முன்வர மாட்டார்கள்.''

''இவ்வளவு சங்கடங்கள் இருந்தும் நாம் இந்த டிபார்ட் மெண்ட்டில் இருப்பதற்குக் காரணம். நமக்கு அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் அங்கீகாரம், நம் மூளையின் திறமைக்கு அரசாங்கம் கொடுக்கும் மதிப்பு.''

''அரசாங்கம் இப்போது திடீரென்று ஒரு முடிவு எடுத் திருக்கிறது. ஊரில் இருக்கும் அத்தனை ரவுடிகளையும், கேடி களையும் அடக்க முடிவெடுத்திருக்கிறது. அரசியல் தலை யீடு இல்லாமல் இந்த வேலையைச் செய்வதற்கான அதி காரத்தைக் காவல்துறைக்கு அளித்திருக்கிறது. அங்கங்கே ரவுடிகள், கேடிகள் எல்லாம் வளைக்கப்படுகிறார்கள். வன் முறைக்கு யார், யார் காரணமாய் இருக்கிறார்களோ அவர் களையெல்லாம் உள்ளே தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.''

'இதெல்லாம் தெரிந்த விஷயம் தானேய்யா. புதிதாக ஏதா வது சொல்லேன்' என்று கத்தத் தோன்றியது. கேட்டுக் கொண் டிருந்த கூட்டத்தில் கடைசியாக இருந்த க்ருஷ்ணாவிற்கு.

க்ருஷ்ணா அதி இளைஞன். புதிதாக க்ரைம் பிராஞ்சில் சேர்ந்த ஆபீஸர். ஐ.பி.எஸ். படித்துவிட்டு க்ரைம் பிராஞ்சில்



வேலை செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி வந்து சேர்ந்தவன்.

சூரசம்ஹாரத்தில் தோன்றிய கமல்ஹாசனின் மீசை யாலும், வெற்றி விழாவில் தோன்றிய கமல்ஹாசனின் மீசையாலும் கவரப்பட்டு நடு நாயகமாக ஒரு மீசையை வைத்திருப்பவன். அதனாலேயே அந்த இரு மீசைகளுக்கும் இடைப்பட்ட தரமாக ஒரு மீசையை வைத்திருந்தான்.

அவன் மனைவி சத்யா. இளமையானவள். சத்யா என்ற பெயர் கொஞ்சம் ஆண் பிள்ளைத் தனமாகத் தோன்றி னாலும், சத்யாவைப் பார்ப்பவர்கள் அப்படி நினைக்க மாட்டார்கள். சத்யா அவ்வளவு அழகு. முக்கியமான மீட்டிங்கின் போது சத்யாவைப் பற்றிய அழகுக் குறிப்புகள் வேண்டாம். அந்த சத்யா எனும் அழகான மனைவி அந்த மீசையைப் பற்றிக் கிள்ளும்போது அவனுக்கு இன்ப வேதனையாய் இருக்கும். எவ்வளவுதான் ஆண்மையும், புஜபராக்கிரமும், ரத, பதாதி, துரக, யானைப் படையை நடத்திச் செல்லும் திறமை இருந்த போதிலும் ஆண் என்பவன் அவனது அழகான மனைவிக்கு அடிமை என்னும் உலக நியதிக்கேற்ப, க்ருஷ்ணாவும் அவன் மனைவிக்கு அடிமை. இப்போது அவனுக்கு மனைவியின் மடியில் போய் விழுந்து முகத்தைப் புதைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

கல்யாணமாகி ஒரு நான்கு வருட காலம் கழித்தும் அவனுக்கு அப்படித் தோன்றக் காரணம் ஒரு வேளை, அவனுக்கு இன்னும் குழந்தை பிறக்காததாய் இருக்கலாம். அல்லது மனைவி இன்னும் கட்டுக்குலையாதவளாக இருப்ப தால் இருக்கலாம். அல்லது இன்னும் அவனும் அவளும் அவர்களது காதல் நாட்களிலேயே வாழ்ந்து கொண்டிருப்ப தால் இருக்கலாம். அல்லது இன்னும்...

தோள் மேல் ஓர் கை படர்ந்து க்ருஷ்ணா கலைந்து திரும்பினான்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த அதிகாரிதான் அவனது கனவுலகத்தில் கத்தி போட்டிருந்தார். யோவ், ஒனக்கு கல்யாணம் ஆகி நிறைய நாட்கள் ஆகியிருக்கலாம். குழந்தைகள் வசவசவென்று பெற்றுத் தள்ளியிருக்கலாம். அதற்காக உன் காதோர முடி நரைத்திருக்கலாம். உன் மனதில் இளமை குறைந்திருக்கலாம். உன் பெண்டாட்டி நீ அருகில் போனாலே உன்னை வெறுத்து ஒதுக்கிக் கொண்டிருக்கலாம். அதற்காக நீ என் கனவை எப்படிக் கலைக்கலாம்? யூ... யூ... மானர்லெஸ் கன்ட்ரீ கூஸ்.

''யெஸ் சார்'' என்றான் தோளில் கை வைத்தவரைப் பார்த்து.

அவர் மேஜை நோக்கி விரலைச் சுட்டினார்.

''க்ருஷ்ணா...'' என்றார் சபாநாயகம். அவனது பாஸ். அவனைத் தேர்வு செய்தவர். நேரடிப் பேட்டியின் போது கேள்விகளால் அவனைத் தாக்கியவர். அவனுக்கு ஐ க்யூ சராசரிக்கும் மேலா என்று சோதித்துப் பார்த்தவர். அவன் மிகவும் மதிக்கிறவர். அவனை மாதிரியே சிகரெட் மட்டும் புகைப்பவர். வயதான பின்னும் உடலின் தசைகளை பயிற்சிகளின் மூலம் முறுக்கேற்றி வைத்திருப்பவர். துப்பாக்கி சுடுவதில் க்ரைம் ப்ராஞ்ச் ஆசாமிகளின் நடுவே இன்னும் நம்பர் ஒன் என்ற பெருமையை இழக்காது வைத்திருப்பவர்.

''யெஸ் சார்.''

''நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்?''

''அரசாங்கம் கேடிகளையும், ரவுடிகளையும் வளைத்துக் கொண்டிருக்கிறது என்று சார்'' என்றான் க்ருஷ்ணா, குரலில் எவ்வளவு பணிவு சேர்க்க முடியுமா, அவ்வளவு பணிவு சேர்த்து.



கூட்டத்தின் பகுதியிலிருந்து லேசான கலெக்டிவான ஒரு சிரிப்பொலி எழுந்தது. சிரிக்கிறார்கள். கேலி, கிண்டல்.

பாஸ் சொல்வதில் எதையோ கவனிக்காமல் அவன் கோட்டை விட்டிருக்கிறான்.

''நீ நேற்றிரவு சரியாகத் தூங்கவில்லையா?'' என்று கேட்டார் சபாநாயகம்.

சபையில் மறுபடி அடக்கப்பட்ட சிரிப்பொலி.

''நான் எங்கேயோ வந்து விட்டேன். நீ இன்னும் ரவுடிகளிடம் இருக்கிறாய். நான் சொல்வதைக் கவனமாகக் கேள்.''

''யெஸ் சார்.''

''எக்ஸ்யூஸ் மீ ஜென்டில்மேன். என் தனிப்பட்ட அதிகாரி. நான் சொன்னதைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று தோன்றுகிறது. அவருக்காக நான் இன்னொரு முறை சொன்னதையே திரும்பச் சொல்லப் போகிறேன் என்பதற்காக என்னை மன்னியுங்கள். நான் உங்களுடைய மதிப்பான நேரத்தை நிறைய வீணாக்க மாட்டேன். ரவுடிகளையும், கேடிகளையும் போலீஸ்காரர்கள் உள்ளே தள்ளிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அவர்கள் எல்லாம் வெளிப்படையாய்த் தெரியும் எதிரிகள். ஆனால் சில சமூக விரோதிகள் வெளிப்படையாய்த் தெரிவதில்லை. மறைந்திருந்து சமூகத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள். உதாரணமாகக் கள்ளக் கடத்தல்காரர்கள். நார்கோடிக்ஸ், அந்த வகைக் காரர்களை டிரக் பிரவென்ஷன் பிரிவுக்காரர்கள் பார்த்துக் கொள்கிறார்கள். இன்னொரு வகை தங்கம் வைரம் கடத்துபவர்கள். கஸ்டம்ஸிற்கு 'தண்ணி' காட்டுபவர்கள். சமீபத்தில் கூட க்ளீனிங் பவுடர் என்ற போர்வையில் கோல்ட் நைட்ரேட் என்ற வெள்ளைப் பவுடரின் போர்வையில் தங்கம் நம் நாட்டிற்குள் நுழைந்தது உங்களுக்குத் தெரிய வரலாம். இந்தக் கள்ளக் கடத்தல் ஆசாமிகள் நாட்டின் பொருளா

தாரத்தை சீர் குலைப்பவர்கள். இவர்கள் கூட அந்த அளவு அபாயமானவர்கள் என்று சொல்ல மாட்டேன். இன்னொரு வகையினருடன் ஒப்பு நோக்கும்போது, ஸைக்கோபத்ஸ். அதாவது மனநிலை தவறியவர்கள். மனநிலை தவறிய குற்றவாளிகளுக்கு தாம் குற்றம் செய்வதாகவே தோன்றாது. அவர்களுக்கு அந்த குற்ற உணர்வே இல்லாததால்தான் மேலும் மேலும் குற்றங்கள் செய்கிறார்கள். உலகம் பல மனநிலை தவறிய குற்றவாளிகளைக் கண்டிருக்கிறது. ஹிட்லர் அதில் ஒரு மாபெரும் குற்றவாளி. கோட்ஸே, லீ ஆஸ்வால்ட் ஆகியோரும் சின்ன அளவில் மனநிலை தவறிய வர்கள். ஃப்ரெஞ்ச் தேசத்தின் ஜாக்ரிப்பர் பற்றி உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. ஹிட்ச்காக் தனது படங் களில் சைக்கோபத்களைக் காட்டியிருக்கிறார். பாத்ரூமில் கொலை செய்யும் கொலைகாரன். அம்மாவின் எலும்புக் கூட்டை வைத்துக் கொண்டு செயல்படும் கொலைகாரன். இந்த கொலைகாரர்கள் மனிதனின் அடிப்படை வாழும் உரிமையில் கை வைக்கிறார்கள்...''

க்ருஷ்ணா தப்பித்த கொட்டாவி ஒன்றை அடக்கினான்.

''எனது நண்பருக்கு நான் சொல்வதைக் கேட்டு கொட் டாவி வரலாம். யாருக்கோ நேருவதைக் கேட்டால் நமக்குச் செய்தியாகத்தான் இருக்கும். கொட்டாவி வரும். நமக்கே அந்த ஒரு விஷயம் ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்படுத்தும் போதுதான் அதன் தீவிரம் நமக்குப் புரியும். கொட்டாவிகளை சற்று அடக்கிவிட்டு நான் சொல்வதை கேட்குமாறு நான் சபையினரைக் கேட்டுக் கொள்கிறேன். சைக்கோபத்கள் மனிதர்களின் வாழும் உரிமையில் கைவைப்பதாகச் சொன் னேன். நீங்கள் புத்திசாலிகள். புரிந்து கொண்டிருப்பீர்கள். ஹிட்லர் யூதர்களின் வாழும் உரிமையில் கைவைத்தான். லட்சக் கணக்கான யூதர்களைக் கொன்றான். ஜெனரல் டயர் இந்தியர்களின் வாழும் உரிமையில் கை வைத்தான். ஆயிரக்



கணக்கான இந்தியர்களைக் கொன்றான். இடி அமீன் மற்ற மனிதர்களின் வாழும் உரிமையில் கை வைத்தான். தன் சொந்த மக்களையே கொன்றான். இந்தியக் குற்ற இலக் கியத்திலும், தமிழ் நாட்டின் குற்ற இலக்கியத்திலும் அவ்வப் போது இவ்வகை சைக்கோபத்கள் இடம் பெறுகிறார்கள். தமிழ்நாட்டில் ஒன்பது பேரை ஒரே சமயத்தில் கொன்ற ஒரு கொலைகாரனை உங்களுக்குத் தெரியும். விஷ ஊசிக் கொலைகாரர்களை நீங்கள் அறிவீர்கள். பெங்களூரில் சமீபத்தில் நடந்த பெண் கொலைகளைப் பற்றியும் கொலை செய்த நாகராஜ் என்பவனைப் பற்றியும் உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டில் கூட அப்படி ஒரு கொலைகாரன் உலவிக் கொண்டிருக்கிறான்...''

சபாநாயகம் பேச்சை நிறுத்திவிட்டு ஒரு மிடறு தேநீர் குடித்தார். ஒரு முறை புகையை ஆழமாக உள்ளுக்குள் இழுத்தார். க்ருஷ்ணாவிற்கும் புகைப் பிடிக்க வேண்டும் போல் இருந்தது. அடக்கிக் கொண்டான். என்ன இருந்தாலும் சபாநாயகம் அவனது துறைத் தலைவர். அவர் எவ்வளவுதான் அனுமதியளித்தாலும் ஒன்றுமே சொல்ல மாட்டார் என் றாலும் கூட அவருக்கு முன் புகைப் பிடிக்க அவனுக்கு மனம் ஒப்பவில்லை. அவனுடன் இருந்தவர்கள் அத்தனை பேரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். சபாநாயகம் தொடர்ந்தார்.

''நமது கொலைகாரன் தனது கொலைத் தொழிலைப் போன மார்கழி மாதம் சென்னையில் மேற்கு மாம்பலத்தில் தொடங்கினான். அப்புறம் ஜில்லா, ஜில்லாவாக அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. போன ஜூலை மாதம் மறுபடி சென்னையில் திருவான்மியூரை ஒட்டிய கடற்கரைப் பிரதேசத்தில் ஒரு ஃப்ளாட் சிஸ்டத்தில் குடியிருக்கும் ஒரு சமூகச் சேவகி கொல்லப்பட்டாள். செய்தியறிந்து அவளது துபாய் கணவன் மறுநாளே திரும்பி வந்து 'கோ' என்று கதறி அழுததை பேப்பர்கள் எல்லாம் நெஞ்சை உருக்கும் செய்தி

யாக வெளியிட்டிருந்தன. போலீஸ் டிபார்ட்மெண்ட் அவளது கணவனையே சந்தேகப்பட்டது. அவனுக்கு அவன் மனைவியைக் கொல்வதற்கான மோட்டிவ் இருந்தது.

அவன் மனைவி சமூகச் சேவகியாக சர்வ சுதந்திரத்துடன் நடமாடினாள். அவளது கணவனின் வார்த்தைகளுக்குக் கட்டுப்படவில்லை. கல்யாணத்தின் போது ஒருவர் மேல் ஒருவர் கொள்வதாக வாக்களிக்கும் பரஸ்பர நம்பிக்கைக்கு அவள் கேடு விளைவித்து விட்டாள். நம்பிக்கைத் துரோகம். ஒரு மனைவி பால் போல் திரிந்து போகிறாள் என்றால் கணவனுக்குக் கோபம் வருதற்குக் காரணம். அவள் திரிந்து போனதற்குக் கூட அல்ல. நம்பிக்கைத் துரோகத்திற்குத் தான். நான் என்ன குறை வைத்தேன்? பணமா? நகையா? உணவா? உடையா? மகிழ்ச்சியா? இல்லற வாழ்க்கையா? எதில் குறை என்று துரோகம் செய்தாள் மனைவி என்ற கேள்விதான் பொதுவாக ஆண்களுக்கு. அந்த அடிப்படையில் ஆராய்ந்த போது கணவன் குற்றமற்றவன் என்பது புரிந்து விட்டது. மேலும் பல விடை தெரியா பெண் கொலைகளுக்கு ஒருவரே காரணம். அந்த ஒருவன்தான் இந்த சமூகச் சேவகியின் கொலைக்கும் காரணம் என்பது புரிகிறது. கொலைகாரன் ஒரு சைக்கோபத் என்ற முடிவுக்கு நான் வர பல காரணங்கள். அவற்றில் சிலவற்றைத் தருகிறேன். கொலையுண்டது பெண்கள். இளம் வயதுப் பெண்கள். கொலையான பெண்கள் அத்தனை பேரும் ஏதோ ஒரு வகையில் திரிந்த பால் வகைக்காரர்கள். மேற்கு மாம்பலத்துப் பெண் காசுக்காகவே திரிந்த பாலானவள். எனவே கொலைகாரனின் நோக்கம் இந்த மாதிரிப் பெண்களை சமுதாயத்திலிருந்து அகற்றுவது தான். உணர்ச்சி வசப்பட்டுக் கொலை செய்பவர்கள் கையில் கிடைக்கும் ஆயுதத்தால் கொலை செய்வார்கள். ஆனால் இந்த கொலைகாரன் ஒரு கயிற்றை உபயோகித்துக் கழுத்தை நெறிக்கிறான். கொலைகாரன் ஒரு சைக்கோபத் என்பதற்கு நான் அதை



மட்டும் ஒரு காரணமாகச் சொல்ல மாட்டேன். கொலை நடக்கும் இடத்தில் எப்போதும் ஒரு துளி அல்லது இரண்டு துளி ரத்தம் இருக்கிறது. அந்த ரத்தம் எப்போதும் பி பாஸிடிவ் வகையைச் சேர்ந்தது. கொலையானவர்களின் ரத்தம் வேறு வேறு க்ரூப்களாக இருக்கின்றன. ஆனால் பி பாஸிடிவ் வகை ரத்தத்துளி ஒவ்வொரு கொலையின் போதும் கிடைப்பதால், கொலைகாரனுக்கு ஒவ்வொரு கொலையின் போதும் தன் ரத்தத்தின் ஒரு துளியையாவது சிந்தும் எண்ணம் இருக்கிறது. அவன் மனநிலை தவறிய கொலைகாரன் என்பதற்கு இந்த ஒரு விஷயம் போதுமானது. மேலும் கொலையாகும் பெண்கள் எல்லோரும் திரிந்த பால் வகைக்காரர்களாக இருப்பதும் கொலையாளி மனநிலை தவறியவன் என்பதற்குச் சான்றாக இருக்கிறது. அவன் புத்திசாலியானவன் என்பதற்கும் ஒவ்வொரு கொலையின்போதும் சான்றாக ஒரு விஷயத்தை வைக்கிறான். ஒவ்வொரு கொலையின் போதும் போலீஸ்காரர்கள் ஒரு கிழிக்கப்பட்ட அட்டையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்த அட்டை ஒரு சீராகக் கிழிக்கப்படவில்லை. சும்மா ஒரு கோணல் மாணலான துண்டு. அந்தத் துண்டுகளில் சிலவற்றில் ஒன்றுமே இல்லை. சிலவற்றில் சில வண்ணத் தீற்றல்கள் மட்டும். அந்தத் துண்டுகளை வைத்துக் கொண்டு என்னைக் கண்டு பிடி என்கிற மாதிரி அவன் சவால் விடுகிறான். அது மட்டுமில்லை. அவன் கொலை செய்யுமிடத்தில் எல்லாம் அவன் ஒரு அச்சடிக்கப்பட்ட கவிதைப் புத்தகத்தின் ஒரே ஒரு பக்கத்தை மட்டும் விட்டுச் செல்கிறான். அதை வைத்துக் கொண்டு என்னைக் கண்டுபிடி என்கிற மாதிரி. ஒரு சில அட்டைத் துண்டுகளையும், ஒரு சில கவிதைப் பக்கங்களையும் வைத்துக் கொண்டு போலீஸ்காரர்கள் எவ்வளவோ ஆராய்ந்து பார்த்து விட்டார்கள். அந்த அட்டைத் துண்டுகள் ஒரு பெரிய ஷீட்டில் இருந்து கிழிக்கப்பட்டவை என்று ஃபாரென்சிக் லாப் தகவல் சொல்லியிருக்

கிறது. கவிதைப் புத்தகத்தின் பக்கங்களை மட்டும் வைத்துக் கொண்டு அது எந்தப் புத்தகத்திலிருந்து உருவப்பட்டது என்பதை குற்றமும், ரத்தமும், வன்முறையும், கத்தியும், துப்பாக்கியும், ஊறிய நமது போலீஸ்காரர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. எனவே ஃபைலை நம் டிபார்ட்மென் டிற்கு அனுப்பி விட்டார்கள். வெவ்வேறு இடங்களில் நடந்த கொலைகள் என்பதால் இன்னும் சமூகத்தில் கொலை பயம் எதுவும் விதைக்கப் படவில்லை. இந்தச் செய்தியைப் பத் திரிகைகளுக்குச் சொன்னால் அவர்கள் மக்கள் மனங்களில் பீதியைக் கிளப்பி விடுவார்கள். எனவே பத்திரிகையாளர் களுக்குச் சொல்லாமல், வெறும் ஃபைலையும், அட்டைத் துண்டுகளையும், கவிதைப் பக்கங்களையும் வைத்துக் கொண்டு நம் டிபார்ட்மென்டில் இருக்கும். எந்த மூளை அந்த கொலைகாரனைக் கண்டு பிடிக்கப் போகிறது?''

சபாநாயகம் நிறுத்திவிட்டு தேநீரைத் தொடர்ந்தார். ஏறக் குறைய சாம்பலாகி விட்ட சிகரெட்டை இழுத்துப் பார்த்துப் பயனின்றி இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

அறையில் அமைதி நிலவியது. சுற்றி இருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பாரத்துக் கொண்டார்கள்.

அங்கே இருந்த அத்தனைப் பேரும் ஏதோ ஒரு கேஸைத் துரத்திக் கொண்டிருந்தவர்கள்தான். அனைவருக்கும் தலைக்கு மேல் வேலையும், கத்தியும்.

பூனைக்கு யார் மணி கட்டுவது?

போலீஸ் டிபார்ட்மென்ட் அப்படி ஒன்றும் சப்பை மூளைகளைக் கொண்ட துறை இல்லை. அந்தத் துறையால் கைவிடப்பட்ட கேஸ் என்றால், இருக்கும் களேபரத்தில் இந்தக் கேஸையும் இழுத்து விட்டுக் கொண்டால் குரங்கு



ஆப்பசைத்த கதையாகிப் போகும். கொலைகாரனையும் கண்டு பிடிக்க முடியாமல், கெட்டப் பெயரையும் சம்பாதித் துக் கொண்டு...

என்ன அவஸ்தை இது என்று தான் எல்லோருக்கும் தோன்றியது.

''நான் கண்டு பிடிக்கிறேன் சார்'' என்றான் க்ருஷ்ணா.

''எனக்குத் தெரியும். நீதான் எழுந்து நிற்கப் போகிறாய் என்று'' என்றார் சபாநாயகம்.

''எப்படி சார்?'' என்று கேட்டான் க்ருஷ்ணா. தன் தலைவர் தனது புத்திசாலித்தனத்தை அறிந்து வைத்திருக்கிறார். அத்தனை சீனியர் அதிகாரிகளுக்கிடையே அவன் ஒருவன் தான் இந்த கேஸிற்கு சரிப்பட்டு வருபவன் என்று தேர்ந் தெடுத்து வைத்திருக்கிறார். க்ருஷ்ணாவிற்குக் காலரை உயர்த்திக் கொள்ள வேண்டும் போலிருந்தது. மற்றவர்களை இழிந்த பார்வை பார்க்க வேண்டும் போலிருந்தது.

''உனக்குத்தான் வேலை எதுவும் இல்லை என்று எனக்குத் தெரியும்'' என்று சபாநாயகம் சொன்னார்.

க்ருஷ்ணா காற்றுப் போன ட்யூப் போலத் தொய்ந்து உட்கார்ந்தான்.

சபையில் இம்முறை தைரியமான சத்தமான 'கொல்' கேட்டது.



## 2

க்ருஷ்ணா தனது அலுவல் அறையில் உட்கார்ந்திருந் தான். அவன் முன்னால் அந்த ஃபைல் இன்னும் பிரிக்கப் படாமல் இருந்தது.

ஃபைலைப் பிரிக்கலாமா வேண்டாமா என்று யோசித்தான். ஃபைலைப் பிரித்தால், அதிலேயே மூழ்கி விட்டால் வீட்டுக்குப் போக நேரமாகிவிடும். அப்புறம் சத்யாவின் கோபப் பார்வைக்கு இரையாக நேரிடும்.

இந்த ஃபைலையும், இது சம்பந்தப்பட்ட கேஸையும் எதற்காக ஒத்துக் கொண்டோம் என்று யோசித்துப் பார்த்தான். நிச்சயமாக அவனுக்கு வேறு வேலை எதுவும் இல்லை என்பதற்காக இல்லை. அந்தக் கேஸ் ஒரு சைக்கோபத் கேஸ். அவன் தனது க்ரைம் ப்ராஞ்ச் வாழ்க்கையில் கள்ள நோட்டு விவகாரங்களில் ஈடுபட்டிருக்கிறான். கள்ளக் கையெழுத்து விவகாரங்களில் நுழைந்திருக்கிறான். குழந்தை உணவுக் கலப்படத்தில் மூக்கை நுழைத்திருக்கிறான். கதைகளில் எல்லாம் கதாநாயகர்கள் துப்பறியும் வேலையை எடுத்துக் கொண்ட இரண்டு மூன்று மாதங்களில், அல்லது இரண்டு மூன்று நாட்களில் எல்லாம் ஒரு வேலையை சப்ஜாடாக முடித்துவிட்டு அடுத்த வேலையில் ஈடுபடத் தொடங்கி விடுகிறார்கள்.

ஆனால் நிஜத்தில் அப்படி இல்லை.

ஒரு கேஸ் தொடர்பாக அலைய ஆரம்பித்தால் குறைந்த பட்சம் கேஸ் முடிய ஒரு வருடம் ஆகிறது. எத்தனை ஆபீஸ்கள் ஏறி இறங்க வேண்டியிருக்கிறது? எத்தனை முகங்களைப் பார்க்க வேண்டி இருக்கிறது. அத்தனை முகங்களிலும் நல்ல முகம் எது. நல்லது அல்லாத முகம் எது என்று அன்ன பட்சி போல பிரித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. மேலும் அவன் இதுவரை ஆராய்ந்த கேஸ்களில் பேப்பர் வேலைகள் அதிகம். நடை அதிகம், அலைச்சல்கள் அதிகம். வெட்டி அலைச்சல்கள், சிலரைப் பார்க்க முன்னறிவிப்பின்றி போக நேரிடும். அப்படி அவன் போகும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவன் பார்க்கப் போகும் ஆட்கள் இருப்பதில்லை. மேலும் கள்ளக் கையெழுத்து, குழந்தை உணவுக்



கலப்படம், கள்ள நோட்டு விவகாரங்களில் எல்லாம் அவன் ஏறக்குறைய ஃபாரென்சிக் லாப்களின் வராந்தாவே கதியாக இருக்க நேர்ந்திருக்கிறது. மேலும் மேலும் மேலும் கிழட்டு ஆண் முகங்கள். குற்றவாளிகள் எப்போதும் இளைஞர்களாகவும், முரடர்களாகவும் இருப்பார்கள் என்னும் அவனது ஆரம்ப கால சித்தாந்தங்களை எல்லாம் இந்த மூன்று வருட கேஸ்கள் தகர்த்து எறிந்து விட்டன. குற்றவாளிகள் வயதானவர்களாக இருந்தார்கள். கோட், சூட் அணிந்து சென்ட் மணக்க மணக்க மிகவும் தரம் நிறைந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கிலத்தில் அவனுடன் பேசுபவர்களாகவும் இருந்தார்கள். மென்முகக் குற்றவாளிகள். பார்த்தால் ஒல்லியாக டாட்டாவை நினைவு படுத்துபவர்களின் பின்னால் எல்லாம் பண வேட்கை காரணமாக கள்ள நோட்டு, கள்ளக் கையெழுத்து.

பணக்காரர்கள், மேலும் பணக்காரர்கள் ஆக அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள். அவன் எந்தக் கேஸிலும் ஈடுபட்டு, ட்ரெஷர் ஐலண்ட் விளையாட்டுப் போல் முடிவில் பொம்மலாட்டக்காரனைப் போல் ஈடுபடும் குற்றவாளியைக் கண்டு பிடித்தால், அந்தக் குற்றவாளி அரசியல் செல்வாக்குடையவனாக இருந்தான்.

அவன் அவர்களை அரெஸ்ட் செய்வதற்கு முன் ஆன்டிசிபேட்டரி பெயில் வைத்துக் கொண்டு அவனை வரவேற்றார்கள். ஜெயிலுக்குப் போகவே இல்லை. கோடை ஓய்வுக்கு ஊட்டி, கொடைக்கானல் என்று போவது போல அவர்கள் கோர்ட்டுக்குக் காரில் சென்றார்கள். அவர்களின் அபரிமிதமான பணத்தில் ஏதோ கொஞ்சம் பங்கு பிரிந்தவுடன், நீதிபதிகளால் கறை எதுவும் படாத கரம் என்று தீர்ப்பளிக்கப்பட்டு வெளியே சர்வ சுதந்திரமாக வந்து, அவனையே சந்தித்து, ‘ஹலோ, க்ருஷ்ணா, ஹவ் டூ யூ டூ?’ என்று குசலம் விசாரித்தார்கள்.

அவர்கள் ரத்தத்தில் பழிவாங்கும் உணர்வெல்லாம் இல்லை. அது வந்தால் காசு சம்பாதிக்கும் வழி அடைபட்டுப் போய் விடும் என்று கருதினார்களோ என்னவோ? அதனால் தான் 'ஹவ் டூ யூ டூ' சொன்னவுடன் அடுத்த குற்றத்தை யோசிக்கச் சென்று விடுகிறார்களோ என்னவோ!

க்ருஷ்ணா துறையில் நுழையும்போது நிறைய ஜேம்ஸ் பாண்ட் கனவுகளோடு நுழைந்தான். ஒரு கையில் துப்பாக்கி இன்னொரு கை அணைப்பில் அவனால் காப்பாற்றப்பட்ட, அவனுக்காக ஏங்கி அவன் தோளில் கொடி போல், கிளி போல் படர்ந்திருக்கிற பெண் என்கிற ரீதியில்தான் அவன் கனவு இருந்தது. கார்கள் டயர் தேயத் தேயச் சென்றன. டிஷ்யூங், டிஷ்யூங் என்று குண்டுகளின் பரிமாற்றங்கள் நடந்து கடைசியில் தீயவர்கள் அவனால் நரகாசுரர்களாக அழிந்து போய், 'நான் சிரித்தால் தீபாவளி' என்ற நினைப்புடன் வந்தவனின் கனவுகளை க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸ் சிதறடித்தது.

இந்த மாதிரியான ஒரு வெப்பமான காலகட்டத்தில், இன்று ஒரு புது கேஸ். வழக்கு அவனைப் பொறுத்தவரை வசீகரமாய் இருந்தது. வாழ்க்கையில் நேர் பாதையில் நடக்காமல் வேறு பாதைகளில் நடக்கும் பெண்களைக் கொல்லும் ஒரு கொலைகாரன். ஒருவேளை நவீன ராபின் ஹூட்டோ என்னவோ! இந்தக் கேஸில் ஈடுபட்டால் ஒரு வேளை அவன் விரும்பிய சாகஸங்களை எதிர் கொள்ளலாம் என்று தோன்றியது.

அதனால்தான் அவன் அந்தக் கேஸிற்கு தன் ஓட்டை மனமுவந்து அளித்தான். மேலும் அதில் இன்னொரு வசீகரம் இருந்தது. முதல் கொலைக்கேஸ் என்பது மட்டுமின்றி, கவிதைப் பக்கத்தை வீசிவிட்டுச் சவால் விட்டுப் போகும் கொலைகாரன். அவனுக்கு தனது சின்ன வயது நாட்களின் ஞாபகம் வந்தது.



சின்ன வயதில் அவன் நிறைய கவிதைகளை ரசித்திருக்கிறான். அதுவும் அவன் காதலில் ஈடுபட்டிருந்த நாட்களில், அப்போதெல்லாம் அவன் இவ்வளவு இயந்திரத் தனமாக வாழ்க்கையை நடத்தியதில்லை.

கொலை செய்பவனுக்கும் கவிதைகளுக்கும் என்ன சம்பந்தம்? டிபார்ட்மெண்ட்டில் இருக்கும் சக ஆசாமிகளுக்கு டி.ஏ. தெரியும். பஞ்சப்படி தெரியும். எச்.ஆர்.ஏ. தெரியும். டீ.வி.யில் ஒளியும் ஒலியும் தெரியும். குழந்தைகளால் ரஜினி தெரியும். புத்திசாலித்தனத்தால் சிலர் ரேஸ் மைதானங்களை ஜெயித்து வந்து விடலாம் என்று போய், அவர்களுடைய புத்திசாலித்தனத்திற்கும், ஈகோவிற்கும் அடி விழுந்து, தடியால் அடிபட்ட நாய் போல மூச்சிரைக்கத் திரும்பி வரத் தெரியும். மற்றபடி கவிதை?

அது எந்த நிலையில் கிடைக்கும் என்று கேட்பார்கள். திரவமா, திடமா? வாயுவா? லிட்டரா, கிலோவா, க்யூசெக்ஸா, எந்த அளவில் கிடைக்கும் என்று கேட்பார்கள். 'செல்ஷியஸில் கிடைக்காது?' என்று யாராவது அப்பாவித் தனமாகக் கேட்டாலும் அவன் ஆச்சரியப்பட மாட்டான். எனவே கவிதையில் இருக்கும் வசீகரமும் அவனை ஈர்த்து விட்டது.

வாசனை அவனால் மறக்க முடியுமா என்ன?

வாசன்தானே அவனுக்குக் கவிதைகளை அறிமுகப்படுத்தினான்? வாசனால் தானே அவனுக்கு சத்யாவுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் அமைந்தது. வாசனால்தானே அவனுக்கு வாழ்க்கையின் அர்த்தம் புரிந்தது?

ஃபைலைத் திறக்கப் போன சமயத்தில் போன் மணி அடித்தது.

எடுத்தான்.

''ஹலோ'' என்றான் கொஞ்சம் காரமாக. அவனுடைய போன் குரல் இயல்பாகவே ஆண்மை ததும்பியிருக்கும்.

இப்போது காரம் வேறு சேர்த்துக் கொண்டதால், இன்னமும் கரகரவென்று எதிரில் ரிசீவரைக் காதில் வைத்திருப்பவரின் மனதில் ஒரு பய ஊசியைச் செருகும் அளவு கேட்டது.

"சார், அது க்ருஷ்ணா சார் தானே?"

"ஆம், யாரது? என்ன வேண்டும்?"

"ஒரு போலீஸ் ஆபீஸரோடு விளையாடிப் பார்க்க வேண்டும்."

"ஏய். யார் நீ. உனக்கு என்ன வேண்டும்?".

"ஆபீஸர் ஸார். அநாவசியமாகக் கத்தாதீர்கள். உங்களுடைய அழகான ஒய்ப் என்று நீங்கள் அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்வீர்களே. அவள் இப்போது என் எதிரில் இருக்கிறாள். கத்தி முனையில். வெய்ட். கூட என் ஆட்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள். பீரோ சாவியைக் கேட்டால் தர மாட்டாளாம் அம்மா. உயிர் போனாலும் பரவாயில்லையாம். கொஞ்சம் அட்வைஸ் பண்ணுகிறீர்களா? நாங்கள் ஜஸ்ட் வீட்டில் இருக்கும் பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு போய் விடுகிறோம். ஏய்... இந்தா போன். உன் புருஷன். பேசு, அவன் சொல்கிறபடி செய்."

க்ருஷ்ணா பதற்றத்தில் நாற்காலி முனைக்கே வந்து விட்டான். என்ன அக்கிரமம் இது? இந்த சாயங்கால வேளையில் அதுவும் மாலை நாலரை மணிக்கு சென்னையில் ஒரு திருட்டா? அதுவும் ஒரு க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸரின் வீட்டிலா? மாட்டிக் கொண்டிருப்பது சத்யா. என் பெண்டாட்டி. நான் உயிருக்குயிராய் நேசிப்பவள். இன்னும் என்னை வசீகரமான மாய வலையில் கட்டிப் போட்டிருப்பவள். காசு பணம் போனால் போய் விட்டுத் தொலைகிறது. வேறு எதுவும் அவளுக்கு நேர்ந்து விடக்கூடாது.

"ஹலோ... ஹலோ... ஹலோ."



"ஹலோ."

"சத்யா! என்ன இது?"

"அவர்கள் மூன்று பேர் க்ருஷ்ணா?" சத்யாவின் குரலில் பயம் இல்லை. என்ன இருந்தாலும் ஒரு க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸரின் மனைவி என்னும் பெருமிதம் இருந்தது. க்ருஷ்ணாவிற்குப் பெருமையாகத்தான் இருந்தது. சிங்கமே எதிர் வந்தாலும் தைரியமாக எதிர்க்கும் எலி என்று தான் தோன்றியது.

இருந்தாலும் இந்த நேரத்திலா பெருமிதம். மண்ணாங்கட்டி எல்லாம். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்று வள்ளுவன் சொல்லி வைத்தது இவளுக்கு மட்டும் இல்லையா?

"சத்யா. பீரோ சாவியைக் கொடுத்து விடு. அவர்கள் என்ன வாரிக் கொண்டு போனாலும் சரி. போகட்டும். நீ பத்திரம். நான் இதோ வந்து விடுகிறேன்."

"அதெப்படி க்ருஷ்ணா... ஆ... ஆ..."

"சத்யா. சத்யா மடச்சி. அவர்கள் என்ன கேட்கிறார்களோ கொடு. நீ உன் வீரத்தையெல்லாம் இப்போது போய் பரிசோதித்துக் கொண்டிருக்க வேண்டாம். என்ன ஆயிற்று?"

"எது என்ன ஆயிற்று?"

"இப்போது 'ஆ' என்று கத்தினாயே."

"அவர்களில் ஒருவன் என்னைக் கத்தியின் முனையால் லேசாகக் குத்தினான்."

"ஐயோ எங்கே?"

"படக் கூடாத இடத்தில்."

"ஐயோ. போச்சு. போச்சு. சத்யா. அவர்கள் மேலும் உன்னை அலங்கோலப் படுத்துவதற்குள் அவர்கள் கேட்கும் சாவியைத் தூக்கி எறி! நான் இதோ வருகிறேன்."

''சரி...''

''படக்கூடாத இடம் என்றாயே, எங்கே?''

''என் பின் மண்டையில்.''

''வாட்?''

''ஆம். அங்கேதான் பலமாக அடிபட்டால் செத்துப் போவதற்கே சான்ஸ் இருக்கிறது என்று பாட்டி சொல்லுவாள். பாட்டி தானே அந்த இடத்தைப் படக்கூடாத இடம் என்பாள்.''

''உன் பாட்டி நாசமாய்ப் போக,'' என்று க்ருஷ்ணா ரிசீவரை தூக்கி எறிந்தான்.

வெளியே பாயுமுன் அந்த 'சைக்கோபத்' ஃபைலை இடுக்கிக் கொண்டான். எங்கே பைக் சாவி? இதோ இருக்கிறது.

எங்கே பைக்?

அதோ இருக்கிறது.

க்ருஷ்ணா பாய்ந்தான். ஃபைலைத் தூக்கி சைட் பாக்ஸில் போட்டு, அதன் கிக் ஸ்டார்ட்டரை உதைக்க, யமஹா உடனே எழுந்து கொண்டது. உடனே உட்கார்ந்தான். கியர்... கியர்... கியர்... சப்பக்.. சப்பக்... சப்பக்.

ஒரு யமஹா பைக், க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸ் வளாகத்தில் இருந்து அவ்வளவு விரைவாக வரும் என்று எதிர்பார்க்காத கான்ஸ்டபிள், யமஹாவின் நம்பரை நோட் பண்ணுவதா வேண்டாமா என்று ஒரு செகண்ட் குழம்பி, வாயில் குழந்தைகளின் சூப்பான் போல் வைத்திருந்த விசிலை, பீ... பீய்ங்க் என்று ஊதும் நேரத்தில், க்ருஷ்ணா அவனது வீட்டின் காம்பவுண்ட் கேட்டில் தன் பைக்கின் முன் சக்கரத்தால் இடித்தான்.

காம்பவுண்ட் இரும்பு கேட் மிக வேகமாகப் பின் வாங்கி, அதன் சக்கரம் அனுமதித்த தூரம் வரை பயணம் செய்து, போன வேகத்திலேயே திரும்பி வந்தது.



க்ருஷ்ணா கால் ஷூவால் தடுத்து நிறுத்தினான். டர், டர் என்று உள்ளே நுழைந்தான்.

அவன் வீடு, ஆழ்வார்ப்பேட்டில் ஒரு தெருவில் இருந்தது. மிகப் பணக்காரர்கள் வசிக்கும் தெரு என்பதால் பகலில் கார்கள் மட்டும் போகும். காய்கறி தள்ளு வண்டிகளை எல்லாம் தெருவில் யாரும் சீந்தமாட்டார்கள். பழக்கூடைக்காரர்களை யாரும் அழைக்க மாட்டார்கள். எனவே அந்த வியாபாரிகள் எல்லோரும் அந்த மாதிரித் தெருக்களை, 'தள்ளி' வைத்து விட்டிருந்தார்கள்.

எல்லா வீடுகளிலும் இருக்கும் வேலைக்காரர்கள் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களுக்குச் சென்று தேவையானவற்றை அதிக விலை கொடுத்து வாங்கி வந்து வீணாக்குவார்கள். கூடவே ஒவ்வொரு முறை கடைக்குப் போகும் போதும் கமிஷன் அடிப்பார்கள். அந்தப் பாழாய்ப் போன தெருவில், ஒரு வீடு காலியாக இருந்தது. சின்ன தோட்டம். சின்ன வீடு. மேலே மாடியற்றது. அபரிமிதமான தண்ணீர் வசதி கொண்டது. சபாநாயகம்தான் அந்த வீட்டை அவனுக்கு. அவருடைய ஒரு நண்பர் மூலமாகத் தெரிந்து சொன்னார்.

வீட்டின் சொந்தக்காரர் ஆஸ்திரேலியாவில் பழரசமும், ஜாமும் தயாரித்து பணம் பண்ணிக் கொண்டிருந்தார். ரிடயர் ஆனவுடன் இங்கே வந்து தனது ஆஸ்திரேலிய நாட்களின் பாவங்களை தினம், தினம் கபாலி கோயில் சென்று கழுவும் உத்தேசம் இருந்ததால் அந்த வீட்டை விற்காமல் யாராவது ஒரு கேர் - டேக்கர் வசம் ஒப்படைக்கலாம் என்றிருந்தபோது க்ருஷ்ணா மாட்டினான்.

தனி வீடு, தண்ணீர், புல், காலையில் எழுந்தவுடன் உடற்பயிற்சி செய்ய மொட்டை மாடி.

க்ருஷ்ணாவிற்கு அந்த வீடு சொர்க்கமாகத் தெரிந்தது. அந்தப் போன் செய்தி வரும் வரை.

இப்போது அந்தத் தெருவே நரகமாய்த் தோன்றியது.

ஒரு பெண்ணைப் பட்டப் பகலில் வீடு புகுந்து கொள்ளையடிக்கிறார்கள். தெருவில் இருப்பவன்கள் எல்லாம் கதவுகளை மூடிக் கொண்டு தத்தம் மனைவிமார்களின்...

வேண்டாம். எதுவும் எண்ண வேண்டாம்.

இப்போது சத்யா முக்கியம். சாபமிடல் எல்லாம் அப்புறம்!

க்ருஷ்ணா வீட்டைச் சுற்றிப் பார்த்தான். தோட்டம், சிமெண்ட் பாதை, அவன் வீட்டின் காரிடார் எல்லாமே அவன் விட்டுச் சென்ற மாதிரியே இருந்தது.

எங்கும் எதிலும் பழுதில்லை. வீட்டு வாசலைப் பார்த்தான். மூடியிருந்ததா, இல்லை சும்மா திறந்திருந்ததா என்று தெரியவில்லை.

அவன் கதவருகே சென்றான். ஒரு நூல் இடைவெளியுடன் கதவு திறந்திருந்தது தெரிந்தது. படபடக்கும் நெஞ்சுடன் கதவில் கை வைத்தான். கதவைத் தள்ளுவதற்கு முன் கடைசி யோசனையாக அவனுக்குத் தோன்றியதால் மார்பிலிருந்து துப்பாக்கியை எடுத்து அதன் ஸேஃப்டி காட்சை விடுவித்தான்.

'க்ளிக்' என்றது துப்பாக்கி.

மற்றபடி பிரதேசத்தில் அமைதி. அந்த சத்தம் எதையாவது கலைத்து விடுமோ என்று அவனுக்குக் கவலையாக இருந்தது.

கதவைக் காலால் உதைத்துப் படீரென்று திறந்து 'ஹாண்ட்ஸ் அப்' என்று கத்தினான்.

அவன் குரலுக்குப் பதில் குரல் எதுவும் இல்லை. வீட்டின் அமைதி அவனை வரவேற்றது. ஹாலில் சோபா செட்டுகள் இடம் மாறி இருந்தன. டீப்பாயில் ஒரு ட்ரேயில் இரண்டு டம்ளர்கள் கவிழ்ந்திருந்தன. தரையில் ஒரு டம்ளர் கிடந்தது.



''சத்யா'' என்றான்.

வாழ்க்கையில் அவன் இந்த மாதிரி தருணங்களைச் சந்தித்தே இராததால் அவனுடைய நெஞ்சத்தின் படபடப்பை அவனால் தாங்க முடியவில்லை. ''சத்யா, என்ன ஆயிற்று உனக்கு? அதுதான் சாவியைக் கொடுக்கச் சொன்னேனே.''

அவன் படுக்கையறையை நெருங்கினான். அதன் கதவு மறுபடியும் ஒரு நூல் இடைவெளியுடன் திறந்து இருந்தது. தள்ளித் திறந்தான். படுக்கையில் சத்யா கிடந்தாள்.

அவள் உடைகள் மேலேறி இருந்தன. அவளது வெண்மையான கால்கள் வெண்மையான கால்கள் இல்லை. ஆஃப் ஒயிட் கால்களில் இருந்த கொலுசுகள் சரிந்திருந்தன. ஒரு கால் நிமிர்ந்தும், ஒரு கால் சரிந்தும் இருக்க, தந்த நிறக் கால்களில் பச்சை நரம்பு ஓடியது அவனுக்குத் தெரிந்தது.

அவன் நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது.

''சத்யா'' என்று கத்தினான். அருகில் ஓடினான்.

''அந்த அறையின் பீரோ கதவு திறந்திருக்க, அவளுடைய பிளாஸ்டிக் முத்து மாலைகள் எல்லாம் தரையிலும், பீரோவிலுமாகத் தொங்கிச் சரிந்து கிடக்க, சத்யாவின் ஒரு கை உடலின் அடியில் மடங்கி இருந்தது. இன்னொரு கை கட்டிலில் இருந்த விரிப்பை இறுகப் பற்றியிருந்தது.

''சத்யா'' என்று நெஞ்சு வெடிக்கக் கத்தினான் க்ருஷ்ணா.

''என்ன?'' என்று கேட்டாள் சத்யா டபக் என்று கட்டிலில் எழுந்து உட்கார்ந்து.

''சத்யா... சத்யா... சத்யா... நான்... நான்... நீ... நீ?''

''எனக்கு ஒன்றும் ஆகவில்லை. ஜஸ்ட் ஒரு விளையாட்டு'' என்றாள் சத்யா சிரித்துக் கொண்டே.

"விளையாட்டா? விளையாட்டுக்கு ஒரு லிமிட் வேண்டாம்?"

''பின்னே. நீங்கள் மட்டும், இந்த மாதிரி ஒரு வீட்டில் என்னைத் தனியாக விட்டுவிட்டு ராத்திரி பதினோரு மணிக்கும், பன்னிரண்டு மணிக்கும் திருடர்கள் வரும் நேரத்திற்கு வரலாமா?''

''தப்புத்தான். தப்புத்தான். அதான் வந்து விட்டேனே.''

''இன்றைக்கு டிக்கெட் ரிசர்வ் செய்திருக்கிறோம். இந்த மாதிரி ஏதாவது ஷாக் கொடுத்தால் ஒழிய நீங்கள் வர மாட்டீர்கள் என்று தெரியும். அதனால்தான் இப்படி ஒரு டிராமா பண்ணினேன்.''

''யார் யார் கதாபாத்திரங்கள்.''

''நான். நீங்கள்.''

''போனில் மிரட்டிய ஆண் குரல்?''

''என்னுடையதுதான். போன வாரம் கல்யாணத்தில் மியூஸிக் பார்ட்டியில் ஒரு ஆம்பிளை ஸிங்கர் ஜோராக கே.பி. சுந்தராம்பாள் குரலில் ஞானப்பழத்தைப் பிழியவில்லை. அப்போதுதான் இந்த ஐடியா வந்தது.''

''லக்ஷ்மண் ஸ்ருதி ட்ரூப்பில் பாடினார்களே?''

''அதே தான். ஆண பிள்ளை மட்டும் பெண குரலில் பாடலாம். பெண் ஆண் குரலில் பேசக் கூடாதா என்ன? ஆபீஸர் சார். அநாவசியமாகக் கத்தாதீர்கள். உங்களுடைய அழகான ஒய்ப் என்று நீங்கள் அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்வீர்களே. அவள் இப்போது உங்கள் எதிரில் முழுசாகத் தான் இருக்கிறாள்'' என்றாள் சத்யா ஆண் குரலில்.

க்ருஷ்ணா அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான். அளவு மீறிய சந்தோஷத்தில் அவளை இரு கைகளிலும் உயரத் தூக்கி கரகரவென்று சுற்றினான்.



''நோ... நோ... நோ...'' என்று சந்தோஷக் கூச்சல் போட்டாள் சத்யா.

* * *

சினிமா தியேட்டர் காலியாக இருந்தது. அதிலும் பால்கனியில் சுத்தமாகப் பாலைவனம். அவள் சினிமா பார்த்தாள். அவன் அவளைப் பார்த்தான். அவ்வப்போது அவளிடம் விளையாடினான். அவள் அவனது சீண்டல்களை ரசித்துக் கொண்டே சினிமா பார்த்தாள். ஹோட்டலுக்குப் போனார்கள். அவள் விரும்பியதை வரவழைத்துச் சாப்பிட்டார்கள்.

''நாம் இன்றைக்கு இவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் யார் க்ருஷ்ணா?'' என்று கேட்டாள் சத்யா.

''என் அம்மாவும் அப்பாவும்.''

''ச்சீ. எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''அவர்கள் தானே நம் இரண்டு பேரையும் தனியாக இங்கேயே இருக்க அனுமதித்து விட்டு கிராமத்தைப் பார்க்கப் போய் விட்டார்கள்.''

''உங்கள் அம்மாவும், அப்பாவும் நீங்கள் யாரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தாலும் விட்டுப் போயிருப்பார்கள். நானும், நீங்களும் அதாவது சத்யாவாகிய நானும், க்ருஷ்ணாவாகிய நீங்களும் சந்தோஷமாக இருக்க யார் காரணம் என்று கேட்டேன்?''

''யார். நீதான் சொல்லேன்.''

''வாசன்'' என்றாள் சத்யா.

வாசன். ஏன் இன்றைக்கு வாசனின் ஞாபகம் அவளுக்கும் வந்திருக்கிறது? ஏன் வாசனின் ஞாபகம் எனக்கும் வர வேண்டும்?

க்ருஷ்ணாவிற்குப் பதில் எதுவும் தெரியவில்லை.

வாசனின் ஞாபகம் வந்தவுடன் ஹோட்டலில் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"போகலாமா சத்யா."

"ம்."

யமஹாவில் வீட்டுக்கு வந்தார்கள்.

"சத்யா. நீ தூங்கு."

"தனியாகவா? நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள்?"

"நான் இங்கேயேதான் இருக்கப் போகிறேன். எனக்கு ஒரு ஃபைல் படிக்க வேண்டும்."

"என்ன ஃபைல்?"

"ஆபீஸ் ஃபைல் சத்யா. நீ போய்த் தூங்கு. நான் ஃபைல் படித்து முடித்துவிட்டு வந்து உன்னருகில் படுத்துக் கொள்கிறேன்."

சத்யா குட்நைட் சொல்லிவிட்டு, குட்நைட் முத்தம் ஒன்றைக் கொடுத்து விட்டுப் படுக்கைக்குச் சென்றாள்.



# 3

க்ருஷ்ணா அந்த ஃபைலை மேஜை விளக்கடியில் பிரித்தான். அவனது தலையின் முன் முடி நெற்றியில் வந்து புரளப் புரள அதை இடது கையால் கோதி விட்டுக் கொண்டே ஃபைலைப் படித்தான்.



க்ருஷ்ணாவிற்கு அந்த ஃபைலை ஏன் எடுத்துக் கொண்டு வர ஒப்புக் கொண்டோம் என்ற எண்ணம் ஃபைலின் முதல் பக்கத்தில் இருந்து தோன்றத் தொடங்கி விட்டது.

முதல் பக்கத்தில் கொலைகாரன் பண்ணிய முதல் கொலை.

இறந்து கிடந்த பெண்ணின் படம் இருந்தது. இந்தப் பெண்ணைப் புகைப்படமெடுத்த போலீஸ் டிபார்ட்மென்டின் போட்டோ கிராபர் தனது கற்பனை வளத்தையும் சேர்த்து உபயோகித்திருந்தார் என்பது புகைப்படங்களின் கோணத்தில் இருந்து புலப்பட்டது. அந்தப் பெண், ஆண்கள் விஷயத்தில் நிறைய அனுபவம் அடைந்திருந்ததை அவளது முதிர்ச்சியடைந்த முகம் சொல்லியது. திறந்த கண்களுடன், 'ஏன்?' என்ற பெரிய கேள்வி கண்களில் தொங்க செத்துப் போயிருந்தாள்.

கொலைகாரனை டிபார்ட்மென்ட் மிஸ்டர் கே. என்று குறிப்பிட்டது. கே என்றால் கில்லர். கொலையாளி. ஒவ்வொரு முறையும் கொலையாளி என்று மறுபடி மறுபடி உபயோகிப்பதைத் தடுக்க மிஸ்டர் கே. என்ற குறியீட்டைக் குறிப்பிட்டிருந்தது என அவனால் உணர முடிந்தது. அவனது செயல்முறை ஃபைலில் தெரிந்தது. கொலையான இடத்தில் சிதறிக் கிடந்த சில புத்தகங்கள். புத்தகங்களின் தலைப்புகள். அவை யாவும் கொலைகாரன் கொண்டு வந்திருக்க முடியாது என்ற விஷயம் அவளுடைய சம்பந்தப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்தது குறிப்பிடப்பட்டிருந்தது. கொலைகாரன் மிஸ்டர் கே. வலுவான நைலான் கயிற்றை உபயோகித்திருந்தான். வலுவானவன். மிஸ்டர் கே.யின் பாதச்சுவடு ஒரே ஒரு தூசிப் படலத்தில் படர்ந்து அவனது கால் பாதத்தின் சைஸ் நம்பர் எட்டு என்று தெரிவித்தது. எட்டாம் நம்பர் என்றால் உயரமானவன். உயரமானவன் என்றால் ஆறடிக்குச் சற்று குறைவாக இருக்கலாம். கைரேகை இல்லை. எனவே,

மிஸ்டர் கே. அவன் செய்ய வரும் செயலின் முக்கியத்துவம் உணர்ந்தவன். சமூகக் கோட்பாடுகளுக்குப் புறம்பானது என்று உணர்ந்தவன். எச்சரிக்கையானவன்.

கொலை அவளது இருப்பிடத்தில் நடந்து இருக்கிறது. எந்தக் கதவும் உடைபடவில்லை. வாசல் கதவு திறந்து இருக்கிறது. எனவே, கொலைகாரன் மிஸ்டர் கே.அவளுக்கு அறிமுகமானவனாக இருக்கக் கூடும் என்று போலீஸ் யூகித்து, அவளுடைய எல்லா கஸ்டமர்களையும் விசாரித்து இருந்தது. எந்த விசாரிப்பில் இருந்தும் போலீசால் அவளுடைய கொலைகாரனை நெருங்க முடியவில்லை.

க்ருஷ்ணாவிற்கு வியர்த்து விட்டது. மனதில் ஒரு மாதிரி சஞ்சலமாக இருந்து எங்கே சபாநாயகம் சொன்ன அட்டைத் துண்டுகள். எங்கே சபாநாயகம் சொன்ன கவிதைப் பக்கங்கள்?

க்ருஷ்ணா அவசரம் அவசரமாகப் புரட்டினான். ஃபைலில் எங்கேயும் அந்தத் துண்டுகளும், கவிதைப் பக்கங்களும் இருக்கிற மாதிரி தெரியவில்லை.

எங்கே போயிருக்கும் அவை?

க்ருஷ்ணா அவசர அவசரமாக மற்ற கேஸ்களையும் படிக்கத் தொடங்கினான். போலீஸ் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது. என்று பார்த்தான்.

எல்லாக் கொலைகளும் ஒரே மாதிரி தினுசில் நடந்திருந்தன.

மிஸ்டர் கே.நைலான் கயிற்றை உபயோகித்திருந்தான். மிஸ்டர் கே. முன் வாசல் வழியாக உள்ளே நுழைந்து அதன் வழியாகவே வெளியேறியிருந்தான். மிஸ்டர் கே.தான் கொலை செய்த இடங்களில் எல்லாம் ஒரு துளி ரத்தமாவது சிந்தியிருந்தான்.



க்ருஷ்ணா நர்த்தகியின் கேஸ் விவரங்கள் இடம்பெற்ற பக்கங்களைப் புரட்டினான். நர்த்தகியின் கொலை அவளது ஃப்ளாட்டில் நடந்திருக்கிறது. ஐந்தாவது மாடியில் அவளது படுக்கையறையில், ரெஃப்ரிஜிரேட்டர் திறந்திருக்க கிளாஸ் ஒன்று உடைந்திருக்க, நர்த்தகி சிறுநீர் கழிக்கும் அளவுக்குப் பயந்து போய்க் கடைசியில் சுவாசம் தடைபட்டுச் செத்துப் போயிருந்தாள்.

நர்த்தகியின் கேஸில் வாசல் கதவை போலீஸ்காரர்கள் டூப்ளிகேட் சாவியை இன்னொரு ஃப்ளாட்டில் இருந்து பெற்றுத் திறந்தார்கள். நைட் லாட்ச் பொருத்தப்பட்ட, ஆட்டோ மாடிக் டோர் க்ளோஸர் கொண்ட கதவு. அப்படியானால் நர்த்தகிக்கும் கொலைகாரன் தெரிந்தவனாகத்தான் இருக்க வேண்டும்.

நர்த்தகியின் சம்பந்தப்பட்ட அனைவரையும் போலீஸ்காரர்கள் விசாரித்தார்கள். அவள் கணவனையே சந்தேகப்பட்டு போலீஸ்காரர்கள் விரட்டு விரட்டு என்று விரட்டியிருந்தார்கள்.

ஆனால் எல்லாக் கேஸ்களைப் போலவே போலீஸ்காரர்கள் ஒரு குருட்டு மூலையில் சென்று மோதியடித்துக் கொண்டு வேறு ஒன்றும் செய்யத் தோன்றாமல் நின்றுவிட்டிருந்தார்கள்.

நர்த்தகியின் ஃப்ளாட் இருப்பது ஐந்தாவது மாடியில். ஐந்தாவது மாடி வரை மிஸ்டர் கே லிஃப்டில் அல்லது மாடிப்படியில் ஏறிப் போயிருப்பான். கொலை நடந்த நேரம் ஞாயிறு முன் மாலை. அப்படி இருந்தும் அவனை யாரும் கவனிக்கவில்லையா என்ன?

நர்த்தகி இருந்த ஃப்ளாட் சிஸ்டத்தில் ஒரு காவல்காரன் கூடவா இல்லை?

க்ருஷ்ணா அந்தக் கேஸை ஊன்றிப் படித்தான். போலீஸ் காரர்கள் அந்த ஃப்ளாட் சிஸ்டத்திற்கு என்று இருந்த வாட்ச் மேனையும் விசாரித்து அதன் விவரங்களையும் கொடுத் திருந்தார்கள்.

வாட்ச்மேன் பெயர் சாந்திலால். அந்த ஃபிளாட் சிஸ்டத்தில் மொத்தம் நூற்று ஐம்பது குடியிருப்புகள்.

அத்தனை குடியிருப்புகளுக்கும் யாராவது வந்து போய்க் கொண்டு தான் இருக்கிறார்கள். வருகிற போகிறவர்களில் சந்தேகப்படும்படியாக யாராவது தெரிந்தால் அவர்களை அவன் கண்டிப்பாக நிறுத்தி விசாரிப்பதுண்டு. ரொம்பவும் டீஸன்டாகத் தெரிந்தால் அவன் விசாரிப்பதில்லை. ஒரு முறை அப்படித்தான். டீஸன்டாக இருக்கும் ஒருவனை தடுத்து நிறுத்தப் போய், அவன் மந்திரி ஒருவனுக்கு தூரத்துச் சொந்தமாய்ப் போய் அதனால் நிறைய சிக்கல்களை அனுபவித்து விட்டிருக்கிறான். அதனால் அவன் வேலை போவது மட்டுமல்ல, அவனே ஜெயிலில் போய் உட்காரும் அளவிற்கு அந்த விவகாரம் போய் விட்டது.

எனவேதான் அவன் நல்லதனமாய் தெரிகிறவர்களை விசாரிப்பதே இல்லை. நல்லதனமாய் தெரிகிறவர்கள் எல்லாம் கூட இப்போது இந்த மாதிரி அயோக்யத்தனங்கள் பண்ணு கிறார்கள் என்றால் கலியுகம் முடியப் போகிறது என்று அர்த்தம். பகவான் க்ருஷ்ணன்தான் அவர்களை எல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

வாட்ச்மேன் சாந்திலாலின் ஸ்டேட்மென்டைப் படித்துக் கொண்டே வந்தவனுக்கு பகவான் கிருஷ்ணன்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வரியைப் படித்தவுடன் சிரிப்பு வந்து விட்டது.

க்ருஷ்ணா சிரிப்பை புன்முறுவலால் சிந்தினான்.



அப்புறம் மெல்ல மற்ற கொலை பற்றிய விவரங்களைப் படிப்பதற்காக ஒவ்வொரு பக்கமாகப் புரட்டியபோது அவ னுக்கு ஃபைல் நடுவே ஒளித்து வைக்கப்பட்ட மாதிரி இருந்த அந்த தடிமனான கவர் நழுவி வந்து விழுந்தது தெரிந்தது.

அதை எடுத்தான்.

மேலே 'கொலை நடந்த இடத்தில் கிடந்த அட்டைத் துண்டுகளும், கவிதைப் பக்கங்களும்' என்று எழுதப்பட்டு அடிக்கோடிடப்பட்டிருந்தது.

அந்தக் கவரைத் திறந்தான். வாயால் ஊதி கவரின் வாயைப் பிளந்தான்.

மேஜை மேல் கொட்டினான். அந்த அட்டைத் துண்டுகள் எந்த விதமான தொடர்பும் இன்றி இருந்தன. கிழிக்கப்பட்ட அட்டைத் துண்டுகள். ஒரு ஒழுங்கற்ற விளிம்புகளுடன் சில அட்டைத் துண்டுகள் காலியாக இருந்தன. சிலவற்றில் வண்ணத் தீற்றல்கள்.

எட்டு அட்டைத் துண்டுகள் இருந்தன. அப்படி என்றால் எட்டுக் கொலைகள். அட்டைத் துண்டுகள் எல்லாம் ஒரே சைஸில் இல்லை. சில ரொம்ப சிறியவை. ஒன்றரை இன்ச் நீள அகலம். சில துண்டுகள் பெரிய சைஸ். ஐந்து இன்ச் நீள அகலம். பெரிய துண்டுகளிலும் ஏதோ ஓர் ஓரத்தில் தீற்றல் கள் போல் தெரிந்தன. அவை ஏதோ செய்தியைச் சொல் கின்றன. அது நிச்சயம் தெரிகிறது. என்ன செய்தி என்று கண்டு பிடித்து விட்டால் நிச்சயம் கொலைகாரனை நெருங்கி விட முடியும் என்று க்ருஷ்ணாவிற்குத் தோன்றியது.

கவிதைப் பக்கங்களை எடுத்தான்.

அந்தக் கவிதைப் பக்கங்கள் எல்லாம் விசேஷமானவை. ஒரு பக்கம் ஒன்றுமே இல்லை. ஒரு பக்கத்தில் மட்டுமே கவிதை கள். அச்சாகி இருந்தன. கவிதையின் இன்னொரு பக்கம் காலி.

க்ருஷ்ணா அந்தக் கவிதைகளைப் படித்தான்.

1. என் கவிதைக்குள்
நுழையும்போது
தயவு செய்து
மிதியடிகளை
வெளியே
கழற்றி வைத்து விடுங்கள்.
சருகுகளின் சரசரப்பு கூடக்
கேட்கக்கூடாத
தேவப்பூங்கா அது!

2. நின்று
கைகட்டி
நெடிய
நேரங்களாய்
உற்று
நோக்குவேன்.
பூக்கள்
ஒன்றும் சொல்வதில்லை.
பறவைகள்
திரும்பிப் பார்ப்பதில்லை.
மிருகங்கள்
கண்டு கொள்வதில்லை.
மனிதர்கள் மட்டும்
ஏனோ
நான் முறைப்பதாகச்
சொல்கிறார்கள்.



3. என்றாவது
எங்காவது
புதுக்கோலம் போட்டு
பூச்சொரிந்து கொண்டு
புரட்சிகள் வந்ததாக
வரலாறு உண்டா?

4. ஒரு
ரோமானிய செனட்டனின்
உடற்கட்டுடன்
காற்றுக் குதிரையில்
இருள் மோத
நான் இழிவேன்
உன் நடுப்பாதை
கண் காட்டினால்
உனக்கொரு முத்தம்.
கை காட்டினால்
உனக்கிரு முத்தம்.
என்
குதிரைக்குக்
கடிவாள முண்டு
வானோரம்
வரிசையாய்
மூன்றே
நட்சத்திரங்கள்.
நீ. நான். கடவுள்.
வியப்பு
முடிவதற்குள்

விடியும்
நினைவு வர
குதிரை
கனைத்துரைக்கும்.
கொன்றுப் போட்டு
விடலாமா?

5. நான்
சிட்டுக் குருவியானால்
உன் வீட்டு
நிலைக்
கண்ணாடி.
ஜன்னல்
விளிம்புகளில்
தேவதைகளைக்
கூட
விசிலடிக்க
வைத்தவளே
என் அலைவரிசையில்
உன் பாடல்
எப்போது?

6. காணவில்லை
ஒரு
கவிஞன்
கண்கள்
கனவு நிறம்
உடல்



இரவு நிறம்
தாய்மொழி
கவிதை
தமிழும்
தெரியும்
சுவர்களோடு
யுத்தம் செய்து
தோற்றுப்போன
காயங்கள்
இதயத்தில் இருக்கும்.
கண்டு பிடித்துக்
கொடுப்போருக்கு
தக்க
சன்மானம்...

7. மனிதன்
ஒரு பூச்சி.
கராத்தே
கற்றுக் கொள்ளும்
கவிதை யெழுதும்
கால்மேல் கால்போட்டு
கனைத்துறுமி
கடவுள் நானென
கலங்கடிக்கும்.
விஞ்ஞானத்துடன்
விஷமம் செய்யும்.
செயற்கை மழை
பெய்யச் செய்யும்.

அனுகுண்டை
ஆப்பசைக்கும்.
ஐங்குதிரையை
அதிரச் செலுத்தி
ஆடியடங்கும்.
மக்கிப் போகும்.

8. அந்தரத்தில்
உப்பரிகை
அதில் ஓர்
சொப்பனத்துச்
சுந்தரி.
நேர்
கீழே
பொருதிப் பார்க்க
இரு மல்லர்கள்.
நெருங்கி வந்தார்.
கிசு கிசுத்தார்.
நீச மகள்.
ஞானமிலா
வெற்றழகுப்
பிண்டம்.
இதைப்
பெற்றுவிடப்
போரிடவா
அறிவு தாங்கு மிரு
பேரகலப்
புயங்கள்?



விட்டுவிடு
என்று சொன்னார்.
விலகி நின்றார்
உப்பரிகை
நிலா
உள் முற்றம்
போயிற்று...



# 4

சத்யா படுக்கையில் மெல்லப் புரண்டாள். க்ருஷ்ணா அருகில் இருக்கும் நினைப்பில் கையை நீட்டி அவனை அணைக்க படுக்கையைத் துழாவி பின் கிடைத்த தலையணையைப் பற்றிக் கொண்டு மறுபடி கனவுகளில் ஆழ்ந்தாள்.

க்ருஷ்ணா உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து சத்யா தெரிந்தாள். அவளுடைய புரளல் தெரிந்தது. அவள் கை நீட்டி அவனைத் தேடியது தெரிந்தது. முடிவில் தலையணையைப் பற்றியது தெரிந்தது.

பாவி. படுபாவி. எவ்வளவு அழகாய் இருக்கிறாய்?

எவ்வளவு குழந்தையாய் இருக்கிறாய்?

போனில் விளையாட ஓர் எல்லை இல்லையா?

க்ருஷ்ணா அவளைப் பார்ப்பதை விட்டு ஜன்னல் வழியே வெளித் தெரிந்த ஆகாயம் பார்த்தான். நட்சத்திரங்கள் மெல்லக் கண் சிமிட்டின. நிலா மேகத்தினூடே சிரித்துக் கொண்டே பயணம் செய்தது.

அந்த இரவு நேரத்தில் ஒரு பறவை கறுப்பாக இறக்கை களை அசைத்துப் பறந்து போனது. வழி தவறிய காக்கையாக இருக்குமோ?

எங்கோ ஒரு நாய் மெல்ல ஊளையிட்டது. குழந்தை ஒன்று அழுகுரல் தொடங்கியது.

க்ருஷ்ணாவிற்குச் சிலிர்த்தது.

வியர்த்து விட்டிருந்ததன் காரணம். அவனுக்கு இப்போது மிகத் தெளிவாகத் தெரிந்தது. அவனுக்கு... அவனுக்கு... அடையாளம் புரிந்து விட்டது.

கொலைகாரன்... வேறு யாருமல்ல.

வாழ்க்கையில் சில எதிர்பாராத தருணங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மனிதருக்கும்.

வற்றல் காயப்போடும் நேரத்தில் மழை.

வீடு கட்டும் நேரத்தில் பூகம்பம்.

பூக்கள் பூக்கும் நேரத்தில் நெருப்பு.

மனிதன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த மாதிரி எதிர் பாரா தருணங்களை வேறு ஏதும் வழியின்றி எதிர்கொள்ள வேண்டித்தான் இருக்கிறது. சமாளிக்க வேண்டித்தான் இருக்கிறது. சமாளிப்பவன் வெற்றி பெறுகிறான். உணர்ச்சி வசப்படுபவன் நடுவிலேயே ஆட்டத்தை இழக்கிறான்.

கேஸ் ஃபைலைக் கையில் தொடும்போது, இப்படி ஓர் எதிர்பாராத் தருணத்தை அவன் சந்திக்க வேண்டியிருக்கும் என்று க்ருஷ்ணா நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

எல்லோருடைய அம்புகளும் ராமன் விடும் அம்புகளாக மாறும் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?

க்ருஷ்ணாவிற்கு சிகரெட் பிடிக்க வேண்டும் போலிருந் தது. அதுவும். விடாமல். தொடர்ந்து எழுந்தான்.



ஷெல்ஃபில் இருக்கும் சிகரெட் பெட்டியைத் திறந்து சிகரெட் ஒன்றை உருவினான் லைட்டரால் க்ளிக்கினான்.

சிகரெட் பாக்கெட்டையும், லைட்டரையும் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு, அவன் கதவைத் திறந்து கொண்டு வாசலுக்கு வந்தான். வராந்தாவில் இருந்த கைப் பிடிச் சுவரில் உட்கார்ந்து கொண்டான்.

யானை, யானைகளாய் ஓடிய மேகங்களையும், துரத்திய மேகங்களையும் பார்த்தான்.

வாசன்! வாசன்!

நீதானா அது? நீதானே அது?

உன்னைக் கடைசியில் பலி கொடுத்துத்தான் ஆக வேண்டுமா?

வேறு வழியில்லை. சர்வைவல் ஆஃப்தி ஃபிட்டஸ்ட் விதிப்படி யார் தகுதியானவர்களோ அவர்கள்தான் ஜெயிக்க முடியும்? அவர்கள்தான் வாழ முடியும்?

இன்றைக்கு இரவு ஹோட்டலில் சத்யாகூட வாசனை அனாவசியமாக நினைவுப்படுத்தினாள்.

நம் கல்யாண வாழ்க்கைக்கு வாசன்தானே காரணம்?

வாசன்தான் காரணமா?

க்ருஷ்ணாவின் இதயம் புரண்டது.

அந்த நாட்கள் ரேஸில் கலந்து கொண்ட குதிரைகள் போல ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு ஓடி வந்தன.

* * *

க்ருஷ்ணா பிரசிடென்ஸியில் சேர்ந்திருந்த நாட்கள் அவை. பள்ளியிலிருந்து திடீரென கல்லூரி என்பது அவனால் சட்டென்று ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு மாற்றமாக இருந்தது.

கல்லூரியில் விரிவுரையாளர்கள் அவனை நண்பனாகப் பார்த்தார்கள். பள்ளி நாட்களில் இருந்த ஆசிரியர்களின் அதிகாரங்கள் காணாமல் போயிருந்தன. 'வாடா, போடா, அதை எடுத்து வாடா, போய் காபி வாங்கி வாடா, யாருக்கும் தெரியாமல் எனக்கு சிகரெட் வாங்கி வாடா' போன்ற ஸ்கூல் ஆசிரியர்களின் ஆணைகள் எல்லாம் அங்கே காணாமல் போய் விட்டன? இங்கே லெக்சரர்கள் ஜோக் அடித்தார்கள். என்ன ஒரு ஆச்சரியம்! சமயத்தில் அவர்கள் செக்ஸ் ஜோக்குகள் கூட அடித்தார்கள்.

கல்லாமை அதிகாரத்தில் இரண்டாவது செய்யுளுக்கு லெக்சரர் விளக்கம் கொடுத்த விதம் அவனை ஒரேயடியாகப் பிரமிப்பில் ஆழ்த்தியது. இத்தனைக்கும் கூட வகுப்பில் பெண்கள் வேறு.

பெண்கள் கூட இந்த மாதிரி செக்ஸ் ஜோக்குகளையும், செக்ஸ் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் ரசிப்பார்கள் என்பதே அவனுக்கு மஹா மஹா ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பெண்கள் தான் எப்படி எல்லாம் சிரிக்கிறார்கள்.

க்ருஷ்ணா, அந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் முதலில் பாவம் என்று கருதி சும்மா உம்மணாம் மூஞ்சியாக இருந்து விட்டுப் பின் சிரித்தால் ஒன்றும் நரகத்திற்குப் போய் விட மாட்டோம் என்று தெளிவடைந்து சிரிக்கத் தொடங்கினான்.

தமிழ் என்றால் க்ருஷ்ணாவிற்குப் பிரியம். தமிழில் அவனைத் தவிர வேற யாரும் அவ்வளவு தூரம் ஈடுபாட்டுடன் இருக்க மாட்டார்கள் என்ற எண்ணம், முதல் மாதத் தேர்வில் சிதறிப் போனது.

அவனுக்கு முதல் மாதத் தேர்வில் நூற்றுக்கு எண்பது சதவீதம் கிடைத்திருந்தது.

அவனுக்கு மட்டும் தான் முதல் மதிப்பெண் என்று நினைத்தான் க்ருஷ்ணா. ஏனென்றால் அந்த மதிப்பெண்ணை



அறிவிக்கும் முன் விரிவுரையாளர் அதுதான் முதல் மதிப் பெண் என்று சொன்னார்.

அப்புறம் பார்த்தால் 'வாசன்' என்ற இன்னொரு மகா இளைஞனையும் விரிவுரையாளர் எழுப்பி நிறுத்தினார். அவனும் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு எண்பது.

க்ருஷ்ணா வாசனைப் பார்த்தான்.

ஒல்லியாக இருந்தான். தலை திருத்தமாக வாரப்பட்டிருந்தது. நெற்றியில் நல்ல பிள்ளைகளுக்கு அடையாளம் என்று சொல்லப்படும் விபூதிக் கீற்று ஒன்று.

முதல் பார்வையின் போது க்ருஷ்ணாவிற்கு அவன் மேல் பொறாமை ஏற்பட்டாலும், அடுத்த நிமிடமே பொறாமை மாறிப் போயிற்று. அவன் ஒன்றும் மேல் தட்டுக் காரனாகத் தெரியவில்லை. அவன் சட்டையின் கையின் முனையில் நூல் பிரிந்து தொங்கியது. அணிந்திருந்த பாண்ட்டின் விளிம்பும் அதே போல, கந்தையானாலும் கசக்கிக் கட்டுபவன். ஏறக்குறைய நம் ஜாதிக்காரன். அதனால் வாசன் மேல் அவனுக்கு ஒரு பரிவு ஏற்பட்டு விட்டது.

அன்றைக்கு மாலை வகுப்பு முடிந்து, தோட்டத்தின் நடுவே நடந்து, மரஞ்செடி கொடிகளின் மேல் படர்ந்து துளித்துளியாய் நின்றிருந்த நீர்த்துளிகளை வாசன் சற்று நேரத்தில் வெறித்துப் பார்த்து விட்டு லைப்ரரி இருந்த திசையில் நடந்தபோது, க்ருஷ்ணா அவனை வழிமறித்து 'ஹலோ' என்றான்.

வாசன் சிரித்தான். 'ஹலோ' சொன்னான்.

''நான் ஒருவன் தான் தமிழில் நிறைய மார்க் எடுக்க முடியும் என்று நினைத்திருந்தேன். என் அளவு நீயும் எடுத்திருக்கிறாயே. உனக்குத் தமிழ் என்றால் அவ்வளவு பிரியமா?''

''ம்'' என்றான் ஒற்றைச் சொல்லாய்.

''ஏன் பேசமாட்டாயா? நாம் நண்பர்களாய் இருப்போமே.''

''ம்.''

''என்ன வாசன் ப்ரெண்ட் என்று சொல்லிவிட்டு, 'ம்' 'ம்' என்றால் என்ன அர்த்தம்? ஏதாவது பேசேன். நீ வருகிற போது பார்த்தேன். அங்கங்கே நின்று முறைத்துக் கொண்டு வந்தாய். உடம்பு எதுவும் சரியில்லையா?''

வாசன் சட்டென்று ஒரு சொடக்கு போட்டான்.

''நான் கவிதை முயன்று கொண்டிருந்தேன் கிருஷ்ணா. எனக்குச் சரியாக வார்த்தை அமையவில்லை. அதனால் தான் 'ம்' 'ம்' என்று பதில் சொன்னேன். நீ இப்போது கேட்டாயே..., நான் அங்கங்கு நின்று முறைக்கிறேனே. ஏன்? என்று. உடனே எனக்குக் கவிதை முழுமையாகி விட்டது.''

''கவிதையா?''

''ஆம்.''

''வைரமுத்து, பாரதியார், கண்ணதாசன் ஆகியோர் தானே கவிதை எழுத முடியும். நாமெல்லாம் கவிதை எழுத முடியுமா என்ன?''

''நான் சொல்கிறேன். கேள். கவிதையா, இல்லையா சொல்லு.''

''சரி.''

வாசன் தொண்டையைச் செருமிக் கொண்டான்.

''நின்று

கை கட்டி

நெடிய

நேரங்களாய்



உற்று

நோக்குவேன்.

பூக்கள்

ஒன்றும் சொல்வதில்லை.

பறவைகள்

திரும்பிப் பார்ப்பதில்லை.

மிருகங்கள்

கண்டு கொள்வதில்லை.

மனிதர்கள் மட்டும்

ஏனோ

நான் முறைப்பதாகச் சொல்கிறார்கள்... எப்படி... இது கவிதையா இல்லையா?''

க்ருஷ்ணா பிரமித்துப் போய்ப் பார்த்தான் வாசனை.

நடந்து கொண்டே கவிதை சொல்லும் ஒரு மனிதனை இப்போதுதான் தரிசிக்கிறான் அவன்.

க்ருஷ்ணா முறைப்பதாகச் சொன்ன ஒரு சொல்லை மட்டும் வைத்துக் கொண்டு, மனித மனங்களையே எடை போடுகிற மாதிரி அவன் அப்படி ஒரு கவிதையைச் சொன்னதும் க்ருஷ்ணாவிற்கு வாசன் மேல் பிரமிப்பு மட்டும் ஏற்படவில்லை. என்னவோ தனக்குத் தான் தமிழ்ப் பற்று அதிகம் என்று நினைத்துக் கொண்டிருந்ததற்கு வெட்கம் கூட வந்தது.

''மார்வலஸ் வாசன்'' என்றான்.

வாசன் சும்மா புன்னகைத்தான்.

அவனது பாராட்டுக்காக ஒரு புன்னகை கூட உதிர்க்கா விட்டால் மற்றவர் பார்வையில் அவன் கர்வியாகி விடு

வானோ என்பதற்காகப் புன்னகைத்த மாதிரியும், அதே சமயம் இதெல்லாம் ஒரு கவிதையே இல்லை. இதற்குப் போய் இத்தனை பாராட்டா என்று பெருந்தன்மையுடன் அமர்த்தலாக ஒரே ஒரு புன்னகையை மட்டும் அவன் கசியச் செய்த மாதிரியும் தோன்றியது.

அடுத்த கணத்திலிருந்து வாசன், க்ருஷ்ணாவிற்கு நெருங் கிய நண்பன் ஆகி விட்டான்.

எங்கே போனாலும் சேர்ந்து போவது. எங்கே வந்தாலும் சேர்ந்து வருவது.

கல்லூரியில் சேர்ந்த முதல் வருடம் வாசனின் நட்பு. அது நட்பில்லை வரம். வரம்தான் என்று தோன்றியது க்ருஷ்ணா விற்கு. ஒரு வேளை இன்னும் மூளை முதிர்வடையாப் பருவத்தில் அப்படித் தோன்றியதோ என்னமோ என்று இன்று எண்ணிப் பார்த்தால் அந்தச் சிந்தனைக்கு ஒரு பலமான மறுப்புதான் பதிலாகக் கிடைக்கிறது.

வாசன் ஒரு நாள் காலையில் அவன் வீட்டிற்கு வந்தான்.

க்ருஷ்ணாவின் அம்மா அவனை வரவேற்றாள். க்ருஷ்ணா வின் வீட்டில் காலை டிபன் இட்லி. வாசன் சாப்பிட்டான்.

இட்லி பூப்போல இருப்பதாகச் சொன்னான்.

''உன் கவிதை போல இருக்கும்'' என்றான் க்ருஷ்ணா. அம்மாவின் இட்லிக்குப் பாராட்டுரை வழங்கினான்.

க்ருஷ்ணாவின் அம்மாவிற்கும் வாசனைப் பிடித்துப் போனது. படியப்படிய தலைவாரி விபூதிக் கீற்றுடன் ஒரு பையன். க்ருஷ்ணாவிற்கு அந்த வெளித் தோற்றத்தில் எப்போதுமே அப்படி ஒரு நம்பிக்கை வந்ததில்லை. அவனுடன் ஸ்கூலில் படித்தவர்களில் ஒருவன் படியப்படிய தலை வாரி வந்து, தினமும் டீச்சர் சொல்வதையெல்லாம் கேட்டு, ஒரு நாள் கூட தவறாமல் பள்ளிக்கு வந்து ஃபெயி



லாகிப் போனான் ஒருவன். இன்னொருவன் திருட்டுத் தனமாக சிகரெட் குடித்து, க்ளாஸுக்கு வராமல் சினிமாவிற்குச் சென்று, நண்பர்களுடன் வாசலில் இருக்கும். பாய்கடை வாசலில் நின்றே அரட்டையடித்து ஃபர்ஸ்ட் கிளாஸில் பாஸ் செய்து, இப்போது ஐ.ஐ.டி.யிலும் சேர்ந்து விட்டான். அதனால் அவனுக்கு வெளித்தோற்றத்தில் நம்பிக்கை ஏற்படா விட்டாலும், அம்மாவுக்காக ஒத்துக் கொண்டான்.

அம்மா, அப்பா மட்டும். அப்பா ரிடயர்ட் லைஃப்புக்காக இன்னும் இரண்டே வருடங்கள் என்று காத்திருந்தார். ரிடயர் ஆனவுடன் அம்மாவுடன் மூட்டை கட்டிக் கொண்டு, லால்குடி வீட்டுக்குப் போய், கோவில் குளம் என்று காலம் கழிக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். க்ருஷ்ணா ஒரே பையன். அதனால் செல்லம். க்ருஷ்ணா அம்மாவிடம் என்ன டிபன் கேட்டாலும் கிடைக்கும். பூரி, சப்பாத்தி, அடை, இடியாப்பம், ஊத்தப்பம், எண்ணெய் பளபளப்பு தெரிய பொன் வறுவலாக, மெல்லியதாகத் தெரியும். ஆனியன் ரவா தோசை.

க்ருஷ்ணா, வாசனுக்கு அம்மாவின் அத்தனை டிபன் களையும் அறிமுகப்படுத்தினான். வாசன் மட்டும் அவனை வீட்டுக்கு வரச்சொல்லி அழைத்ததேயில்லை. அவன் எங்கோ ஆவடியில் இருந்து வருகிறான். ரயில் பிடித்து பஸ் ஏறி, அதனால் வரச் சொன்னதில்லையோ என்னவோ!

ஒரு நாள் வாசன் கேட்டான்.

''க்ருஷ்ணா, எனக்கு ஒரு உதவி செய்வாயா?''

''என்ன?''

''உன் வீட்டில் முன் அறையில் நான் தங்கிக் கொள் கிறேனே. எனக்கு வீடு வரை சென்று மறுபடி வந்து படிப்பது கஷ்டமாக இருக்கிறது.''

''ஃப்பூ.. இவ்வளவுதானா. தாராளமாய் வாயேன்.''

வாசன் வந்துவிட்டான். சின்ன தோல்பை. அதில் அவன் உடைகள். விபூதி டப்பா. தேங்காய் எண்ணெய். சீப்பு.

முதல் இரண்டு வருடங்களும் நாட்கள் சொர்க்கமாய்த் தான் பறந்தன.

மூன்றாவது வருடப் படிப்பின் போது சத்யா வந்து அதே கல்லூரியில் சேர்ந்தாள். பிரசிடென்ஸி கோ-எஜுகேஷன் கல்லூரி. அதனால் அங்கே பெண்களும் சேர்ந்து படிக் கிறார்கள் என்ற உணர்வு முதல் இரண்டு வருடமாய் இல்லாது போன க்ருஷ்ணனுக்கு, மூன்றாவது வருடப் படிப்பின் போது சத்யா வந்து சேர்ந்தவுடன் சுத்தமாய் தலைகீழாய் மாறி விட்டது.

ஆண்டவன் மிக அற்புதமான படைப்பாளி. பெண்ணைப் படைத்திருக்கிறானே. அவனுக்கு என்று எவ்வளவு ரசனை. பெண்ணின் உடலில்தான் எத்தனை வளைவுகள். நெளிவு கள். பெண்ணின் முகத்தில்தான் என்னென்ன பாவங்கள்!

சத்யா. முழுப் பெயர் சத்யஸ்வரூபியாம். ஏதோ ஓர் அம்மன் பெயர். ஸ்வரூபியை உச்சரிக்கக் கஷ்டமாய் இருக்கிறதென்று அவளே சத்யா என்று மாற்றிக் கொண்டு விட்டாள்.

சத்யா கல்லூரிக்கு வந்து சேர்ந்தது எகனாமிக்ஸ் படிக்க. வீட்டில் வேலையில்லை. பெண்ணுக்குப் படிப்பு அவசியம். அதனால் கல்லூரி வந்து சேர்ந்தாள். வந்தவள் சும்மா இருக்காமல் பட்டாம் பூச்சி போல் திரிந்தாள்.

அந்த வண்ணத்துப் பூச்சியை க்ருஷ்ணாவிற்குப் பிடித் துப் போயிற்று. அவன் வாசனிடம் சொன்னான். வாசன் தனக் கும் அவள் பேரில் ஒரு ஈடுபாடு இருப்பதாகத் தெரிவித்தான்.

'நட்பு வைத்துக் கொள்ளலாமா அவளிடம்' என்று இரண்டு பேரும் கூடிப் பேசி விவாதித்தார்கள்.



அவள் மறுத்து விட்டால்?

ச்சீ என்று ஒதுக்கிவிட்டால்.

நட்பு தேடித்தானே போகிறோம். ச்சீ என்றால் அதனால் என்ன அவமானம்? அவள் இன்னும் கட்டுப்பெட்டி என்று முடிவு செய்து விலகி வந்துவிட வேண்டியதுதான் என்று முடிவெடுத்தார்கள்.

கல்லூரியின் பின்பக்கம் சின்னக் குளம் ஒன்றிருக்கிறது. தாமரையும் ஆம்பலும் பூத்தகுளம். குளத்திற்கு நிறைய படிக்கட்டுகள். சதுரம் சதுரமாக ஒரு தலைகீழாய் வைத்த பிரமிடைப் போல் குளநீர் நோக்கி இறங்கும் படிக்கட்டுகள்.

குளத்திற்குச் சற்றுத்தள்ளி வளர்ந்திருக்கும் ஆலமரங்கள். விழுதுகள், பையன்கள் டார்வின் சித்தாந்தத்தை மற்றவர் களுக்கு நினைவு படுத்துவதற்காகவே வளர்ந்திருந்தன.

ஓர் விழுதிலிருந்து இன்னோர் விழுதிற்கு அவர்கள் தாவு வார்கள்.

அருகிலிருக்கும் ரெட் ஆக்ஸைட் பூசப்பட்ட வழவழப் பான சிகப்பான சிமெண்ட் பென்ச்களில் பையன்களும் பெண்களுமாய் அமர்ந்து விழுது டு விழுது தாவுபவர்களைப் பார்த்து ஆர்ப்பரிப்பார்கள்.

வாசனும், க்ருஷ்ணாவும் அந்த பெஞ்ச்சில் உட்கார்ந் திருந்தபோது, குளத்தின் படிக்கட்டுகளில் நடுவில் அவள் மட்டும் தனியாய் ஸ்ரீராமின் ஒரு காமிராக் காட்சி கவிதையாக உட்கார்ந்திருந்ததைக் கண்டார்கள். ஒவ்வொரு கல்லாய் எடுத்து குளத்து நீரில் போட்டு, நீரில் சலன அலைகள் ஏற்படுவதை அப்படிக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''போகலாமா க்ருஷ்ணா?''

''எங்கே?''

''அறிமுகத்திற்குத்தான் அவளிடம்.''

க்ருஷ்ணா தயங்கி 'சரி' என்றான்.

போனார்கள்.

''ஹலோ'' என்றார்கள்.

அவள் ஒன்றும் 'ச்சீ' சொல்லவில்லை. எழுந்து ஓடி விடவில்லை. முகம் திருப்பவில்லை.

அகலமாய்ச் சிரித்தாள்.

''ஹலோ... ஐ'ம் சத்யா'' என்றாள். கை நீட்டினாள். அவர்கள் இருவர் கைகளையும் பற்றிக் குலுக்கினாள்.

சல்வார் கமீஸ் அணிந்த சத்யா என்னும் தெத்துப் பல் தேவதை.

''ஐ'ம் கிருஷ்ணா.''

''நான் வாசன்.''

முதல் அறிமுகம் அவ்வளவு இயல்பாய் ஒரு பூவின் மலரலைப் போல, ஒரு குழந்தையின் சிரிப்பைப் போல, ஒரு கன்றுக்குட்டியின் துள்ளல் போல அமைந்தது.

சத்யா அப்பா அம்மாவிற்கு ஒரே பெண். அப்பா ஒரு மருந்து கம்பெனியில் சேல்ஸ் எக்ஸ்க்யூடிவ். ஊர் ஊராக விமானத்தில் சுற்றுபவர். அம்மாவைக் காதலித்து மணந்தவர். இப்போது வீட்டில் பெரும்பாலும் அம்மா மட்டும்தான். அம்மாவிற்குத் துணையாய் ஒரு வேலைக்காரி.

சத்யா வெகு இயல்பாகப் பேசினாள். அவளிடம் எந்த விதமான பாசாங்கும் இல்லை. க்ருஷ்ணாவிற்கும், வாசனுக்கும் கூட அவளிடம் இருந்த ஆரம்பகாலப் பாசாங்குகள் அகன்று போய் எங்கு சுற்றினாலும் சேர்ந்து சுற்றுவது என்று சுற்றினார்கள். சினிமா போனார்கள். பார்ட்டி என்றால் எதிரில் இருக்கும் புஹாரியில் வைத்துக் கொண்டார்கள்.



அவள் தான் வாசனை மேலும், மேலும் கவிதை எழுதத் தூண்டியவள்.

வாசன் அவளை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டு, கிரியாவூக்கியாகக் கொண்டு நிறைய கவிதைகள் எழுதினான்.

''வாசன். இந்தக் கவிதைகளை எல்லாம் இப்படியே பேப்பரில் எழுதி எழுதி வைத்துக் கொண்டால் எப்படி?''

''பின்னே?''

''ஒரு புஸ்தகமாகப் போடலாமே.''

''ஐய்யோ.''

''ஏனாம். ஐய்யோ என்று பின் வாங்குகிறாய்?''

''காசு வேணும் சத்யா.''

''நான் கொடுக்கிறேண்டா. காசு பெரிய காசு'' என்றாள் சத்யா.

''ஆயிரம், இரண்டாயிரம் ஆகும் சத்யா.''

''பரவாயில்லை. என்ன க்ருஷ்ணா. கவிதைப் புத்தகமாகப் போடலாமா?''

''நல்ல ஐடியா சத்யா.''

''அதில் எதிர் எதிர் பக்கம் மட்டும் கவிதை. பின் பக்கங்கள் காலியாய் இருக்கும். இல்லாவிட்டால் ஒரு பக்கம் கவிதை. ஒரு பக்கம் ப்ளான்க். வெற்று வெள்ளைப் பக்கம்.''

''ஏன் அப்படி?''

''புதுமை. உன் கவிதை எல்லாம் சராசரிக்கு மேலே வாசன். அதனால் நாம் சில கழுதைகளுக்கு கொடுத்து கற்பூர வாசனை தெரிகிறதா என்று கேட்க வேண்டும். கற்பூர வாசனையை அவர்கள் அந்த வெற்றுப் பக்கங்களில் எழுதட்டும்.''

''அதாவது விமரிசனம்.''

''அதே.''

சத்யா சொன்னதோடு நிற்கவில்லை. அம்மாவிடம் போய் சொல்லிக் காசு வாங்கி வந்தாள். அவர்கள் இருவரையும் அவள் வீட்டுக்கு அழைத்துப் போயிருக்கிறாள். அவளும், அவள் அம்மாவும், அவர்களுமாய் சீட்டாடி இருக்கிறார்கள்.

சத்யாவின் அம்மாவும் அவர்களிடம் வசீகரமாய்ச் சிரித்தாள். எல்லா விஷயங்களையும் பேசினாள். பெண்ணிடம் பழகுவது போலவே அவர்களிடமும், பெண்ணுக்கு ஹார்லிக்ஸ் என்றால் அவர்களுக்கும்.

கவிதைப் புத்தகம் வெளி வருவதற்கு சத்யாவே அலைந்தாள். பக்கத்து பிரிண்டர் ஒருவனைச் சென்று பார்த்து, அச்சுக் கோர்க்கச் சொல்லி புரூப் பார்த்து, முப்பத்திரண்டு பக்கங்கள் கொண்ட நேர்த்தியான ஒரு கவிதைப் புத்தகம் தயாரித்து ஆயிரம் காப்பிகள் அச்சடித்து கல்லூரி முழுக்க வினியோகித்தாள்.

அவள் அழகுக்காகவே பையன்கள் கவிதைப் புத்தகத்தைக் காசு கொடுத்து வாங்கினார்கள். அவர்களுக்குத் தோன்றிய காசு. கவிதைப் புத்தகத்திற்குச் செலவழித்ததை விடவும் அதிகமாகவே பணம் வந்து விட்டது.

அடுத்த ஐடியாவையும் சத்யாதான் சொன்னாள்.

''கிருஷ்ணா... நாம் ஒரு வாழ்த்து அட்டை தயாரிக்கலாம்.''

''அப்படி என்றால்?''

''க்ரை இருக்கிறது இல்லையா? சின்னக் குழந்தைகளின் டிராயிங்கை அவர்கள் அப்படியே வாழ்த்து அட்டையாகத் தயாரித்து விற்று. அதில் இருந்து கிடைக்கும் பணத்தை அனாதைக் குழந்தைகளுக்கு உதவுவதற்காகக் கொடுக்கிறார்களே. தெரியாது?''



''ஆமாம்.''

''அது போல நாமும் ஒரு வாழ்த்து அட்டை தயாரிக்கலாம்.''

''தயாரித்து?''

''பிரிண்ட் பண்ணி விற்கலாம்.. ஒரு பப்ளிக் ஸர்வீஸ் மாதிரி இருக்குமே.''

வாசன் உடனடியாக ஒத்துக் கொண்டான். அந்த ஐடியா அவனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

வாசனுக்காக இல்லாவிட்டாலும், சத்யாவிற்காக ஒத்துக் கொண்டான்.

ஒரு நாற்பத்தைந்திற்கு முப்பது சென்டிமீட்டர் அட்டை எடுத்துக் கொண்டார்கள். க்ருஷ்ணா ஏதோ மலைகாடு, சூரியன், நதி என்று வரைந்து பார்த்தான். பிடிக்கவில்லை. வாசன் ஏதோ வரைந்தான். பிடிக்கவில்லை.

சத்யாவாய் ஏதோ வரைந்தாள். அதுவும் சரிப்படவில்லை.

மூவருமாய் சேர்ந்து சத்யாவின் வீட்டில் வரைவது என்று முடிவெடுத்தார்கள். நூறு யோசனைகள் தோன்றின. ஐம்பது யோசனைகள் செயல்வடிவம் ஆக்கப்பட்டன. ஒன்றுகூடத் தேறவில்லை. எந்த வாழ்த்து அட்டையும் அவர்கள் மூவர் திருப்திக்கு ஒத்து வரவில்லை. சில சமயம் சத்யாவும் க்ருஷ்ணாவும் மட்டும் முயன்றார்கள். சில நேரங்களில் சத்யாவும் வாசனும் மட்டும் முயன்றார்கள்.

சத்யாவும், க்ருஷ்ணாவும் வரைந்தபோது, அவள் அவன் மேல் பட்டாள். அவன் அவள் மேல் பட்டான். அவனுக்கு ஜிவ்வென்று இருந்தது. உடல் முழுக்க வெப்பம் தகித்தது. சத்யாவிற்கு அப்படி இருந்ததா என்று புரியவில்லை.

அவள் என்னவோ இயல்பாக இருக்கிற மாதிரித்தான் பட்டது. அவனுக்குள் தான் ஆயிரம் பறவைகள் சிறகடித்தன. லட்சம் கிலோ வாட்டில் மின்சாரத் தாக்குதல் நிகழ்ந்தது. அவளென்னவோ அப்படியே தான் இருந்தாள்.

ராட்சசி. புரிந்துதான் அலைக்கழிக்கிறாளா?

இல்லை புரியாமல் அலைக்கழிக்கிறாளா?

இல்லை பெண்களுக்கே உரிய அழுத்தம் அவளையும் அப்படி மௌனமாக உணர்ச்சிகள் வெளிப்படுத்தாத மரப் பொம்மையாக இருக்க வைக்கிறதா?

சத்யா அவனைப் பற்றி என்ன நினைக்கிறாள்?

வாசன் சத்யாவைப் பற்றி என்ன நினைக்கிறான்?

ஒன்று புரிந்தது.

நட்பெனும் வேலியைத் தாண்டி என்றைக்கோ க்ருஷ்ணா ஓடி வந்து விட்டான்.

க்ருஷ்ணா அவளைக் காதலிக்கிறான்.

''சத்யா. நான்... நான்.''

''நீ?''

''நான் ஒன்று கேட்கட்டுமா சத்யா?''

''கேளேன்.''

''உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா? வாசனைப் பிடித் திருக்கிறதா?''

''இருவரையும்'' என்றாள் அவள் கண்களை அகல விரித்து.

''அது சரி. நண்பர்கள் என்ற முறையில் உனக்கு இரு வரையும் பிடித்திருக்கலாம்.''



''பின்னே?''

''ஐ லவ் யூ சத்யா.''

''நிஜமாகவா?''

''ஆம். ஏன்?''

''நானும் உன்னைக் காதலிக்கிறேன்.''

''உய்ய்ய்ய் உய்ய்... உய்ய்ய்... உய்ய் உய்ய்.''

''ச்சீ. என்ன இது? தேர்ட் ரேட் பிஹேவியர்?''

''மனிதன் கடைசியில் எப்படியும் கற்காலத்தவன் தான் சத்யா. இல்லாவிட்டால் போர் ஏது? உனது. எனது ஏது? நீ காதலிக்கிறாய் என்றால் நீ என்னவள். அதுதான் சந்தோஷம்.''

''வாசன் கலகல டைப் இல்லை. நத்தை மாதிரி. தொட்டால் சுருங்கி.''

''ஆமாம். ஆமாம்! நீ என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வாயா?''

''காதலித்துவிட்டு, படித்துவிட்டு. அம்மா அப்பாவிடம் அனுமதி கேட்டுவிட்டு.''

''பின்னே. நானும் காத்திருப்பேன். நீ எனக்கே எனக்கு என்று தெரிந்து விட்டால் நான் உனக்காக எவ்வளவு நாள் வேண்டுமானாலும் காத்திருப்பேன். ஒரு முத்தமிடேன்.''

சத்யா கொஞ்சம் கூடத் தயக்கமின்றி அவனை முத்தமிட்ட வேளை அங்கே வாசன் இல்லை.

க்ருஷ்ணா மனம் குறளியாட ஆட வந்தான். சத்யா எனக்குத்தான்.

இந்தப் பந்தயத்தில் ஜெயித்தவன் நான்.

அதன் பின் வாழ்த்து அட்டையாவது இன்னொன்றாவது. அது எனக்குப் பெரிதாய்த் தோன்றவே இல்லை.

சத்யாவும், வாசனும் சேர்ந்து ஒரு வாழ்த்து அட்டையைத் தயாரித்தார்கள்.

நன்றாகத்தான் இருந்தது. அதை பிரிண்டரிடம் கொண்டு போனால், அவன் சாதாரண அச்சில் அதை பிரிண்ட் பண்ணினால், நன்றாக இருக்காது என்றான்.

ஆப்செட் பிரிண்டிங் என்றான்.

ஆப்செட் பிரிண்டிங் அது இது என்று அலையத் தொடங்கு முன் பரீட்சை வந்து, அவனும் வாசனும் பரீட்சை பாடங்களில் தீவிரமாய்ப் போய், கடைசிப் பரீட்சையை எழுதி முடித்த கையோடு க்ருஷ்ணா வாசனை அழைத்துக் கொண்டு ஒரு ஹோட்டலுக்குப் போனான்.

ஸ்வீட் வரவழைத்தான்.

சாப்பிடச் சொன்னான்.

வாசன் சாப்பிட்டான்.

''என்ன விசேஷம் க்ருஷ்ணா?''

''நான் சத்யாவைக் காதலிக்கிறேன்'' என்றேன்.

வாசன் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தான்.

''என்னது?''

''ஆம்'' என்றேன்.

''அவள்... சத்யா... என்ன சொன்னாள்? சத்யாவிடம் நீ சொல்லிவிட்டாயா?''

''ஓ... யெஸ். சத்யாவும் என்னைக் காதலிக்கிறாள்.''

அவன் ஒரு மாதிரி பிரமை பிடித்தவன் போல் என்னைப் பார்த்தான்.

''டேய்... வாசன்... என்னடா? ஏன் பேச மாட்டேன் என்கிறாய். நான் ஏதாவது தப்பாகச் சொல்லி விட்டேனா?''



''இல்லை. நீ வெறும் நட்பு என்றுதானே தொடங்கி னாய்?'' என்று இயந்திரத்தனமாய்க் கேட்டான்.

''அப்படித்தான் ஆரம்பித்தது. கடைசியில் காதலில் போய் முடிந்து விட்டது. ஏன், நீயும் அவளைக் காதலிக்கிறாயா? என் சத்யாவை உப்பரிகை நிலா என்று சொல்வாயே. அது கீழே வராது என்பாயே. வந்து விட்டது வாசன். உப்பரிகை நிலா என் முற்றத்திற்கு வந்துவிட்டது.''

''ஒரு கவிதை சொல்லட்டுமா?''

''சொல் வாசன்.''

**அந்தரத்தில் உப்பரிகை.**
**அதில் ஓர் சொப்பனத்து சுந்தரி.**
**நேர் கீழே -**
**பொருதிப் பார்க்க இரு மல்லர்கள்.**
**நெருங்கி வந்தார்.**
**கிசு கிசுத்தார்.**
**நீச மகள்.**
**ஞானமில்லா வெற்றழகுப் பிண்டம்.**
**இதைப் பெற்றுவிடப்**
**போரிடவா**
**அறிவு தாங்கு மிரு பேரகலப் புயங்கள்?**
**விட்டு விடு என்று சொன்னார்.**
**விலகி நின்றார்.**
**உப்பரிகை நிலா உள் முற்றம் போயிற்று...**

வாசன் என்ன சொல்கிறான்?

அந்த நிலா எனக்கும் கூடாது என்கிறானா? அவள் நீசமான வளா? ஞானமில்லாதவளா? வெற்றழகுப் பிண்டமா?

க்ருஷ்ணா நிமிர்ந்து பார்த்தான்.

வாசன் அங்கே இல்லை.

# 5



க்ருஷ்ணாவின் கையில் நெருப்பு சுட்டது.

சிகரெட் வீசி எறிந்து நசுக்கிப் பாழாக்கினான்.

வீட்டுக்குள் நுழைந்தான்.

சத்யா படுக்கையில் புரண்டாள். அவன் கதவு தாழிடும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''என்ன க்ருஷ்ணா?''

''ஒன்றுமில்லை. நான்தான் வாசலில் உட்கார்ந்திருந் தேன். நீ தூங்கு'' என்றான்.

''சரி'' என்றாள். சரியில் ரியை உச்சரிப்பதற்குள் சத்யா மறுபடி தூங்கிப் போனாள்.

க்ருஷ்ணாவிற்கு கவிதைப் பக்கங்கள் இப்போது தெளி வாக அடையாளம் தெரிந்தது. சத்யா வெளியிட்ட கவிதைப் புத்தகத்தில் உப்பரிகை நிலா கவிதை கிடையாது. இப்போது அதுவும் சேர்ந்திருக்கிறது. அது மட்டும் தனியாகப் பிரிண்ட் செய்யப்பட்டு.

நாளைக்காலை ஆபீஸில் என்ன சொல்லப் போகிறேன்?

அந்த அட்டைகளும் அந்தத் துண்டுகளும் கூட மற்ற பேருக்கு எல்லாம் புதிராக இருந்த மாதிரி அவனுக்குப் புதிராக இல்லை.

வாசனும், சத்யாவுமாக இணைந்து தயாரித்த வாழ்த்து அட்டைதான் அது.



அதை வாசன் கொண்டு போய்ப் பத்திரப்படுத்தி விட் டான். இப்போது உபயோகமாகிறது. போலீஸிற்குக் கண்ணா மூச்சி காட்ட.

வாசன் அதன் பின் அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடவே இல்லை. க்ருஷ்ணா வீட்டிற்கு வந்து அம்மாவிடம் 'வாசன் வந்தானா?' என்று கேட்டான். இல்லை.

வாசனின் ஞாபகமாக அவனுடைய தோல்பையும் அதில் சில உடைகளும் மட்டுமே. அவனுடைய புத்தகங்கள் இல்லை. பட்டம் பெறும்போதுகூட வாசன் வரவில்லை. அவனும் முதல் வகுப்பில்தான் தேறியிருந்தான்.

எங்கேதான் போனான் வாசன்? என்ன ஆனான்?

க்ருஷ்ணா படுக்கையில் விழுந்தான். அவன் உடல் முழுக்க மழையில் நனைந்த மாதிரி வியர்த்திருக்கிறது.

* * *

மறுநாள் காலை.

க்ருஷ்ணா எழுந்தான். எழுந்தபோது ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தான். சத்யா அந்த ஃபைலைப் பார்க்கக் கூடாது. அந்தக் கவிதைப் பக்கங்களையும், அட்டைத் துண்டு களையும் பார்க்கவே கூடாது.

குளித்தான். ஷேவ் செய்தான். நல்ல பளீரான ஆடைகளை அணிந்து, சத்யா அளித்த காலை உணவைச் சாப்பிட்டு அலுவலகம் சென்றான்.

புறப்படுமுன் மனைவியை முத்தமிட்டான். முந்தைய நாள் போல இன்னொரு முறை விளையாட வேண்டாம் என்று செல்லமாக எச்சரித்தான்.

யமஹா டர் டர் என்றது.

ஆபீஸ் போய்ச் சேர்ந்ததும், அறைக்குள் நுழைந்ததும் முதல் வேலையாக பைலை பத்திரப் படுத்தினான்.

மணியடித்து பியூனை வரவழைத்து, ''பாஸ் வந்து விட்டாரா?''

''வந்து விட்டார் சார்! காபி சொன்னார். வாங்கி வரப் போகிறேன்.''

''எனக்கும் சேர்த்து வாங்கி வா. நான் அவர் ரூமில்தான் இருப்பேன்.''

பியூன் க்ருஷ்ணாவை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே நகர்ந்தான்.

* * *

''யெஸ்'' என்றார் சபாநாயகம். அவனைப் பார்த்து.

''உட்காரலாமா சார்.''

''உட்கார். எதற்கு என் அனுமதி கேட்கிறாய்?''

க்ருஷ்ணா உட்கார்ந்தான். தயங்கினான்.

''பையா. சொல். என்ன விஷயம்? என்னிடம் சொல்ல வேண்டுமென்று தானே நீ இந்த அறை வரைக்கும் வந்திருக்கிறாய்? இங்கே வந்து பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?''

''எப்படிச் சொல்வது என்றுதான்.''

''எதுவாக இருந்தாலும் சொல்.''

க்ருஷ்ணா சொன்னான்.

''சார். நான் அந்த மன நோயாளி கொலைகாரனைக் கண்டுபிடித்து விட்டேன்.''

''இஸிட்? நிஜமாகவா? ஒரு ராத்திரிக்குள்ளா? உனக்கு மை போட்டுப் பார்க்கும் வேலை ஏதாவது தெரியுமா என்ன? அடாடா. க்ருஷ்ணா இதென்ன? சின்னக் குழந்தை மாதிரி அழுது கொண்டு! ஆறுமுகம்... காபி கொண்டு வா. என் உதவியாளருக்கு இப்போது அவசியமாக ஒரு காபியும் சிகரெட்டும் தேவைப்படுகிறது. மை டியர் யெங் மேன். நான் உன்னைக் கூட்டத்தின் நடுவே வைத்து, ''நீ ஒரு வேலையில்லாத ஈ ஓட்டி ஆசாமி'' என்று நான் சொன்னதற்காக இப்போது அழுது கொண்டிருக்க மாட்டாய் என்று நம்புகிறேன்.''



''நிச்சயம் இல்லை சார்.''

''தென், ஸ்டாப் தட் நான்சென்ஸ். கமான், அவுட் வித் யுவர் ஃபைண்டிங்ஸ். யூ ஹாவ் காட் அன் எக்ஸ்ட்ரார்டினரி ப்ரெய்ன் ஐ ஸே.''

''என் மூளை கண்டு பிடிக்கவில்லை சார். என் விதி கண்டு பிடித்திருக்கிறது.''

சபாநாயகத்தின் புருவங்கள் ஒன்று சேர்ந்தன. ''என்ன சொல்கிறாய் நீ?''

க்ருஷ்ணா மெல்லிய குரலில் தொடங்கினான். ஃப்ரேம் ஃப்ரேமாகச் சொன்னான். வாசனை முதல் முதலாகச் சந்தித்தது. அவனுக்கும் இவனுக்கும் தமிழால் அறிமுகம் ஆனது. அப்புறம் அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சத்யாவின் பிரவேசம். கவிதைப் புத்தகம். வாழ்த்து அட்டை. அப்புறம் காதல். அவனிடம் சொன்னது. வாசன் பிரிந்துப் போனது. என்ன ஆனான் என்று தெரியாமல் போனது. பட்டம் பெற்று ஐ.பி.எஸ். படித்து. க்ரைம் ப்ராஞ்சில் சேர்ந்தது. அப்பா அம்மா அனுமதியுடன் சத்யாவை மணந்தது. வாழ்க்கை வசந்தமாகச் சென்றது. நடுவில் இப்போது இந்த சைக்கோபத் கேஸை ஆராய்ந்தால் கடைசியில் அது வாசனாகவே இருப்பது.

முடித்துவிட்டு ஆறிப்போயிருந்த காபிக் கோப்பையை நடுங்கும் கரங்களால் எடுத்துக் குடித்தான். ஒரு சிகரெட்டை உதட்டில் பொருத்திப் பற்ற வைக்கப் பார்க்க, கரங்கள் நடுங்கின. லைட்டரின் ஜ்வாலை நூலால் கட்டி இழுக்கப்படும் குழந்தை பொம்மை போல் இங்கும் அங்குமாக இழுபட்டது.

சபாநாயகம் லைட்டரைப் பற்றி, அவன் சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

''காம் டவுன், க்ருஷ்ணா.''

க்ருஷ்ணா நாற்காலியில் சாய்ந்தான்.

''நான் உனக்காக வருந்துகிறேன் க்ருஷ்ணா...! ஐ''ம் ஸாரி. ஐ''ம் எக்ஸ்ட்ரீம்லி ஸாரி.''

''பரவாயில்லை சார்.''

''நீ கேஸை கண்டினியூ பண்ணுகிறாயா? அவன் எங்கே என்று தேடி அவனைப் பிடிக்கும் தைரியம் உனக்கிருக்கிறதா? இல்லை. நான் வேறு ஆள் யாரையாவது போடட்டுமா?''

''வேண்டாம் சார். நானே அவன் எங்கே என்று கண்டு பிடிக்கிறேன்.''

''ஓ.கே. உனக்கு அதில் சம்மதமென்றால் எனக்கும் சம்மதம். உன் நண்பனாயிற்றே என்று நீ விட்டுக் கொடுக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். அப்படிச் செய்வது என்றால் நீ இன்றைக்கு. இந்த நேரத்தில் என் டேபிளின் முன்னால் வந்து அமர்ந்து கொண்டு வாசனைப் பற்றிச் சொல்லியிருக்க மாட்டாய் பட், கொஞ்சம் சீக்கிரம் கண்டு பிடி.''

''ஏன் சார்?''

''சொல்கிறேன். உன்னிடம் நான் முழு ஃபைலும் தர வில்லை. முக்கால் ஃபைல்தான் தந்தேன். மீதி கால் ஃபைலை நான் வைத்திருக்கிறேன். அந்த மிஸ்டர் கே. பண்ணிய கொலைகள் மொத்தம் பதினொன்று. உன்னிடம் எட்டுக் கொலைகளைப் பற்றிய விபரங்கள் மட்டும்தான் இருக்கும். மூன்று கொலைகளைப் பற்றிய விவரங்களை நான் படித்து முடிக்காததால் அவற்றை நான் எடுத்துப் போய் விட்டேன்.



அவற்றை நான் நேற்று இரவு படித்தேன். என்னுடைய சில இன்ஃப்ரன்ஸ்களை உனக்கு நான் சொல்ல ஆசைப் படுகிறேன்.''

''என்ன சார்?''

''அவன் முதல் கொலையை போன மார்கழியில் நடத்தி யிருக்கிறான். அப்புறம் மாதத்திற்கு ஒரு கொலை. மாதத் திற்கு ஒரு கொலை என்று அவன் செய்திருந்தாலும் இன்ன தேதியில் என்று அவன் செய்யவில்லை. ஒரு மாதம் இருபத்து மூன்று. ஒரு மாதம் இருபத்தொன்று. ஒரு மாதம் பதினெட்டு என்று தேதி மாற்றிச் செய்திருக்கிறான். முதல் மாதம் டிசம்பர். அது பனி மாதம் என்பதால் நமக்கு மார்கழி என்று ஸ்ட்ரைக் ஆகியிருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். கொலை காரன் மன நிலை தவறியவன் என்றாலும் ஒவ்வொரு கொலை யிலும் ஒரே பாட்டர்ன். முதலில் அவன் தேர்ந்தெடுக்கும் பெண். அவனுடைய இலக்கிற்குப் பலியான பெண்களில் பெரும்பாலானவர்கள் கற்பை மதிக்காதவர்கள், மற்றவர்கள் கற்பை மதிப்பவர்களோ இல்லையோ, சோஷியலாக ஆண் களுக்குச் சமமாக சொஸைட்டியில் இருந்தவர்கள். கலகல வென்று சிரித்துப் பேசி, ஆண்களுக்கு நல்ல கம்பெனி கொடுத்தவர்கள். மிஸ்டர் கே இந்த இருவகைப் பெண் களையும் தீர்த்துக் கட்டியிருக்கிறான். இது இன்ஃப்ரன்ஸ் நம்பர் ஒன். இன்ஃப்ரன்ஸ் நம்பர் டூ. கொலையை அவன் நைலான் கயிற்றால்தான் செய்திருக்கிறான். இன் அதர் வர்ட்ஸ், அவனுடைய ஆயுதம் கயிறு. நம்பர் த்ரீ. கொலை நடக்கும் இடத்தில் அவன் ரத்தம் இருக்கிறது. ஒரு துளியாவது. அப்புறம் நம்பர் ஃபோர். அவன் விட்டுப் போகும் சவால் தடயம். ஒரு அட்டை. அது வாழ்த்து அட்டையின் ஒரு பகுதி என்று நீ சொல்லி விட்டாய். என்னிடம் இருக்கும் மிச்சத் துண்டுகளைக் கொடுத்தால் அனேகமாக அது சத்யாவும்,

அவனும் சேர்ந்து தயாரித்த வாழ்த்து அட்டையின் ஒரு பகுதியாகத்தான் தெரிய வரலாம். அப்புறம் கவிதைப் பக்கங்கள். இவ்வளவு தூரம் பாட்டர்ன் வைத்திருக்கும் அவன் கொலை செய்யும் நாளிலும் ஒரு பாட்டர்ன் வைத்திருக்கக் கூடும் என்று நினைத்தேன். யோசித்துப் பார்த்தேன். காலண்டரை வைத்துக் கொண்டு சரி பார்த்தேன். கடைசி மூன்று கொலைகளும் நடந்திருப்பது நல்ல முழு நிலா நாட்களன்று. அதாவது பௌர்ணமி தினங்களில். ஸோ, இந்த பௌர்ணமி தினத்திலும் நான் அசம்பாவிதம் எதிர்பார்க்கிறேன். பௌர்ணமிக்கு இன்னும் நான்கே தினங்கள் இருக்கின்றன. அதனால் இன்றையிலிருந்து நான்காவது இரவுக்குள் நீ அவனைக் கண்டு பிடிக்க வேண்டும். இது முக்கியம். முக்கியம். இதை மட்டும் ஏன் அழுத்திச் சொல்கிறேன் என்றால், அவனுடைய அடுத்த இலக்கு சத்யாவாகக் கூட இருக்கலாம்.''

''சார்'' என்றான் க்ருஷ்ணா நாக்கு உலர.

''இது ஒரு ஆங்கிள். உன் மனைவி வாசனுடன் நெருங்கிப் பழகியிருக்கிறாள். அவனுடன் கை குலுக்கியிருக்கிறாள். அவனுடன் பல சந்தர்ப்பங்கள் அவளுடைய வீட்டில் வாழ்த்து அட்டை தயாரித்திருக்கிறாள். அவன் அடி மனதில் இந்த மாதிரி பெண்கள் எல்லாம் சமூகத் துரோகிகள் என்ற சித்தாந்தம் பதிந்திருக்கிறது. எனவே அவன் உன் பெண்டாட்டியைத் தேடிக்கூட வரலாம். எச்சரிக்கையாக இரு. அதை விட முக்கியம் அதற்குள் நீ அவனைக் கண்டு பிடிப்பது. இப்போது புரிகிறதா. நான் ஏன் அவசரம் அவசரம் என்று புலம்புவதன் அர்த்தம்.''

''யெஸ் சார்'' என்று எழுந்து கொண்டான் க்ருஷ்ணா.

'வெயிட். இந்தக் கேஸில் நீ தனியாக ஈடுபடாதே. உனக்கு ஜெயவேலைத் தருகிறேன் உதவிக்கு. அவன் உன்னைப்



போல் இளைஞன். தைரியமானவன். துப்பாக்கி சுடத் தெரிந்தவன். சண்டைப் பயிற்சிகள் தெரிந்தவன். ஒரு வேளை உன்னை செண்டிமெண்ட் தடுத்தாலும் கூட அவன் அந்த செண்டிமெண்டுகளால் பாதிக்கப்படாதவன். ஸோ. டேக் ஹிம் வித் ஹிஸ் கன். அவன் துப்பாக்கியோடு வந்தால் உனக்கு உதவியாய் இருக்கும்.''

''யெஸ் சார்.''

''இன்னொன்று.''

''சார்?''

''உன் வீட்டுக்கு மஃப்டியில் இரண்டு காவல்காரர்களைப் போடச் சொல்லட்டுமா, ஜஸ்ட் வாட்ச் டாக்ஸ். ஒரு அவசரத் திற்கு.''

''வேண்டாம் சார்.''

''ஏன்?''

''சத்யாவை அவன் கொல்ல மாட்டான். அவனுக்கு அவளைக் கொல்ல மனசு வராது.''

சபாநாயகம் சிரித்தார்.

''நீ இன்னும் பழைய வாசனாக அவனை நினைத்துக் கொண்டிருக்கிறாய்! எனிவே, பெஸ்ட் ஆஃப் லக். இதோ இந்த சூட்கேஸைத் திற. அதில் நான் மிச்ச மூன்று கேஸ்கள் கொண்ட ஃபைலையும் வைத்திருக்கிறேன். டேக் இட். படித்துப் பார். சொல்ல முடியாது. கேஸ் மாறினாலும் மாறக் கூடும்.''

''யெஸ் சார்'' என்று அவன் சூட்கேஸ் நோக்கி நடந்தான் ரோபோ போல.

# 6



"மிஸ்டர் கே.யை எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறோம் சார்?" என்று கேட்ட ஜெயவேல் நல்ல உயரம். ஒல்லி என்றும் குண்டு என்றும் சொல்ல முடியாத உடல் வாகு. நெற்றி அகலம். முன் முடியை நன்கு தூக்கி வாரியிருந்தான். மீசை திருத்தமாக வைத்திருந்தான். காதோரத்தில் இருந்த முடியை எட்டணாவோ, எட்டு ரூபாயோ, எண்பது ரூபாயோ கொடுத்து சிகை அலங்காரக் கடையில் களைந்திருந்தான். சமீப காலமாக டீ.வி.யில் செய்தி வாசிக்கும் ஒருவரை நினைவு படுத்தினான்.

க்ருஷ்ணா அவனைப் பார்த்தான்.

"கம் வித் மீ" என்றான்.

அவர்கள் இருவருமாக யமஹாவில் வீடு திரும்பினார்கள். க்ருஷ்ணாவின் வீட்டிற்கு. சத்யா அவர்கள் இருவரையும் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

"என்ன ஆபீஸிற்கு மட்டமா?" என்று கேட்டாள்.

"இல்லை. முக்கியமான வேலை. அதனால் வெளியில் சுற்ற வேண்டியிருந்தது. பை தி பை. இது ஜெயவேல். எங்கள் டிபார்ட்மெண்டில் புதிதாகச் சேர்ந்திருக்கும் ஆபீஸர்."

"ஹலோ" என்று சத்யா அவன் கை குலுக்கினாள்.

ஜெயவேல் க்ருஷ்ணாவைப் பார்த்துக் கொண்டு ஒரு தர்ம சங்கடச் சிரிப்புடன் கை குலுக்கினான்.

"சத்யா காபி இரண்டு பேருக்கும்."



"இதோ" என்று சத்யா உள்ளே ஓடினாள்.

க்ருஷ்ணா அவனுடைய ஆபீஸ் அறையில் நுழைந்தான். ஒரு ஸ்டூலில் ஏறினான். பரண் மேலிருந்து அந்த தோல் பையை எடுத்தான். வாசன் விட்டுப் போனது. க்ருஷ்ணா அவனுடைய ஞாபகமாக வைத்துக் கொண்டது.

"என்ன சார் இது?"

"இது வாசனின் தோல் பை. என்னிடம் விட்டுச் சென்றதாகச் சொன்னேனே. அது. இதுநாள் வரை நான் இதைத் திறந்து பார்க்கவில்லை. இப்போது அவசியம் வந்திருக்கிறது. என் மனைவி வரும்போது மட்டும் நான் இதைப் பார்ப்பது அவளுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டால் போதும். அவளுக்கு வாசன் விஷயம் எதுவும் தெரியாது. தெரிந்தால் அப்செட் ஆகி விடுவாள்."

"ஓ.கே." என்றான் ஜெயவேல். வாசல் அருகே நின்று கொண்டான்.

அங்கொரு கண்ணும், க்ருஷ்ணாவின் செயலில் ஒரு கண்ணுமாய்ப் பார்த்தான்.

க்ருஷ்ணா அந்தப் பையைத் திறந்து அதிலிருந்த சட்டைகளை எடுத்து உதறினான். பாண்ட்களை எடுத்து உதறினான். இவ்வளவு நாட்களாக அந்தத் துணிகள் தோல்பையிலேயே அடைந்து கிடந்ததால் ஒரு மாதிரி பழந் துணிகளின் வாசம் அந்த அறையை நிறைத்தது.

தோல் பையின் அடியில் சில கடிதங்கள் கிடந்தன. ஒரு கட்டுப் போட்டு. க்ருஷ்ணா அந்தக் கடிதக் கட்டை எடுத்தான். துணிகளை பழையபடி அந்த தோல் பையில் அடைத்து தோல் பையை மூடி வைத்து விட்டு ஸ்டூலில் இருந்து இறங்கியபோது சத்யா காபியுடன் வந்து விட்டாள்.

க்ருஷ்ணா கடிதக் கட்டைப் பாக்கெட்டில் வைத்தான்.

சத்யா கொடுத்த காபியை இருவரும் குடித்தார்கள். சத்யா ட்ரேயையும், காபி டம்ளர்களையும் எடுத்துச் சென்றதும், க்ருஷ்ணா அறைக் கதவைச் சார்த்தினான்.

''வாசன் விட்டுச் சென்ற தோல் பையில் இருந்த கடிதங்கள் இவை. இவைதான் நம்முடைய ஒரே நுனி. இவற்றிலிருந்து நமக்கு ஏதாவது கிடைத்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் தட் ஈஸ் தி எண்ட் ஆஃப் ஸாலமன் கிராண்டி என்று நாம் முடிவு செய்ய வேண்டியதுதான்.''

''இல்லை சார். உங்களை கடவுள் அப்படி எல்லாம் கை விட மாட்டார்'' என்றான் ஜெயவேல் ஆறுதலாக.

க்ருஷ்ணா அந்தக் கடிதக் கட்டை வெளியே எடுத்தான். ரப்பர் பாண்டை உருவினான். முதல் கடிதத்தை எடுத்தான்.

க்ருஷ்ணாவின் கண்கள் அகன்றன.

''ஜெயவேல். லுக் அட் திஸ்.''

''என்ன சார்?''

''வாசன் என் வீட்டில் இருந்தவரை, அவன் வீட்டுக்கு வரச் சொல்லி என்னைக் கூப்பிட்டதே இல்லை. ஆவடியில் அவன் வீடு எங்கோ இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறான். அதில் அவனுடைய முகவரி இருக்கிறது. பார்.''

ஜெயவேல் பார்த்தான்.

*அன்புள்ள வாசனுக்கு,*

*அம்மா எழுதியது. நீ உன் பிரண்ட் க்ருஷ்ணனின் வீட்டிலேயே இருக்கப் போவது பற்றி சந்தோஷம். நீ இங்கே வரவேண்டாம். அங்கேயே இரு. உனக்கு அவ்வப்போது நான் பணம் அனுப்புகிறேன். உன் செலவிற்கு வைத்துக் கொள். நன்றாகப் படித்து ஒரு வேலை தேடிக் கொள். அதற்குப் பிறகு நான் உன் நிழலிலேயே இருக்கிறேன். ஆசீர்வாதம். மனதைப் போட்டு அனாவசியமாய்க் குழப்பிக் கொள்ள வேண்டாம். உலகில் எவ்வளவோ விஷயங்கள் விதிப்படி நடக்கின்றன. விதிப்படிதான் எல்லாம் நடக்கும். நீ நல்ல பையன். என்னை உனக்குப் புரியும் என்று நினைக்கிறேன். நீ வராதே. உன் பிரண்டையும் நம் வீட்டிற்குக் கூட்டி வராதே. மறுபடியும் ஆசீர்வாதம்.''*



நிறைய கடிதங்கள் முகவரி போடாமல்தான் எழுதப்பட்டிருந்தன. ஆனால், ஒரு சில கடிதங்களில் மட்டும் எப்படியோ, முகவரி எழுதப்பட்டிருக்க, நம்பர் ஐந்து, வேணி நகர், ஆவடி, சென்னை என்று படித்தான் ஜெயவேல்.

''நாம் அங்கேதான் போய் முதலில் பார்க்க வேண்டும் ஜெயவேல்.''

* * *

யமஹா ஆவடி பஸ் ஸ்டாண்ட் அருகே போய் நின்றது. வரிசையாக டீக்கடைகள். தட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சமூசாக்கள். கஜூராக்கள். பாட்டில்களில் பன்கள். நடைபாதை இல்லை. பதிலாக நிறைய வியாபாரிகள். உலகில் இவற்றை எல்லாம் விற்பார்களா, வாங்குவார்களா என்று சந்தேகம் வரக்கூடிய பொருட்களை எல்லாம் விற்றார்கள். வாங்கினார்கள். நிறைய மனிதர்கள் ஸ்டேஷனில் இருந்து வந்தார்கள். நிறைய மெஷின்கள் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி போய்க் கொண்டிருந்தன. டாங்க் ஃபாக்டரிக்கு வருமாறு ஆட்டோக்காரர்கள் கூவி அழைத்தார்கள். ''வந்து சூடா டீ சாப்ட்டுப் போங்க சார்.''

அந்த டீக்கடைக்காரனிடம் சென்று அந்த முகவரி பற்றி விசாரித்தான் ஜெயவேலு.

''வேணி நகரா சார். கச்சடா ஏரியா சார். அதோ ரெயில்வே கிராஸிங் தெரீதா. அதும்பக்கத்துல தியேட்டர் தெரீதா.

தியேட்டருக்கு எதிர்க்க பாலத்தைக் கிராஸ் பண்ணு. ஸ்ட்ரெய்ட்டா போ. லெஃப்ட்ல ஒடி. ஸ்ட்ரெய்ட்டா போ. ரைட்ல ஒடி. அதான் வேணி நகர்.''

ஒரு ஸ்டேஜுக்கு மேல் மோட்டார் பைக் போகாது என்று தோன்றியது. சின்ன சந்து. பைக்கை கொஞ்சம் அகலமாய் இருந்த தெருவில் ஒரு வீட்டோரமாய் நிறுத்தி, அங்கிருந்த ஒரு பையனிடம் 5 ரூபாய் கொடுத்து பார்த்துக் கொள்ளச் சொல்ல அவன் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றவன் போல் மகிழ்ந்து போனான்.

நடந்தார்கள். குறுகலான சந்து. சாக்கடை நடுவே ஓடியது. பன்றிகள் சாலை இடறிச் சென்றன. துர்நாற்றம் வயிற்றுக் குடலை மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் என வாஷிங் மெஷின் தனமாய் சுற்றியது.

நம்பர் ஐந்து. அதை வீடு என்று சொல்லலாம் என்றால் வீடு. நான்கு சுவர்கள் தெரிந்தன. மண் சுவர்கள். மேலே ஆஸ்பெஸ்டாஸ் சார்பு இறங்க, ஆஸ்பெஸ்டாஸில் அங்கங்கே கோலத்திற்குப் புள்ளி வைத்த மாதிரி துருப்பிடித்த இரும்பு போல்ட் நட்டுகள்.

கதவு சாத்தியிருந்தது.

தட்டினார்கள்.

கதவு திறந்தது. குப்பென்று ஒரு மாதிரி 'கவுச்சி' வாடை அடித்தது. திறந்தவள் ஒரு கிழவி.

''ஆரு வோணும்?''

''வாசன்?''

''வாசனா... அது எப்பவோ வூட்டை வுட்டுப் போய்டிச்சே நைனா. நீ இன்னா வோணும் வாசனுக்கு?''

''ப்ரண்ட்ஸ். நீங்கள் யார்? அவன் அம்மாவா?''



''அது பாழாப் போச்சி போ. நான் அவன் ஆத்தா இல்ல. அவன் ஆத்தா சொம்மா டி.ஆர்.ராஜகொமாரி கணக்கா இன்னா அம்சமா இருப்பா. அவ தலையெத்து நல்லால்ல. கட்னவன் இவ வவுத்துல கொயந்தையக் குட்துட்டுப் போய்ட்டான். இவ கொயந்தையும் பாத்துக்கணும். அவ வவுத்தையும் வளக்கணும். எக்ஸ்போர்ட் கம்பெனிக்குத் துணி தச்சிக் கொடுக்கப் போனா. துட்டு சரியா வரல்லே. போன எடத்துல எந்தப் படுபாவி கைய வச்சி அவ மனசை மாத்துனானோ இன்னாவோ. அதுல துட்டு நெறைய வருதுன்னு மனசு மாறிப் போய்ட்டா. வாசனுக்கு அவ அம்மாக்காரி இப்படின்னு தெரிஞ்ச வுட்டு வூட்டுல இருப்பே கொள்ளலை. போம்மே நீயும் ஓணாம். ஒன் ஒறவும் வோணாம்னு போய்ட்டான். இது பையன் பாக்க வரும். வரும்னு ஏங்கிக்கிட்டு இருந்தது. வரலை டி.பி. வந்து இருமி இருமி வூடெல்லாம் ரத்த ரத்தமா வாந்தியெடுத்துச் செத்துப் போய்ட்டா. நான்தான் தூக்கிப் போட்டேன் அவளை. அவ சம்பாரிச்ச வூடுதான் இது. பையனை என்னிக்காவது வந்தா குடுக்கச் சொல்லிக்கீறா. அதான் இங்க நான் இருக்கேன். வாசனை எங்கனா பாத்தா வரச் சொல்லேன். எனக்குக் கூட அவனைப் பாக்கணும் போலக் கீது.''

''அவனிடமிருந்து ஏதாவது தகவல் வருமா பாட்டி?''

''பொங்கலுக்கு, தீபாவளிக்குன்னு அவங்கம்மா பேரு போட்டு வாய்த்து வரும். அவனாண்டருந்துதான்னு அவனோட ஆத்தா சொல்லும். ஏம்மே. அட்ரசு இருந்தா சொல்லும்மே. நான் போய்க் கண்டுக்கினு வரேன்னு சொன்னேன். பாவிப்பையன் அட்ரஸு எதுவும் எயுதாம வெறும் கவரு மட்டும் அனுப்பறான். உள்ள அரிசி டப்பால போட்டு வெச்சிருக்கேன் பாக்கறியா நைனா?''

''குடு பாட்டி'' என்று ஜெயவேல் பாட்டியிடம் ஒரு ஐம்பது ரூபாய் நீட்டினான்.

''இது எதுக்கு நைனா?''

''என் பாட்டிக்கு நான் வெற்றிலை பாக்குச் செலவுக்குக் கொடுப்பதாக வைத்துக் கொள்ளேன்.''

வாங்கிக் கொண்டு உள்ளே போனாள்.

ஜெயவேல், க்ருஷ்ணாவின் முகம் பார்த்தான். வாசனின் அம்மா அந்த மாதிரியா? அவன் வாழ்க்கை அப்படியா நடந்தது?

கிழவி திரும்பி வந்தாள். நான்கைந்து வாழ்த்துக் கவர்களுடன்.

ஆளுக்கொன்றாய் பிரித்தார்கள். உள்ளே 'வாசன்' என்ற கையெழுத்து மட்டும். அட்ரஸ் இல்லை. வாழ்த்து அட்டைகள் சின்னக் குழந்தைகள் வரைந்த ஓவியங்களாய் இருந்தன.

முன்னால் பின்னால் திருப்பித் திருப்பிப் பார்த்தார்கள்.

வேறு எந்த முகவரியும் இல்லை. வாழ்த்து அட்டையைத் தயாரித்த கம்பெனியின் பெயர் மட்டும் கார்டின் பின் பக்கம் ஒரு ஓரத்தில் மிக மெல்லிய தன்மையில், அந்தப் பெயர் அங்கே அச்சாயிருப்பது உறுத்தாத வகையில் லைட் கலரில் அச்சாகியிருந்தது.

'SAVAKRI.'

ஒவ்வொரு ஆண்டுக் கார்டையும் பார்த்தார்கள். ஒவ்வொன்றிலும் 'SAVAKRI'.

''இது பெரிய கம்பெனி சார். மெட்ராஸில் ஒலிம்பிக் மாதிரி, மும்பையில் ஆர்ச்சி மாதிரி. க்ரை மாதிரி. சாவாக்ரை. வெறும் வாழ்த்து அட்டைகள் மட்டும் தயாரிக்கும் கம்பெனி இது'' என்றான் ஜெயவேல்.

''எனக்குக் கிடைத்து விட்டது'' என்று கார்டை ஒரு விரலால் தட்டினான் க்ருஷ்ணா.

''என்ன சார்?'' என்று புருவங்கள் உயர்த்தினான் ஜெயவேல்.



''சாவாக்ரை என்றால் என்ன?''

''க்ரை நிறுவனம் இருக்கிறதில்லையா? அதற்குப் போட்டி போல ஆரம்பித்திருப்பதாகச் சொன்னார்கள். குழந்தைகளின் அழுகுரலுக்கு சாவே கிடையாது என்று 'ஸாவாக்ரை' என்ற வார்த்தைக்குப் புதிதாக அர்த்தமெல்லாம் சொன்னார்கள். இந்த வாழ்த்து அட்டைகளுக்கான விளம்பரங்களில்.''

''நானும் பார்த்திருக்கிறேன் ஜெயவேல். எனக்கு அப்போது தோன்றாத ஒரு விஷயம் இப்போது தோன்றியிருக்கிறது. நான் 'சாவாக்ரை' என்று தமிழில் படித்துக் கொண்டிருந்தேன். அதனால் இதன் முழுப் பின்னணி அப்போது தெரியவில்லை எனக்கு. ஆக்சுவலாக இங்கிலீஷில் ஏழு எழுத்துக்கள். SA எஸ்.ஏ. முதல் இரண்டு எழுத்துக்கள் சத் யாவைக் குறிக்கின்றன. இரண்டாவது இரண்டு எழுத்துக்கள் வாசனைக் குறிக்கும். வியும் ஏயும். கடைசி மூன்று எழுத்துக்களில் நான் இருக்கிறேன். கே.ஆர்.ஐ. க்ருஷ்ணாவை ஆங்கிலத்தில் எழுதினால் முதல் மூன்று எழுத்துக்கள். இந்த வாழ்த்து அட்டைகளை உருவாக்குபவன் வாசன்தான்.''

''சூப்பர் சார். கை கொடுங்கள்.''

''லெட் அஸ் கோ அண்ட் ஃபைண்ட் வாசன்.''

''ஓ யெஸ் சார்'' என்றான் ஜெயவேல். க்ருஷ்ணாவின் மேலிருந்த பிரமிப்பு விலகாமல்.



# 7

'SAVAKRI என்ற எழுத்துக்கள் தங்கக் கலரில் மின்னின. நியான் விளக்குகள் SAVAKRI SAVAKRI SAVAKRI

என்று மாற்றி மாற்றி ஒளிர்ந்தன. வாசலில் கூாண்டஸா. பில் டிங்கைச் சுற்றி ஏ.ஸி. காம்பவுண்ட் சுவர் அருகே வாட்ச்மேன்.

SAVAKRI நிறுவனத்தின் ஓனர் அவர்களுக்கு ஏமாற் றத்தை அளித்தார். அவர்கள் எதிர்பார்த்தபடி, அது வாசன் இல்லை. வேறு யாரோ. ரவி என்று சின்னதாகப் பெயர் வைத்துக் கொண்டு தூக்கி வாரிய தலைமுடியும், திருகி விடப்பட்ட பெரிய மீசையும், ஆஜானுபாகுவான வளர்த்தியும் கொண்டிருந்தார். கழுத்தில் செயின். பதக்கம். கை விரல் களில் மோதிரம். வாயில் அந்நேரத்திலும் பீடாவின் மணம்.

''வாங்கண்ணாச்சி'' என்றார். பெரிதாகச் சிரித்தார். அவருக் குப் பின்னால் கதவு போட்டுத் தடுக்கப்பட்டிருந்த ஹாலில் ஆப்செட் பிரிண்டிங் மெஷின் 'சிகசிக் சிகாசிக்' என்று எதையோ வேகவேகமாய் அச்சடித்துக் கொண்டிருந்தது.

''நான்தான் ஆப்செட் போட்டிருக்கேன் அண்ணாச்சி. இது சைட் தொழில். நம்மகிட்ட பி.டி.எஸ். தம்பி நல்ல நல்ல கார்டா தயார் பண்ணிக் கொடுத்திடுவார் அண்ணாச்சி. நான் மார்க்கெட் பண்றேன். கார்டுக்குப் பேர் வச்சதெல்லாம் பி.டி.எஸ். தம்பிதான். அந்தப் பேர்லதான் கார்டு வரணும்னு சொன்னாரு. விளம்பரத்துக்கு ஐடியால்லாம் பி.டி.எஸ். தம்பிதான்'' என்றார் ரவி. ஒரு காபிக்கு நடுவே - அவர்கள் க்ரைம் பிராஞ்ச் ஆசாமிகள் என்று தெரிந்த பின்னால்.

''பி.டி.எஸ். அட்ரஸ் கிடைக்குமா?''

கிடைத்தது.

பி.டி.எஸ். ஜவஹர் குழந்தைகள் இல்லம். 215, திருமுருகன் தெரு, அடையாறு.

* * *

''ஜெயவேல் நாம் நேராக உள்ளே போக வேண்டாம். வாசலில் நின்று பார்ப்போம். அந்த பி.டி.எஸ். தான் வாசன் என்று நினைக்கிறேன். அவனுக்குத்தான் கார்டு டிசைனில் ஒரு டேஸ்ட் இருக்கிறது.''

''நீங்கள் சொல்கிறபடி சார்.''

* * *

ஜவஹர் குழந்தைகள் இல்லம் ஓர் அனாதை விடுதி. ஆலமரங்களுக்கும், வேப்ப மரங்களுக்கும், அசோக மரங் களுக்கிடையும் அந்த ஓட்டுக் கட்டிடம். ஓரளவு பெரிய கட்டிடமாகத் தெரிந்தது. கார் இல்லை. ஒரு சைக்கிள் ரிக்ஷா மட்டும். கட்டிடத்தின் பின்புறம் தெரியவில்லை. சில குழந் தைகள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அத்தனை பேரும் ஜிப்பாவும் பைஜாமாவும் அணிந்திருந் தார்கள். மனிதரில் இத்தனை நிறங்களா என்று வியக்கிற மாதிரி ஒவ்வொரு குழந்தையும் ஒரு நிறம்.

அவர்கள் இருவரும் எதிரில் இருந்த ஒரு பஸ் ஸ்டாண்டில் இருந்து பயணிகள் போலக் கவனித்தார்கள்.

கட்டிடத்தின் உள்ளிருந்து அவன் வந்தான். அவனும் பைஜாமா, ஜிப்பாவில் இருந்தான். வாசலுக்கு வந்ததும் சைக்கிள் ரிக்ஷாவில் ஏறினான்.

சுவர் ஓரமாய் ஒதுங்கி இருந்த சட்டை போடாத ரிக்ஷா டிரைவர், அவன் ரிக்ஷாவில் ஏறியதைப் பார்த்துவிட்டு, அவசரம் அவசரமாக ரிக்ஷாவில் ஏறி அதை மிதிக்கத் தொடங்க, க்ருஷ்ணாவிற்கு ரிக்ஷாவில் உட்கார்ந்திருந்த வனை துல்லியமாக அடையாளம் தெரிந்தது. அந்தத் தலை முடி லேசாகக் குறைந்திருந்தாலும், கன்னத்துச் செழுமை வற்றிப் போயிருந்தாலும் அவன் தான் வாசன். கவிதை பாடிய அந்நாள் நண்பன். இந்நாள் மிஸ்டர் கே. என்னும் பி.டி.எஸ். பி.டி.எஸ். என்ற பெயரை எங்கு பிடித்தானோ! எதற்குப் பிடித்தானோ! அவனைப் பார்த்தவுடன் க்ருஷ்ணாவின் உடலில் சிலிர்ப்பு ஓடியது!

அந்தரத்து உப்பரிகையைச் சொன்னவன். நீண்ட நெடு நேரமாய் நின்று பார்த்ததைச் சொன்னவன். ஐங்குதிரையை அதிரச் செலுத்தும் மனிதனைப் பாடியவன். பூக்களை, ஆற்றுப் படுகைகளை, பட்டொளி வீசிப் பறக்கும் கொடியை - எல்லாவற்றையும் பாடியவன்.

''இவனா சார்?'' என்றான் ஜெயவேல்.

க்ருஷ்ணா ஆமோதிப்பதாய் தலையசைத்தான்.

''ஐ'ல் ஷூட் தட் பாஸ்டர்ட்'' என்று ஜெயவேல் உடன் உணர்ச்சி வசப்பட்டான். துப்பாக்கியை உருவினான்.

க்ருஷ்ணா அவனைக் கையமர்த்தினான்.

''உணர்ச்சி வசப்படாதே. இப்போது நீ அவனைச் சுட்டால் நீ கொலைகாரனாகி விடுவாய், ஒரு வேளை அவன் குற்றமற்றவனாக இருந்தால், நம் சட்டத்தில் எதற்கும் ஆதாரம் வேண்டும். சாட்சி வேண்டும். இல்லாவிட்டால் தப்பு. அப்படி சாட்சி ஆதாரம் கிடைத்தாலும் நாம் அவனைக் கொல்ல முடியாது. கொல்லக் கூடாது. சட்டத்திடம்தான் ஒப்படைக்க வேண்டும். அவன் என்ன இருந்தாலும் என் நண்பன். என் கையால் நான் அவனைக் கொல்ல மாட்டேன். நீ கொல்வதை அனுமதிக்க மாட்டேன்.''

''சரி வாருங்கள். அரெஸ்ட் பண்ணுவோம்.''

''என்னவென்று?''

''கொலை செய்த குற்றத்திற்காக.''

''அவன் கொலை செய்ததை நீ பார்த்தாயா?''

''இல்லை.''

''பின்னே? என்ன ஆதாரம்?''

''வாழ்த்து அட்டைகள். கவிதைப் பக்கங்கள். போதாதா?''



''போதாது.''

''சார். அவனுடைய அம்மா ஒரு மோசமான நடத்தைக் காரி. அவனுடைய காதல் தோல்வியுற்ற காதல். உங்களிடமும் அவளிடமும் சோஷியலாக உங்கள் ஒய்ப் பழகினார்கள் என்பதற்காக அவன் உங்கள் ஒய்ப்பைக் கூடக் கொல்லும் அளவு மனம் கெட்டுப் போயிருப்பவன், லூஸ் நட். மண்டை ஓட்டில் க்ராக் விழுந்தவன். அவனைச் சாகடிக்க ஆதாரமாவது சாட்சியாவது நொண்டி ரேஸ் குதிரையும், மதம் பிடித்த யானையும் வெறி பிடித்த நாயையும் சுட்டுத் தள்ளித்தான் ஆக வேண்டும்.''

க்ருஷ்ணா அவன் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

''வெயிட் மை டியர் ப்ரண்ட், பௌர்ணமிக்கு இன்னும் மூன்றே நாட்கள். இந்தப் பௌர்ணமி ராத்திரி அன்று நாம் இவனை வாடச் பண்ணுவோம். ஒருவேளை இவன் தான் நாம் தேடும் மிஸ்டர் கே.என்றால் நிச்சயம் அன்றும் இவன் தன் முயற்சியைத் தொடருவான். அன்றைக்கு நாம் கையும் களவுமாகப் பிடிப்போம். எனக்கும் மன உறுத்தல் எதுவும் இருக்காது.''

ஜெயவேல் சம்மதித்தான்.

பி.டி.எஸ். என்னும் வாசன் கவிதைக்காரன் அவர்களை ரிக்ஷாவில் கடந்து போனதை அவர்கள் இருவரும் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பி.டி.எஸ். அவர்களைப் பார்க்கவில்லை.

* * *

''அனாதை இல்லம் நடத்துகிறான் சார். பெரிய உத்தமன் போல ஒரு ஜிப்பாவும் பைஜாமாவும் போட்டுக் கொண்டு சைக்கிள் ரிக்ஷாவில் போகிறான் சார். குழந்தைகள் எல்லாம் கள்ளமில்லாமல் 'குட்மார்னிங் அங்கிள்' சொல்கிறார்கள் சார்

அந்த கொலைகாரனுக்கு. நான் சுட்டிருப்பேன். க்ருஷ்ணா தடுத்து விட்டார். சாட்சி, ஆதாரம் என்று சட்டம் பேசுகிறார் சார். பௌர்ணமி வரை காத்திரு என்கிறார் சார்.''

''பொரியாதே ஜெயவேல். க்ருஷ்ணாவிற்கு அவன் நண்பன். பழகினவன். நெருங்கிப் பழகினவன். அந்த சென்டிமென்ட் இருக்கத்தான் செய்யும். அந்த அட்டைகளை எல்லாம் சேர்த்துப் பார்த்தேன். ஒரு மாதிரி பொருந்தி விட்டது. பதினொன்றும் வேறு வேறு ஜில்லாவில் கொலை நடந்ததால் போலீஸ் டிபார்ட்மென்ட் ஆசாமிகள் தனித்தனி அட்டைத் துண்டாக வைத்துக் கொண்டு விழித்திருக்கிறார்கள். அந்த அட்டைத் துண்டுகள் ஒன்று சேர்ந்து ஒரு வாழ்த்து அட்டையாகத்தான் உருவாகும் போல் இருக்கிறது. ஒரே ஒரு துண்டு மிஸ்ஸிங். இந்த பௌர்ணமியன்று அது கிடைத்து விடும். என் ஹன்ச் என்னவென்றால் வாசன் க்ருஷ்ணாவின் பெண் டாட்டியைத்தான் இலக்காக வைத்திருப்பான். பீ கேர்ஃபுல், க்ருஷ்ணா ரிஸ்க் எடுக்கிறான். நீ எடுக்காதே. போ'' என்றார் சபாநாயகம் ஜெயவேலின் தோளில் மெல்லத் தட்டி.

ஜெயவேல் நகர்ந்தான்.

* * *

பௌர்ணமி இரவு. மேலே நிலா. எந்த மேகமும் கருப்புக் கொடி காட்டாததால், வெகு ஜோராக ஊர்வலம் நடத்திக் கொண்டிருந்தது.

க்ருஷ்ணாவும், ஜெயவேலும் அதே பஸ் ஸ்டாண்டில் காத்திருந்தார்கள். அவர்களின் தத்தம் மார்புகளில் துப்பாக்கிகள் உறுத்தின. ரோட்டில் ஒரு ஆள் அரவம் இல்லை. அது அடையாறு.

ஒதுக்குப்புறம். எட்டு மணிக்கே ஊரடங்கும் பிரதேசம். அவர்கள் இருவர் மட்டும் துடிக்கும் இதயங்களுடன் காத்திருந்தார்கள்.



பதினோரு மணி.

நிழலாக அனாதை இல்லம். ரிக்ஷா உறங்கியது. ரிக்ஷாவில் ரிக்ஷாக்காரன்.

மரங்கள் எல்லாம் உறங்கின. நிலா, மர நிழல்களைப் பரப்பி பிரதேசத்தை இருட்டாக்கியது. பன்னிரண்டு மணி.

அனாதை இல்லம் அசையாது நின்றது. ஒரு ஆளரவம் இல்லை. உள்ளிருந்து வெளியே யாரும் வரவில்லை.

வாசன் உள்ளே சென்றதை அவர்கள் பார்த்திருந்தார்கள். அவன் அவர்களுக்குத் தெரிந்து நிச்சயம் வெளியே வரவில்லை.

''எனக்கு ஆறுதலாக இருக்கிறது.'' என்றான் க்ருஷ்ணா.

''என்ன சார்?''

''வாசன் வெளியே வரவில்லை. ஸோ அவன் இல்லை மிஸ்டர் கே.''

எங்கோ ஒரு நாய் ஊளையிட்டது.

ஜொழ்ழ்ழ்ழ்ழ்ழ்ழ்ழ்.

நீண்ட ஊளையிது. எமனின் வருகையை அறிவிப்பதாகச் சொல்லப்படுவது.

''சார்'' என்றான் ஜெயவேல், குரலில் திகைப்புடன்.

''என்ன?''

''ஒருவேளை பின்னால் வேறு வழியிருந்தால்! அந்தப் பின் வழியாக அவன் போயிருந்தால்! சார். கமான். உங்கள் பைக்கை எடுங்கள்.''

''இல்லை. அவன் போயிருக்க மாட்டான் ஜெயவேல்.''

''விவாதத்திற்கு இது நேரமில்லை. லெட் அஸ் சார்ச் தி ஆர்ஃபனேஜ் ஃபர்ஸ்ட்.''

அவர்கள் புயலாக அனாதை இல்லத்தின் காம்பவுண்டில் நுழைந்து, காலிங்பெல் அழுத்தி, எழுந்து கண்களைக் கசக்கித் திறந்த வேலைக்காரன் துப்பாக்கி பார்த்து அதிர்ந்தான்.

''எங்கே பி.டி.எஸ்?''

''அவர் ரூமில்.''

''ரூம் எது காட்டு.''

ரூமில் பி.டி.எஸ். இல்லை. அனாதை இல்லத்தில் அவன் இல்லை. பின்பக்கம் குப்பை போடும் திட்டி வழி திறந்திருக்கிறது.

''மை காட். நான் சொல்லவில்லை! கமான். டேக் யுவர் பைக் ஐ ஸே.''

கிட்டத்தட்ட ஜெயவேல் ஒரு மூர்க்கனைப் போல் கத்தினான். அவன் தொண்டை நரம்புகள் புடைத்தன.

* * *

பைக்கை க்ருஷ்ணா விரட்டினான். அடையாறு. அடையாறு திரு.வி.க. பாலம். ராஜா அண்ணாமலைபுரம். ஆழ்வார்பேட்டை தெருக்கள். அவன் தெரு. வீட்டு வாசல் பைக்கை நிறுத்தினான்.

ஜெயவேல் பைக்கில் இருந்து குதித்தான். உள்ளே ஓடினான்.

கதவு திறந்துதான் இருந்தது. உள்ளிருந்து 'வீல்' என்று சத்யாவின் குரல் கேட்டது.

''சத்யா'' என்று கத்தினான் க்ருஷ்ணா.

ஜெயவேல் கதவை மோதி நுழைந்தான். கதவு மூன்று நான்கு முறை மூடி மூடித் திறந்தது. சத்யாவின், க்ருஷ்ணாவின் படுக்கையறையில் - சத்யா.



அவன் பிடியில் இருந்தாள்.

அவன் ஜீன்ஸும், ஜெர்கினுமாய் இருக்க, அவன் கைகளில் உறையணிந்து நைலான் கயிறை சத்யாவின் கழுத்தில் சுற்றியிருந்தான். மிருகம் போல மூச்சிரைத்தான். அவன் அடி உதடு கடிபட்டு கீழே ரத்தத்துளி. ஒரு பேப்பர். அட்டைத் துண்டு. மிஸ்டர் கே. வாசன். பி.டி.எஸ்.

ஜெயவேல் வினாடி கூட தாமதிக்கவில்லை. மார்பில் இருந்து துப்பாக்கியை உருவி...

சுட்டான்.

டிஷ்யூங்.

டிஷ்யூங்.

டிஷ்யூங்.

வாசன் இரு கைகளையும் விட்டான். முதுகெங்கும் ரத்தம் பரவ அப்படியே பின் சாய்ந்து மண்டையடி பட்டு கீழே விழுந்து - செத்துப் போனான்.

சத்யா நம்ப முடியாமல் பார்த்தாள்.

''ரொம்ப நாளைக்குப் பின் வாசன். நான் சந்தோஷப்பட்டேன். கை குலுக்கினேன். எங்கே இத்தனை நாள் இருந்தாய் என்று கேட்டேன். குடிக்க ஏதாவது தரட்டுமா என்று கேட்டேன். அதற்கு மட்டும் பதில் சொன்னான் - கொடு என்று நான் ஃப்ரிட்ஜைத் திறந்தேன். இவன் என் கழுத்தில்...''

சத்யா அழத் தொடங்கினாள்.

க்ருஷ்ணா அழத் தொடங்கினான்.

ஜெயவேல் பெருமூச்செறிந்தான்.

சபாநாயகத்திடம் சொல்ல வேண்டும் - யாவற்றையும்.

* * *

## முடிவுரை

க்ருஷ்ணா தன் வாழ்நாளில் இதுவரை குடிக்காத அளவு இப்போது குடியில் இறங்கி இருந்தான். கடந்த மூன்று நாட்களாக.

வாசனின் உடலை எரித்துவிட்டு வந்த அடுத்த கணத்திலிருந்து.

சபாநாயகம் பரிதாபப்பட்டார். ஜெயவேல் பரிதாபப்பட்டான். சத்யா அழுதாள்.

அவன் எல்லோரிடமும் எரிந்து விழுந்தான். தன்னைத் தனிமையில் விடச் சொன்னான்.

வாசனுக்கு நேர்ந்த முடிவால் அவன் துக்கம் எல்லை மீறியிருக்கிறது என்று அவனை, அவன் வேண்டுகோள்ப்படி தனிமையில் விட்டார்கள்.

க்ருஷ்ணா தனியறையில் உட்கார்ந்து மேலும் மேலும் க்ளாஸ் க்ளாஸாக விஸ்கி குடித்தான். ஒன்று முடிந்ததும் இன்னொன்று. சிகரெட் பிடித்தான். ஒன்று முடிந்ததும் இன்னொன்று.

மயங்கி விழுந்தான். மயக்கம் தெளிந்ததும் இன்னும் குடித்தான்.

* * *

'க்ருஷ்ணா.'

'யாரது?'

'நான்தான். உன்னுடனேயே எப்போதும் இருப்பவன். உன் உள்ளுக்குள் இருப்பவன்.'

'மனசாட்சிப் பேயா?'



'பேய் இல்லை. மனசாட்சி.'

'என்ன வேண்டும் உனக்கு?'

'திருப்திதானே?'

'எதில்?'

'நீ நினைத்தபடி எல்லாம் முடிந்து போனதில்?

'நான் என்ன நினைத்தேன். என்ன முடிந்தது?'

'க்ருஷ்ணா. என்னிடமே உன் புத்திசாலித்தனத்தைக் காட்டப் பார்க்கிறாயா? உன் குறுக்கு மூளை என்னை ஒரே அழுத்து அழுத்தி விட்டுத்தானே வாசனைக் கொன்றது?'

'என்னது? நான் வாசனைக் கொன்றேனா? இல்லை. வாசனைக் கொன்றவன் ஜெயவேல்.'

'அது உலகத்திற்கு. ஜெயவேல் வெறும் செத்த பாம்பை அடித்தவன். அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்றவன் நீதான். அவன் கழுத்தில் உண்மையாக தூக்குக் கயிற்றை மாட்டி இழுத்த சூத்திரதாரி நீதான். வஞ்சகன் கண்ணனே என்ற கீதாசிரியன் போலத்தான் நீயும் நடந்து கொண்டு விட்டாய். இல்லையா?'

'எப்படிச் சொல்கிறாய்?'

'க்ருஷ்ணா. என்னையே கேள்வி கேட்கிறாயா? நீ சத்யாவைக் காதலித்தாய். இல்லையா?'

'ஆம்.'

'அதனாலேயே, சத்யா வாசனிடம் கைப்பற்றிக் குலுக்கிய போதே உனக்கு சுருக் என்று இருந்தது இல்லையா?'

'ஆம்.'

'சத்யா எப்படிப்பட்டவள்?'

'குழந்தை மனதுக்காரி. கலகலப்பாகப் பழகுபவள். ஆண் பெண் வித்தியாசம் இன்றி தொட்டுப் பேசுபவள். அவள் அம்மாவும் அப்பாவும் அவளைப் பார்த்த முறை அப்படி.'

'அத்துடன் கற்பு என்ற வார்த்தை பற்றி அறியாதவள் அவள். அப்படித்தானே.'

'நீ க்ருஷ்ணாவிடம் பேசுகிறாய் என்பதை ஞாபகம் வைத்துக் கொண்டு பேசு.'

'முட்டாளே. நான் உன் அப்பனிடம் பேசினாலும் இப்படித் தான் பேசுவேன். நான் உருவமற்றவன். அதனாலேயே பயமும் அற்றவன். என்னை உன்னால் எதுவும் செய்ய முடியாது. என்ன நடந்தது என்று நான் சொல்கிறேன், கேள். நீ சத்யாவை நேசிப்பதாகச் சத்யாவிடம் சொன்னதும், சத்யாவும் உன்னைக் காதலிப்பதாகச் சொன்னாள். நீ மனம் மகிழ்ந்தாய். உன் அகராதியில் காதல் என்றால் காதலியும், அவள் உடலும், உள்ளமும் உனக்கே சொந்தம் என்று நினைத்தாய். உன் சத்யா அப்படிப்பட்டவள் இல்லை. அவளைப் பொறுத்தவரை காதல் என்பது காதலுக்காக உள்ளம் தருவது ஒன்றுதான். காதலனிடம் தன் மனதைத் தருவாள். உடல் அவளுக்கு ஒரு பொருட்டே இல்லை. ஆண் ஸ்பரிசம் என்பது அவளைப் பொறுத்தவரை ஒரு பிரமாத விஷயம் இல்லை. உண்டா இல்லையா?'

'உண்டு.'

'உன் காதலைத் தெரிவித்த பின் ஒரு நாள் சத்யாவைப் பார்க்க நீ போனாய். அவள் வீட்டில் தனித்திருப்பாள் என்ற நம்பிக்கையுடன் அவள் அம்மாவை நீதான் ஒரு சப்பைக் காரணம் சொல்லி வீட்டை விட்டு வெளியேறி ஏதோ ஒரு வேலையாகப் போகும்படி செய்தாய் கரெக்ட்?'

'ஆம்.'



'சத்யா வீட்டுக்குத் துடிப்புடன் போன உனக்கு என்ன பரிசு காத்திருந்தது?'

'சொல்ல மாட்டேன்.'

'நான் சொல்கிறேன். உன் சத்யாவும். வாசனும் அருகருகே படுக்கையில்.'

'ஸ்டாப்.'

'சரி. நிறுத்துகிறேன். ஆனால், நடந்தது முழுக்க முழுக்க சத்யாவின் உடன்பாட்டின் பேரில் சத்யாவின் அனுமதியின் பேரில். அவளுடைய உடலறிவை வளர்த்துக் கொள்ள அவள் காட்டிய நாட்டம்தான் அவள் வாசனுடன் சேர்ந் திருந்தது சரியா?''

'சரி.'

'உனக்கு மனம் கொதித்தது. சத்யா தான் அவனைத் தூண் டியவள். ஆனால் உன் கோபம் முழுக்க வாசன் மேல் திரும்பியது.

'பின்னே. என் எதிரில் அந்தரத்து உப்பரிகை 'பாட்டுப் பாடிக் காண்பித்துவிட்டு என் காதலியுடன் சல்லாபித்தால் என்னால் எப்படி கோபப்படாமல் இருக்க முடியும்? அவள் நீச மகள். ஞானமிலா வெற்றழகுப் பிண்டம் என்றெல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியில்... கடைசியில்... நட்புக்குத் துரோகம் செய்தது யார்?'

'எனக்கு அந்த வாதமெல்லாம் தேவையில்லை. நீ வாசனைக் கொல்ல அப்போதே முடிவு செய்தாய்?'

'ஆம்.'

'போலீசில் மாட்டாமல் எப்படிக் கொல்வது என்று யோசித்துக் கொண்டே இருந்தாய்?'

'ஆம்.'

'படிப்பு முடித்துவிட்டு ஐ.பி.எஸ். படித்தாய். போலீஸ் செயல் முறை அறிய. அதனாலேயே நீ க்ரைம் ப்ராஞ்சில் சேர்ந்தாய்.'

'ஆம்.'

'வாசன் உன் வாழ்க்கையிலிருந்து விலகி விட்டதாக எல்லோரிடமும் சொன்னாலும் நீ முன்பே அவன் எங்கே போனான் என்பதை அவன் அம்மா அவனுக்கு எழுதிய கடிதம் மூலம் கண்டு பிடித்தாய்.'

'ஆம்.'

'அவள் அம்மாவைப் போய்ப் பார்த்தாய். அவள் ஒரு கேவல வாழ்க்கைக்காரி என்பதை அறிந்து கொண்டாய்.'

'ஆம்.'

'அதுவே உனக்கு ஒரு சாக்காக அமைந்தது. சைக்கோபத் பற்றிய கேஸ்களை எல்லாம் நீ உன் படிப்பின்போது படித்தவன். எனவே வாசனை ஒரு சைக்கோபத்தாகச் சித்தரிக்க முடிவு செய்தாய்.'

'ஆம்.'

'காத்திருந்தாய். காலம் கனிய வேண்டுமென்று. வாசன் தன் செயலுக்கு வருந்தி. மண வாழ்க்கை எதுவும் வேண்டா மென்று தீர்மானித்து, சமூகத்தில் தப்பாகப் பிறந்த குழந்தை களை எடுத்து வளர்க்கும் ஒரு அனாதை ஆசிரமம் நிறுவி னான்! அது மட்டுமில்லாமல் உங்கள் இருவரையும் மறக்க முடியாமல் வாழ்த்து அட்டைகள் தயாரித்து 'SAVAKRI' என்று அவற்றை வெளியிட ஏற்பாடு செய்தான். நீ அவனை ஒரு சைக்கோபத்தாக சமூகத்திற்குக் காட்ட முடிவெடுத்தது அந்த சந்தர்ப்பத்தில்தான் சரியா?'



'ஆம்.'

'நீ அவனைப் போய் சந்தித்தாய். உன்னைப் பார்த்து வாசன் மகிழ்ந்தான். என்ன உதவியும் உனக்காகச் செய்வதாக அவன் ஒப்புக் கொண்டான். காரணம், அவனுடைய குற்ற உணர்வு. நண்பனின் பெண்டாட்டியை நண்பனுக்கு முன்னாலேயே இணைந்த குற்ற உணர்வு அவனை ஆட்டிப் படைத்தது. உனக்கு ஏதாவது செய்து அந்த குற்ற உணர்வைக் களைய அவனும் நினைத்திருந்தான். இந்த மாதிரி குற்ற உணர்வுக் காரர்களை வெகு எளிதாக ஹிப்னடைஸ் பண்ணலாம் என்பது உனக்குத் தெரியும். எனவே, நீ கற்றுத் தேர்ந்திருந்த ஹிப்னாடிசம் மூலம் அவனைத் தனியாக அழைத்துச் சென்று ஹிப்னடைஸ் பண்ணினாய். அதுவும் எப்படி? கொலை செய்வதற்கு. பௌர்ணமிக்குப் பௌர்ணமி. நீ தேர்ந்தெடுத்துச் சொல்லும் பெண்ணை. கொல்லும்போது அவன் மூச்சை சீறல் மூச்சுகளாக விட வேண்டும் என்று ஆணையிட்டாய். உதடு கடித்து ரத்தம் சிந்த வேண்டும் என்றாய். அவனிடம் பத்திரப்படுத்தியிருந்த வாழ்த்து அட்டையைக் கிழித்து துண்டு துண்டாய் ஒவ்வொரு கொலையின் போதும் வைத்து விட்டு வர ஏற்பாடு செய்தாய். அது என்ன வாழ்த்து அட்டை என்று இந்த கேஸ் ஃபைலின் உட்புறத்தைப் படிக்க ஆரம் பித்தவுடன் உனக்குத் தெரிய ஆரம்பித்து விட்டது. இப்போது கூட அந்த வாழ்த்து அட்டை உன் மனதில் பளிச்சிடுகிறது பார்.'

'ஆம். அதற்கென்ன இப்போது?'

'உன் திட்டங்களைச் சொல்கிறேன். அவனுடைய கவிதைப் பக்கங்களில் ஒவ்வொன்றாய்க் கிழித்துப் போடவும், நீ அவன் உள் மனதிற்கு ஆணையிட்டாய். கையுறை. நைலான் கயிறு எல்லாமே. நீ போட்டுக் கொடுத்த பாதை தான்.

'யெஸ். யெஸ் யெஸ். இவன் துரோகி. அவன் அழிய வேண்டும். அதே சமயம் நான் மாட்டக் கூடாது. இதனால் தான் அப்படிச் செய்தேன்.'

'க்ருஷ்ணா. நீதான் எவ்வளவு சாமர்த்தியக்காரன். போலீஸ் அவன் கொலை செய்த பெண்களுக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு என்று ஆராய்ந்து தலைமுடியைப் பிய்த்துக் கொண்டது. அவன் ஜில்லா. ஜில்லாவாக எப்படி அந்த மாதிரிப் பெண்களையே தேர்ந்தெடுக்கிறான் என்று யோசித் தது. அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. உனது ஓட்டையற்ற திட்டம் காரணமாக வாசனின் அனாதை ஆசிரமத்திற்கு நன்கொடை அனுப்பியவர்கள் பலர். அந்தப் பலரில் பெண்களை மட்டும் நீ தேர்ந்தெடுத்து ஆராய்ந்தாய். வாழ்க்கையில் சட்டத்திற்குப் புறம்பாகக் குழந்தை பெற்று அனாதை ஆசிரமத்திற்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பி வைத்த பெண்களை அவர்களில் இருந்து பொறுக்கினாய். அவர்கள் தங்களின் பாவங்களுக்குப் பரிகாரமாய் அனாதை இல்லத்திற்குப் பணம் அனுப்பிய ஒரே காரணத்தால் அவர் கள் உன்னுடைய இலக்குகளாக மாறி விட்டார்கள். அவர் களில் 11 பேரைப் பொறுக்கினாய். அவர்களைப் போய்ச் சந்தித்து, வாசன் அவர்களைப் பௌர்ணமியன்று சந்திக்க வருகிறான். நன்றி சொல்லிப் போக என்று சொன்னாய். அவர் கள் வாசனைத் தனியாகச் சந்திக்க நேரம் கேட்டாய். அனா வசிய விளம்பரத்தை வாசன் விரும்புவதில்லை என்றாய். அவர்களும் வாழ்க்கையில் தப்புப் பாதையில் அடியெடுத்து வைத்தவர்கள். அவர்கள் குற்ற உணர்வும் உனக்குச் சாதக மாக இருந்தது. தனியாக வாசனைச் சந்திக்க ஒப்புக் கொண் டார்கள். அவ்வளவுதான். உன் வேலை முடிந்தது. சென்னை யில் இருந்தே நீ வாசனை ஏவி விட்டாய். அவன் சென்றான். கொன்றான். திரும்பினான் போலீசில் மாட்டினால் அவன் தான் மாட்டுவான். அவன்தான் கொன்றவன். உன் கச்சிதமான திட்டம் போலீசைக் குழப்பி விட்டதால் ஃபைல் உன் டிபார்ட்



மென்டிற்கே வந்தது. அந்தக் கேஸைப் பற்றி சபாநாயகம் சொன்னவுடன் நீ அதை ஆராய்வதாக ஒப்புக் கொண்டதன் உள் நோக்கமே, விஷயம் விபரீதமாகப் போகக் கூடாது என்பதுதான். கடைசியில் வாசனை சுட்டுக் கொல்ல முடிவு செய்தாய். சபாநாயகத்திடம் சென்று என் நண்பன் தான் கொலைகாரன் என்றாய்.'

'ஸ்டாப். நான் வாசனைக் கொல்ல முடிவு செய்தால் ஏன் ஜெயவேலிடம் வாசனை ஜெயலில் தான் அடைக்க வேண் டும் என்று சொல்ல வேண்டும்?'

'உன் மூளையின் இன்னொரு பரிமாணம் அது. கொல் லாதே என்று சொல்லி கொல்லத் தூண்டும் வித்தை அது. சத்யா வேறு ஜெயவேலின் கையைப் பற்றிக் குலுக்கி விட்டதால் அவனுக்கு சத்யா பேரில் பரிவும், வாசன் பேரில் ஆத்திரமும் கிளர்ந்து விட்டது.

'நான் ஏன் வாசனைக் கொல்ல வேண்டும்.'

'விஷயம் எதுவும் கோர்ட்டில் வெளிப்படாமல் இருக்க. தப்பித் தவறிக் கூட அவன் வெறும் அம்பு. எய்தவன் நீதான் என்பது தெரிந்து விடாமல் இருக்க. ஜெயவேல் உன் வீட் டுக்குப் போவதையும், அங்கு வாசனை அவன் கொல்வதை யும் நீ முன்கூட்டியே திட்டமிட்டு விட்டாய். நீ போய்ச் சேருமுன் சத்யா செத்திருந்தால் கூட அவ்வளவாக வருத்தப் பட்டிருக்க மாட்டாய். உனக்கு மனதளவிலும், உடலளவிலும் விசுவாசமாக இருக்கக் கூடிய இன்னொரு பெண்ணைத் தேடி மணந்திருப்பாய். அதுதான் தவறிவிட்டது.

'ஹாஹ்ஹா... எப்படி இருந்தாலும் நான்தான் ஜெயித் தவன். என் எதிரி. என் துரோகி ஒழிந்தான். நான் இனி சத்யா வுடன் சல்லாபிப்பேன்.'

'ஆம். வாழ்நாள் முழுக்க உறுத்தலுடன். நான் உன்னைக் குத்திக் கொண்டே இருப்பேன். விடமாட்டேன். நீ சாகும் வரை விடமாட்டேன். முட்டாளே. சைக்கோபத் வாசன் இல்லை.

நீதான், நீதான் மனநிலை தவறியவன். நீதான் கெடுமதிக்காரன். நீதான் மோசமான மிருகம். நீதான் நீசன். நீதான் கொடியவன். நீதான் ஒன்றுமறியா பதினோரு பெண்களைக் கொன்றவன். நீதான் ஒவ்வொரு காயாக நகர்த்தியவன். நீதான் ஜெய வேலை. ஆவடிக்குக் கூட்டிப் போய் எல்லாம் தற்செயல் போல் காட்டியவன். நீதான் குறுக்கு மூளைக்காரன்...'

'நிறுத்து.'

'நீதான் தண்டிக்கப்பட வேண்டியவன். நீதான் சுடப்பட வேண்டியவன்.'

'ஸ்டாப். ஸ்டாப் இட் ஐ ஸே...'

'நீதான். நீதான். நீதான். நீதான். இந்தக் கதையின் கறுப்புச் செய்தியைத் தாங்கி இருப்பவன். கடைசி வரை முகமூடி தரித்து வாழப் போகிறவன்.'

'ஐ ஸே... ஸ்டாப் இட்... நிறுத்து... நிறுத்துடா என்றால்.'

'ஹாஹ்ஹா... ஹாஹ்ஹா... ஹாஹ்ஹா... ஹாஹ்ஹா...'

சிலுங் என்று க்ருஷ்ணா வீசிய கண்ணாடிக் கோப்பை சுவரில் மோதி தூளாகி வீழ்ந்தது.

**மனிதன் ஒரு பூச்சி**
**கராத்தே கற்றுக் கொள்ளும்.**
**கவிதை எழுதும்.**
**கனைத்துறுமி கடவுள் நானென கலங்கடிக்கும்!**
**விஞ்ஞானத்துடன் விஷமம் செய்யும்.**
**செயற்கை மழை பெய்யச் செய்யும்.**
**அனுகுண்டை ஆப்பசைக்கும்.**
**ஐங்குதிரையை அதிரச் செலுத்தி -**
**ஆடியடங்கும்.**
**மக்கிப் போகும்.**

# உயிராசை



**1** அந்த அழகான பெண்ணை கொலை செய்யப் போகிறோம் என்று நான் நினைக்கவேயில்லை.

ஆனால் கொலை செய்தோம். மூன்று பேராகச் சேர்ந்து.

கரப்பான் பூச்சியை ஓடவிட்டு உள்ளங்கையால் பட்டென்று அடிக்கும் பூனை போல நாங்கள் செயல்பட்டோம்.

எங்கள் செயலை இப்போது நினைத்துப் பார்த்தால் படுவக்கரமாக இருக்கிறது. ஆனால் அன்றைக்கு அது எளிதாக நடந்தது. எந்தக் கூச்சமும். குற்ற உணர்வும் இன்றி சுலபமாக அந்த உயிரைப் பறிக்க முடிந்தது.

அந்தப் பெண் ஏன் எங்கள் ஹோட்டலுக்குள் வந்தாள்? அவள் விதிரேகை அப்படி விதித்திருந்த போது நான் என்ன செய்ய முடியும்?

எல்லா விபரங்களையும் தருகிறேன். ஒவ்வொன்றாய்க் குறித்துக் கொள்ளுங்கள். என் பெயர் இளங்கோ.

மகாபலிபுரம் புதிய சாலையில் எஸ்.கே.எஸ். கார்டன்ஸ் என்று கவனித்திருப்பீர்கள். மூன்றாள் உயரத்திற்கு பாறாங் கற்களால் காம்பவுண்டு சுவர் எழுப்பி கோட்டை வாசல் போல் கேட் இருக்கும். டூரிஸ்ட் பஸ்கள் பால் குடித்த கன்றுகள் போல பொறுமையாக நின்றிருக்கும். ராட்சத ராட்டினங்களில் மக்கள் க்ரீச்சிட்டுக் கொண்டிருப்பார்கள். நீச்சல் குளத்தில் சறுக்கி வந்து விழும் குழந்தைகள் சந்தோஷத்தில் வீறிடும். எலக்ட்ரிக் கார்களில் சவாரி செய்ய சலிப்பில்லாமல் கியூ நீளும். தண்ணீரோடு அடித்துப் போகிற படகுகளில் மக்கள் இதயத்தை கையில் பிடித்துக் கொண்டு சவாரி செய்வார்கள். திங்கள் கிழமையா, புதன் கிழமையா, ஞாயிற்றுக் கிழமையா, வாரத்தின் எந்த நாளிலும் அங்கே கூட்டம் அலை மோதிக் கொண்டிருக்கும்.

பள்ளிக் குழந்தைகள் ஒரு பக்கம் கூட்டம் கூட்டமாக ஸ்கூல் பஸ்ஸில் வந்து இறங்கும். மோட்டார் சைக்கிள்களில் ஜோடி ஜோடியாக கல்லூரிக் கூட்டம் வந்து கலக்கும். பேரன் தோளைப் பிடித்துக் கொண்டு செயற்கை அரண்மனையின் பளிங்குத் தரை பிரமிக்க - ரிடையர்டு கேஸ்கள் ஒரு பக்கம் வந்து தள்ளாடும்.

உங்களுக்குத் தெரியாததல்ல. சுற்றுலா சுவாரஸ்யங்களை மட்டும் மக்களுக்குக் காட்டி இவ்வளவு பெரிய நிறுவனத்தை இடறில்லாமல் நடத்த முடியாது. பின்னணியில் எவ்வளவோ நடக்கும். சுற்றுலாக் குடில்களை வாடகைக்கு எடுப்பவர்கள் யாரும் சொந்த ஜோடிகளோடு வருவதில்லை. வருபவர்களை நாங்கள் எந்தக் கேள்வியும் கேட்பதில்லை என்பது மட்டும் முக்கியமில்லை. வேறு யாரும் கேட்டு விடாமலும் பார்த்துக் கொள்வது எங்கள் கடமை. போலீஸிற்கு மாதம் எவ்வளவு தருவோம் என்ன என்பதையெல்லாம் பின்னால் விரிவாகச் சொல்கிறேன்.

இப்போது சொல்ல வந்தது அந்தக் கொலைப் பற்றி.



யார் அந்தப் பெண்? அவளை நாங்கள் ஏன் கொலை செய்தோம்?

சுந்தரகுமார் சபாஸ்டியனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப் பீர்கள். சுருக்கமா எஸ்.கே.எஸ் என்று சொன்னால் சுலபமாகப் புரியும். தவணை முறையில் வீடு வாங்க. கார் வாங்க, ரேடியோ வாங்க, துடைப்பம் வாங்க எல்லாவற்றுக்கும் அணுகுங்கள் எஸ்.கே.எஸ்! அவர்தான்.

அதிக உயரம் கிடையாது. அளவான பருமன் மட்டும் அவருக்குப் பின்னால் மறைந்து நின்று மிரட்டிக் கொண்டே யிருந்திருக்காவிட்டால், எவ்வளவு பேர் அவரை மதிப்பார்கள் என்பது மாபெரும் கேள்விக் குறி.

வழக்கம் போல எஸ்.கே.எஸ். தன் பிரத்யேக ரூமில் டெலிவிஷன்களுக்கு நடுவில் உட்கார்ந்திருந்தார். வழக்கம் போல நானும், உமாபதியும் அவருக்கு காவல் இருந்தோம். எங்கள் கைகளில் துப்பாக்கிகள், தோளுக்குக் குறுக்கே தோட்டாக்கள் செருகிய பெல்ட் என்றெல்லாம் கற்பனை செய்து விடாதீர்கள்.

எங்களைப் பார்த்தால் சட்டைக்குள் பதுங்கியிருக்கும் ஆயுதமே தெரியாது. எஸ்.கே.எஸ்ஸின் இரண்டு நிழல்கள் நாங்கள்.

டெலிவிஷன் பார்த்துக் கொண்டு வேர்க்கடலையைக் கொறித்துக் கொண்டிருந்தார். எஸ்.கே.எஸ்.

எஸ்.கே.எஸ். கார்டன்ஸின் வெவ்வேறு பகுதிகளைப் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தன கேமிராக்கள். இதோ குடைராட்டினம், இதோ கப்பல் ஊஞ்சல், இதோ டோரா டோரா. இதோ எலக்ட்ரிக் கார். இதோ கேட். இதோ நீச்சல் குளம். இதோ காட்டேஜ் ஏரியா, இதோ கடல் அலைகள்.

கடல் அலைகளில் கால் நனைத்துக் கொண்டிருந்த பெண் வெகு எதேச்சையாகத் திரும்பினாள்.

எஸ்.கே.எஸ். நிமிர்ந்து உட்கார்ந்தார்.

'ஃப்ரீஸ்' என்றார்.

அந்தப் படம் அப்படியே உறைந்தது.

முழங்கால் வரை புடவையைத் தூக்கிக் கொண்டு, அலைகளில் கால்களை நனைத்துக் கொண்டு, அலைகளின் ஆர்ப்பரிப்பிற்கு தகுந்த மாதிரி கூச்சலிட்டுக் கொண்டு - எல்லாவற்றுக்கும் மேலாக கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த அந்தப் பெண் ரொம்ப அழகாக இருந்தாள்.

ரொம்ப ரொம்ப அழகாக.

இருபத்தி சொச்ச வயது. புதிதாக கல்யாணம் ஆன சுவடு கழுத்தில் தெரிந்தது.

எஸ்.கே.எஸ். நாற்காலியில் சற்றே முன் நகர்ந்து அந்தப் பெண்ணை டி.வி. திரையில் தொட்டுக் காட்டினார்.

''நல்லா இருக்கு இல்ல?''

நானும் உமாபதியும் ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்துக் கொண்டோம்.

''அழைச்சிட்டு வாடா'' என்றார், எஸ்.கே.எஸ்.

உடன் செயல்பட்டேன்.

அந்த கண்ட்ரோல் ஆபீஸ் விட்டு வெளியே வந்தேன். எஸ்டீம், சியலோ, காண்டேஸா மூன்று கார்களும் காத்திருந்தன.

எஸ்.கே.எஸ். ஒரு கார் பைத்தியம் புதிதாக எந்தக் கலர் அறிமுகமானாலும் முதலில் வாங்கி ஓட்டிப் பார்த்துவிட வேண்டும்.

கார்களைத் தவிர்த்து நான் வெளியே வந்து கடற்கரை இருந்த பக்கம் விரைந்தேன்.



பொய்க்கால் குதிரைகள், கரகாட்டம், சினிமா டான்ஸ், ரெஸ்டாரண்ட் எல்லாவற்றையும் தாண்டி கடற்பகுதிக்கு நகர்ந்தேன்.

ஒரு எண்பது பேராவது கடலில் நின்று கால் நனைத்துக் கொண்டிருந்தார்கள்.

பீச் என்பது சென்னையில் இலவசமானது. ஆனால் கடற் கரையை வேறு இடங்களில் சந்தோஷமாக அனுபவிக்காமல். காசு கொடுத்து இங்கே எஸ்.கே.எஸ். கார்டன்ஸில் டிக்கெட் வாங்கி வந்து கடலில் கால் நனைப்பவர்களைப் பார்த்தால் வேடிக்கையாய் இருக்கும்.

பாக்கெட்டிலிருந்து பேட்ஜ் எடுத்து சட்டையில் குத்திக் கொண்டேன். எஸ்.கே.எஸ். கார்டன்ஸின் ஊழியன் என்று அடையாளம் சொல்லும் பேட்ஜ்.

மற்றவர்களைக் கடந்து அந்தப் பெண்ணை நெருங் கினேன். வெகு கவனமாக அந்தப் பெண்ணைத் தவிர்த்து. அவள் கையைப் பிடித்திருந்த கணவனின் தோளில் தொட் டேன்.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றேன்.

அவன் திரும்பினான். என் அடையாள அட்டையைப் பார்த்தான். என்ன என்றான் கண்களால்.

''உங்கள் பெயர் என்ன சார்?'' என்றேன்.

''ராஜ்குமார்...'' என்றான், என்னை சந்தேகமாகப் பார்த்து.

உடனே என் முகத்தில் ஒரு மலர்ச்சி காட்டினேன். கையை நீட்டினேன். ''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்று அவன் கை பிடித்து குலுக்கினேன். "நீங்கள் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவர்."

''என்ன சொல்கிறீர்கள்?''

''எஸ்.கே.எஸ். கார்டன்ஸில் அவ்வப்போது திடீர் பரிசுகள் தருவோம். எங்கள் முதலாளி தான் முடிவு செய்வார்.

இன்றைக்கு மூன்று ஆண்களுக்கு பரிசு தருவதாக முடிவு செய்தார். ராஜ்குமார் என்று பெயர் சொல்லும் முதல் மூன்று ஆண்களுக்கு பிலிப்ஸ் கலர் டெலிவிஷன் தருவதாக முடிவு செய்தோம். ஸ்விம்மிங் பூலில் ஒருத்தர் ராஜ்குமார் என்று பெயர் சொன்னார். இரண்டாவதாக நீங்கள். இப்படி கொஞ்சம் நில்லுங்கள். தண்ணீரில் நிற்கும் மற்றவர்களையும் கேட்டு விட்டு வந்து விடுகிறேன்.''

அவனிடம் பேசும்போது தப்பித் தவறிக் கூட அந்தப் பெண்ணின் பக்கம் என் பார்வை போகவில்லை. கலர் டெலி விஷன் பரிசு என்றதும், அவன் முகம் பிரகாசமானது.

''லக்ஷ்மி... எல்லாம் உன் அதிர்ஷ்டம்'' என்றான் மனைவி யின் கையை அழுத்தி. அவர்களை விட்டு விட்டு நான் மற்றவர்களிடம் நடந்து ஒப்புக்காக பேர் கேட்டு விட்டு வந்தேன். வேறு யாரும் ராஜ்குமார் என்ற பெயருடன் இல்லை என்பது போல் உதடுகளைப் பிதுக்கிக் காட்டினேன்.

''வாருங்கள், ஆபீஸிற்குப் போகலாம்...''

அவர்களை கண்ட்ரோல் அலுவலகத்திற்கு அழைத்துப் போனேன். என் பின்னால் சந்தோஷ நாய்க்குட்டிகள் போல இருவரும் ஒருவருடன் ஒருவர் இழுத்துக் கொண்டு உரசிக் கொண்டு நடந்து வந்தார்கள்.

இதையெல்லாம் எஸ்.கே.எஸ். டெலிவிஷனில் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார்.

கண்ட்ரோல் ரூமில் நுழைந்தபோது வாசல் ரூமில் உமாபதியும், மனோகரும் உட்கார்ந்திருந்தார்கள். மனோகர் எங்கள் காட்டேஜ் பிளம்பர். இருவரையும் முன்பின் அறிமுக மல்லாதவனைப் போலப் பார்த்தேன்.

''நீங்கள்?'' என்றேன்.

''கலர் டெலிவிஷன் பரிசு தருவதாகக் கூட்டி வந்தார்கள்'' என்றான், உமாபதி.



''ஓ, உங்கள் பெயரும் ராஜ்குமாரா?''

''ஆ... ஆமாம். என் பெயர் ராஜ்குமார். இவர் பெயரும் ராஜ்குமார்.''

''வெரிகுட்... மூன்று ராஜ்குமார்கள் கிடைத்து விட் டார்கள்... எல்லோரும் உள்ளே போகலாம்'' என்றேன்.

அந்தப் பெண்ணையும் சேர்த்து எல்லோரும் உள் அறைக் குள் நுழைந்தோம்.

மேஜைக்குப் பின்னே உட்கார்ந்து டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார். எஸ்.கே.எஸ். ரிசீவரை வைத்துவிட்டு, கைகளைக் கூப்பினார்.

''உட்காருங்கள். உங்கள் மூன்று பேருக்கும் வாழ்த் துக்கள்.'' என்றார்.

உமாபதியும், மானேஜரும் கூட அவரை முதன் முதலாகப் பார்ப்பது போல பணிவாக புன்னகைத்தார்கள்.

எஸ்.கே.எஸ். என்னை விட சாமர்த்தியசாலி. அந்தப் பெண் இருப்பதையே கவனிக்காதவர் போல அவனைப் பார்த்துப் பேசினார்.

''டெலிவிஷனை எப்படி எடுத்துப் போவீர்கள்? வண்டி இருக்கிறதா? ஏற்பாடு செய்ய வேண்டுமா?''

''பஸ்ஸில் வந்தோம்'' என்றான். ராஜ்குமார்.

''அப்படியானால் காரில் கொண்டு விடச் சொல்கிறேன். இனி நீங்கள் ஸ்பெஷல் கெஸ்ட். எப்பொழுது எஸ்.கே.எஸ். கார்டன்ஸிற்கு வந்தாலும் டிக்கெட் வாங்க வேண்டாம்...''

''தேங்க்யூ சார்...''

''இவர்கள் மூன்று பேரையும் அழைத்து போய் ஃபார்ம் களை நிரப்பு...'' என்றார். என்னிடம்.

''இப்படி வாருங்கள். சார்...'' அடுத்த கதவு திறந்து மூன்று பேரையும் அழைத்துப் போனேன். கூடவே எழுந்த அந்த பெண்ணை, ''நீங்கள் இங்கேயே வெயிட் பண்ணுங்கள் மேடம். ஜஸ்ட் இரண்டு நிமிஷம்'' என்றேன்.

பக்கத்து ரூமிற்குள் நுழைந்ததும், மனோகர், தன் தம்பியிடம் சொல்லிவிட்டு வருவதாக ஏதோ முணுமுணுத்து விட்டு கதவு திறந்து வெளியே போய் விட்டான்.

நான், உமாபதி, ராஜ்குமார்.

ராஜ்குமார் நாற்காலியில் உட்கார்ந்து எழுதுவதற்காக பேப்பர் மீது குனிந்ததும், அவன் பின் கழுத்தில் துப்பாக்கியின் பின் பக்கத்தால் தட்டினேன்.

பட்!

அப்படியே குப்புறடித்து மேஜை மீது விழுந்தான்.

பக்கத்து அறையில் கொலுசு அணிந்த கால்கள் ஓடுவது கேட்டது. வேண்டாம். வேண்டாம் என்று அந்தப் பெண் லக்ஷ்மி அலறுவது சன்னமாகக் கேட்டது.

எஸ்.கே.எஸ். ஆசைப்பட்டு விட்டால் அது கிடைக்காமல் அவர் ஓய்வதில்லை.

நானும் உமாபதியும், ராஜ்குமார் பக்கத்திலேயே உட்கார்ந்து அவனைப் பார்த்தோம். அவன் அசைந்தால் இன்னொரு தட்டுத் தட்ட தயாராயிருந்தோம்.

கிட்டத்தட்ட நாற்பது நிமிடம் கழித்து கதவு திறந்தது.

எஸ்.கே.எஸ். அங்கு நின்றார். கன்னத்தில் ஒரு நகக் கீறல். கழுத்தருகே பிறாண்டல். ஆனால் முகத்தில் பரம திருப்தி. கட்டை விரலை உயர்த்திக் காட்டினார்.

''உள்ளே வாருங்கள்...'' என்றார்.

இருவரும் நுழைந்தோம். அறையின் ஒரு மூலையில் லக்ஷ்மி சினிமாக்களில் வருவது போலவே முழங்கால்களைக் கட்டிக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தாள். விலுக் என்று நிமிர்ந்து, ''இதற்கெல்லாம் பதில் சொல்லாமல் நீங்கள் தப்ப முடியாது'' என்று கத்தினாள்.



''ஒரு சின்ன பிராப்ளம்'' என்றார். எஸ்.கே.எஸ். ''இந்தப் பெண்ணின் அண்ணன் பத்திரிகை ரிப்போர்ட்டராம்... இங்கு நடந்ததையெல்லாம் சொல்லப் போகிறாளாம்...'' என்று சிரித்தார். ''உமா... இவளை என்ன செய்யலாம்?''

''எந்த சமுத்திரத்தில் கண்டெடுத்தோமோ அதே சமுத்திரத்தில் தூக்கிப் போட்டால் போயிற்று...'' என்றான் உமாபதி.

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அச்சத்தில் எழுந்து ஓடப் பார்த்தாள். உமாபதி கை நீட்டித் தடுத்தான். அவன் கையில் மோதி நின்றாள். அவனைத் தள்ளி விட்டு ஓட, நான் தடுத்தேன். என்னிடமிருந்து தப்பித்தால் எஸ்.கே.எஸ்.

எங்கள் மூவருக்கும் இடையில் ஓடியே இவள் சீக்கிரம் களைப்படைந்தாள்.

''போதும், விளையாட்டு'' என்றார் எஸ்.கே.எஸ். மூச்சிரைத்தபடி நானும் உமாபதியும் அவளை நெருங்கினோம்.

* * *

மறுநாள் காலை கடற்கரையில் ஒதுங்கிய இளம் ஜோடிப் பிணங்கள் என்று செய்தித்தாள்களில் பிற்பாடு படித்திருப்பீர்கள். ராஜ்குமாரும், லக்ஷ்மியும் அபாயகரமான ஆழத்தில் எச்சரிக்கையை மீறி குளிக்கப் போய் உயிர் இழந்தார்கள் என்று செய்தித்தாள்களுக்கு போலீஸ் செய்தி கொடுத்தது.

அவ்வளவு எளிதாக முடிந்தது அந்தக் கதை.

இது மட்டும்தான் என்றில்லை. நாளைக்கு உங்களுக்கு அடுத்த கதை சொல்கிறேன்.



## 2

''நாளைக்கு உங்களுக்கு அடுத்த கதை சொல்கிறேன்'' ராகமிழுத்து சத்தமாகப் படித்தார் சபாஸ்டின். அவர் கன்னத்து சதைகள் குரலில் வேகத் திற்கேற்ப ஆடின.

அந்தச் செய்திப் பத்திரிகையை மேஜை மீது தூக்கி அடித்தார். தப்பித்துப் பறந்து விடத் தாமதமாக முயன்ற ஒரு ஈ பொட் டென்று பேப்பருக்கடியில் உயிர் விட்டது.

''யாருடா எழுதியது இதை?''

குரல் சுவர்களில் அடித்து எதிரொலித்தது.

''விசாரிக்கிறேன் சார்...'' என்றான் உமாபதி குரல் எழும் பாமல்.

சபாஸ்டின் சரேலெனத் திரும்பிக் கையை வீசினார். உமாபதியின் கன்னம் சிவந்தது. ஓரடிப் பின் நகர்ந்து நின் றான். ஆனால் கன்னத்தைத் தொட்டுப் பார்க்கவில்லை.

''இளங்கோ தான் எழுதியிருக்கிறானா?'' அவர் குரல் உறுமலாய் வந்தது.

''இளங்கோ சொல்வதுபோல் வந்திருக்கிறது. சார். ஆனால் இளங்கோ சொல்லியிருக்க முடியாது...'' என்றான் மனோகர். அவர் கை எட்டாத தூரத்திற்கு நகர்ந்து நின்று.

சபாஸ்டின் நாற்காலியில் போய் அமர்ந்தார். மேஜை மீது இருந்த பேப்பர் வெயிட்டை உருட்டினார்.

''உண்மையைச் சொல்லுங்கள். இளங்கோ எங்கே?'' என்றார். அடக்கமான குரலில். அவர் இரைச்சலாகப் பேசியபோது இருந்ததைவிட, இப்படி தாழ்ந்த குரலில் பேசியது அதிகமாய் அச்சுறுத்தியது.



''சத்தியமாக அவனைத் தீர்த்து விட்டோம், சார்...'' உமாபதி பதறினான்.

''இளங்கோ எங்கே?''

''பொய் சொல்லவில்லை, சார். இந்தக் கைகளால்தான் அவனைப் புதைத்தேன்.

''புதைத்தவன் உயிரோடு வெளியே வந்து விட்டானா? மூடிய கல்லறை திறந்து விட்டதா? இல்லை அவன் ஆவி கதை எழுதுகிறதா? கூடவே இருந்தது போல், ஒரு விஷயம் கூட அப்படி இப்படி மாறாமல் இளங்கோவைப் போலவே இன்னொரு ஆள் சொல்ல முடியுமா?''

சபாஸ்டின் பேப்பரைப் பிரித்து வெறிபிடித்தவர் போல வார்த்தைகளை வேகமாக மறுபடி மேய்ந்தார்.

திடீரென்று விகாரமாக சிரித்தார். ''இதை இளங்கோ எழுத வில்லை. இளங்கோ சொல்லியதை வைத்து வேறு எவனோ எழுதியிருக்கிறான். எப்படிச் சொல்கிறேன். என்கிறாயா? இந்த வரியைப் பார். **டூரிஸ்ட் பஸ்கள் பால் குடித்த கன்றுகள் போல பொறுமையாய் நின்றிருக்கும்...** இந்த அளவு எழுத இளங்கோவுக்குத் தெரியாது. இது ஒரு எழுத் தாளனின் வேலை...''

சபாஸ்டின் எழுந்து உமாபதியின் அருகே வந்தார். அந்தப் பேப்பரை அவன் மூக்கில் உரசுகிற அளவு முகத்துக்கு நெருக்கமாக வைத்தார்.

''இதை எழுதியவன் இன்னும் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் எனக்கு வேண்டும்'' என்று கர்ஜித்தார்.

உமாபதி மௌனமாக தலையாட்டினான்.

புறங்கையை வீசிக் காட்டியதும், உமாபதியும், மனோ கரும் கவனமாக அந்த அறையை விட்டு வெளியேறினார்.

சபாஸ்டின் சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்தார்.

டெலிபோன் ஒலித்தது. ரிசீவரை ஆத்திரத்துடன் எடுத்தார்.

''ஆமாய்யா... நானும் பார்த்தேன். என்னிடம் காசு வாங்கிக் கொண்டு நீங்கள் எல்லாம் பிடுங்கிக் கொண்டிருங்கள்... யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் எழுதி விட்டுப் போகட்டும்...'' - மறுமுனையில் ஏதோ விளக்கம் வர ஆரம்பிக்க, அதைக் கேட்கப் பொறுமையில்லாமல் ரிசீவரை அறைந்து சாத்தினார்.

அச்சில் வராத ஒரு வார்த்தையால் இளங்கோவைத் திட்டி சுருட்டை அவன் தலையை நசுக்குவது போல் நசுக்கினார்.

இன்டர்காம் அழுத்தி, ''கிருஷ்ணசாமியை வரச்சொல்'' என்றார்.

ஐந்து நிமிடங்களில் கதவு தட்டிவிட்டு உள்ளே நுழைந்தார். கிருஷ்ணசாமி - எஸ்.கே.எஸ். குரூப்பின் பிரதான வக்கீல். நடு வகிடு எடுத்து, கழுத்தில் ருத்ராட்சக் கொட்டை அணிந்து, வெள்ளைச் சட்டை, வெள்ளை பேண்ட், கறுப்பு ஷூக்கள் சகிதம் நுழைந்து சபாஸ்டின் எதிரில் வந்து நின்றார்.

''படித்தீர்களா?'' - சபாஸ்டியன் கண்களை மட்டும் நிமிர்த்திக் கேட்டார்.

''படித்தேன்...''

''லீகல் பிராப்ளம் எதாவது வருமா?''

''இதில் சட்டப் பிரச்சனை வருவதற்கு ஒன்றும் இல்லை... குறிப்பிட்டு இந்த ஆதாரம் பற்றி எழுதவில்லை. செத்துப் போன இளங்கோ சொல்வது போல வெளியாகியிருக்கிறது கட்டுரை. கணவன் மனைவி இரண்டு பேர் கடலில் கண்டெடுக்கப்பட்டது. உண்மை. ஆனால் அவர்கள் இங்கே வைத்து கொலை செய்யப்பட்டவர்கள் என்று நிரூபிக்கும்



தகவல் எதுவும் கட்டுரையில் இல்லை. மொத்தத்தில் கற்பனையாக எழுதப்பட்ட கட்டுரை என்று நீங்கள் ஒரு மறுப்பு விட்டால் போதும்.''

''சட்டப் பிரச்னை இல்லை என்றீர்கள்... வேறு பிரச்னை ஏதாவது உண்டா?''

''அந்தப் பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரைகள் வருவதைத் தடுக்க வேண்டும். கோர்ட்டுக்குப் போய் நாம் ஒரு ஸ்டே வாங்குவோம்...''

''ஸ்டே வாங்காவிட்டால் பிரச்னையா?''

''தொடர்ந்து கட்டுரையில் என்னென்ன தகவல் வரும் என்று நமக்குத் தெரியாது. பொதுமக்களிடத்தில் எஸ்.கே.எஸ். கார்டன்ஸ் பற்றி ஒரு பயம் வந்துவிடும். நெகடிவ் பப்ளிசிடி கிடைத்து வியாபாரம் பாதிக்கப்பட்டு விடும்...''

''சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். போலீஸ் டி.ஐ.ஜி. போன் பண்ணிப் பேசினார். என்ன இப்படி பேப்பரில் வந்திருக்கிறதே என்று! அவரிடமும் கோபமாகப் பேசி விட்டேன். பணத்தை வாங்கிக் கொண்டு போலீஸும் தூங்குகிறதா என்று நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல் கேட்டு விட்டேன்... ஆனாலும் அந்த இளங்கோ பொல்லாதவன்...''

- சபாஸ்டின் கண்களை உருட்டிப் பேசினார்.

''இளங்கோ எங்கே என்று இப்போது ஒரு புதுப் பிரச்னை கிளம்பும், சபாஸ்டியன் சார்...''

''அவன் பணத்தைத் திருடிக் கொண்டு ஓடி விட்டான் என்று போலீஸில் அன்றைக்கே புகார் கொடுத்திருக்கிறோமே...''

''ஹெபியஸ் கார்ப்பஸ் என்று ஒரு மனு போட்டு, போலீஸை கோர்ட் விரட்டும், இளங்கோவைக் கண்டுபிடித்து கொண்டு வரச் சொல்லும்...''

''அதையெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். முதலில் பேப்பர்க்காரனை நிறுத்த வேண்டும்'' என்றார் சபாஸ்டின். ஆவேசமாக.



## 3

ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு விட்டு, அந்த காம்பவுண்டிற்குள் நுழைந்தான், உமாபதி.

உமாபதி, ஆறடி உயரம், முகத்தில் பெரும்பகுதியை மறைக்கும் தாடி, நெருக்கமாய் வெட்டிய தலைமுடி. ஒரு காதில் மட்டும் டாலடிக்கும் தோடு. கழுத்தில் நெருக்கமாய் கறுப்பு மணிக்கயிறும், அதன் ஆதரவில் தொங்கும் டாலரும் கண்களில் எப்போதும் சிகப்பு வரிகள், தடிமனான தோல் செருப்புகள் ஒலிக்க, அவன் சிமெண்ட் பாதையில் நடந்து கட்டிடத்தின் முகப்பை நெருங்கினான்.

'செய்திச் சோலை' என்ற போர்டு பார்த்தான். காக்கி உடை அணிந்த வாட்ச்மேனிடம் ''எடிட்டரைப் பார்க்க வேண்டும்'' என்றான்.

''எடிட்டர் ஊரில் இல்லை சார்... சப் எடிட்டர் தான் இருக்கிறார்...'' என்றான், வாட்ச்மேன் பணிவாக. உமாபதியை பார்த்ததுமே அவனுக்குள் ஒரு அச்சம் வந்து விட்டது.

பிரம்மாண்டமான பத்திரிகை ஆபீஸ் என்று அதை வர்ணிக்க முடியாது. படியேறியதும் ஒரு ரிசப்ஷன் தடுப்பு. பின்னணியில் கண்ணாடி தடுப்பிற்குப் பின்னே மேஜை நாற்காலிகளில் சுமார் பதினைந்து பேர் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சப் எடிட்டர் என்ற தள்ளுக் கதவைத் தள்ளி நுழைந்தான், உமாபதி.



மேஜை நிறைய காகிதங்கள் வழிய, போனில் பேசிக் கொண்டிருந்தவன், மூக்குக் கண்ணாடியை மேலேற்றிக் கொண்டு உமாபதியைப் பார்த்தான். பார்வையால் உட்காரச் சொன்னான்.

''என் பெயர் உமாபதி'' - உமாபதியின் குரல் அதிகாரம் கலந்து ஒலித்தது.

''என் பெயர் சாணக்யன்...'' என்றான், சப் எடிட்டர், ரிசீவரை வைத்துவிட்டு, ''உங்களுக்கு நான் எப்படி உதவ முடியும்?''

''உனக்கு உயிர் மேல் ஆசை உண்டா, சாணக்யன்?''

''என்னது?''

''சும்மா மிரட்டிவிட்டுப் போக வந்தேன் என்று நினைக்காதே. உனக்கு உண்மையிலேயே உயிர் மேல் ஆசை உண்டா?''

''யார் நீ... நீங்கள்?''

''எஸ்.கே.எஸ். கார்டன்ஸ் பற்றி அசிங்கமாக செய்தி போட்டிருக்கிறாயே. யார் உனக்கு அந்தக் கட்டுரையை எழுதிக் கொடுத்தது?''

''மைகாட்! அந்தக் கட்டுரையில் வரும் உமாபதி நீங்கள் தானா? கிளாட் டு மீட் யூ.''

சாணக்யன் நீட்டிய கையை உமாபதி ஆக்ரோஷமாகத் தட்டி விட்டான்.

''அந்தக் கட்டுரை யார் எழுதியது?''

சாணக்யன் மூக்கில் கண்ணாடியை ஏற்றிக் கொண்டான்.

''அந்தக் கட்டுரையிலேயே போட்டிருந்ததே - எழுதியது இளங்கோ என்று.''

உமாபதி எழுந்தான். சற்றும் தளர்வுறாமல் மேலே மேலே தன் அதிகாரத்தை நிறுத்துவதன் மூலம் தான் பயத்தைத் தோற்றுவிக்க முடியும் என்று முடிவு செய்தவன் போல சாணக்யனின் மார்பருகே சட்டையைக் கொத்தாகப் பற்றி உலுக்கி நிமிர்த்தினான்.

''நாளைக்கு இந்தப் பத்திரிகை ஆபீஸை எரித்து விடுவோம் ஜாக்கிரதை. இதில் ஒருத்தன் கூட உயிரோடு வெளியே போக மாட்டீர்கள்... யாரோடு விளையாடுகிறாய் என்று தெரியுமா? உனக்கு?''

சாணக்யனின் கண்களில் அச்சம் மின்னியது.

''சத்தியமாக எனக்குத் தெரியாது'' என்றான், குரல் நடுங்க. ''அந்தக் கட்டுரை எப்படி வந்தது என்று சொல்லி விடுகிறேன்...''

உமாபதி சட்டையை விடுவித்தான்.

சாணக்யன் நாற்காலியில் தளர்ந்து போய் உட்கார்ந்தான்.

''எங்கள் பத்திரிகைக்கு இரண்டு நாட்களுக்கு முன் ஒரு கடிதம் வந்தது. அத்துடன் இந்தக் கட்டுரை இணைக்கப் பட்டிருந்தது. இதைப் போல தினமும் கட்டுரைகள் அனுப்புவதாகவும், அந்தக் கட்டுரையில் காணப்படும் விஷயங்களுக்கு தகுந்த ஆதாரங்களை இணைப்பதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது. எங்கள் பத்திரிகையில் அதை உபயோகப்படுத்திக் கொள்ளவில்லையென்றால், அதே கட்டுரைகளை மற்ற பத்திரிகைகளுக்கு அனுப்பப் போவதாகவும், அந்தக் கடிதம் சொன்னது. எந்தப் பத்திரிகைக் காரனும் தனக்குக் கிடைத்த வாய்ப்பை வேண்டாமென்று அடுத்த பத்திரிகைக்கு விட்டுத் தருவானா? அதனால் போட்டோம்...''

''அடுத்த கட்டுரை வந்து விட்டதா?''



''இதுவரை இல்லை...''

''முதல் கட்டுரையை அனுப்பியது யார்? அட்ரஸ் என்ன?''

''அட்ரஸ் எதுவும் இல்... விடுங்கள் என்னை... அந்தக் கட்டுரையை வந்த கவரைத் தருகிறேன்...''

சாணக்யன் உமாபதியிடமிருந்து உதறி விலகி, மேஜையின் கடைசி டிராயர் திறந்தான். அகலமான ஒரு பிரவுன் நிற கவரை வெளியே எடுத்தான். மேஜை மீது வைத்தான்.

கவரின் மீது பத்திரிகையின் அட்ரஸ் எழுதப்பட்டிருந்தது. தபால் தலைகள் ஒட்டி தபால் ஆபீஸின் முத்திரைகள் குத்தப்பட்டிருந்தன. அனுப்பியவர் முகவரி எதுவும் எழுதப் படவில்லை.

கவரை ஊதித் திறந்தான். உமாபதி, உள்ளே ஒன்றும் இல்லை.

''கட்டுரை எங்கே?'' என்றான்.

''அச்சுக் கோர்த்தவுடன் அதை எரித்து விட்டோம். கடிதத்தில் எரித்து விடச் சொல்லி எழுதியிருந்தது. ஆனால் கட்டுரையிலும், கடிதத்திலும் கூட அனுப்பியவர் முகவரி எழுதப்படவில்லை. உமாபதி... அதை என்னால் உறுதியாக சொல்ல முடியும்...''

''எரித்து விட்டீர்களா? உண்மையாகவா?''

''சத்தியமாக...''

உமாபதி அந்தக் கவரை இன்னும் அருகில் வைத்து தபால் அலுவலக முத்திரையைப் படிக்க முயன்றான். சிறிது முயற்சிக்குப் பின், ''பெரம்பூரில் போஸ்ட் செய்திருக்கிறார்கள்'' என்றான். ''இதோ பார், அடுத்த கட்டுரை பத்திரிகையில் அச்சேறக் கூடாது... கட்டுரை இன்றைக்கு தபாலில் வந்தால் அப்படியே எரிக்காமல் என்னிடம் ஒப்படைக்க வேண்டும். கடிதம் வந்ததும் எனக்கு இந்த நம்பருக்கு போன் செய்...''

''சரி...'' என்றான். சாணக்யன் தலையை பயத்துடன் அசைத்து.

* * *

உமாபதி வெளியேறியதும், சாணக்யன் எழுந்தான். பின் சுவரோடு பொருந்திய மர அலமாரி திறந்தான். அதிலிருந்து நீல நிற பிளாஸ்டிக் ஃபைல் எடுத்தான். திறந்தான்.

இரண்டாவது கட்டுரை அச்சுக் கோர்த்து அழகாகத் தயாராக இருந்தது.

பிரிண்டரைக் கூப்பிட்டான்.

''இந்தக் கட்டுரையை பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் பளிச்சென்று தெரிகிற மாதிரி லே அவுட் பண்ணுங்கள்...''

''சரிங்கய்யா.''

கட்டுரையுடன் அவன் விலகியதும், ஃபைலிலிருந்து அச்சுக் கோர்த்த மற்ற காகிதங்களை வெளியே எடுத்தான். இரும்பு பீரோ திறந்து அதனுள் வைத்தான்.

பெரம்பூரிலிருந்து வந்திருந்த கவரை உமாபதி எடுத்துப் போய் விட்டான் என்பதை கவனித்தான். டெலிபோனில் சில எண்களைத் தட்டினான்.

''உமாபதி வந்திருந்தான். விஷயம் சூடு பிடித்து விட்டது. நாளையே கொலையே விழுந்தாலும் விழும். ஜாக்கிரதையாக இரு'' என்றான். ரிசீவரை வைத்தான்.



# 4

நேற்று என் கட்டுரை வெளியானதும் சுந்தரகுமார் சபாஸ்டின் கொதித்திருப்பார். ஆள் வைத்து பத்திரிகை



ஆபீசில் மிரட்டியிருப்பார். வக்கீலை வைத்து கட்டுரை வராமல் தடுக்க பாடுபட்டிருப்பார். நாளையிலிருந்து கட்டுரைகளைப் போட பத்திரிகை ஆபீஸிற்கு அனுமதி இருக்குமா தெரியவில்லை. இன்றைக்கு உங்களிடம் எஸ்.கே.எஸ்.ஸின் வேறு சில நடவடிக்கைகள் பற்றிப் பேசப் போகிறேன்.

எஸ்.கே.எஸ். டிபார்ட்மென்ட்டல் ஸ்டோர்ஸ் என்று அண்ணா நகர் வீதியில் பார்த்திருப்பீர்கள். கண்ணாடிக் கதவைத் திறந்து உள்ளே போய் மஞ்சள் சீருடை அணிந்த பணியாளர்களின் உதவியுடன் பல பொருட்கள் வாங்கியிருப்பீர்கள். கம்ப்யூட்டரில் பில் போட்டு பெரிய பெரிய பாலிதீன் பைகளைப் புன்னகையுடன் சுமந்து வந்திருப்பீர்கள்.

அந்தக் கட்டிடத்தின் அடித்தளத்திற்கு எப்போதாவது போயிருக்கிறீர்களா? அலுவலகப் பகுதி. அனுமதியின்றி உள்ளே வராதீர்கள் என்று எச்சரிக்கை பார்த்து திரும்பியிருப்பீர்கள்.

அந்த அலுவலகப் பகுதியில் நுழைந்தால், அது இரண்டாகத் தடுக்கப்பட்டிருப்பதை கவனிக்கலாம். முன் பகுதியில் சில கம்ப்யூட்டர்களும், இரும்பு அலமாரிகளில் ஃபைல்களும், அவற்றை கவனிக்கும் ஊழியர்களும் பார்க்கலாம்.

பின் பகுதியில்...

அது ஒரு ரகசிய வியாபாரக் கூடம். பல தேசங்களில் இருக்கும் ஏஜன்ஸிகளோடு தொடர்பு கொண்டு எஸ்.கே.எஸ். ஏற்றுமதி செய்யும் வியாபாரம் அந்தப் பகுதியில் தான் கவனிக்கப்படும்.

ஏற்றுமதி என்றால், பருத்தி ஆடைகள் என்றோ, மீன் வகைகள் என்றோ, காபி, டீ என்றோ நினைத்து விடாதீர்கள்.

முழுக்க முழுக்க மருந்து வியாபாரம்.

மாத்திரைகள், ஊசி மருந்துகள், சிகரெட்டுகள். அத்தனையும் போதை சமாச்சாரங்கள்.

போதை மருந்து வியாபாரம் செய்வது என்பது உலகக் குற்றம் என்று உங்களுக்குத் தெரியும். போதை மருந்துகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் தனியாக அமைப்புகளே வைத் திருக்கிறது. ஆனாலும் எஸ்.கே.எஸ். இந்த வியாபாரத்தில் கொடி கட்டிப் பறப்பது எப்படி? அவருக்கு அத்தனை பேரும் உடந்தை.

நீங்கள் தடாலென்று அந்த அலுவலகத்திற்குள் நுழைந்து, பின் பகுதியில் போய் ஆராய்ந்து பாருங்கள். போதை மருந்துகளும், அவை வியாபாரம் ஆகும் ஸ்தலங்கள் பற்றிய விபரங்களும் கிடைக்கும். சாம்பல் நிற பீரோ ஒன்று இருக் கிறதே. அதன் நம்பர் பூட்டைத் திறந்து உள்ளேயிருந்து மூன்று கடினமான லெட்ஜர்களை எடுத்தால், வெளிநாட்டுத் தொடர்புகள் யார் யார் என்ற விவரம் கிடைக்கும். அதே பீரோவில் கீழ்த்தட்டில் கறுப்பு நிறத்தில் ஒரு பெரிய டைரி கிடைக்கும். அதை ஆராயுங்கள்.

எஸ்.கே.எஸ். வெளிநாடுகளைப் பற்றி மட்டும் அக்கறை கொண்டு, தாய்நாட்டையே மறந்து விட்டார் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. போதை மருந்துகளை உள்ளூரிலும் அவர் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்து கொண்டிருக்கிறார் என்பதற்கு உங்களுக்கு ஆதாரங்கள் அந்த டைரியில் கிடைக்கும்.

ஒரே ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

எஸ்.கே.எஸ். ரொம்ப அபாயகரமானவர் என்பது புரியாமல் ஒரு முறை குமார் என்பவன் அவரை ஏமாற்றப் பார்த்தான். போதை மருந்துகளை வாங்கிக் கொண்டு, அதற்குப் பணம் தராமல் ஓடி விட்டான். முடிந்தால் போலீஸில் போய் புகார் கொடுத்துக் கொள் என்று கிண்டல் வேறு செய்தான். போதை மருந்து என்பதால் எஸ்.கே.எஸ். போலீஸிடம் போக முடியாது. தொண்டையில் மாட்டிய முள்ளை விழுங்கித்தான் ஆக வேண்டும் என்பது அவன் எண்ணம்.



எஸ்.கே.எஸ். தனக்கென தனியே ஒரு போலீஸ் படையே வைத்திருப்பார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

என்னையும், உமாபதியையும் கூப்பிட்டார். மூன்று நாட் கள் தருகிறேன், அந்த குமாரின் எலும்போ, சாம்பலோ எனக்கு வேண்டும் என்றார்.

எஸ்.கே.எஸ். ஒன்று சொல்லி விட்டால் சூரிய தேவனே சொன்னது போல - என்று நான் நினைத்திருந்த காலம் அது.

குமாரைப் பற்றி விசாரித்து அறிந்து கொள்வது அதிகக் கஷ்டமாயில்லை. போதை மருந்து வியாபாரம் என்பது ஒரு சங்கிலிக் கோர்வை போல சில பேருக்கு மத்தியில்தான் நடந்தாக வேண்டும். சங்கிலியில் ஒரு வளையத்தைப் பிடித்து விட்டால், மற்ற வளையங்களைத் தொடுவது அரி தான காரியமல்ல.

குமார் ஊட்டியில் ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

போன வருடம். ஆகஸ்ட் பதினேழு. குளிர்காலம் மும்முர மாகி விடாத ஒரு காலம்.

நானும், உமாபதியும் ஊட்டியில் போய் இறங்கினோம். என்னால் ஐந்து நிமிடத்தில் என் முகத்தை மாற்றி விட முடியும். மாற்றினேன். புருவங்களை அதிக அடர்த்தியாக் கினேன். பெரிய மீசை ஒட்டிக் கொண்டேன். கிராப்பை வேறு விதமாக வாரிக் கொண்டேன். ரிம்லெஸ் கண்ணாடி அணிந் தேன். வலது காலை சற்றே விந்தி நடந்தேன்.

இளங்கோ என்று என்னைப் பெற்ற அம்மாவே சொல்ல மாட்டாள். அப்படி மாறி விட்டேன். வலது கன்னத்தில் காதருகே ஒரு பெரிய மருவை ஒட்டியிருந்தேன். உண்மையில் அது மரு இல்லை. கார்டுலஸ் மினி மைக். மிக துல்லியமான மைக்.

குமார் தங்கியிருந்த அறைக்குப் போன் செய்தேன்.

''என் பெயர் பிரதீப். எக்ஸ்போர்ட் விஷயமாக உங்களைப் பார்க்க விரும்புகிறேன்'' என்றேன்.

எக்ஸ்போர்ட் என்று நான் குறிப்பிட்டது போதை மருந்துகளைத் தான் என்று குமாருக்குப் புரிந்தது. வரச் சொன்னான்.

* * *

அவன் தங்கியிருந்த அறையில் சந்தித்தேன்.

எஸ்.கே.எஸ். ஆபீஸிற்கு வந்திருந்தபோது அவன் என்னை அவருடன் ஒரு முறை பார்த்திருக்கிறான். ஆனால், என்னை அவனுக்கு சுத்தமாக அடையாளம் புரியவில்லை. நாற்காலி காட்டி உட்காரச் சொன்னான்.

அறையை பார்வையால் மேய்ந்தேன்.

வசதியான ஹோட்டல் ரூம். இரட்டைக் கட்டில். டெலிபோன். காற்றோட்டமான லிட்அவுட்.

குமார் மிக விலையுயர்ந்த உடைகள் அணிந்திருந்தான்.

இறக்குமதி செய்யப்பட்ட ஜீன்ஸ், பட்டையான பெல்ட்.

ப்ரோலைன் டீ-ஷர்ட் ப்யூமா ஷூக்கள். அசப்பில் மூன்றாவது வரிசை ஹிந்தி கதாநாயகன்போல் இருந்தான்.

''இதற்கு முன் நாம் சந்தித்திருக்கிறோமா, பிரதீப்?'' என்றான்.

சிகரெட்டைப் பற்ற வைத்து அவனுக்கும் ஒன்று நீட்டினேன்.



''இல்லை'' என்றேன், புகையினூடே, ''நான் மும்பையிலிருந்து வருகிறேன்... தமிழ்நாட்டிற்கு வேறொரு வியாபார விஷயமாக வந்திருந்தேன். மும்பை, பூனா, கோவா போன்ற ஊர்களுக்கு நான் சப்ளை செய்பவன்... சரக்கு பற்றி விசாரித்த போது, உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டேன்... எனக்கு தொடர்ந்து சரக்கு வேண்டியிருக்கும். நாம் வியாபாரம் பேசலாமா?''

''நோ பிராப்ளம்... ஆனால் நமக்குள் முன்பின் அறிமுகம் இல்லாததால்...'' என்று அவன் இழுத்தான்.

''நீ என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குப் புரிகிறது. நான் கடன் சொல்ல மாட்டேன். பணம் கொடுத்துவிட்டு எடுத்துப் போகிறேன். ஆனால் ரேட்டெல்லாம் நியாயமாக இருக்க வேண்டும்'' - போதை மருந்துகள் பற்றி எனக்கு எல்லா விவரங்களும் ஏற்கனவே தெரியும் என்பதால் ஒவ்வொரு வகை பற்றியும் பேசி விலைகளை விவாதித்தேன். என் பேச்சையெல்லாம் கேட்டு அவன் என்னை பூரணமாக நம்பினான்.

போதை மருந்துகளை நான் தினம் தோறும் கையாள்பவன் என்பதில் அவனுக்கு எந்த சந்தேகமும் வரவில்லை.

இன்னின்ன சரக்கு இத்தனை இத்தனை வேண்டும் என்று பட்டியல் தயாரித்து நீட்டினேன். இருவருமாகப் பேசி விலை நிர்ணயித்தோம்.

''இன்று மாலை ஏழு மணிக்கு என் பார்ட்னர் மும்பையிலிருந்து வருகிறான். அவன் தேவையான பணம் எடுத்து வருவான். அவனையும் சந்தித்து நமக்குள் ஒரு ஒப்பந்தத்திற்கு வருவோம்... எழுதப்படாத ஒப்பந்தம்...'' என்றேன்.

சந்திப்பிற்கு ஒப்புக் கொண்டான்.

ஆறரை மணிக்கு அவனை ஹோட்டலில் சந்தித்தேன்.

புதிதாக மாருதி கார் வாங்கியிருந்தான். அதில் ஏறினோம். கண்ணாடிகளை ஏற்றி விட்டு, பயணப்பட்டோம்.

நேரு கார்னரில் நண்பன் ஏறுவான் என்று சொல்லியிருந் தேன். நேரு கார்னர் அருகே ஒரு பேக்கரி வாசலில் உமாபதி வேறு வேஷத்தில் காத்திருந்தான். பின் கதவு திறந்து அவனையும் ஏறச் சொன்னேன். காரிலேயே அறிமுகம் செய்தேன். உமாபதி கையில் ஒரு பெட்டி வைத்திருந்தான். அதில் பணம் இருப்பதாக நம்பப்பட்டது.

நேரு கார்னரிலிருந்து சற்று மேலேறி விலகினால், தனிமை யான ஒரு பிரதேசத்திற்குப் போக முடியும். அருகிலிருந்து சற்று தூரம் நகர்ந்தால் மீள முடியாத அதல பாதாளம் தெரியும்.

'அபாயம், இந்த எல்லையைத் தாண்ட வேண்டாம்' என்று போர்டு பார்த்திருப்பீர்கள்.

அந்த போர்டு அருகே கார் நெருங்கியபோது, பின்னா லிருந்து உமாபதி சரேலென செயல்பட்டான்.

ஒரு நைலான் கயிறு குமாரின் கழுத்தில் வளையமாக விழுந்தது. இழுத்து இறுக்கியது.

உமாபதி இதில் எக்ஸ்பர்ட். ஒரு சின்ன போராட்டம் கூட இல்லாமல், நடப்பது புரிவதற்கு முன்பே குமார் செத்துவிட் டிருந்தான்.

பிரேக்கை மிதித்து, இன்ஜினை அணைத்தேன்.

குமாரின் எலும்பு அல்லது சாம்பல் கேட்டார் எஸ்.கே.எஸ். சற்றே யோசித்தோம். பிறகு, ஒரு முடிவுக்கு வந்தோம்.

காரிலிருந்து நானும் உமாபதியும் இறங்கினோம். பெட் ரோல் எடுத்து குமார் மீதும், காரின் மீதும் ஊற்றினோம். அதை முனைக்குக் கொண்டு போனோம். பற்ற வைத்தோம். பள்ளத்தில் உருட்டி விட்டோம்.



கார் சில பாறைகளில் மோதி வெடித்து கொழுந்து விட்டு எரிந்தது.

எஸ்.கே.எஸ். எங்கள் இருவரையும் கட்டிப் பிடித்துக் கொண் டார். ஆளுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுத்து சந்தோஷப் பட்டார். அதோடு நிற்காமல், அவருக்கு துரோகம் நினைத்த வர்களுக்கு என்ன கதி என்று சுற்று வட்டாரத்தில் செய்தியை பரப்பினார்.

குமார் இறந்தானே தவிர, அந்த பிஸினஸ் இறக்கவில்லை.

இன்றைக்குக் கூட அடாவடியாக எஸ்.கே.எஸ். டிபார்ட் மெண்ட்ஸ் ஸ்டோரில் நுழைந்து நீங்கள் ஆபீஸ் ரூமில் ஆராய்ந்து பார்த்தீர்களானால் வெடிக்கும் ஆதாரங்கள் உங்களுக்குக் கிடைக்கும். ஆனால் உங்கள் உயிர் பத்திரம்.''

மறுபடியும் சந்திப்போம்!

அதுவரை அன்புடன்,

இளங்கோ



## 5

முதிர்ந்த பிற்பகல்.

எஸ்.கே.எஸ். கார்டன்ஸ் தோட்டத்து இலைகளை, செடிகளின் பூக்களை, கடற் கரை மணலை சூடாக்கியிருக்கும் சூரியன்.

டாட்ஸன் கார் வந்து நின்றது. அதிலிருந்து சபாஸ்டின் இறங்கினார்.

நடன அரங்கம் என்று கண்ணாடி எழுத்துக்கள் அறிவித்த வட்டக் கட்டிடத்திற்குள் திறந்து பிடித்த கதவு வழியே நுழைந் தார். சிறிய இடைவெளி விட்டு, அவரைப் பின் தொடர்ந்த இரண்டு ஊழியர்கள் அவர் வாயிலிருந்து உதிரப் போகும் உத்தரவுகளுக்காகக் காத்திருந்தார்கள்.

இது சபாஸ்டினின் அன்றாடப் பழக்கம். மாலை ஏழு மணிக்குத் துவங்கும் பொது நடனம் இரவு பன்னிரண்டு மணி வரை கூட நீள்வதுண்டு. சென்னையின் மேல்தட்டு மக்கள், பலரும் கலந்து கொள்ளும் இந்த டிஸ்கொதேயில் எந்தக் குறையும் வந்துவிடக் கூடாது என்பது சபாஸ்டினின் அழுத்தமான உத்தரவு. தினமும் மாலைக்கு முன் அவரே நேரடியாக வந்து நடன அரங்கத்தை ஒரு தடவை விசிட் செய்து விட்டுப் போவது அதனாலேயே வழக்கமாகியிருக் கிறது.

வெளியில் இருந்த சிமெண்ட் நடைபாதையை ஒருத்தன் சோப் நீர் விட்டுக் கழுவிக் கொண்டிருந்தான். இன்னொருத் தன் தோட்டப் புல்வெளியில் சிதறியிருந்த பேப்பர் குப்பை களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தான். இன்னும் ஒருவன் கண்ணாடிகளை டிஷ்யூ காகிதம் வைத்து தேய்த்து சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

நடன அரங்கத்தில் மாட்டியிருந்த நவீன ஓவியங்களை தூசு தட்டிக் கொண்டிருந்த பெண்மணி சபாஸ்டினைப் பார்த்ததும் மரியாதையாக ஒதுங்கினாள். டை அணிந்த இளைஞன் ஒருவன் முன் வந்து ''கிருஷ்ணசாமி ஐயா உங்களைப் பார்க்கக் காத்திருக்கிறார்'' என்றான்.

சபாஸ்டினின் நெற்றி நிமிர்ந்தது. ''யார், வக்கீலா?''

''ஆமாம், சார்...''

''வருகிறேன்'' என்றார், திரும்பினார். தனக்குப் பின்னால் நின்ற ஊழியர்களை சொடுக்குப் போட்டு கூப்பிட்டார்.

''அந்த ஜன்னல் திரைகள் வெளிறிப் போயிருக்கின்றன என்று நான்தான் சுட்டிக்காட்ட வேண்டுமா? நீங்களாக மாற்றக் கூடாதா?''

''உடனே மாற்றுகிறோம். சார்...''



சபாஸ்டின் அவர்களைப் பின் நிறுத்தி விட்டு அலுவலக அறைக்குள் நுழைந்தார். சோபாவில் உட்கார்ந்திருந்த லாயர் கிருஷ்ணசாமி எழுந்தார்.

''என்ன ஆயிற்று?'' - சபாஸ்டியன் வேகமாகக் கேட்டார்.

''கட்டுரை வெளியாவதற்கு தடையுத்தரவு கேட்டு கோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருக்கிறோம், சபாஸ்டின் சார்...''

''இன்னும் ஸ்டே வாங்கவில்லையா?''

''நாளைக்குத்தான் தீர்ப்பு சொல்ல முடியும் என்று மாஜிஸ்ட்ரேட் சொல்லி விட்டார். இது சமூகப் பிரச்னை என்று பத்திரிகையின் தரப்பு வக்கீல் தடையுத்தரவு தரக் கூடாது என்று ஒரு வழக்கு தொடர்ந்திருப்பதால் பிரச்சனை யாகி விட்டது. மூன்று கட்டுரைகள் வரை ஏற்கனவே அச்சாகி விட்டதாகவும், இது தினப் பத்திரிகை என்பதால் முன்கூட் டியே திட்டமிட வேண்டியிருக்கிறது என்றும் அவர்கள் தரப்பில் சொன்னதை நீதிபதி ஏற்றுக் கொண்டு விட்டார். இரண்டாவது, மூன்றாவது கட்டுரைகளின் பிரதிகளை நீதிபதியிடம் பத்திரிகையின் வக்கீல் கொடுத்திருக்கிறார்.''

''யார் அந்த நீதிபதி?''

''இல்லை சபாஸ்டின் சார், அவர் நம் குரூப் இல்லை. விலைக்கு வாங்க முடியாது. சொல்லப் போனால் எதிர்க்கட்சி அனுதாபி. அதனால் போலீஸையும், அதன் ஊழல்களையும் தாக்கி ஏற்கனவே தீர்ப்பு எழுதியவர் அவர்...''

''இரண்டாவது கட்டுரை வெளியாகி விட்டதா?''

''இன்று மாலைப் பதிப்பில் வெளியாகிறது. இன்னும் இரண்டு மணி நேரத்தில் மார்க்கெட்டுக்கு வந்துவிடும்... இன்னொரு சின்னப் பிரச்சனையும் வந்து விட்டது. சபாஸ் டின் சார்...''

சபாஸ்டினின் முகம் சுருங்கியது. கிருஷ்ணசாமி சொல்வதையெல்லாம் அவர் ரசிக்கவில்லை என்ற தொனி அவர் முகத்தில் தெரிந்தது. என்ன என்பது போல கண்களை நிமிர்த்திக் கேட்டார்.

''பத்திரிகை ஆபீசில் புகுந்து உமாபதி மிரட்டியதாக புகார் எழுதி, பத்திரிகை ஆபீஸிற்கு பாதுகாப்பு கேட்டிருக்கிறார்கள். தகுந்த பாதுகாப்பு கொடுக்கச் சொல்லி கோர்ட் உத்தரவு போட்டிருக்கிறது...''

''ரொம்ப சந்தோஷம் எல்லோருமாக எனக்கு நெருப்பு பற்ற வைத்து விடுங்கள்.''

''போலீஸிடம் பேசி விட்டேன் சார்... கோர்ட் உத்தரவை மதித்து பாதுகாப்பு தருகிறார்களே தவிர, நம் ஆட்களுக்கு ஒன்றும் பிரச்சனை இருக்காது...''

''இரண்டாவது கட்டுரையில் என்ன வெளியாகிறது?''

''முதல் பிரதி வெளியே வந்தவுடன் இங்கே வந்துவிடும். சபாஸ்டின் சார். அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்...''

''முதல் பிரதி வந்துவிடும். உடனே நீங்கள் பார்க்கலாம் சார்'' என்று இரைச்சலாக சொன்னார் சபாஸ்டின். முகத்தில் கோபம் நடனமாடியது. ''வெளியானபின் கிடைப்பதற்கு வழி செய்வது ஒரு பெரிய சாமர்த்தியமா, கிருஷ்ணசாமி? வெளி வருவதற்கு முன் தெரிந்து கொள்ள முடியவில்லை என்று சொல்ல வெட்கமாக இல்லை?''

டெலிபோன் ஒலித்தது.

சபாஸ்டின் எடுத்து காதில் பொருத்தினார். அதன் வாய்ப் பகுதியை உள்ளங்கையால் பொத்தி மூடியபடி கிருஷ்ண சாமியிடம் தொடர்ந்து பேசினார். ''அந்தக் கட்டுரைகளால் நமக்கு நஷ்டம் ஆரம்பித்து விடும்... நான் விழுந்தால், என்னோடு சேர்ந்து இந்த சாம்ராஜ்யமே விழுந்து விடும் என்பதை மறக்காதீர்கள்...''



டெலிபோனில் எதிர்முனையிலிருந்தவர்கள் பேசுவதை ரிசீவரைத் தாண்டி கேட்க முடிந்தது. சபாஸ்டின் யோசனை யுடன் எந்த பதிலும் சொல்லாமலேயே ரிசீவரை போன் தொட்டிலில் வைத்தார்.

''உமாபதியை நான் உடனே பார்க்க விரும்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு, கிருஷ்ணசாமியின் பதிலுக்காகக் காத்திருக்காமல் அந்த அறை விட்டு வெளியே வந்தார்.

அவர் வருகைக்காகவே காத்திருந்தது போல் உடனடியாக இரண்டு ஊழியர்கள் தயாரானார்கள். அதில் ஒருத்தனை அருகே கூப்பிட்டார். பர்ஸ் எடுத்து அதிலிருந்து புத்தம் புதிய ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் பத்து எடுத்தார். ''இன்றைக்கு பலூன் விளையாட்டு'' என்றார்.

அவன் பணிவாக அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு விலகினான். சபாஸ்டின் நடன ஹாலைச் சுற்றி வர ஆரம்பித்தார்.

உமாபதி எங்கிருந்தோ பதறிக் கொண்டு ஓடி வந்தான்.

''சார்?''

''பத்திரிகை ஆபீசில் போய் மிரட்டிவிட்டு வந்தாயா?''

அவர் கேள்வி கேட்ட விதத்திலேயே தான் தவறு செய்து விட்டோம் என்று உமாபதிக்குப் புரிந்து விட்டது.

''அந்தக் கட்டுரைகள் இனிமேல் வரக்கூடாது என்றுதான் சார்...''

''கட்டுரைகள் வருவது நின்று விட்டதா?''

''தெரியாது சார்...''

''போலீஸ் பாதுகாப்போடு, கோர்ட் அனுமதியோடு வரப் போகிறது...''

''ஐயோ சார்...''

''யார் எழுதுவது என்று கண்டு பிடித்தாயா?''

''அட்ரஸ் இல்லாமல் தபாலில் வருகிறது. சார்...''

''யார் சொன்னார்கள் உனக்கு?''

''சப் எடிட்டர் சாணக்யன். அவனை நன்றாக மிரட்டி விட்டு வந்திருக்கிறேன், சார்...''

''மிரட்டினால் அவன் உண்மைதான் பேசுவான் என்று நீயாக தீர்மானித்து விட்டாய்! அவன் சொன்னதையெல்லாம் நம்பி விட்டாய்!''

''தப்புதான், சார்...''

''இன்னும் ஒரே ஒரு சான்ஸ் தருகிறேன், உனக்கு. உன்னால் கண்டு பிடிக்க முடியவில்லையென்றால் உடனே வந்து சொல்லிவிடு...''

''தாங்க்ஸ் சார்... இந்த தடவை தப்பு நடக்காது சார்...''

உமாபதி பணிவுடன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, கிருஷ்ணசாமி பரபரப்பாக நடந்து வந்தார்.

''செய்திச்சோலை ஆபீஸிலிருந்து அச்சான கையோடு ஒரு பிரதி எடுத்து வர ஏற்பாடு செய்திருந்தேன், சார்... இதில் இரண்டாவது கட்டுரை வந்திருக்கிறது...''

அவர் நெற்றி நிறைய வியர்வை சேர்ந்து புருவங்களில் தேங்கியிருப்பதைப் பார்த்தவுடனேயே சபாஸ்டினுக்கு கட்டுரை பற்றிப் புரிந்து விட்டது. கிருஷ்ணசாமி சுருட்டி நீட்டிய செய்திப் பத்திரிகையை பிடுங்கிக் கொண்டு தன் பிரத்யேக அறைக்குள் நுழைந்தார்.

''நேற்று என் கட்டுரை வெளியானதும் சுந்தரகுமார் சபாஸ்டின் கொதித்திருப்பார். ஆள் வைத்து பத்திரிகை ஆபீசில் மிரட்டியிருப்பார்...'' என்று வாய்விட்டு படிக்க ஆரம்பித்தவரின் கண்களில் உணர்ச்சிகள் மாறி மாறி வெடித்தன.



''மறுபடியும் சந்திப்போம்! அதுவரை அன்புடன் இளங்கோ'' என்று கட்டுரையை முடித்தபோது அவர் முகம் சற்று நிறம் இழந்திருந்தது.

உமாபதியைத் திரும்பிப் பார்த்த பார்வையில் ஆத்திரம் இருந்தது.

''நான் உன்னை நம்பவில்லை. உண்மையிலேயே இளங்கோ செத்து விட்டானா? ஒவ்வொரு வார்த்தையும் படிக்கப் படிக்க அவன் உட்கார்ந்து பேசுவதாகவே எனக்குத் தோன்றுகிறது...''

''இந்தக் கைகளால் தான் புதைத்தேன், சார்...'' என்றான், உமாபதி குரல் நடுங்க.

''அப்படியானால் இந்தக் கட்டுரை எழுதுபவன் யார்? அவனை நான் பார்க்க விரும்புகிறேன்.''

''சரி, சார்...'' என்றான், உமாபதி அவசரமாக.

''கிருஷ்ணசாமி, இந்த விவகாரத்தில் அடுத்தது என்ன வேண்டும் என்று யோசியுங்கள், அவசியமென்றால் உங்கள் சீனியர்களுடன் பேசுங்கள்...''

''நான் கவனித்துக் கொள்கிறேன், சபாஸ்டின் சார்...''

டெலிபோன் மணி அடித்தது. எடுத்துப் பேசினார்.

''யாரிடமிருந்து தெரியுமா போன் வந்தது? டிக்கெட் மேனேஜரிடமிருந்து, இன்றைக்கு வழக்கமான அளவு கூட்டம் வரவில்லை என்றார். டிக்கெட்டுகள் குறைவாகத்தான் போயிருக்கிறது என்றார்... கட்டுரையின் விளைவு புரிகிறதா?'' - அவர் குரல் ஆழமாக ஒலித்த போதும், அதில் சற்றே கவலையும் கலந்திருந்தது.

''கட்டுரையில் வெளியாகியிருப்பதைப் பார்த்து விட்டு எஸ்.கே.எஸ். டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோருக்கும் நாளைக்குக் கூட்டம் குறைந்து விடும்... மக்கள் நம்பிக்கையை மறுபடி பெற வேண்டுமானால், ஆபீஸ் அறைக்குள் அவர்களை அனுமதிக்க வேண்டும். அனுமதிக்க வேண்டும் என்றால்,

அங்கிருந்து சரக்குகளையும், மற்ற முக்கியமான ஃபைல் களையும் இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அங்கிருந்து கிளப்பியாக வேண்டும். புரிந்ததா?''

''புரிந்தது. சபாஸ்டின் சார்...''

''கைகளைப் பிசைந்து கொண்டு வந்து நிற்காதீர்கள்... காரியத்தை முடியுங்கள்...'' - உறுமிவிட்டு சபாஸ்டின் மீண்டும் நடன ஹாலிற்குள் போய் விட்டார்.



## 6

'எஸ்.கே.எஸ். டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் - உங்கள் எல்லாத் தேவை களுக்கும் என்று உடம்பில் பெயிண்ட் செய்த எழுத்துக்களுடன் அந்த நீளமான டெலிவரி வேன் நுழைந்து கடையின் விலாப் பகுதிக்கு வந்தது. வழக்கமாய் அந்த வேனை பார்க் செய்யும் பகுதியில் ஒரு வெள்ளை அம்பாஸிடர் நின்றிருக்க, வேன் டிரைவர் ஜன்னல் வழியே கொக்கு போல் தலையை வெளியே நீட்டி, ''எவண்டா அது இங்கே பார்க் பண்ணியது?'' என்று கத்த, ''உஷ்ஷ்ஷ்...'' என்று அவனை அடங்கச் சொல்லியவாறு, அலுவலகத்தி லிருந்து வாட்ச்மேன் ஓடி வந்தான்.

''கார் நம்பர் பிளேட்டில் பார்த்தாயா? அது அரசாங்க வண்டி... சி.பி.ஐ. அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்...''

டிரைவரின் முகம் சிவந்து போனது, மிரட்சியுடன் வேனை நிறுத்தினான். வேனுக்குப் பின்னால் 'சர்ர்' என்று பிரேக் அடித்து நின்றது. வக்கீல் கிருஷ்ணசாமியின் மாருதி வேன்.

பரபரப்பாக இறங்கி அவர் அலுவலகப் பகுதிக்கு நடந்தார். உள்ளே நுழைய முற்பட்டபோது, தடுக்கப்பட்டார்.

''சி.பி.ஐ. ரெய்டு'' என்றார், தடுத்த அதிகாரி.



கிருஷ்ணசாமி சட்ட பூர்வமாக கேள்விகள் வீச, சி.பி.ஐ. அதிகாரி, தனக்குரிய அதிகாரத்தை கடிதம் மூலம் நிரூபித்து விட்டு, ''உங்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் காத்திருங்கள்.. நானே வந்து கேட்கிறேன்...'' என்றார்.

மாருதி வேன் ஒன்று கட்டிடத்தின் வாசலில் பிரேக் அடிக்க, அதிலிருந்து நான்கு பேர்கள் உதிர்ந்தார்கள். வீடியோ கேமிரா, பிரகாசமான மின் விளக்குகள், முழ நீளத்திற்கு மைக்.

கிருஷ்ணசாமியின் விழிகள் விரிந்தன.

''என்னது இது? கேமிராவெல்லாம் ஏன் வருகிறது?''

''விஞ்ஞான முன்னேற்றம்'' என்றார் சி.பி.ஐ. அதிகாரி. உள்ளே கோர்ட்டிலிருந்து வந்திருக்கும் நோட்டரி பப்ளிக் ஒருத்தர் இருக்கிறார். அவர் முன்னிலையில் நாங்கள் செயல்படுவதை வீடியோவில் படம் எடுக்கப் போகிறோம். நாளைக்கு நாங்கள் ஆதாரங்களைத் திரித்து விட்டதாக எந்தக் குற்றச்சாட்டும் வந்துவிடக் கூடாது என்பதால் இந்த முன்னெச்சரிக்கை... அப்படி வலுவான ஆதாரங்கள் கிடைத் தால், இதையே டெலிவிஷன் செய்திகளுக்கும் பயன்படுத்த முடியுமே...''

கிருஷ்ணசாமிக்கு குபீரென்று வியர்த்தது. விஷயம் அவர் கையை மீறிப் போய் விட்டது. சபாஸ்டின் இதை ரசிக்கப் போவ தில்லை. வெகுவாகக் கொதிக்கப் போகிறார். எஸ்.கே.எஸ். கம்பெனியின் ஊழியர்கள் சி.பி.ஐ. அதிகாரிகளின் சரமாரி யான கேள்விகளை எதிர்கொண்டு தடுமாறுவதை வெளியி லிருந்தே பார்க்க முடிந்தது.

இந்த நிகழ்ச்சியை இனி எஸ்.கே.எஸ். நினைத்தாலும் மாற்ற முடியாது. போதை மருந்துகளும், முக்கியமான ஆதாரங்களும் சி.பி.ஐ.க்குக் கிடைக்கத்தான் போகிறது. போதை மருந்து ஒழிப்புத் துறை அதிகாரிகளும் எந்த நிமிடமும் வந்து போவார்கள்.

சபாஸ்டினை இதிலிருந்து சட்ட பூர்வமாகக் காப்பாற்றுவது எப்படி என்றுதான் யோசிக்க வேண்டும்.

பரபரப்பாக காரில் ஏறினார். விருட்டென்று கிளம்பினார். செல்லுலார் போனில் எண்களைத் தட்டினார்.

''எஸ்.கே.எஸ். ப்ளீஸ்... கிருஷ்ணசாமி என்று சொல்லுங்கள். வெகு அவசரமான விஷயம்... சபாஸ்டின் சார், நான் தான்... டிபார்ட்மெண்ட் ஸ்டோர் ஆபீஸை சி.பி.ஐ. கைப்பற்றியிருக்கிறது. நாம் உடனே சந்திக்க வேண்டும்... தெரியும் இன்றைய டான்ஸ் புரோகிராமில் நீங்கள் பிஸி என்று தெரியும்... ஆனாலும் இது ரொம்ப முக்கியமான விஷயம், சபாஸ்டின் சார்... சரி அங்கேயே வந்து விடுகிறேன்...''

ஸ்டியரிங்கில் வியர்த்த கைகள் வழுக்கின.

* * *

''சொல்லுங்கள்'' என்றார், சபாஸ்டின், சற்றே கோபமாக.

கிருஷ்ணசாமி எச்சில் கூட்டி விழுங்கினார்.

''பத்திரிகையில் கட்டுரை பிரசுரம் ஆகும் போதே சி.பி.ஐ.க்கும் விவரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எதிர்க் கட்சித் தலைவர் மத்திய அமைச்சர்கள் மூலம் பிரஷர் கொடுத்திருக்கிறார். போதாததற்கு நீதிபதி வேறு சி.பி.ஐ.யிடம் பேசி விவரங்கள் சேகரிக்கச் சொல்லியிருக்கிறார். ஆளும் கட்சிக்கும், மத்திய அரசிற்கும் ஒத்துப் போகாததால், சி.பி.ஐ. உடனே வந்து விட்டது...''

''விலங்குகள் கொண்டு வருவார்கள்... நான் இரண்டு கைகளையும் நீட்ட வேண்டும், அவ்வளவுதானே?''

''உங்கள் கோபம் நியாயமானதுதான், சபாஸ்டின் சார். ஆனால் இதிலிருந்து வெளியே வருவதற்கு ஒரு வழி யோசித்து விட்டேன்...''

''என்ன?''



''ஆதாரங்களை இனிமேல் அழிக்க முடியாது. ஆனால் போதை மருந்துகளுக்கும், உங்களுக்கும் எந்தத் தொடர்பு மில்லை என்று நிரூபித்து விட்டால் போதும்...''

''எப்படிச் செய்யப் போகிறீர்கள், அதை?''

''நம் குரூப்பிலேயே உங்களுக்காக சிறை செல்லக் கூடிய ஒரு விசுவாசி இருந்தால் போதும்...''

''அது பிரச்சினையில்லை... மேனேஜர் ரவிச்சந்திரன் நான் என்ன சொன்னாலும் கேட்பார்...''

''ரவிச்சந்திரனுக்கும், உங்களுக்கும் பழைய தேதியில் உடனே ஒரு ஒப்பந்தம் எழுதுவோம். ஆபீஸ் ரூமின் பின் பகுதியை அவனுக்கு நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள். அங்கே அவன் உணவுப் பொருட்கள் வியாபாரம் செய்வதாய் உங்களிடம் சொல்லியிருக்கிறான். கொஞ்சம் பணம் மட்டும் நீங்கள் முதலீடு செய்திருக்கிறீர்கள். மற்றபடி அவன் என்ன செய்கிறான் என்று உங்களுக்கு தெரியவே தெரியாது. அப்படி ஒரு ஒப்பந்தம் பழைய தேதியில் ரெடி பண்ணி விட்டால், நீங்கள் வெளியே வந்து விடலாம். சி.பி.ஐ. உங்களைத் தேடி வரும் முன் ஒப்பந்தம் தயாராகி விட வேண்டும்...''

சபாஸ்டின் எழுந்து கிருஷ்ணசாமியின் தோளில் பாராட்டாகத் தட்டிக் கொடுத்தார். ''உருப்படியாக ஒரு யோசனை சொல்லியிருக்கிறீர்கள்... ரவிச்சந்திரனைக் கூப்பிடுங்கள். பழைய தேதியில் பத்திரம்?''



7

''எப்போதும் என்னிடம் தயாராயிருக்கும்...'' என்றார். கிருஷ்ணசாமி, மலர்ந்து சிரித்து.

சுந்தரகுமார் சபாஸ்டினின் அடியாளாக இருந்தவன் தானே நீ. திடீரென்று அவ

ருக்கும், உனக்கும் என்ன பகை? அவருடைய அந்தரங் களையெல்லாம் நீ ஏன் பகிரங்கப்படுத்துகிறாய் என்று உங்களிடம் ஒரு கேள்வி தோன்றியிருக்கும்.

இந்த இளங்கோ எஸ்.கே.எஸ்.ஸின் அடியாள் மட்டு மில்லை. பரம விசுவாசியாகவும் இருந்தவன்தான். என் னுடைய பதினெட்டாவது வயதிலிருந்து எஸ்.கே.எஸ்ஸின் நிழலிலேயே தான் வளர்ந்திருக்கிறேன். அவருடைய காற்றைத் தான் சுவாசித்திருக்கிறேன். அவருடைய உணவைத் தான் உண்டிருக்கிறேன்.

தீனி போட்டு அவர் என்னை வளர்த்தது என் பேரில் இருந்த அக்கறையினால் அல்ல. வேட்டை நாய்க்கு கறியும், மாமிசமும் போட்டு வளர்ப்பது அந்த பிராணியின் மீது இருக்கும் பிரியத்தினால் அல்ல. அதை எப்படி உபயோகப் படுத்த நினைக்கிறார்கள் என்பதில்தான் உண்மையான காரணம் இருக்கிறது. நானும் அப்படித்தான் எஸ்.கே.எஸ். வெட்டு என்றால் யார் கழுத்தாக இருந்தாலும் கேள்வி கேட் காமல் வெட்டுவேன். எஸ்.கே.எஸ். குதி என்று சொன்னால் அது பாழுங்கிணறாக இருந்தாலும் எதிர்த்துக் கேட்காமல் குதிப்பேன்.

அப்படியிருந்த நான் ஏன் மாறினேன்?

நிர்மலா!

யார் அது நிர்மலா?

அவளை அறிமுகப்படுத்தும் முன், 'எஸ்.கே.எஸ்.ஃபைன்கிளப்' பற்றி உங்களுக்கு சில விஷயங்கள் சொல்ல வேண்டும்.

கேளிக்கை கிளப்பில் உறுப்பினராய் இருப்பவர்கள் செஸ் விளையாடுவார்கள். கோல்ஃப் விளையாடுவார்கள். கிரிக் கெட் விளையாடுவார்கள். சேர்ந்து பிக்னிக் போவார்கள் என்றெல்லாம் வெளியிலிருந்து பார்ப்பவர்கள் நினைக்கலாம்.



அதிக பட்சம் பீர் அடித்து விட்டு காசு வைத்து சீட்டாடுவார்கள் என்று நீங்கள் சந்தேகித்திருக்கலாம்.

கிளப்பின் அச்சடித்த விதிமுறைகளில் அவ்வளவுதான் இருக்கும். ஆனால் கிளப்பின் வெவ்வேறு நடவடிக்கைகள் எதுவும் பொதுவாக வெளியில் சொல்லப்படாதவை.

கிளப்பின் உறுப்பினர்கள் பெரும்பாலும் ஆண்கள். பத்துப் பதினைந்து பேர்தான் ஜோடியாக கணவன் மனைவி யாக சேர்ந்தவர்கள். தனியான ஆண்களுக்கு கேளிக்கை வழங்குவதற்கு என்று எஸ்.கே.எஸ். ஒரு திட்டம் வைத்திருந் தார்.

இளம் பெண்களின் பட்டியல் ஒன்று எங்களிடம் உண்டு. கல்லூரி மாணவிகள், குடும்பப் பெண்கள், சினிமாவில் நடன நாயகிகள், ஹாஸ்டலில் தங்கி வேலை செய்பவர்கள், இவர்களில் சிலருக்கு ஜாலியாக பணம் சம்பாதிக்கும் ஆசை உண்டு. கால்கேர்ள்ஸ் என்று ஆங்கிலத்தில் நாகரீகமாக சொல்லலாம். தமிழில்... வாடகைத் துணைகள் என்று சொல் வோமா?

இந்தப் பெண்கள் குறிப்பிட்ட பணத்திற்கு ஆண்களுக்கு கம்பெனி தருவார்கள். கம்பெனி என்றால் சேர்ந்து சீட்டாடு வார்கள். நடனம் ஆடுவார்கள். பீச் மணலில் உட்கார்ந்து உங்கள் பெண்டாட்டி பற்றி நீங்கள் புலம்பினால், பொறுமை யாகக் கேட்டுக் கொள்வார்கள்.

கொடுக்கும் பணத்தைப் பொறுத்து நீங்கள் அந்தப் பெண்ணின் இடுப்பில் கை போடலாம். மடியில் சாயலாம் சினிமாவிற்கு அழைத்துப் போய் இருட்டில்...

சில பெண்கள் அதிகபட்ச சந்தோஷம் தரவும் தயாரா யிருப்பார்கள்.

எங்கள் கிளப்பின் கெஸ்ட் மெம்பர்கள் என்று அழைக்கப் பட்ட இந்தப் பெண்களின் பெயரும், போட்டோவும் ஒரு

ஆல்பத்தில் இருக்கும் வாடிக்கையாளர் விருப்பத்திற்கு இணங்க, தேவையான பெண் ஏற்பாடு செய்யப்படுவாள்.

நிர்மலாவின் போட்டோவும் ஆல்பத்தில் இருந்தது.

ஒரு தனியார் கம்பெனியில் சொற்ப சம்பளத்திற்கு காலை எட்டிலிருந்து இரவு எட்டு வரை டைப்ரைட்டருடன் போராடுபவள். பெண்களுக்கான ஹாஸ்டலில் தங்கியிருக்கிறாள். அதே ஹாஸ்டலில் தங்கியிருந்த வேறொரு கெஸ்ட் மெம்பர் மூலம் எஸ்.கே.எஸ். ஃபன் கிளப் பற்றிக் கேள்விப்பட்டு அதில் சேர்ந்தாள்.

அம்மா கிடையாது. அப்பா கிடையாது. ஆனாலும் படிக்கும்போது வாங்கிய கடன்களை அடைப்பதற்கு அவளுக்கு சம்பளம் பற்றவில்லை. கூடுதல் பணம் தேவைப்பட்டது.

எஸ்.கே.எஸ். அவளை முதல் பார்வையிலேயே சேர்த்துக் கொண்டு விட்டார். சில சமயம் இரவு நடனங்கள் எல்லாம் முடிந்த பின் அவளை ஹாஸ்டலில் அனுமதிக்க மறுத்தார்கள். அவள் தனியே ஒரு வீட்டிற்குக் குடி பெயர்ந்தாள். இரவு ரொம்ப தாமதமாகி விட்டால் சில சமயம் அவளை வீட்டில் கொண்டு விடும் பொறுப்பு எனக்கு வரும்.

ஒரு மழை இரவில் அவளைக் கொண்டு விட்டபோது, "உள்ளே வந்தால் சூடான காபி தருகிறேன்" என்றாள்.

உண்மையிலேயே காபி எனக்குத் தேவைப்பட்டது. போனேன். சிறியதாய் இருந்தாலும், வீட்டை அவள் ரசனையுடன் வைத்திருப்பதை கவனித்தேன்.

காபியை நான் உறிஞ்சிக் கொண்டிருக்கும்போது, அவள் மெல்லக் கேட்டாள். "இந்த வேலை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா, இளங்கோ?"

"ஏன்?" என்றேன்.

"நான் ரொம்ப சுத்தமான தொழில் செய்பவள் என்று நான் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், உங்களுக்கு என்னை



விட வாய்ப்பு அதிகம். நீங்கள் ஆண். உடலில் வலு இருக்கிறது. உலகில் எவ்வளவோ தொழில்கள் இருக்கின்றன. யாரோ ஒருத்தனுக்கு அடியாளாக இருப்பது சந்தோஷமாகவா இருக்கிறது?"

அதெப்படி என்னை அப்படிக் கேட்கப் போயிற்று என்று மனது தாண்டவமாடியது. எஸ்.கே.எஸ்.ஸின் மீது எனக்கிருந்த மரியாதையையும், விசுவாசத்தையும் சந்தேகப்பட்டது போல கோபம் கொதித்து எழுந்தது. வார்த்தைகளை சீற விட்டேன்.

அவள் அதிர்ந்து போகவில்லை. ஆவேசப்படவில்லை. அமைதியாக நான் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டாள். புன்னகை மாறாமல் பேசினாள். ஒவ்வொரு பாயிண்ட்டாக எடுத்து வைத்தாள்.

சுத்தியால் தட்டப்பட்ட இரும்பு போல் வளைந்தேன். அவள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும் நியாயம் இருப்பதை என்னால் உணர முடிந்தது.

"படிக்கும்போது, படிப்பிற்காக வாங்கிய கடனை அடைப்பதற்காக நான் இந்தத் தொழில் செய்யும்போதும் குறுகிப் போகிறேன் இளங்கோ. ஆனாலும், மற்றவர்களுக்கு சந்தோஷம் தரும் செயலைத்தான் செய்கிறேன் என்று என்னை சமாதானப்படுத்திக் கொள்ள முடியும். என்னால் இன்னொருத்தருக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது என்று காரணம் சொல்ல முடியும். ஆனால் நீங்கள்? யோசித்துப் பாருங்கள். எஸ்.கே.எஸ்.ஸிற்கு சந்தோஷம் தருகிறீர்கள். ஆனால் அந்த முயற்சியில் மற்றவர்களில் எத்தனை பேருடைய சந்தோஷத்தை கருக்கித் தேய்க்கிறீர்கள் என்று எப்பொழுதாவது யோசித்ததுண்டா?"

அவளுடைய கேள்வி என்னை அடித்து நொறுக்கியது. என் இதயத்தில் தொடப்படாத ஒரு இடம் தொடப்பட்டு விட்டது.

''எனக்கும் இப்போது உறுத்தலாய்த்தான் இருக்கிறது.'' என்றேன்.

''இந்த வேலை வேண்டாம். இளங்கோ, நல்ல வேலையாக வேறு பார்த்துக் கொள்ளலாமே...''

பேசிப் பிரிந்த பின்னும், அவளுடைய குரல் என் மண்டைக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தது. இருபத்து நான்கு மணி நேரமும் அந்தக் கேள்வி என்னைத் துரத்திக் கொண்டே இருந்தது.

நிர்மலாவை அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தேன். அவளுடன் பேசுவதும், பழகுவதும் என் மனதிற்கு மிகவும் இதமாக இருந்தது. என்னையறியாமல் அவள் என்னை வசீகரித்துக் கொண்டிருந்தாள்.

அப்புறம் இரண்டு முறை யாரையோ தூக்கிவிட்டு வருவதற்கு எஸ்.கே.எஸ். அனுப்பியபோது உடம்பு சரியில்லை என்று டபாய்த்தேன்.

''உங்களுக்கு ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். இளங்கோ'' என்றாள் ஒரு முறை.

அவளைப் பேட்டி எடுக்க வந்த ஒரு பத்திரிகை நிருபருடன் அவள் நெருக்கமாயிருந்தாள். அவர் மூலம் எனக்கொரு வேலைக்கு ஏற்பாடு செய்தாள். ''இப்போது கிடைக்கும் அதீத பணம் கிடைக்காமல் போகலாம். ஆனால் மனதில் நிம்மதி இருக்கும்...'' என்றாள்.

எஸ்.கே.எஸ். நல்ல மூடில் இருந்தபோது தயக்கத்துடன் ஆரம்பித்தேன்.

''எஸ்.கே.எஸ்... எனக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போகிறது. முன்பு போல உடம்பில் சக்தி இல்லை. அடிதடி விவகாரங்களில் முழுமையாக ஈடுபட முடியவில்லை. ஒரு சிம்ப்பிளான வேலைக்கு மாறலாமா என்று யோசிக்கிறேன்'' என்றேன்.



''உன்னைக் கொஞ்சம் நாட்களாக கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன். இளங்கோ... உன் போக்கு சரியில்லை... எல்லாவற்றையும் நான் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். அந்த நிர்மலா உன்னை ஆட்டி வைக்கிறாளா? உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கும் மனிதனாக நீ மாறி விட்டாயா?'' என்று கோபமாகக் கேட்டார். ''நீ எனக்கு வலது கை போல. எனக்குத் தெரிந்தது எல்லாம் உனக்குத் தெரியும். சொல்லப் போனால். எனக்கிருக்கும் அதிகாரம் கூட உனக்கு இருக்கிறது என்று அத்தனை பேரும் நினைத்திருக்கிறார்கள்... நீ விலகுவதை நான் எப்படி அனுமதிக்க முடியும்?''

''எனக்கு உண்மையிலேயே உடம்பு வீக்காகி விட்டது.''

''அவ்வளவுதானே... அடிதடி வேண்டாம். கத்தி, துப்பாக்கி வேண்டாம். என்னிடம் வேறு வேலைகளா இல்லை. உனக்குத் தருவதற்கு? ஃபன் கிளப்பிறகு மேனேஜராயிரு... டிபாட்மெண்ட் ஸ்டோரில் சூப்பர்வைஸராயிரு...''

''இல்லை, எஸ்.கே.எஸ்...''

''என்னை விட்டே விலக வேண்டும் என்று தீர்மானித்து விட்டாய்!''

''அப்படியில்லை... ஆனால்...''

''சரி, இன்னும் ஒரு மாதம் உனக்கு இங்கு வேலை இருக்கிறது. அப்புறம் நீ விலக விரும்பினால், விலகலாம்...''

ஒரு மாதம்தானே! ஒரே ஒரு மாதம்தானே!

உடனே ''சரி'' என்றேன்.

நிர்மலாவிடம் சொன்னேன். ''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்று கை குலுக்கினாள்.

''இந்த ஒரு மாதம் கூட, நீங்கள் அதிகமாக அழிவு வேலைகளில் இறங்காதீர்கள்'' என்றாள்.

"நிர்மலா, நான் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டாயே?"

"தெரியும்... நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று தெரியும்..."

"நீயும் இந்தத் தொழிலை விட்டுவிடு. நிர்மலா..."

"விட்டு விட்டு?"

"தெரிந்தும் தெரியாதது போல் ஏன் நடிக்கிறாய்? ஐ லவ் யூ. நிர்மலா... நம் இருவருக்கும் சேர்த்து நான் சம்பாதிக்கிறேன்..."

அவள் நெருங்கி வந்து என் தலையை அன்புடன் கோதி விட்டாள். "முதலில் உங்களுக்கு புதிய வேலை நிச்சய மாகட்டும். இளங்கோ..."

ஒவ்வொரு நாளையும் காலண்டரில் சந்தோஷமாகக் கிழித்தேன். நேரத்தை வேகமாக நகர்த்த முடிந்தால் முப்பது நாட்களை ஒரே நிமிடத்தில் நகர்த்தியிருப்பேன்...

ஆனால் எஸ்.கே.எஸ். ஒரு புலி. காயப்பட்ட புலி! பதுங்கிய புலி! ஒருபுறம் எனக்கு சாதகமாகப் பேசுவது போல் நடித்து விட்டு மறுபுறம் என்ன செய்தார், தெரியுமா?

நாளைக்கு சொல்கிறேன்...

அன்புடன்
இளங்கோ



## 8

அச்சுக் கோர்த்த கட்டுரையை வரி வரியாகப் படித்து சரி பார்த்துக் கொண் டிருந்தான்.

சாணக்யன்.

கண்களை மூடினான்.



நிர்மலாவின் சிரித்த முகம் மூடிய இமைகளுக்குள் மின்ன லடித்தது.

'கால்கேர்ள்' என்று தொழில் ரீதியாக அவளுக்கு கௌரவம் இல்லையென்ற போதிலும், அவளுடைய ரசனைகள் எவ் வளவு உன்னதமானவை. அவள் எழுதிய சில கவிதைகள் அவனுடைய பத்திரிகையிலேயே வெளியாகியிருந்தன.

எடிட்டர் ஒரு வடக்கத்திக்காரர். பெயரளவில் அவர் பொறுப்பாசிரியர் தானே தவிர, அவனே முழுக்க முழுக்க செய்திச் சோலையின் பக்கங்களுக்கு எடிட்டராயிருந்தான். சப் - எடிட்டர் என்ற அந்தஸ்து வைத்து அவன் வேலை களைக் குறைத்துக் கொண்டதில்லை.

நிர்மலாவை அறிந்திருந்தால்தான் இளங்கோவை சந்திக்க முடிந்தது. இளங்கோவை சந்தித்ததால்தான்...

திடீரென்று அவன் எண்ணம் தடைப்பட்டது.

ஜன்னலுக்கு வெளியே ஏதோ அசையும் ஒலி கேட்க வில்லை?

எழுந்து போய் ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

தெரு விளக்குகளின் வெளிச்சத்தில் வீதியே அமைதியாக இருந்தது. பத்திரிகை அலுவலகம் இருந்த கட்டிடமும் எந்த ஆர்ப்பாட்டமும் இன்றி இருந்தது. நான்கு போலீஸ்காரர்கள் கட்டிடத்தின் நான்கு புறமும் நின்று கவனித்துக் கொண்டிருந் தார்கள்.

பத்திரிகை ஆபீஸிற்கு போலீஸ் பாதுகாப்பு இருப்பதால் மட்டும் தன் உயிருக்கு ஆபத்து விலகி விடவில்லை என்று அவனுக்குத் தெரிந்திருந்தது.

மறுபடியும் இருக்கைக்கு வந்து உட்கார்ந்தான்.

மூன்றாவது கட்டுரை வெளியான பின், கோர்ட் கட் டுரைகளைத் தொடர்ந்து அனுமதிக்குமா, நிறுத்தி விடுமா?

நான்காவது கட்டுரையில் என்னென்ன விஷயங்கள் வர வேண்டும்? அவன் குறிப்புகள் எடுக்க ஆரம்பித்தான்.

* * *

உமாபதி மோட்டார் சைக்கிளை இரண்டு தெருக்களுக்கு முன்பே நிறுத்திவிட்டு இறங்கினான்.

மெல்ல நடந்தான. ஜொகின் அணிந்து, தலையில் புதிய விக் அணிந்து, கண்களில் கறுப்புக் கண்ணாடி அணிந்து, முற்றிலும் உருமாறியிருந்தான்.

அவனும், இளங்கோவுமாக எத்தனை இடங்களுக்கு இப்படி மாறிய தோற்றத்துடன் போயிருக்கிறார்கள். செயல் பட்டிருக்கிறார்கள்!

இளங்கோவின் நினைப்பு அவனுள் ஒரு சிலிர்ப்பை செலுத்தியது.

ஒழுங்காக இருந்திருந்தால், எஸ்.கே.எஸ்.ஸின் சாம்ராஜ யமே அவன் காலடியில் மண்டியிட்டிருக்கும். அவசரப்பட்டு விட்டான்! அவன் மனதை மாற்றி, திசை மாற்றி அலைக் கழித்தவள் ஒரு பெண். அதுவும் வாடகைப் பெண்!

நிர்மலாவை இளங்கோ ஏன் சந்தித்தான்?

தெருமுனையில் திரும்பியதும், உமாபதி நின்றான்.

பத்திரிகை ஆபீசின் வாசலில் இரண்டு டியூப் லைட்கள் எரிந்து கொண்டிருந்தன. இரண்டு கான்ஸ்டபிள்கள் நெருக்க மாய் நின்று சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார்கள்.

தெருமுனையில் நின்று கொண்டிருந்த போலீஸ் ஜீப்பை நெருங்கினான்.

ஒரு காலை வெளியே தொங்க விட்டபடி பான்பராக்கை கடித்து மென்று கொண்டிருந்தார் சப்-இன்ஸ்பெக்டர், ஸ்பீக்கரில் கண்ட்ரோல் ரூமிலிருந்து இடைவிடாத 'ப்ளோ ப்ளா ப்ளா' காற்றில் விரயமாகிக் கொண்டிருந்தது.



''ஹலோ'' என்றான் உமாபதி.

சப்-இன்ஸ்பெக்டர் அவனை அலட்சியமாகப் பார்த்தார்.

உமாபதி பாக்கெட்டிலிருந்து தன் அடையாள அட்டையை எடுத்து சப்-இன்ஸ்பெக்டரின் மூக்குக்குக் கீழே நீட்டினான்.

எஸ்.கே.எஸ். கார்டன்ஸ் என்ற பெயரைப் பார்த்ததும், சப்-இன்ஸ்பெக்டர் சட்டென்று ஜீப்பிலிருந்து கீழே இறங்கினார்.

''என்ன வேண்டும்?''

''பத்திரிகை ஆபீசில் எனக்குக் கொஞ்சம் வேலையிருக் கிறது. பின் தெருவில் நிற்கும் போலீஸ்காரர்கள் தொந்தரவாக இருப்பார்கள்...''

''ஐந்து நிமிடம் விலக்கிக் கொண்டால் போதுமா?''

''உள்ளே போவதற்கு ஐந்து நிமிடம் போதும். காரியம் முடிந்து நான் வெளியே வரும் முன் எல்லா விளக்குகளையும் ஒரு முறை அணைத்துப் போடுவேன். அந்த சிக்னலைப் புரிந் துக் கொண்டு, அவர்கள் மறுபடி விலக வேண்டியிருக்கும்...''

''உள்ளே...?''

''நான் விலகிப் போனபின், பத்திரிகை ஆபீசிற்குள் நீங்கள் போகலாம். அங்கே என்ன நடந்திருந்தாலும், அதை என்னுடன் தொடர்பு படுத்திப் பார்க்க வேண்டாம். போலீ ஸின் ஒத்துழைப்பு பூர்ணமாக இருந்தால், எஸ்.கே.எஸ். உங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் அன்பளிப்பு வைத்திருப் பார்...''

''இங்கேயே காத்திரு... ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்'' சப்-இன்ஸ்பெக்டர் விலகிப் போனார்.

உமாபதி ஜீப்பில் சாய்ந்தவாறு நின்றிருந்தான்.

ஐந்து நிமிடங்களில் சப்-இன்ஸ்பெக்டர் திரும்பி வந்தார்.

''போகலாம்'' என்றார்.

உமாபதி பத்திரிகை அலுவலகத்தின் பின் தெருவிற்குள் நுழைந்தான்.

காம்பவுண்டை ஒட்டி நின்றிருந்த இரண்டு போலீஸ்காரர் களும் மாயமாகி விட்டிருந்தார்கள்.

காம்பவுண்டு சுவரை ஒட்டி வளர்ந்திருந்த பெரிய மரத்தில் குரங்கு போல் ஏறி, அதன் கிளை பிடித்து கட் டிடத்தின் ஜன்னல் சார்புக்கு மாறினான்.

ஜன்னலை ஒட்டி நிர்மாணித்திருந்த குழாய்களைப் பற்றி வெகுசுலபமாக மாடியேறினான். ஜன்னல் கதவை அழுத்தித் தள்ளித் திறந்தான். உள்ளே இறங்கினான்.

பெரிய மேஜைகள் இரண்டு இருந்தன. அவற்றைச் சுற்றி பன்னிரண்டு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மேஜை மீது இருந்த தண்ணீர் டிரம், அங்கங்கே சிந்தியிருந்த பருக்கைகள் - எல்லாமாகச் சேர்ந்து, அதை லன்ச் ரூம் என்று அறிவித்தன.

உமாபதி மெல்ல அந்த லன்ச் ரூமிலிருந்து வெளியே வந்தான். முன்பு வந்ததை நினைவுபடுத்தி, பத்திரிகை ஆபீசின் லே-அவுட்டை கவனத்தில் கொண்டு வந்தான். இந்த காரிடார் தாண்டி, இடது புறம் திரும்பினால் எடிட் டோரியல்.

காரிடாரின் திருப்பத்தில் காலடிச் சத்தம் கேட்டதும், சட்டென்று அங்கிருந்த டாய்லெட்டிற்குள் நுழைந்தான். காலடிச் சத்தம் தேய்ந்து விலகியதும், வெளிப்பட்டான். லன்ச் ரூமில் யாரே தண்ணீர் எடுத்துக் குடிக்கும் சத்தம் கேட்டது.

சரேலென்று காரிடாரில் வேகமாக நுனி விரல்களால் ஓடித் திரும்பினான். திரும்பியவுடன் பெரிய ஹால். அவ னுக்கு முதுகு காட்டி இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள்.



சப்-எடிட்டர் என்று பெயர் சுமந்த அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

சாணக்யன் இருக்கையிலிருந்து நிமிர்ந்தான். அவன் விழிகள் விரிந்தன.

உமாபதி ஒரே தாவலில் அவனை நெருங்கி, வாயை அழுத்தமாகப் பொத்தினான். ''சத்தம் போடாதே... குடலை உருவி விடுவேன். நாம் இருவரும் தனியே பேச வேண் டும்...''

அவன் கையிலிருந்த கத்தி 'விஷக்' என்று திறந்துக் கொண்டது. சாணக்யனின் கழுத்தை முத்தமிட்டது.

சாணக்யன் கண்கள் விரிய அவனைப் பார்த்தான். உமாபதி சற்றே கையைத் தளர்த்த, ''யார் நீ?'' என்றான்.

''பேசுவோம். தனிமை வேண்டும்.''

''இன்னும் ஐந்து நிமிடத்தில் எல்லோரும் போய் விடு வார்கள்'' என்றான், சாணக்யன்.

வந்தவன் எவனாயிருந்தாலும், போலீஸ் தடையைத் தாண்டி அவன் உள்ளே நுழைந்த தைரியம் சாணக்யனை ஆச்சரியப்பட வைத்தது.

''யாராவது உள்ளே எட்டிப் பார்த்தால் கூட உன் கழுத்தை சீவி விடுவேன்'' என்று ரகசியமாக கர்ஜித்தான், உமாபதி.

சாணக்யன் எழுந்தான். கத்தியை அழுத்தியபடி உமாபதி நெருக்கமாகப் பின் தொடர, தள்ளுக் கதவு அருகே வந்து, ஹாலில் இருந்தவர்களைப் பொதுவாக விளித்துச் சொன்னான்.

''நான் மேட்டர் எழுதிக் கொண்டிருக்கிறேன்... யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். குட் நைட்...''

''குட்நைட்!'' என்றார்கள். மற்றவர்கள் வீட்டுக்குப் புறப்பட ஆயத்தம் செய்தபடி.

சாணக்யன் முழுக்கதவை மூடினான். திரும்பினான்.

''இப்பொழுது சொல்... யார் நீ?''

''ஏற்கெனவே என்னை இங்கே சந்தித்திருக்கிறாய் நீ...''

''உமாபதியா? உமாபதி-யா? சுத்தமாக அடையாளமே தெரியவில்லை...'' சாணக்யன் இயல்பாக இருக்க முயன்றபடி நாற்காலியில் உட்கார்ந்தான்.

''நான் எச்சரித்த பின்பும் கட்டுரை வந்தது. இன்னொன்று வரப் போகிறது'' என்று உறுமினான், உமாபதி.

''கோர்ட்டிலேயே விளக்கம் கொடுத்தோமே, உமாபதி, அச்சாகி விட்ட மேட்டரை இனி என்ன செய்வது?''

''பற்ற வைத்திருக்கலாமே...''

''மூன்றாவது கட்டுரைக்கு அப்புறம் வேண்டுமானால்...''

''அதை எழுதுபவர் யாரென்று சொன்னாய்?''

''பெயர் தெரியாது. பெயரில்லாத ஒரு கவரில்தான் மேட்டர் வந்தது. கவரைக் கூட உன்னிடம் காட்டினேனே...''

''அந்த உடான்ஸெல்லாம் இனிமேல் செல்லாது, சாணக்யன். மேட்டரை எழுதுவது யார் என்று எனக்குத் தெரிந்து விட்டது...''

''உண்மையாகவா?'' சாணக்யன் குரலில் ஆச்சரியம் காட்டினான். ''தெரிந்தால் எனக்கும் சொல்லேன்.''

''சொல்வதென்ன? ஆளையே காட்டுகிறேன். முதலில் போட்டோவில் பார்க்கிறாயா?'' - உமாபதி சட்டையிலிருந்து ஒரு சதுரமான கவரை வெளியே எடுத்துப் போட்டான். வெளியே எடுத்தான், சாணக்யன்.

போட்டோவில் நடுவில் நிர்மலா. வலது புறம் அவள் தோளில் கை போட்டபடி இளங்கோ. இடது புறம் நெருக்கமாக நின்றபடி சாணக்யன்.



சாணக்யனின் முகம் அந்த போட்டோவைப் பார்த்ததும் கண நேரம் இறுகியது.

''இந்த போட்டோ எங்கே கிடைத்தது உனக்கு?''

''நிர்மலாவின் வீட்டையும், இளங்கோவின் ரூமையும் துப்புரவாக ஆராய்ந்தோம். இளங்கோவின் டைரிக்குள் பத்திரப்படுத்தப்பட்டிருந்தது இந்த போட்டோ....''

சாணக்யன் ஒரு கணம் கண்ணை மூடினான். போட்டோ எடுக்கப்பட்ட நிகழ்ச்சி அவன் நினைவில் மின்னலடித்தது.

நிர்மலாவின் வீட்டு முகப்பில் இருந்த சிறு தோட்டம். மாலை வெயிலின் ஆரம்பம். ''எஸ்.கே.எஸ்.ஸிடம் சொல்லி விட்டாராம், சாணக்யன். இளங்கோவை ஒரு மாதத்தில் விடுவிப்பதாக எஸ்.கே.எஸ். சொல்லியிருக்கிறாராம். அதைக் கொண்டாட வேண்டாமா? நாம் ஒரு போட்டோ எடுத்துக் கொள்வோமா?''

சாணக்யனின் கேமிராவை 'ஆட்டோ' முறையில் போட்டு, மூவரும் சேர்ந்து நின்று எடுத்துக் கொண்ட போட்டோ ஃப்ளாஷ் மின்னி முடிந்ததும், உணர்ச்சி வேகத்தில் நிர்மலா இளங்கோவை இறுகப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்ட ஈரம் கூட இன்னும் நினைவிருக்கிறது.

அன்றைக்குத்தான் இளங்கோ அவனிடம் பேசினான்.

''சாணக்யன், எஸ்.கே.எஸ். சாதாரண மனிதரில்லை. என்னை விடுவிக்க அவர் சுலபத்தில் ஒப்புக் கொள்ளக் கூடியவர் இல்லை. அதனால் எனக்கு முழு நம்பிக்கை இல்லை. அவர் பேரில் சந்தேகம் இருக்கிறது. ஆபத்தை எதிர்கொள்ள நாங்கள் தயாராயிருக்க வேண்டும்.''

''எஸ்.கே.எஸ். நினைத்தால் எதையும் சாதித்து விட முடியும் என்ற கௌரவம் இன்னும் அவருக்குத் தரப்பட வேண்டுமா, இளங்கோ?''

''வேண்டாம். வேண்டாமென்ன? கூடாது! ஒருவேளை நானோ, நிர்மலாவோ அவரால் தண்டிக்கப்பட்டால், என் சார்பில் அவரைத் தோலுரித்துக் காட்டுவாயா, சாணக்யன்? அவருடைய வலது கையாக இத்தனை நாட்களாக இருந்து விட்டேன். அவருடைய அத்தனை ரகசியங்களும் எனக்குத் தெரியும். அத்தனையும் உன்னிடம் சொல்லப் போகிறேன்...''

அன்றைக்குத்தான் இளங்கோ சுந்தரகுமார் சபாஸ்டினைப் பற்றி சொல்ல ஆரம்பித்தான்.

''இந்த போட்டோவைப் பார்த்ததும் கனவுக்குப் போய்விட்டாயா?'' உமாபதியின் குரல் சாணக்யனை நினைவிற்கு இழுத்து வந்தது.

''போட்டோவில் நாங்கள் இருப்பதாலேயே, கட்டுரைகளை நான்தான் எழுதுகிறேன் என்று நீ நினைத்து விட்டால், அதற்கு நான் பொறுப்பா, உமாபதி?''

''உன் கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்த்தேன், சாணக்யன்...''

''என்னது!''

''இந்தப் பத்திரிகை ஆபீஸில் எல்லோரும் உன்னைப் போலவே நியாயமாகவும், நேர்மையாகவும், முட்டாள்தனமாகவும் இருப்பார்கள் என்று நினைத்தாயா, சாணக்யன்? கம்போஸிங் செக்ஷனைச் சேர்ந்த சங்கரை இரண்டு தட்டு தட்டியதும், அத்தனை உண்மைகளையும் கொட்டி விட்டான். கட்டுரைகளையெல்லாம் எழுதுவது நீதான் என்று காட்டிக் கொடுத்து விட்டான்...''

சாணக்யன் ஒருமுறை கண்களை மூடினான். நெஞ்சை நிமிர்த்தினான். ''சரி, நான்தான் எழுதினேன். என்ன செய்யப் போகிறாய்?''

''உன் பத்திரிகையின் ஓனரும், சீஃப் எடிட்டருமான முகர்ஜியிடம் பேசியாகிவிட்டது தெரியுமா? எஸ்.கே.எஸ். சாரைப் பற்றிக் கேள்விப்பட்டதும், அவர் மிரண்டு விட்டார். கட்டுரைகளை உடனடியாக நிறுத்துவதாகச் சொல்லி விட்டார். உனக்கு டெலக்ஸிலோ, ஃபாக்ஸிலோ அந்த உத்தரவைத் தருவதாகச் சொன்னார்.



டெலக்ஸ் மெஸேஜ்களை இனிமேல்தான் பார்க்க வேண்டும் என்று சாணக்யன் நினைத்திருந்தான்.

''நீ இருந்தால்தானே இளங்கோவின் கட்டுரை என்ற பேரில் உன்னால் எழுத முடியும்? நீயே இல்லாவிட்டால்?'' உமாபதி அவன் முகத்தருகே மூச்சு விட்டுக் கேட்டான்.

''நான் செத்தால் என்னுடன் உண்மைகளும் செத்து விடுமா, உமாபதி?''

''செய்திச் சோலையில் இனி இந்தக் கட்டுரைகள் வரப் போவதில்லை. அப்புறம் நீ எதற்கு வீணாய்?'' உமாபதி மேஜை மீதிருந்து பேனாவை எடுத்து சாணக்யனின் கையில் திணித்தான். ''நான் சொல்வது போல் எழுது...''

சாணக்யன் பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டு உமாபதியை நிமிர்ந்து பார்த்தான்.

உமாபதி சொல்ல ஆரம்பித்தான், ''எஸ்.கே.எஸ். கார்டன்ஸ் பற்றியும், சுந்தரகுமார் சபாஸ்டின் பற்றியும் இளங்கோ சொன்னதாக கற்பனையான கட்டுரைகளை எழுதினேன். அவருக்கு நேர்ந்த அவமானங்களை பார்த்து என் மனசாட்சி உறுத்துகிறது. கேவலமாக நடந்து கொண்டதை எண்ணி வெட்கமடைகிறேன். இனியும் உயிர் வாழ்வது அர்த்தமில்லை என்று முடிவு செய்து விட்டேன். என் மரணத்திற்கு நானே காரணம்.''

''வேடிக்கையாக இருக்கிறதே. இந்தக் கடிதம் நான் ஏன் எழுத வேண்டும்? எழுதினாலும், எழுதாவிட்டாலும் என் உயிர் போகத்தான் போகிறது...'' என்றான், சாணக்யன்.

இயல்பாகப் பேச அவன் கவனமாக முயன்ற போதும், இதயத்தில் படபடப்பு கூடியிருந்தது.

"நீ எழுதினாலும், எழுதாவிட்டாலும் நீ அப்படி எழுதிய தாகத்தான் போலீஸ் சொல்லப் போகிறது..."

"அப்படியென்றால் நான் எழுதாமலேயே இருந்து விட்டுப் போகிறேன்..." - சாணக்யன் பேனாவை மேஜை மீது எறிந் தான். "இன்னொரு விஷயம் தெரியுமா உனக்கு?"

வெகு சரேலென்று மேஜையிலிருந்து பேப்பர் வெயிட்டை எடுத்து கண்ணாடி ஜன்னலை நோக்கி எறிந்தான்.

கண்ணாடி 'சிலுங்' என்று உடைந்து சப்தமெழுப்பியது.

"இந்த சத்தம் கேட்டு இங்கே என்ன நடக்கிறது என்று கவனிக்க எப்படியும் போலீஸ் வந்துதான் ஆக வேண்-" அவன் வாக்கியத்தை முடிக்கு முன் உமாபதியின் கையிலிருந்த நைலான் கயிறு சரேலென்று அவன் கழுத்தில் விழுந்து இறுக்கியது.

சாணக்யன் சற்றே அசட்டையாக இருந்து விட்டதற்காக வருத்தப்பட்டு கைகளை வீசி உமாபதியைப் பிடித்துத் தள்ள முற்பட்டான். நாற்காலியைக் கவிழ்த்தான். வேண்டிய மட்டும் ஒலிகள் எழுப்பினால், போலீஸின் கவனத்தைக் கவர முடியும் என்று நினைத்தான்.

உமாபதியின் ஆத்திரம் பன்மடங்காகப் பெருகியது. கயிற்றை விலுக்கென்று இழுத்தான்.

இறுதிக் கணப் போராட்டம் நின்று சாணக்யனின் தலை தொங்கியது. தற்கொலை போன்ற செட்டப் செய்ய வேண் டும் என்று நினைத்திருந்ததை நிறைவேற்ற முடியாது. இவ்வளவு ஒலிகளுக்குப் பிறகு பத்திரிகை ஆபீசிலிருந்து யாராவது ஓடி வரக் கூடும்.



சட்டைக்குள் வயிற்றுப் பகுதியில் பதுக்கியிருந்த வெடி குண்டை எடுத்தான். மேஜை மீது வைத்தான். மூன்று நிமிடத் தில் வெடிக்க செட் செய்தான். விளக்குகளை அணைத்தான். சரேலென்று கதவு திறந்து வெளியே பாய்ந்து, லன்ச் ரூமிற்கு ஓடி ஜன்னல் சார்பில் குதித்து, மரத்திற்குத் தாவி... தெருவில் அவன் பாதி தூரம் ஓடிய போது, வெடிகுண்டு மாபெரும் சத்தத்துடன் வெடித்தது. நூறு மின்னல்களின் வெளிச்சம். கரும்புகை அடர்த்தியாக எழுந்து பிரதேசத்தை ஆழ்ந்தது.

ஜீப்பிலிருந்து சப்-இன்ஸ்பெக்டர் பதறி இறங்கி ஓடுவது தெரிந்தது.

அவனை சிலர் பார்த்திருக்கக் கூடும். ஆனால் இந்த அடை யாளங்களில் யார் பார்த்தாலும் அவனுக்குக் கவலை இல்லை.

மோட்டார் சைக்கிளில் தாவி ஏறி உட்கார்ந்து கிளப்பி னான். இன்றைய செயலுக்கு எஸ்.கே.எஸ். அவனுக்கு நிச்சயம் வைர மோதிரம் பரிசளித்தாலும் ஆச்சரியமில்லை என்று நினைத்தான். பைக்கை சீற விட்டான்.



## 9

எஸ்.கே.எஸ். கார்டன்ஸ். மேலே நிலா காயும் நேரம். சபாஸ்டினின் பிரத்யேக தோட்டப் பகுதியில் புல்தரையில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

சபாஸ்டின் சந்தோஷமான புன்னகையுடன் இருந்தார். வக்கீல் கிருஷ்ணசாமி ட்ரேயிலிருந்து ஆரஞ்சு ஜூஸ் எடுத்து உறிஞ்சினார்.

"மினிஸ்டரிடம் பேசியிருக்கிறேன். சபாஸ்டின் சார்... சி.பி.ஐ. விவகாரத்தை கவனித்துக் கொள்வதாக சொல்லியிருக் கிறார்..." என்றார், ஜூஸை சற்றே உறிஞ்சி.

''கவனிக்காமல்? எலக்ஷன் நேரத்தில் சும்மாவா ஹெல்ப் பண்ணியிருக்கிறோம்!'' சபாஸ்டின் உமாபதியை அருகே அழைத்து முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''வெடிகுண்டு வைத்து கட்டுரைகளை ஒன்றுமில்லாமல் பண்ணியது புத்திசாலித்தனம்...'' என்றார்.

''எனக்கு பயம் சார்.... ரகசியமாக சாணக்யனைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்று நினைத்தேனே தவிர, பப்ளிக்காக செய்யும்படி ஆகிவிட்டது. தற்கொலை செட்டப்பாக இருந்தால் போலீஸிற்கும் சுலபமாக இருந்திருக்கும்...''

''நோ பிராப்ளம்... போதை, மருந்துகள் வியாபாரத்தைப் பொறுத்தவரை மேனேஜர் ரவிச்சந்திரன் தான் என்னை ஏமாற்றி அதையெல்லாம் வியாபாரம் செய்து கொண்டிருந் தார் என்று போலீஸில் வாக்குமூலம் கொடுத்தாயிற்று. சி.பி.ஐ.க்கும் அதே விளக்கம் கொடுத்தாயிற்று. சி.பி.ஐ.யை வரவழைத்ததால் பத்திரிகையின் மீது ரவிச்சந்திரனுக்குக் கோபம். அதனால் ஆள் வைத்து வெடிகுண்டு எறிந்தான் என்று வெடிகுண்டு விவகாரத்திற்கும் அவனே பொறுப் பெடுத்துக் கொண்டு விட்டான். இரண்டாவது கட்டுரையில் மரு போல ஒரு சிறு மைக்கை ஒட்டிக் கொண்டு போனேன் என்றெல்லாம் எழுதித் தொலைத்து விட்டான். குமாரும், அவனும் பேசியதை ரெக்கார்ட் செய்து அவசியமென்றால் குமாரை மிரட்டலாம் என்று நினைத்திருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் குமாரே இல்லாமல் போய்விட்ட பிறகு, ரெக்கார்ட் பண்ணியது எதற்கு? அதைப் பற்றிதான் குறிப்பிட்டிருக்கவே வேண்டாம். இப்போது சி.பி.ஐ. துருவித் துருவி அந்த வெளிநாட்டு மைக்குகள் நான்கையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும் என்ன விலை தெரியுமா? எல்லாம் கைவிட்டுப் போயிற்று...''

சபாஸ்டின் பெருமூச்சுடன் சொன்னார்.



''மைக்கை விடுங்கள். போதை மருந்து எவ்வளவு வேல்யூ? அத்தனையும் பறிபோய் விட்டதே!''

''போனால் போகிறது கிருஷ்ணசாமி'' சபாஸ்டின் அலட் சியமாக கையசைத்தார். ''அந்தக் கோடிகளை மறுபடி சம்பாதித்து விடலாம். கட்டுரைகள் பார்த்து எஸ்.கே.எஸ். கார்டன்ஸிற்கு பொதுமக்கள் வருவது குறைந்து விடுமோ என்று கவலைப்பட்டேன்... அது இல்லாமல் தப்பித்ததே பெரிய விஷயம். மூன்றாவது கட்டுரை வெளிவருவதற்கு முன்பே நிறுத்தி விட்டோமே, அது கிரேட் இல்லையா? இரண்டு நாட்களாயிற்று... அந்த பெரம்பூர் ஆசாமி கட்டுரை களை வேறு எந்த பத்திரிகைக்கும் அனுப்பவில்லையே?''

''சார்.... சாணக்யன் சொன்னது பொய்'' என்று இடையில் புகுந்தான், உமாபதி. ''பெரம்பூரிலிருந்து வேறு ஏதோ மேட்டர் வந்திருக்க வேண்டும். அந்தக் கவரைக் காண்பித்து என்னை ஏமாற்றப் பார்த்தான். உண்மையில் கட்டுரைகளை எழுதி வந்தது சாணக்யன் தான். அவன் கதை முடிந்ததும், கட்டுரை கள் நின்று விட்டன. இரண்டு நாட்களாக என்பது மட்டு மில்லை, இனிமேல் வரப் போவதும் இல்லை....''

உமாபதி இதை சொல்லி முடித்ததும் செல்லுலார் போன் கிணுகிணுத்தது.

சபாஸ்டின் ரிசீவரை காதில் வைத்ததும், அவர் முகம் மாறி யது. ''அப்படியா? அதை உடனே நான் பார்க்க வேண்டும்'' என்றார்.

உமாபதியை முறைத்தார். கிருஷ்ணசாமியை எரிச்சலுடன் பார்த்தார். ''பூதம் மறுபடி வெளியே வந்து விட்டது. இரண்டு நாட்கள் இடைவெளிக்குப் பிறகு மறுபடியும் இளங்கோவின் கட்டுரைகள் வர ஆரம்பித்து விட்டனவாம்.''

கிருஷ்ணசாமியின் முகம் குறுகிப் போனது.

''இந்த முறை பத்திரிகையாக இல்லாமல் சின்னப் புத்தகமாக வெளியாகியிருக்கிறதாம். தியேட்டர் வாசலிலும், கோவில் வாசலிலும், எக்ஸிபிஷன் வாசலிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகிறதாம்... உடனே ஒரு பிரதி கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன்...''

''சாணக்யன் செத்த பிறகும் கூடவா...'' - உமாபதியின் குரல் குழப்பத்தில் சிக்கித் தவித்தது.

''புதிய கட்டுரையில் என்னென்ன குண்டு வெடிக்கப் போகிறதோ!'' என்று முணுமுணுத்தார், கிருஷ்ணசாமி.

ஐந்து நிமிடங்களுக்கு முன்பு அங்கிருந்த உற்சாகம் சரேல் என வற்றிப் போய் இறுக்கமான சூழல் உருவானது.



## 10

என் இனிய நிர்மலாவைப் பற்றி உங்களுக்கு ஏற்கனவே சொன்னேன். இறுகிய பாறையாக, இதமில்லாத ஆயுத மாக இருந்த என்னை எப்படி தேன்போல உருக்கினாள் என்று சொன்னேன்.

சாணக்யன் என்ற பத்திரிகை சப்-எடிட்டருக்கு என்னை அவள் அறிமுகம் செய்தாள். சாணக்யன்? இரண்டு நாட்களுக்கு முன்பு செய்திச் சோலை பத்திரிகை ஆபீசில் வெடிகுண்டு வெடித்து சாம்பலாய் உதிர்ந்தானே, அதே சாணக்யன்தான். என் கட்டுரைகளை வெளியிட்டதற்காக அவனை எஸ்.கே.எஸ். பழி தீர்த்து விட்டார்.

சாணக்யன் நல்லவன். நிர்மலாவின் பேரில் அதீத அன்பு வைத்திருந்தான். அவள் சொல்லுக்கு கட்டுப்பட்டு, எனக்கு புதிதாக ஒரு வேலையே வாங்கித் தருவதாக சொல்லியிருந் தான். நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். சேர்ந்து போட்டோ எடுத்துக் கொண்டோம்.



எஸ்.கே.எஸ். எனக்கு சொல்லியிருந்த கெடு முடிவதற்கு ஒன்றிரண்டு நாட்களே இருந்த சமயம், சாணக்யன் எனக்கு ஒரு நல்ல வேலை ஏற்பாடு செய்து விட்டதாக சொல்லி யிருந்தான்.

ஒரு வெள்ளிக்கிழமை மாலை, நிர்மலாவை சந்திக்க வருவதாக சொல்லியிருந்தேன்.

எஸ்.கே.எஸ். கூப்பிட்டார். ''இன்றைக்கு உனக்கு ஒரு சின்ன வேலை வைத்திருக்கிறேன். ரெட்ஹில்ஸ் போய் நான் குறிப்பிடும் அட்ரஸில் ஒருத்தரைப் பார்த்து சரக்கு கொடுத்து விட்டு வர வேண்டும்'' என்றார்.

நிர்மலாவை சினிமாவுக்கு அழைத்துப் போவதாய் சொல்லி யிருந்தேன். ஆனால், கடைசி நாட்களில் எஸ்.கே.எஸ்.ஸிடம் முரண்டு பிடிப்பதில் அர்த்தமில்லை. சினிமா- இன்றைக் கில்லாவிட்டால் நாளைக்கு.

''சரி சார்...'' என்றேன்.

ஒரு சின்ன பெட்டியை எடுத்துக் கொடுத்தார். ''இதில் சரக்கு இருக்கிறது. இதை இப்படியே திறக்காமல் கொண்டு போய் கொடுத்து விடு...''

''எவ்வளவு பணம் கொடுப்பார்கள்?''

''பணம் எல்லாம் அட்வான்ஸாகவே வாங்கி விட்டேன். டெலிவரி மட்டும்தான் பாக்கி...''

நிர்மலாவிற்கு போன் செய்தேன். மாலைக்காட்சி போக முடியாது. இரவு போகலாம் என்றேன்...

கம்பெனியின் மாருதி காரை எடுத்துக் கொண்டேன்.

காரை எவ்வளவு வேகமாக செலுத்த முடியுமோ, அவ் வளவு வேகமாக செலுத்தினேன். பீச் ரோடில் துறைமுகம் அருகே வந்து விட்டேன். வெகு திடீரென்று மனதில் ஒரு மின்னல் அடித்தது.

பெட்டியை திறக்காமல் கொண்டு போய் கொடுத்துவிடு என்றல்லவா எஸ்.கே.எஸ். சொன்னார்?

எத்தனையோ தடவை எத்தனையோ பரிமாற்றங்களை, பிஸினஸ்களை எஸ்.கே.எஸ்ஸிற்காக நான் செய்திருக் கிறேனே. பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியதேயில்லை. அப்படி நான் திறந்து பார்த்ததும் இல்லை. அப்படியிருக்க, 'திறந்து பார்க்காமல்' என்ற வார்த்தையை எஸ்.கே.எஸ். ஏன் என்னிடம் சொன்னார்? என் மேல் நம்பிக்கை போய்விட்டதா? அல்லது பெட்டிக்குள் ஏதாவது ஆபத்தான விஷயம் இருக்கிறதா?

காரை ஓரம் கட்டினேன். பெட்டியை எடுத்தேன். வெடி குண்டு எதுவும் இருக்க முடியாது. பெட்டி கனமில்லாமல் இருந்தது. வேறென்ன இருக்க முடியும்? எந்தப் பெட்டியாக இருந்தாலும், சிறு முயற்சிக்குப் பிறகு என்னால் திறக்க முடியும். அதற்கேற்ற ஒரு தேனிரும்பு கருவி என்னிடம் இருந்தது. அதை வைத்து பெட்டியின் பூட்டைத் திறந்தேன்.

கவனமாக பெட்டியைத் திறந்தேன்.

ஏதோ வெடிக்கப் போகிறது. ஏதாவது பீய்ச்சியடிக்கப் போகிறது. புகை கிளம்பி மூச்சையடைக்கப் போகிறது - என்று என்னென்னவோ எதிர்பார்த்து பெட்டியைத் திறந்தால் - உள்ளே ஒன்றும் இல்லை. ஒன்றுமே இல்லை!

அதன் அத்தனைப் பகுதிகளையும் ஆராய்ந்தேன்.

ஒன்றுமே இல்லை.

பெட்டியை எஸ்.கே.எஸ். என்னிடம் பர்ஸனலாக கொடுத் தார். பெட்டி மாறியிருக்கவும் வாய்ப்பில்லை. பணம் வாங்கி விட்டேன் என்று சொன்னார். அதனால் பார்ட்டிக்கு காலி பெட்டியை கொடுத்து ஏமாற்றவும் மாட்டார். அப்படியே வேறு விவகாரம் இருந்து, காலி பெட்டியைத் தர முடிவு



செய்தாலும், அதற்கு வேறு ஆள் அனுப்பியிருப்பாரே தவிர, அவருடைய வலது கையான என்னை மெனக்கெட்டு இவ்வளவு தூரம் அனுப்ப மாட்டார். பெட்டியைத் திறக்காதே என்று குறிப்பிட்டு வேறு சொன்னார்!

எனக்கு சரேலென்று புரிந்தது.

எஸ்.கே.எஸ். எனக்கு வேண்டுமென்றே வேலை கொடுத் திருக்கிறார். வேலையில்லாமல் ஒரு வேலை. என்னை எங்காவது அனுப்ப வேண்டும் என்று யோசித்து இப்படி அர்த்தமில்லாத ஒரு வேலை கொடுத்திருக்கிறார். ரெட்ஹில்ஸ் வரை என்னை அனுப்புவதன் மூலம் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்கு மேல் என்னை சென்னையிலிருந்து விலக்கி வைக்கப் பார்த்திருக்கிறார்.

ஏன்? ஏன்? ஏன்? மரமண்டையில் திடீர் என்று மின்னல் அடித்தது.

நிர்மலா! அவளைத் தனிமைப்படுத்தி, அவளுக்கு ஏதாவது?

நினைப்பு வந்தவுடன், காரை ராட்சஸத்தனமாக நடுரோட் டில் திருப்பினேன். ஒரு சரக்கு லாரியும், அம்பாஸிடரும் கடைசி விநாடியில் பிரேக் அடித்து, என் பாட்டன் வரை சந்திக்கு இழுத்து திட்டினார்கள்.

சிக்னல்களை மீறினேன். விசில் ஊதி, கையசைத்து தடுக்கப்பார்த்த போலீஸ்காரர்களை அலட்சியம் செய்தேன்.

சாந்தோமில் சர்ச் தாண்டியதும், வலது புறம் திரும்பி குறுக்குப் பாதையில் காரை செலுத்தி, நிர்மலாவின் வீட் டருகே பிரேக் அடித்தேன்.

மற்ற வீடுகளிலிருந்து சற்றே ஒதுங்கிய தனி வீடு, சிறிய வீடு. காம்பவுண்டு சுவர் தாண்டி உள்ளே ஓடினேன். என்னிட மிருந்த சாவியால் கதவை திறந்தேன்.

கதவைத் திறந்ததும் என் மேல் ஒருவன் பாய்ந்தான்.

கண்மூடித்தனமான ஆவேசத்தில் இருந்தேன். அந்த சமயத்தில் அவன் என்னுடன் மோதியிருக்கக் கூடாது. இதைப் போன்ற எத்தனை தாக்குதல்களை என் வாழ்நாளில் சந்தித்திருப்பேன். சொல்லப் போனால் வன்முறைக்காகவே பயிற்சியளிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவன் நான்.

மோதியவனின் தலைமுடியைப் பற்றி இழுத்து, கழுத்தை மளுக் என்று திருப்பி கீழே சரிய விட்டேன். என்னிடம் அப்படி ஒரு வேகம் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. ஷூ காலால் அவன் மார்பில் ஓங்கி மிதித்த போது தான் முகத்தைப் பார்த்தேன்.

மனோகர்.

எனக்கும், உமாபதிக்கும் அடுத்து இருக்கும் எஸ்.கே.எஸ். ஸின் அடியாள்!

மனோகர் பரிதாபமான கண்களால் என்னைப் பார்த்தான். இன்னும் அரை மணி நேரத்திற்கு இவனால் அசைய முடியாது. உள்ளே பாய்ந்தேன். நிர்மலாவின் படுக்கையறைக் கதவு சாத்தியிருந்தது எட்டி ஒரே உதை.

கதவு இரண்டாகப் பிளந்து திறந்தது.

உள்ளே பார்த்த காட்சி திடுக்கிட வைத்தது.

நிர்மலா படுக்கையில் துவண்டிருந்தாள்.

உமாபதி அவள் கழுத்தில் நைலான் கயிறு போட்டு இழுத்துக் கொண்டிருந்தான்.

நிர்மலா பலமில்லாமல் கைகளை வீசி அவனைத் தடுக்க முனைந்து கொண்டிருந்தாள்.

கதவு தொபேல் என்று திறந்து என்னைப் பார்த்ததும், உமாபதி மிரண்டான். அவனுடைய கை நிர்மலாவிடமிருந்து விலகியது.



நிர்மலா படுக்கையில் நழுவி விழுந்தாள்.

மூர்க்கமாகப் பாய்ந்தேன். உமாபதியின் கன்னத்தில் என் முஷ்டி இறங்கிய வேகத்தில் அவன் புரண்டு விழுந்தான்.

நிர்மலாவின் கழுத்திலிருந்து கயிற்றை இழுத்துத் தளர்த்தினேன்.

உமாபதி எனக்கு இணையானவன். அடிப்பதிலும் எதிர்ப்பதிலும், கொலை செய்வதிலும் சளைத்தவனில்லை. இரு வரும் பல இடங்களுக்கு சேர்ந்து போயிருக்கிறோம். ஒன்றாக செயல்பட்டிருக்கிறோம். அந்த நெருக்கம் அவனைத் தடுமாற வைத்தது.

என்னைத் திருப்பித் தாக்காமல் எழுந்தான். கண்களில் குற்ற உணர்ச்சியோடு என்னைப் பார்த்தான். வாயோரம் வழிந்த ரத்தத்தை நாக்கால் தொட்டுத் தடவினான்.

''உமாபதி... நீயா இப்படிச் செய்தாய்?'' அவன்மேல் பாய்ந்து, சட்டையைப் பற்றி அப்படியே சுவரில் அவனை வைத்து அழுத்தினேன். இருவர் முகங்களுக்கும் இடையில் ஓரங்குலம்தான் இடைவெளி இருந்தது. என் சூடான மூச்சு அவன் முகத்தில் அவனுடைய கலக்கமான மூச்சு என் முகத்தில், ''ஏண்டா என் நிர்மலாவை... என் நிர்மலாவைத் தாக்கச் சொன்னது யார்?''

''இளங்கோ... ஸாரிடா... உனக்குத் துரோகம் செய்து விட்டேன்... ஆனால் நம் கொள்கை என்ன? உணர்ச்சி களுக்கும் பாசத்திற்கும் இடம் கொடுக்கக் கூடாது என்பது தானே? நீ நிர்மலாவால்தான் மாறினாய், அதனால்தான் தொழிலிலிருந்து விலகப் பார்க்கிறாய் என்று எஸ்.கே.எஸ் ஸிற்கு வருத்தம். கோபம். அதனால்தான் அவளைத் தீர்த்துக் கட்டச் சொன்னார். அவள் இல்லையென்றால் நீ மனம் மாறிவிடுவாய் என்று அவருக்கு நம்பிக்கை. இளங்கோ, நான் சொல்வதைக் கேள்... ராத்திரியோடு ராத்திரியாக நீயும்,

நிர்மலாவும் மெட்ராஸை விட்டு விலகி விடுங்கள். இந்தப் பக்கமே நீ வராதே...''

அவனை விடுவித்தேன். ''என்னையும் என்ன ஒன்றுக்கும் உதவாத எருமை மாடு என்று நினைத்து விட்டாரா எஸ்.கே.எஸ்? இந்த ஊரில் நான் நல்லவனாக வாழ்ந்து காட்டுகிறேன்... போ, போய் அவரிடம் சொல். இத்தனை நாள் கூட இருந்த விசுவாசத்தை இளங்கோ மறக்கவில்லை. அவன் வழியில் நீங்கள் குறுக்கிடாத வரைக்கும் உங்கள் ரகசியம் எதுவும் அவன் மூலம் வெளியே போகாது என்று சொல்....''

உமாபதி சுவரோடு தேய்ந்து விலகினான்.

என் கவனம் நிர்மலாவின் பக்கம் திரும்பியது.

முகத்தில் தண்ணீர் தெளித்தேன். உலுக்கினேன்.

கண் திறந்தாள். பயம் அவளை அதீதமாக தாக்கியிருந்தது. வார்த்தைகள் சன்னமான குரலில் வெளிப்பட்டன:

''இளங்கோ... எனக்காக நீங்கள் ஏன் எஸ்.கே.எஸ்ஸை பகைத்துக் கொள்கிறீர்கள்? என்னை மறந்து விடுங்கள்...''

ஐந்து நிமிடம் தாமதமாக வந்திருந்தால், என்னை மறந்து விட்டு அவள் பயணப்பட்டிருப்பா. நான் ரெட்ஹில்ஸ் போய்த் திரும்புவதற்குள் அவள் பிணத்தைக் கூடத் தூக்கிப் போயிருப்பார்கள்.

அவளை மார்போடு அணைத்தேன். ''வாழ்ந்தால் ஒன்றாக வாழ்வோம், செத்தால் ஒன்றாக சாவோம்...'' என்றேன்.

சூடாக ஹார்லிக்ஸ் கலந்து கொடுத்தேன். சிறு முதலுதவிகள் செய்தேன். இரவு முழுவதும் அவள் அருகிலேயே உட்கார்ந்திருந்தேன்.

விஷயம் கேள்விப்பட்டதும், சாணக்யன் ஓடி வந்தான்.



''நீ ரொம்ப இடம் கொடுத்து விட்டாய், இளங்கோ, எஸ்.கே.எஸ்ஸின் நிழலாக இருந்தவன் நீ. உன்னை அவர் பகைத்துக் கொள்ள நினைப்பது மகா முட்டாள்தனம். நினைத்தால் அவரைப் பற்றிய எல்லா ரகசியங்களையும் உன்னால் சொல்ல முடியும். என் பத்திரிகையிலேயே போட முடியும்...''

''வேண்டாம், சாணக்கியன்... நேற்றுதான் உமாபதியிடம் சொன்னேன். என் வழியில் குறுக்கிடாத வரை எஸ்.கே.எஸ் ஸின் வம்பிற்கு நான் வரமாட்டேன் என்று. திடீரென்று அவரைக் காட்டிக் கொடுத்து என்னைப் பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. அவருடைய கார் என்னிடம் இருக்கிறது கொண்டு போய் கொடுத்து விட்டு, அவரிடமே பேசிவிட்டு வருகிறேன்...''

எஸ்.கே.எஸ். என்னை சந்திக்க மறுத்துவிட்டார். பிஸியாக இருப்பதாகச் சொல்லி என்னைத் தவிர்த்து விட்டார்.

இரண்டு நாட்கள் கழித்து எப்படியும் விலகுவதாக இருந்தேன். முன்னாலேயே விலகிவிட்டுப் போகிறேன்!

எஸ்.கே.எஸ்ஸை அவ்வளவு அலட்சியமாக நான் எடை போட்டிருக்கக் கூடாது.

* * *

ஞாயிற்றுக் கிழமை.

நள்ளிரவு.

ஒரு சின்ன ஒலி கேட்டு திடுக்கிட்டு விழித்தேன்.

பக்கத்தில் நிர்மலா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். கட்டிலிலிருந்து சத்தமில்லாமல் இறங்கினேன். என் ரிவால்வரை தலையணைக்கடியிலிருந்து எடுத்துக் கொண்டேன். அறைக் கதவை மெல்லத் திறந்து வெளிப்பட்டேன்.

மிக மோசமான தவறு.

காலை வெளியே வைத்ததும், விஷ்ஷ் என்று பின்னால் ஒரு சத்தம். திரும்பிப் பார்க்குமுன், கனமான ஏதோ ஒன்று என் பின் தோளில் இறங்கியது. குப்புறடித்து விழுந்தேன். நிமிர்வதற்குள் என் மீது ஒரு உடல் அழுத்தியது. என் புஜத்தில் ஊசி ஒன்று செருகப்பட்டது. என் மேல் விழுந்தவன் மனோகரன் என்று உணர்ந்தேன். அவனைப் புரட்டித் தள்ள நினைத்தேன். முடியவில்லை. கண்கள் கனத்தன. உடம்பு மரத்தது. நினைவுகள் தப்பின. எத்தனை நேரம் அப்படிக் கிடந்தேன்? கிட்டத்தட்ட மூன்று மணி நேரம்!

கண் திறந்த போது, காட்சிகள் மசமசப்பாக இருந்தன. தடுமாறி எழுந்தேன். என் ரிவால்வர் காணாமல் போயிருந்தது.

சுவரைப் பிடித்து நகர்ந்து படுக்கையறைக்குள் நுழைந்தேன்... பார்த்த காட்சி என்னை உறைய வைத்தது.

மின் விசிறியிலிருந்து கயிற்றில் நிர்மலா தொங்கிக் கொண்டிருந்தாள். தலை தொய்ந்து முகவாய் மார்பில் இடித்திருந்தது. இடுப்பில் புடவைக்குள் செருகிய காகிதம் கண்ணில் தட்டுப்பட்டது.

கட்டிலைப் பிடித்து ஏறினேன். அந்தக் காகிதத்தை எடுத்தேன்.

எனக்கு வாழ்க்கை பிடிக்கவில்லை.

தீராத வயிற்று வலியிலிருந்து என்னால் மீளவே

முடியவில்லை.

இந்த உலகையே வெறுக்கிறேன். என் மரணத்திற்கு வேறு யாரும் காரணமில்லை. -நிர்மலா.

நிர்மலாவின் கையெழுத்துதான். அப்படிக் கடிதம் எழுதித் தந்தால், இளங்கோவை விட்டு விடுவோம் என்று ஆசை காட்டியிருப்பார்கள்.



இடிந்து உட்கார்ந்தேன். மயக்க மருந்தின் ஆக்ரமிப்பில் இல்லாதிருந்தால் அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு, எஸ்.கே.எஸ்ஸைத் தேடிப் போய் ஏதாவது செய்திருப்பேன். ஆனால் மூளை மந்தமாக இயங்கியதால், அந்த முட்டாள்தனம் செய்யவில்லை.

என் நிர்மலாவை என்னிடமிருந்து பிரித்து விட்டாயா, எஸ்.கே.எஸ்.? உனக்குப் பிரியமானது எல்லாவற்றிலிருந்தும் உன்னைப் பிரிக்கிறேன், பார்! இந்தச் செயலுக்கு நினைத்து நினைத்து நீ குமுற வேண்டும். உன் அராஜக சாம்ராஜ்யம் கவிழ வேண்டும். கவிழ்க்கப் போவது இந்த இளங்கோ!

சாணக்யனிடம் ஓடினேன். ''எஸ்.கே.எஸ். பற்றி உன்னிடம் சொன்னது போதாது, சொல்கிறேன்... முழுசாக எல்லாவற்றையும் சொல்கிறேன். எஸ்.கே.எஸ். பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம் சொல்கிறேன்'' என்றேன்.

சொன்னேன். எஸ்.கே.எஸ். பற்றி எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சொன்னேன். ''இன்றோ, நாளையோ, என்னையும் தீர்த்து விடுவார்கள்... அப்படி நான் செத்து விட்டாலும், என்னுடைய வாக்குமூலம் பத்திரிகையில் தொடர்ந்து வரட்டும்...''

''ஒரு போலீஸ் ஸ்டேஷனில் போய்...'' என்று சாணக்யன் ஆரம்பித்தான்.

''வேண்டாம். போலீஸை எப்படி விலைக்கு வாங்க வேண்டும் என்று எஸ்.கே.எஸ்ஸிற்குத் தெரியும். கோர்ட்டிற்குப் போனால் கூட ரகசியமாக விசாரித்து தப்பித்தாலும் தப்பித்து விடுவார்... அவருடைய குற்றங்கள் பகிரங்கமாக வேண்டும்'' என்றேன்...

நான் சொல்லச் சொல்ல சாணக்யன் கட்டுரைகள் எழுதலானான். ஆனால் அவனையே கொலை செய்து விட்டார்கள்...

நிர்மலாவுடையது தற்கொலை என்று போலீஸ் அவசரமாக கேஸை முடித்தது. சாணக்யனும் தனக்குத்தானே வெடிகுண்டு வைத்துக் கொண்டான் என்று சொன்னாலும் சொல்லும்.

இல்லை எஸ்.கே.எஸ்ஸின் விசுவாசி யாராவது பழியை ஏற்றுக் கொண்டு சிறை போவார்கள்.

ஆனால் பொதுமக்கள் எல்லோருக்கும் எஸ்.கே.எஸ். யாரென்று புரிய வேண்டும். அவருடைய திருட்டுத்தனங்கள் எல்லாம் விளங்க வேண்டும்.

நான் அடுத்த சில ஆதாரங்களைத் தரப் போகிறேன். நீதிபதியின் முன்பு போலீஸ் அவற்றை ஆராய்ந்தால் எஸ்.கே.எஸ்.ஸின் முகமூடி கிழியும்.

1. எஸ்.கே.எஸ். கார்டன்ஸில் வீனஸ் தேவதை சிலை ஒன்று இருக்கிறது இல்லையா, அதன் பின்னால் மூன்றடி தூரத்தில் தோண்டிப் பாருங்கள். எலும்புக்கூடு ஒன்று கிடைக்கும். ஓடிப் போனதாக நினைக்கப்படும் போலீஸ் ஐ.ஜி. (நேர்மையானவர்) முருகேசனின் எலும்புக்கூடு. சபாஸ்டினின் மிரட்டலுக்குப் பணியாததால் இழுத்து வந்து கொலை செய்து புதைத்து விட்டோம்.

2. எஸ்.கே.எஸ். கார்டன்ஸ். குழந்தைகள் குதூகலமாக விளையாடும் பார்க்கில் சறுக்கு மரத்தின் கீழே தோண்டிப் பாருங்கள். தொலைந்து போன எம்.எல்.ஏ. கற்புக்கரசியின் உடல் கிடைக்கும். எஸ்.கே.எஸ்ஸிற்கு அரசாங்க நிலத்தை எப்படி விற்கப் போயிற்று என்று சட்டசபையில் கேள்விகள் எழுப்பி, ரகளை செய்த எம்.எல்.ஏ.வுக்கு தன் தோட்டத்தில் கல்லறையே கொடுத்த மகானுபாவன், எஸ்.கே.எஸ்.

3. இன்னும் நடுக்கடலில் தூக்கி எறிந்த எதிர்தரப்பு பிஸினஸ்மேன் ராமமூர்த்தி, அடுப்பில் எரித்து சாம்பலாக்கிய பெண் நிவேதா, ரயிலிலிருந்து தள்ளிவிட்ட பிரின்ஸ்பால் சாம்பமூர்த்தி - இவர்களுடைய மரணத்திற்கெல்லாம் காரணம் எஸ்.கே.எஸ்.தான்.

4. எஸ்.கே.எஸ். என்னென்ன பெயரில் எந்தெந்த பாங்க் கில் கணக்கு வைத்திருக்கிறார் என்ற பட்டியலைக் கீழே



தருகிறேன். அடுத்ததாக பினாமி பெயரில் எங்கெங்கே சொத்து வைத்திருக்கிறார் என்ற விவரமும் பின்னால் தருகிறேன். போலீஸோ, நீதித்துறையோ தான் பொறுப் பெடுத்து செயல்பட வேண்டும் என்று காத்திருக்காமல் பொது மக்களாகிய நீங்கள் எல்லோரும் நியாயத்திற்காக வெகுண்டு எழுந்தால்தான்-



## 11

கட்டுரை படிப்பதை நிறுத்தி விட்டு, சபாஸ்டின் நிமிர்ந்தார். கண்களில் கவலையும், கோபமும் கலந்து மின்னின.

''என்னய்யா இது, பேங்க் அக்கவுண்ட் நம்பர் எல்லாம் கூடக் கொடுத்திருக்கிறான்? அவனை ரொம்பவும் நம்பி, நெருக்கமாக வைத்துக் கொண்டது தப்பாகி விட்டதே!''

''இப்பொழுது என்ன செய்யலாம், சபாஸ்டின்?'' - கிருஷ்ணசாமி தயக்கத்துடன் கேட்டார்.

''என்ன செய்யலாம்? எல்லோரும் குளத்தங்கரைக்கு சிரைக் கப் போகலாம்'' -சபாஸ்டின் வாயிலிருந்து கனல் பறந்தது. உமாபதியைப் பார்த்துத் திரும்பினார். ''இப்பொழுதே உடனே நான் இளங்கோவைப் பார்த்தாக வேண்டும்...''

''சார்.... இளங்கோ...'' உமாபதி தயங்கினான். ''அவன் இறந்து விட்டான் சார்...''

''அவனை உண்மையிலேயே நீங்கள் சாகடித்தீர்களா இல்லையா என்று நான் பார்க்க வேண்டும்.... அவன் கல்லறையை உடைத்துத் திறந்து காட்டு...''

''சார்...''

''பேசாதே... உடனே புறப்படுகிறோம். கிருஷ்ணசாமி, நீங்களும் கூட வாருங்கள்...''

''நானா? நான் இதிலெல்லாம் கலந்து கொள்வதில்லையே சபாஸ்டின் சார்...''

''தலைக்கு மேலே வெள்ளம் போனபின் கலந்து கொள்ள என்ன இருக்கிறது? வாருங்கள்...''

''எங்கே என்று சொல்லுங்கள் சார். முதலில் உங்களுக்கு ஆன்ட்டிசிபேட்டரி பெயிலுக்கு பேப்பர்கள் தயார் செய்து விட்டு வருகிறேன்...''

''சாருடைய பண்ணை வீட்டுத் தோட்டத்தில்'' என்றான் உமாபதி.

''அங்கே இப்போது யார் யார் இருப்பார்கள்?''

''வாட்ச்மேன் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள்.''

''நான் ஒரு அரைமணி நேரம் தாமதமாக வந்தாலும் உள்ளே விடுவானில்லையா?''

''உத்தரவு கொடுத்து விடுகிறேன்'' என்றார். சபாஸ்டின் மனோகரை சைகையால் அருகே கூப்பிட்டார். ''இன்று இரவுக்குள் இந்த இலவச புத்தகத்தை அச்சிட்டது யார், எழுதிக் கொடுத்தது யார் என்று நீ கண்டுபிடிக்க வேண்டும்....''

''சரி, சார்... புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் அச்சிட்ட கம்பெனியின் பெயர் அச்சாகி அதன் மீது கறுப்பு இங்க் வைத்து அச்சாலேயே அழிக்கப்பட்டிருக்கிறது சார்...''

''முதலில் வழக்கம் போல பிரெஸ்ஸின் பெயரை விளம்பரமாகப் பெருமையாகப் போட்டிருப்பான். அப்புறம் பயந்து போய் அழித்திருப்பான்'' என்றார் கிருஷ்ணசாமி.

அனைவரும் பிரிந்தனர் - ஒன்றரை மணி நேரத்தில் பண்ணை வீட்டில் சந்திப்பதாக ஏற்பாடு செய்து கொண்டு.

* * *

மனோகர் அந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தை மறுபடி மறுபடி மறுபடி பார்த்தான்.



பிரிண்ட்டரின் பெயர் அச்சடிக்கப்பட்டு, பின் மறைக்கப்பட்டிருந்தது. பூதக்கண்ணாடி வைத்து பார்த்தபோது கூட எழுத்துக்கள் புரியவில்லை. முதல் எழுத்து கி என்று மட்டும் புரிந்தது. விரலால் முட்டாள் தனமாகத் தேய்த்து மசியை அழிக்கப் பார்த்தபோது வேறு ஒரு வாய்ப்பு புரிந்தது.

லெட்டர் பிரஸ் எனப்படும் சாதாரண அச்சு இயந்திரத்தில் அச்சடிக்கபட்ட புத்தகம் அது. அச்சுக்கள் பதியும்போது, அந்த அழுத்தத்தில் எழுத்துக்கள் காகிதத்தில் சுவடாக பதிந்து விடும். காகிதத்தின் பின்புறம் தடவிப் பார்த்தால் எழுத்துக்களின் வடிவத்தை விரலால் வருட முடியும். வருடினான். விரலுக்கு எழுத்துக்கள் புரியவில்லை. பென்சில் முனையைப் பொடித்துத் தூவினான்.

எழுத்துக்கள் கண்ணாடியில் பார்ப்பது போல இடம் மாறித் தெரிந்தன.

**கிருஷ்ணா ஆர்ட் பிரிண்ட்டர்ஸ், சென்னை - 4.**

* * *

உமாபதியின் தோள்களில் வியர்வை பளபளத்து வழிந்தது. கைகள் வழியே இறங்கியது முதுகையும், மார்பையும் நனைத்தது.

சற்றே தலையை உலுக்கி வியர்வையை உதறினான். கால்களை விரித்து வைத்து நின்றிருந்தான். மீண்டும் மண் கொத்தியால் பூமியில் ஆழமாக வெட்டினான். மண்ணை அள்ளி எறிந்தான். சமீபத்தில் புரட்டப்பட்ட மண் என்பதால் அதிக சிரமம் இல்லாமல் மண் பெயர்ந்து வந்தது.

சற்றுத் தள்ளி நாற்காலியில் அமர்ந்து பியர் உறிஞ்சிக் கொண்டிருந்தார், சபாஸ்டின்.

''உமாபதி... உதவிக்கு ஆள் வேண்டுமா?''

"வேண்டாம், சார்..." என்றான்.

பூமியைத் தோண்டி உள்ளேயிருந்து சவப்பெட்டி எடுத்து, அதைத் திறந்து இளங்கோவின் மிச்சத்தை அவருக்குக் காட்டுவது தான் தனது ஒரே வேலை என்பது போல அவன் மீண்டும் மண்ணைக் கொத்தலானான்.

மேலேயிருந்து நிலா பார்த்துக் கொண்டிருந்தது.

* * *

இராயப்பேட்டை நெடுஞ்சாலையிலிருந்து விலகிப் பிரிந்த ஒரு குறுக்குச் சந்தில் இருந்தது கிருஷ்ணா ஆர்ட் பிரிண்ட்டர்ஸ்.

ஒரு பழைய வீடு. அச்சுக்கூடமாக மாற்றப்பட்டிருந்தது.

கனமான கண்ணாடி அணிந்து காலால் இயந்திரத்தை ஓட்டி நோட்டீஸ் ஒன்றை அச்சடித்துக் கொண்டிருந்த பெரியவர் அதைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு வந்தார்.

"பிரஸ்ல யாரும் இல்லப்பா... காலைல கோவில் திரு விழால ஜனத்துக்கெல்லாம் கொடுக்கணும்னு சொன்னதால இந்த நோட்டீஸ் ராவோடு அடிக்கறேன்... காலைல ஒம்பது மணிக்கு மேல வா, ஒனரு இருப்பாரு..."

மனோகர் அவர் பேசி முடிக்கும் வரை பொறுமையுடன் இருந் தான். "பெரியவரே, உங்களிடம் ஒரு தகவல் வேண்டும்... எப்படியும் பின்னால் போலீஸ் வந்து விசாரிக்கப் போகிறது..."

"போலீஸா... என்னப்பா சொல்றே?"

"இந்தப் புத்தகம் இங்கேதானே அச்சானது?"

"ஆமா... ஆனா பிரஸ் பேரு போட வேணாம்னு மேட்டரு கொடுத்தவரு சொல்லிட்டாரு. தவறுதலா பேரு போட்டுட் டோம்... மாத்தியடிக்க நேரமில்லாம, அப்படியே மசி வச்சு மறைச்சோம்.. அது என்ன போலீஸ் பிடிச்சிட்டுப் போற குத்தமா என்ன?"

"இந்த மேட்டரை யார் கொடுத்தது, தெரியுமா? கையெழுத்து பிரதி இருக்கிறதா?"



"புக்கோட சேர்த்து அதையெல்லாம் வாங்கிட்டுப் போயிட் டாரே..."

"அவர் பெயர் என்ன?"

"பேருல்லாம் யாருக்குப்பா தெரியும்? ஓனரை வந்து கேளு... அந்தாளு மாருதி வேன்ல வந்தாரு..."

"வேனா? நம்பர் பார்த்தீங்களா?"

"இல்லப்பா..."

"வேனில் டிரைவர் சீட் அருகே குதிரைத் தலை பொம்மை தொங்கியதா?"

"ஆமா... கரெக்டுப்பா... கண்ணாடில கூட குதிரைப்படம் ஒட்டியிருந்துச்சு..."

"ஆள் எப்படியிருந்தார்? நடு வகிடா?"

"நீ சொல்ற ஆளே தாம்ப்பா..."

மனோகருக்கு திடுக்கிடலாய் அதே சமயம் படபடப்பாக இருந்தது. உடனே இதை சபாஸ்டினிடம் ஓடிப் போய்ச் சொல்ல வேண்டும்.

* * *

'ணங்' என்று மண்வெட்டி சவப்பெட்டியின் மீது மோதி ஒலித்தது.

உமாபதி நிறுத்தினான். முழங்கையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டினான். புஜத்தால் முகத்து வியர்வையை அப்படியே துடைத்தான்.

வழக்கமாக பிணங்களுக்கு மண்ணுக்குள் புதைபடுகிற அந்தஸ்து மட்டுமே கொடுக்கப்படும். நண்பனாயிருந்தவன் என்பதால், உமாபதி இளங்கோவை சவப்பெட்டியில் போட முடிவு செய்தான். சபாஸ்டினும் சரி என்று சொல்லியிருந்தார்.

உமாபதி சவப்பெட்டியின் மீதிருந்த மண்ணையெல்லாம் இரண்டு கைகளாலும் ஒதுக்கினான்.

சபாஸ்டின் பீர்பாட்டிலை வைத்து விட்டு எழுந்து வந்தார். கைக்குட்டடையை ஆறாக மடித்து மூக்கருகே பொத்திக் கொண்டு, சக்தி வாய்ந்த டார்ச் வெளிச்சத்தை குழிக்குள் செலுத்தினார்.

உமாபதி மண்ணையெல்லாம் ஒதுக்கியபின், சவப் பெட்டியின் மூடியை நெம்பி நெம்பி அதன் ஆணிகளின் பிடியிலிருந்து விலக்க ஆரம்பித்தான்.

* * *

கேட்டைத் திறந்த வாட்ச்மேன் கிருஷ்ணசாமியைப் பார்த்து சல்யூட் அடித்தான்.

''அய்யா பின் தோட்டத்துல இருக்காருங்க... உங்களை அங்கே வரச் சொன்னாரு...''

கிருஷ்ணசாமி மாருதியிலிருந்து இறங்கினார். தோட்டத் தின் பின் பகுதிக்கு நடந்தார்.

''வாருங்கள், வக்கீல் சார், வாருங்கள்...'' என்றார், சபாஸ் டின், கிண்டலான குரலில்.

கிருஷ்ணசாமி திடுக்கிட்டு நின்றார்.

அதிக வெளிச்சமில்லாத பகுதியில், நிலா வெளிச்சத்தை மட்டுமே வைத்து, சபாஸ்டினின் முகத்து உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

பெரிய பள்ளம் தோண்டப்பட்டு, பள்ளத்திற்குள் பாதி தொடைவரை மறைந்த நிலையில் உமாபதி நிற்பதையும், அந்த குழிக்குள் சபாஸ்டின் டார்ச் வெளிச்சத்தைப் பாய்ச் சுவதையும் கவனித்தார். சபாஸ்டினைப் பின்பற்றி அவரும் கைக்குட்டையால் அவசரமாக மூக்கைப் பொத்திக் கொண டார். இது போன்ற விவகாரங்களில் அதற்கு முன் ஈடுபடாத தால், முகத்துத் தசைகள் இறுகின. கண்களில் அசூயையும் அச்சமும் பிரதிபலித்தன.



''வக்கீல் சார், இன்றைக்கு என் பார்ட்டே... கேக் வெட்டப் போகிறேன்... பார்க்கிறீர்களா?'' சபாஸ்டின் கெக்கெக் என்று சிரித்தார்.

உமாபதி கடைசி ஆணியைப் பெயர்த்து, சவப்பெட்டியின் மூடியை விலக்கித் தூக்கினான்.

கிருஷ்ணசாமிக்கு உடனே வயிற்றைப் புரட்டியது.

சபாஸ்டினின் முகத்தில் சட்டென ஒரு இறுக்கம்.

''மூடு... மூடு...'' என்றார், அவசரமாக.

''இளங்கோதான்... இளங்கோவேதான்... அப்படியானால், கட்டுரைகள் எழுதுவது யார்? சாணக்யன் செத்ததைப் பற்றிக் கூட எழுத முடிந்ததே, யாரால்?'' -சபாஸ்டின் சற்று உரக்கவே கேள்வி கேட்டார்.

கேட் திறக்கும் சத்தம்.

மூவரும் வாசலைப் பார்க்க, தடதடவென்று ஓடி வந்து நின்று மூச்சிரைத்தான், மனோகர்.

''சார்... சார்...'' -சற்றே ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசி னான். ''இந்த புத்தகத்தை எழுதியது யார் என்று கண்டு பிடித்து விட்டேன் சார்... அவர் வைத்திருப்பது மாருதி வேன். ரியர்வியூ மிர்ரர் அருகே குதிரைத்தலை பொம்மை தொங்கும். விண்ட் ஷீல்டில் குதிரைப்படம் ஒட்டியிருக்கும். அவர் நடுவகிடு எடுத்திருப்பார்...'' -சொல்லி நிறுத்திவிட்டு, அவன் கிருஷ்ணசாமியின் மீது பார்வையைத் திருப்பினான்.

சபாஸ்டின் மூச்சை இழுத்துப் பிடித்தார். வக்கீலை நம்ப முடியாமல் பார்த்தார்.

''கிருஷ்ணசாமி நீங்களா? நீங்களா எழுதியது இதை? அத் தனை அடையாளங்களும் உங்களுக்குத்தான் பொருந்து கின்றன!''

கிருஷ்ணசாமி மிரட்சியுடன் இரண்டடி பின்னே வைத் தார். உடன் மனோகர் அவர் கைகளைப் பிடித்து தடுத்து நிறுத்தினான்.

சபாஸ்டின் கிருஷ்ணசாமியை நெருங்கினார். இரண்டு தோள்களையும் பிடித்து உலுக்கினார்.

"என்னுடைய அத்தனை நடவடிக்கைகளுக்கும் கூடவே இருந்து ஆலோசனை செய்து உதவியவர் நீங்கள்... நீங்களா இந்தப் புத்தகம் எழுதினீர்கள்?"

கிருஷ்ணசாமி வியர்த்தார். கண்களை மூடித் திறந்து ஆம் என்று சைகை செய்தார்.

சபாஸ்டின் திடுக்கிட்டு ஓரடி பின் வாங்கினார்.

"ஏன் கிருஷ்ணசாமி, ஏன்?"

கிருஷ்ணசாமி மூச்சை ஆழமாக இழுத்து வெளியே விட்டார்.

"நிர்மலாதான் காரணம்" என்றார்.

"வாட் டூ யூ மீன்?"

"நிர்மலா காலேஜில் படித்த போது அவளும், என் மகளும் ஒரே வகுப்பில் படித்தார்கள். நெருக்கமான, தோழிகளாயிருந் தார்கள். இந்த நிலையில் நிர்மலாவிற்கு ஃபென் கிளப்பில் வேலை கிடைத்தது. அப்புறம் இளங்கோவை சந்தித்தாள். சாணக்யனை சந்தித்தாள். உங்கள் விவகாரங்கள் அவளுக்கு அருவருப்பாய் இருந்தது... இளங்கோவிடம் பேசியது போலவே என்னிடமும் பேசினாள். 'பணம் சம்பாதிப்பது மட்டும்தான் குறியா, அன்க்கிள்? பணம் வருகிறது என்பதற் காக கொலைகாரனாக இருந்தாலும், கொள்ளைக்காரனாக இருந்தாலும், அவன் பக்கம் சாய்ந்து விடுவீர்களா நீங்கள்? பணத்தைத் தூக்கியெறிந்து விட்டு, நியாயத்தின் பக்கம் நிற்க மாட்டீர்களா' என்றாள்."

"எனக்கும் மனதில் குழப்பம். அவளுடைய கேள்விகளில் இருந்த நியாயம் என்னைத் தாக்கியது. ஆனாலும், 'வக்கீல் தொழிலுக்கு வந்த பிறகு நியாயம் அநியாயம் எல்லாம் பெரிசில்லையம்மா, என் கட்சிக்காரரைக் காப்பாற்றுவதுதான் என் தொழில் தர்மம்' என்று சொன்னேன். 'உங்கள் மகளுக்கே ஏதாவது ஆனால் கூடவா?' என்று கேட்டாள். திடுக்கிட்டேன்.



என் மகளுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால், என்னால் இதே போல் கட்சிக்காரனிடம் விசுவாசம் என்று இருக்க முடியுமா என்று யோசித்தேன். மாட்டாய் என்று உண்மையைச் சொன்னது மனசாட்சி."

"தொழிலில் இறங்கிய பிறகு இதையெல்லாம் யோசிக்க முடியவில்லை, நிர்மலா. என் மகளுக்கு ஏதாவது நடந்தால் நிச்சயம் நான் மாறக்கூடும் என்றேன். எனக்கு நடந்தால்? என்று அடுத்த கேள்வி கேட்டாள். உனக்கு எதுவும் நடக்காது.... நீ சபாஸ்டினின் செல்லக் குழந்தை என்றேன், நடந்தால்?"

"அப்படி உனக்கு நடக்கக் கூடாதது நடந்தால் நான் மனம் மாறுவேன் என்று சொன்னேன். எந்த தருணத்தில் அப்படிச் சொன்னேனோ, நிர்மலா தூக்கில் தொங்கினாள். சாணக்யன் என்னிடம் வந்து கதறினான். இளங்கோ அவனிடம் சொல்லி யிருந்த அத்தனை விஷயங்களையும் டேப்பில் பதிவு செய்திருந்தான். எல்லாவற்றுக்கும் ஒரு பிரதி எடுத்து, என் னிடம் கொடுத்தான். இளங்கோ சொன்னதையெல்லாம் கட் டுரையாக்கப் போகிறேன். அப்படி செய்யும் போது, என்னை யும் சும்மா விடமாட்டார்கள், தீர்த்து விடுவார்கள்.... நான் செத்தாலும் இந்தக் கட்டுரைகள் வெளியாக வேண்டும், சார். செய்வீர்களா என்றான். நிர்மலா கொடூரமாக இறந்ததில் என் மகள் மிகவும் அப்செட் ஆகியிருந்தாள். நானும் ஆடிப் போயிருந்தேன். சம்மதித்தேன். ஆனால், கூடவே எதற்கு இந்த பிரச்சனைகளெல்லாம், பேசாமல் மூன்று பேரும் தப்பித்துப் போய்விடுங்கள் என்று சொன்னேன்.

"இளம் கன்றுகள்... பயமறியவில்லை. என்னிடம் இல் லாத தைரியம் அவர்களிடம் இருந்தது. சாணக்யன் உயி ரோடு இருக்கும்வரை உங்களுக்கு ஒரு வக்கீல் என்ற ரீதியில் என்ன பாதுகாப்பு தர முடியுமோ அதைத் தர முடிவு செய்தேன். டிபார்ட்மென்டல் ஸ்டோருக்கு சி.பி.ஐ. வருவார்கள் என்று நான் கூட எதிர்பார்க்கவில்லை. அந்தப் பிரச்சனையி லிருந்தும் உங்களை சட்டபூர்வமாகக் காப்பாற்றுவது எப்படி என்றுதான் யோசித்தேன். வழி சொன்னேன்."

''பத்திரிகை ஆபீஸிற்கு சும்மா சட்டத்திற்காக போலீஸ் பந்தோபஸ்து, உங்கள் ஆட்களுக்கு உரிமை உண்டு என்று போலீஸ் அதிகாரி என்னை விட்டு உங்களிடம் சொல்லச் சொன்ன போது, உங்களிடம் சொன்ன கையோடு, சாணக் யனைக் கூப்பிட்டு எச்சரித்தேன். ஆனால் அவன் மரணத் திற்கு துணிந்திருந்தான். 'எப்படியும் பிளட் கான்ஸர் என்னை எந்த நிமிடமும் கொண்டு போய்விடும் நிலையில்தான் இருக்கிறேன்... ஒரு நல்ல காரியத்திற்காக உயிரை விடப் போகிறேன்.'' என்று அவன் சொல்லி விட்டான்...''

''உயிருக்குயிராய் இருந்த இளங்கோவையோ, உபயோக மாய் இருந்த நிர்மலாவையோ நீங்கள் எவ்வளவு தூரம் மதித்தீர்கள்? உங்களுடைய நலன் என்று வரும்போது அவர் களை வெட்டிப் புதைக்கவும் நீங்கள் தயாராயிருந்தீர்கள். அவசியம் வந்தால், நாளைக்கு எனக்கும் அதே கதிதானே என்று யோசித்தேன்...''

சபாஸ்டின் கை உயர்த்தி கிருஷ்ணசாமியைத் தடுத்தார்.

''அதென்ன நாளைக்கு? இன்றைக்கு என்று சொல்லுங்கள்... எனக்கு எதிராக யார் கொடி தூக்கினாலும், அவர்களை உடனே கவனித்து கணக்கு தீர்ப்பதுதான் எனக்குப் பிடிக்கும். இளங்கோவிற்காக வெட்டிய குழி இதோ தயாராய் இருக்கிறது. மூடாத கல்லறையில் உங்களுக்கும் இடம் இருக்கிறது...''

''வெயிட்... நிர்மலா சாவிற்கும், இளங்கோ சாவிற்கும், சாணக்யன் மரணத்திற்கும் நீங்கள்தான் பொறுப்பு என்று சொல்கிறீர்களா, சபாஸ்டின் சார்?''

''ஏன் பட்டியலைச் சின்னதாக சொல்லி விட்டீர்கள்? கட்டுரையில் நீங்கள் லிஸ்ட் போட்டிருக்கிறீர்களே, அத்தனை பேருடைய மரணத்திற்கும் நான்தான் காரணம்... பொறுப்பை யார் கையிலாவது விடுவேன்... இளங்கோவோ, உமாபதியோ, மனோகரோ வெறும் கருவிகள்தான்... அத்தனை கொலைக் கும் நான் தான் பொறுப்பு, நானேதான் பொறுப்பு...'' -நானே தான் என்ற போது, சபாஸ்டின் தன் மார்பில் பட்டென்று தட்டிக்



காட்டினார். ''இப்பொழுது உங்கள் மரணத்திற்கும் நான்தான் காரணம்... இவர்கள் கருவிகள்... போதுமா? இல்லை வேறு ஏதாவது கோர்ட்டில் வந்து சொல்ல வேண்டுமா?''

''நீதிபதிகள் முன் குற்றங்களை ஒப்புக் கொள்ளும்போது அது கோர்ட்டாய் இருந்தால் என்ன, வேறிடமாய் இருந்தால் என்ன, சபாஸ்டின் சார்?''

''என்ன உளறுகிறீர்கள்? வக்கீலாய் இருந்து அலுத்துவிட்டது என்று உங்களுக்கு நீங்களே நீதிபதி பதவி கொடுத்துக் கொண்டீர்களா?'' சபாஸ்டினின் குரலில் எள்ளல் இருந்தது.

''இதை கவனித்தீர்களா சபாஸ்டின்? எங்கோ பார்த்தது போல் இல்லை? இளங்கோ உபயோகப்படுத்திய மினி மைக்... சி.பி.ஐ.யால் கவர்ந்து எடுத்துப் போகப்பட்ட சக்தி வாய்ந்த மைக். சட்டைப் பையிலேயே ஒட்டி வைத்திருந்தேன்-நீங்கள் பேசுவது எல்லாம் என் மாருதி வேனுக்குள் துல்லியமாகக் கேட்க வேண்டுமென்று என் மாருதி வேனுக்குள் சி.பி.ஐ. அதிகாரிகளும், கோர்ட் நீதிபதியும் உட்கார்ந்து அத்தனையும் கேட்டுக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியுமா? பெயிலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லி நான் நேரம் வாங்கிப் போனது இந்த ஏற்பாட்டை செய்யத்தான்...''

கிருஷ்ணசாமி சொல்லி முடித்ததும், வேனில் தலைகள் தெரிந்தன.

சபாஸ்டின் வெகு வேகமாக செயல்பட்டார்.

சட்டென்று தாவி கிருஷ்ணசாமியை இழுத்தார். இடுப்பி லிருந்து ரிவால்வர் உருவி அவர் கழுத்தில் வைத்தார்.

''யாராவது என்னைப் பிடிக்க முயன்றால், கிருஷ்ணசாமி யின் உயிர் போய்விடும்... இதுவும் மைக் மூலம் கேட்கிறதா?''

சபாஸ்டின் உறுமினார்.

கிருஷ்ணசாமி சன்னமாக சிரித்தார்.

''சபாஸ்டின் சார், நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று உங்களுக்கு விளங்குகிறதா, விளங்கவில்லையா? என்னை

சுட்டுவிட்டு என்ன செய்வீர்கள்? தப்பிக்க விட்டாலும் எங்கே போவீர்கள்? ஏதோ பெயர் தெரியாத ஊருக்கா? ஜனநட மாட்டம் இல்லாத பாலைவனத்துக்கா? அப்படி ஓடிப் போனால், இத்தனை நாள் நீங்க கட்டிக்காத்த சாம்ராஜ்யம், ஆண்டு கொண்டிருந்த சொத்துக்கள், சௌகரியங்கள்? எல்லாவற்றை யும் உதறிவிட்டு ஒட்டாண்டியாக ஓடப்போகிறீர்களா? ஓடுங் கள்... அப்படியானாலும், அது இளங்கோவிற்கு வெற்றி தான்...''-கிருஷ்ணசாமியின் பேச்சு தேய்ந்தது.

சபாஸ்டின் துப்பாக்கியை அழுத்தினார்.

''என் சாம்ராஜ்யம் அழிந்து போகாது. என்னை விட்டு எங்கும் போகாது. என் எச்சில் காசை வாங்கிக் கொண்டு என்னைக் காப்பாற்ற செல்வாக்குள்ள எத்தனையோ பேர் இருக்கிறார்கள்...''

''உங்கள் வாக்குமூலத்தை பதிவு செய்த நீதிபதியை அந்த லிஸ்ட்டில் சேர்த்தால், நீங்கள் பைத்தியக்காரர்...''

''நீதிபதி! இங்கிருந்து உயிருடன் அவர் வெளியே போனால் தானே தீர்ப்பெழுத முடியும்? என் வாக்கு மூலத்தைக் கேட்ட வர்கள் யாரும் உயிரோடு வெளியேறப் போவதில்லை... இந்தப் பண்ணை வீட்டில் இன்னும் நூறு பிணங்களைப் புதைக்கக் கூட இடமிருக்கிறது... வேனில் இருப்பவர்கள் ஒவ்வொருத்தராக கைகளை தலைக்கு மேல் உயர்த்திக் கொண்டு இறங்குங்கள்...''

வேன் கதவு சர்ர் என்று தேய்ந்து நகர்ந்தது.

கைகளை உயர்த்தியபடி முதல் ஆள் இறங்கினார். இரண் டாவது ஆள். மூன்றாவது ஆள்...

சபாஸ்டின் கவனம் பூராவும் வேன் மீதே இருந்த போது, திடீ ரென்று வேனின் முன் விளக்குள் இரண்டு பிரகாசமாக எரிந்தன.

அபாரமான வெளிச்சம் சபாஸ்டினின் கண்களுக்குள் நேரே பாய்ந்தது. கண்களைக் கூசச் செய்தது. தன்னிச்சை யாக அவர் கை நெற்றி வரை உயர்ந்து அந்த வெளிச்சத்திற்கு



குடை பிடிக்க முனைய, கிருஷ்ணசாமி அந்த சந்தர்ப்பத்திற் குக் காத்திருந்தவர் போல, சபாஸ்டினைப் பிடித்துத் தள்ளினார்.

சபாஸ்டின் காலைப் பின்னால் ஊன்ற முயன்று, சவக்குழியி லிருந்து அள்ளிப் போட்ட மண் குன்றில் வைக்க, அதுக் காலைச் சரித்து இழுக்க, நிலை தடுமாறி அந்தக் குழியி லேயே தொம்மென்று சவப்பெட்டி மீது விழுந்தார். அதற்குள் அவருடைய ரிஃப்ளெக்ஸ் செயல்பட்டு துப்பாக்கி விசையை இழுக்க, தோட்டா இருட்டில் வீணானது.

அதே சமயம் இன்னும் இரண்டு துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் - வேன் நின்றிருந்த திசையிலிருந்து.

குழியிலிருந்து வெளியேற முனைந்த உமாபதி, தப்பித்து ஓட முடிவு செய்த மனோகர்-இருவரது முழங்கால்களிலும் தோட்டாக்கள் பாய்ந்தன. அவர்கள் குப்புறடித்து விழுந்தனர்.

முதல் தோட்டாச்சத்தம் கேட்டவுடனேயே பூமியில் குப்புறப் பாய்ந்து படுத்துவிட்ட கிருஷ்ணசாமி, குனிந்து எழுந்து வேன் பார்த்து ஓடினார்.

துப்பாக்கி சகிதம் சி.பி.ஐ. ஆபீசர்கள் இளங்கோவைப் புதைத்த சவக்குழியை சூழ்ந்தனர்.

சபாஸ்டினின் கையிலிருந்த துப்பாக்கி வெடித்த கையோடு விலகி விழுந்திருந்தது.

சபாஸ்டின் புரண்டு நிமிர்ந்தார். நிலா வெளிச்சத்தில் சூழ்ந்து நின்றவர்களை ஒவ்வொரு முகமாக பரிதாபமாகப் பார்த்தார். பின், கண்களை மூடி ஆழமாக மூச்சை இழுத்தார். சரேலென்று கீழே கிடந்த ரிவால்வரை எடுத்தார். நெற்றிப் பொட்டில் வைத்துக் கொண்டார். விசையை இழுத்தார்.

'டிஷ்யூங்' என்ற சத்தம் தூங்கிய பட்சிகளையெல்லாம் மறுபடி பயமுறுத்தி ஒலித்தது.

அதிகாரிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு மூடாத அந்தக் கல்லறைக்குள் இறங்கினர்.

# திரவியம் தேடு



**1**

மோகன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். ஆழமாக உள்ளே இழுத்தான். புகை நெஞ்சில் பரவியது. இதமாக இருந்தது. வாழ்க்கையில் எவ்வளவு சின்னச் சின்ன சொர்க்கங்கள்?

தன்னுடைய பின்னாட்களைப் பற்றி நினைத்துக் கொண்டான். அவன் முகம் வாடியது. அவனுடைய இறந்தகாலம் அப்படி ஒன்றும் பெருமை கொள்ளத்தக்கதாகத் தெரியவில்லை.

வாழ்க்கை ஒவ்வொருத்தனுக்கும் அல்லது ஒவ்வொருத்திக்கும் எப்படி அமைய வேண்டும் என்பது ஏற்கனவே தீர்மானமான விஷயமாக இருந்தால் அவனைப் பொறுத்த வரைக்கும் அது ஒன்றும் சொல்லிக் கொள்ளக்கூடியதாக அமையவில்லை.

அதைப்பற்றி அப்புறம்.



நிமிர்ந்து பார்த்தான். அவன் செல்ல வேண்டிய பாதை முடிவில்லாமல் நீண்டு கொண்டே போகிற மாதிரி இருந்தது.

ஊட்டி என்றாலே மலைச்சரிவுகள். பச்சைப் பசேல் புல் வெளிகள். யூகலிப்டஸ் மரங்கள். வெள்ளிக்கம்பி அருவிகள். தூரத்தில் நகரும் பொம்மை ரயில். மூடுபனி. காற்றில் குளிர். நடக்கும்போது கடக்கும் மேகங்கள். வளைந்து வளைந்து செல்லும் சாலைகள். கண்ணில் புலப்படாமல் எங்கோ தூரத்தில் இருந்து கேட்கும் லாரியின் இன்ஜின் ஒலி.

ஊட்டி இப்போதும் அப்படித்தான் இருந்தது. மூலிகை வாசனையுடன் காற்று. ஈரச் சாரலுடன் சூழ்நிலை.

மோகனால் அந்த சூழ்நிலையை ரசிக்க முடியவில்லை. பழகிப் போய்விட்டது. வெயிலில் இருப்பவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். நிழலிலேயே இருப்பவனுக்கு என்ன தெரியும்?

மோகன் சூடு ஆறட்டும் என்று நிறுத்தி வைத்திருந்த மோட்டார் பைக்கை மறுபடி கிளப்பினான். இரவல் வண்டி, அதனால் அதன் நெளிவு சுளிவுகள் எதுவும் அவனுக்குத் தெரியவில்லை.

அவன் போக வேண்டிய இடத்திற்கு பஸ் கிடையாது. கார் வைத்துக் கொண்டு போகலாம். வசதி இல்லை. மேலும் காரில் போனால் நான்கு பேருக்குத் தெரியும். அவன் ரகசியமாகப் போக வேண்டும். அதனால் இரவல் பைக்.

பைக் ட்ர்ர் என்று மேலேறியது. ஒரு பஸ் நிறைய டூரிஸ்டுகள் அந்தாக்ஷரி பாடிக் கொண்டே கீழிறங்கினார்கள்.

அவனுக்கு வெறுப்பாக இருந்தது. சுயபரிதாபம் அவனைக் குத்தியது. இந்த மாதிரி நாமும் வாழ்க்கையை என்றைக்கு அனுபவிப்பது? எப்போதுமே ஏன் வயிறு ஓர் இடைஞ்சலாக

இருக்கிறது? அதை நிரப்புவதற்கான போராட்டத்திலேயே அவனுடைய வாழ்க்கையின் கால்பாகம் கழிந்து விட்டது.

வயிற்றுக்கு ஈந்த பின்தானே மற்ற புலன்களுக்கு முடியும்? அது எப்போது அவனுக்கு நேரப் போகிறது?

சாலை மேலேறியது. கூடலூர் செல்லும் சாலை அது. நடுவட்டம் தாண்டியவுடன் இடதுபக்கம் சரேலென்று ஒரு சாலை தனியாகப் பிரிந்து மேல் நோக்கிச் செல்லும் என்று அடையாளம். நடுவட்டம் தாண்டிவிட்டது.

சாலை சரேலென்று இடதுபக்கம் தனியாக மேலேறியது.

அவன் மோட்டார் பைக்கைத் திருப்பினான். அந்தச் சாலையில் செலுத்தினான். டூரிஸ்டுகள் கால் வைக்காத இடம். சினிமாக்காரர்களின் கண்ணில் படாத இடம். அதனால் அந்தப் பிரதேசம் இன்னும் கன்னித் தன்மையை இழக்காமல் இருந்தது.

அந்தச் சாலையில் முன்னேறினான். அவனுக்கு இருபுறங்களிலும் தெரிந்த காட்சியை வர்ணிப்பது வீண், அவன் கவனம் இயற்கையின் மகத்தான அலங்காரத்தில் ஈடுபடவில்லை.

சற்று தூரம் மேலேறியதும் மோகன் தேடி வந்த இடம் வந்துவிட்டது. கரும்பச்சையாய் அசோக மரங்கள். வெளிர் நீலப் பின்னணியில் பஞ்சு மேகங்கள் அந்த உயரமான காம்பவுண்ட் சுவர். அதில் உயரமான வார்ப்பு இரும்பு கேட்.

பொதுவாக இந்த மாதிரி அமைப்புடன் கூடிய கட்டிடங்களை அவன் ஆங்கிலப் படங்களில்தான் பார்த்திருக்கிறான். இப்போது நேரில். பணம் என்னென்ன வசதிகளை செய்து தருகிறது!

பைக்குடன் கேட்டை நெருங்கினான். அதன் இன்ஜின் சத்தம் சூழ்நிலையின் தியான அமைதிக்கு பங்கம் விளைவித்தது. இன்ஜினை ஆஃப் செய்தான். கேட்டுக்குப் பின்னால் அரண்மனை போல, கோட்டை போல மாளிகை தெரிந்தது. அகழிதான் இல்லை. ஒருவேளை மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வந்திருந்தால் அகழியும் இருந்திருக்கும்.



கேட்டின் உட்புறம் ஒரு காவல்காரன். வழக்கமான காக்கிச்சட்டை, காக்கி பாண்ட் எல்லாம் இல்லை. கருநீலத்தில் ஒரு பாண்ட். வெளிர்நீலத்தில் ஒரு ஷர்ட் அணிந்து விமானநிலைய சுங்க அதிகாரி போல் தெரிந்தவன் - இங்கே காவல்காரன்.

அவன் மோகனை மிக அலட்சியமாகப் பார்த்தான். வரவேற்பு இல்லை. இருக்காது. தெரியும். மோகனுக்கு இந்த மாதிரியான உதாசீனங்கள் மிகவும் பழக்கமானவை.

மோகன் எதுவும் பேசுவதற்குமுன் அந்த கேட்-கீப்பர் இந்தக் கதையின் முதல் வாக்கியத்தைப் பேசினான்.

''வழி தெரியாமல் வந்திருக்கிறாயா?''

சிரித்தான். அலட்சியம். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான். அலட்சியம்.

மோகனுக்கு இந்த அலட்சியம் சற்றுக் கூடுதலாகப் பட்டது.

அவனும் மனிதன். தானும் மனிதன். பொருளாதாரத்தில் இருவரும் ஏறக்குறைய ஒரே தட்டில்தான் இருக்கக்கூடும். ஒரு காவல்காரனுக்கு என்ன கிடைத்துவிடப் போகிறது?

இருந்தும் அவன்தான் பின்னணியில் தெரியும் கோட்டைக்குச் சொந்தக்காரன் போல் நடந்து கொண்டால் என்ன அர்த்தம்?

சட்டென்று கேட்டின் இடைவெளியில் கையை நுழைத்தான். வெளிர்நீலச் சட்டையைக் கையால் பற்றி இழுத்தான்.

காவல்காரன் அதை எதிர்பார்க்கவில்லை. அவன் தோள் கேட்டின் வார்ப்பு இரும்புக் கம்பியில் மோதியது. அவனுக்கு வலித்திருக்கக் கூடும். வலிக்கட்டும்.

''கூலிக்காரா. உன் வேலையை மட்டும் நீ செய். வீணாக வார்த்தைகளை விரயம் செய்யாதே. யாரையும் பகைத்துக் கொள்ளாதே. பகை வளர வளர உன் வாழ்நாள் குறைந்து கொண்டே வரும். சரியா?''

''சரி'' என்றான் காவல்காரன். இப்படி ஒரு பதிலை இப்படி ஒரு செயலுடன். இப்படி ஒரு அன்னக்காவடி போல் தோற்ற மளித்த மனிதனிடம் அவன் எதிர்பார்க்கவில்லை.

''நான் தினகரைப் பார்க்க வந்திருக்கிறேன்'' என்றான் மோகன்.

''உன் பெயர்?''

''மோகன்.''

''வரச் சொல்லி இருக்கிறாரா?''

''உன்னிடம் போன் இருக்கிறது. நீயே கேட்டுச் சொல். என்னைப் பார்க்க வேண்டாம் என்று தினகருக்குத் தோன்றி னால் உன்னிடம் சொல்வார்.''

காவல்காரன் மோகனின் பதிலில் மிரண்டு போனான்.

போனை எடுத்துத் தொடர்பு கொண்டு, பேசி, தலை யாட்டி. தலையாட்டி, தலையாட்டி கதவைத் திறந்து விட்டான்.

''நேராகப் போய் இடதுபக்கம் திரும்பு. மூன்றாவது கட் டிடத்தின் வாசலில் உன்னை செக்ரட்டரி சந்தித்து உள்ளே கூட்டிப் போவார்.''

மோகன் பதில் சொல்லாமல் அந்தக் காம்பவுண்டிற்குள் நுழைந்தான்.



கிளிண்டனின் வெள்ளை மாளிகையில் கூட இன்னும் கொஞ்சம் எளிய முயற்சியிலேயே நுழைந்து விட முடியுமோ?



## 2

காவல்காரன் சொன்ன திசையில் மோகன் நடந்தான்.

தினகர் சரித்திரத்தில் இடம்பெற முயற்சி கள் ஏதாவது செய்கிறானோ என்னவோ? நிறைய அசோக மரங்கள் நட்டிருந்தான்.

வேறு பல மரங்கள் சிவப்பு, ஊதா, நீலம், பச்சை என்று விதவிதமான வண்ணங்களில் பூக்கள் இறைத்திருந்தன.

தோட்ட வேலை செய்பவர்கள் தாங்கள் பிறவி எடுத்ததே கத்தரிக்கோலால் செடிகளை வெட்டுவதற்குத்தான் என்று தீர்மானித்து வெட்டிக் கொண்டிருந்தார்கள்.

மூன்றாவது கட்டிட வாசலில் நின்றான்.

செக்ரட்டரி வந்தான். அவன் கட்டியிருந்த டை இடுப்புப் பெல்ட்டின் ஓட்டையில் மாட்டிக் கொண்டிருந்தது. அவன் பார்வையில் எலியின் தவிப்பு. கண்களின் பாப்பாக்கள் இங்கும் அங்குமாக அலைந்தன.

அணிந்திருந்த சட்டை லூசாக இருந்தது. பாண்ட் தொள தொளவென்று இருந்தது. கண்ணாடி மூக்கு நுனியில் தொங்கியது. பாண்ட் இடுப்பில் இருந்து நழுவி விடாமல் இருக்கவோ அல்லது பணக்காரர்களின் ஃபாஷனாகவோ தோளில் இருந்து இரண்டு பட்டைகள் இறங்கி வந்து பான்டைப் பிடித்துக் கொண்டிருந்தன.

''மிஸ்டர் மோகன்?'' என்றான்.

செக்ரட்டரி கேட்ட தோரணையில் இங்கிலீஷ்தனம் கலந்திருந்தது. அவர்கள்தான் யாரையும் பெயர் சொல்லிக்

கூப்பிடுவார்கள். அவர்கள்தான் எல்லாப் பெயர்களுக்கு முன்னால் ஒரு 'திரு' அல்லது ஒரு 'திருமதி'யைச் சேர்த்துக் கொள்வார்கள்.

மோகன் தலையசைத்து ஆமோதிக்கவில்லை. பதிலுக்கு செக்ரட்டரியைப் பார்த்து, "உங்கள் பெயர்?" என்று கேட்டான்.

செக்ரட்டரி மோகனிடம் இருந்து இப்படி ஒரு பதில் கேள்வியை எதிர்பார்க்கவில்லை.

"ஐ'ம் நஞ்சப்பா" என்றான்.

"ஆம் மிஸ்டர் நஞ்சப்பா. என் பெயர் மோகன்தான்" என்று சிரிக்காமல் சொன்னான் மோகன்.

"தாங்க்யூ. மிஸ்டர் தினகர் உங்களுக்காகக் காத்திருக்கிறார். வாருங்கள்."

மோகன் அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தான்.

மொஸய்க் தரையில் வழுக்காமல் நடக்க நிறைய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

செக்ரட்டரி வழுக்காமல் நடந்தான். எதிர்ப்பட்ட கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்தான். ஹைட்ராலிக் அமைப்பில் வேலை செய்வது போல் கதவு எந்தவித ஒலியையும் எழுப்பாமல் திறந்துகொண்டது.

உள்ளே நுழைந்தார்கள். கதவு தானாக மூடிக் கொண்டது. ஸ்ப்லிட் ஏ.ஸி. எந்த சத்தமும் இன்றி குளிர்காற்றை வாரி, வாரி வழங்கிக் கொண்டிருந்தது.

அங்கிருந்த ஒரு சோபாவைக் காட்டி உட்காரச் சொன்னான் செக்ரட்டரி. மோகன் உட்கார்ந்தான். அப்படியே உள்ளே அமிழ்ந்தான். சுற்றிலும் அவன் பார்வையைச் சுழற்றிய நேரம்



செக்ரட்டரி இன்னொரு கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

மோகன் சுற்றிலும் பார்த்தபோது அவளைப் பார்த்தான்.

அவள் -

அறை மூலையில் இருந்தாள். அவள் முன்னால் ஒரு கம்ப்யூட்டர் இருந்தது. கலர் மானிட்டர். அவளது கைவிரல்கள் கம்ப்யூட்டரின் எலியுடன் விளையாடிக் கொண்டிருந்தன. எலியின் அசைவுகளுக்கு ஏற்ப கம்ப்யூட்டர் திரையில் எண்கள், அட்டவணைகள், புள்ளி விவரங்கள் எல்லாம் மைக்ரோ, மைக்ரோ செகண்டுகளில் மாறிக் கொண்டிருந்தன.

மோகன் அவளைப் பார்த்து பிரமித்தான்.

அப்படி இருந்தாள்.

மோகனுக்குக் காத்திருப்பதைத் தவிர வேறு வேலையில்லை. மனதில் எந்த எண்ண ஓட்டமும் இல்லை. அதனால் அவளைப் பார்ப்பது என்று முடிவு செய்தான்.

பதினைந்திலிருந்து, இருபத்தைந்து வயது வரை எந்த வயதைச் சொன்னாலும் நம்பமுடியும் போல் இருந்தாள். தலை பின்னவில்லை. மேலும் ஷாம்பூ உபயோகிப்பவள் என்பது அவளைப் பார்த்தாலே தெரிந்தது. அவளது பளபளப்பான முடி ஏ.ஸி. யின் குளிர்காற்றில் மிக லேசான சலனத்துடன் அவள் நெற்றியில் உறவாடிக் கொண்டிருந்தது. மோகனுக்கு அந்த முடியின் சலனத்தைப் பார்த்தால் கவிதை எழுதவேண்டும் போல் இருந்தது.

வேண்டாம். பொழுதும், கையில் பீரும் இருக்கும் ஒரு பொன்னான மாலை நேரத்தில் கவிதை எழுதுவதைப் பற்றி யோசிக்கலாம்.

இப்போது இன்னும் முழுவதும் பார்க்காத அவள்.

கழுத்தில் ஒரு பிளாஸ்டிக் மாலை அணிந்திருந்தாள். புடவையின் நிறத்திற்கு ஏற்றமாதிரி மாலையின் நிறமும் மாறும் என்பது அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி யாய் புரிந்தது. கன்னம் குண்டாக இருந்தது. சிவந்து இருந்தது. உதடுகள் மெலிதாக இருந்தன. பற்கள்? தெரிய வில்லை.

புடவைதான். லோஹிப். லேசாக வயிறு இருந்தது. அது கவர்ச்சியாகவே இருந்தது.

அவன் கற்பனையை உருவாக்கலாம் என்று யோசித்த நேரம் அவள் சிரித்தாள். நம்ப முடியாமல் பார்த்தான். அவனைப் பார்த்துதான் சிரிக்கிறாள் என்று தெரிந்ததும் மோகன் பதிலுக்குச் சிரித்தான்.

அவள் பல்வரிசை சீராக இருந்தது. அபாரமாக இருந்தது. முத்தமிடலாம் போல், கடித்துத் தின்னலாம் போல், ஒவ் வொன்றாகப் பெயர்த்து எடுத்து வைத்துக் கட்டிக் கொள்ள லாம் போல், பொறாமைப்படலாம் போல்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். மோகனை மறுபடி பார்த்தாள். ஏதோ பேசுவதற்கு வாய் திறந்தாள்.

அதற்குள் உள்ளே போன செக்ரட்டரி கதவைத் திறந்து கொண்டு வந்தான். அவள் மறுபடி கம்ப்யூட்டரில் ஆழ்ந் தாள்.

''மிஸ்டர் தினகர் வில் மீட் யூ நவ்'' என்றான் செக்ரட்டரி.

மோகன் எழுந்தான். உள்ளே நுழைந்தான்.



பெரிய அறை. நீச்சல்குளம் ஒன்றைக் கட்டலாம் என்னும் அளவிற்கு அந்த அறையின் எதிர்க்கோடியில் ஒரு மெகா மேஜைக்குப் பின்னால் இருந்த சுழல் நாற்காலியில் அவன் அமர்ந்திருந்தான்.

தினகர், இளைஞன். இருபத்தெட்டு வயது இருக்கலாம். பணம் உடலில் பளபளப்பை ஏற்படுத்தி இருந்தது. உடற்பயிற்சி செய்யப்பட்டு கட்டுக்கோப்பான, இளமையான உடல். கன்னத்தில் ஷேவிங் பச்சை. அடர்த்தியான ஆனால் நீளம் அதிகமில்லாத மீசை.

''மோகன்?''

''ஆம்'' என்றான் மோகன்.

''ரைட். உனக்கென்று இப்போது எந்த வேலையும் இல்லை. சரியா?''

''ஆம்.''

''நீ அடிதடி கலவரங்களில் அவ்வப்போது கலந்து கொண்டு போலீஸ் ஸ்டேஷன் வரை போய் வந்திருக்கிறாய், கரெக்டா?''

''ஆம்.''

''நீ இப்போது நிறைய பணக்கஷ்டத்தில் இருக்கிறாய், சரியா?''

''ஆம்.''

''அடுத்தவர் விவகாரங்களில் நீ மூக்கை நீட்டுவது உண்டு இல்லையா?''

''யெஸ்.''

''மற்றவர்களின் பர்சனல் விஷயங்களில் நீ மூக்கை நீட்டுவதற்கு உனக்கு நீயே அல்லது உலகுக்கு நீ சொல்லும்

சமாதானம் யூனிவர்சல் டிடெக்டிவ் ஏஜென்ஸி சரியா, தப்பா?''

''ஆம். யூனிவர்சல் டிடெக்டிவ் ஏஜென்ஸி என்று பெயர் வைத்தால் அது கொஞ்சம் உலகளாவிய கம்பெனியாக மற்றவர்களுக்குத் தெரியும் என்று தோன்றியது. அந்தப் பெயரை வைத்தேன்.''

''வெரிகுட். இதுவரை நீ உண்மை பேசி இருக்கிறாய்.''

''நான் எனக்கு வேண்டப்பட்டவர்களிடம் எப்போதும் உண்மைதான் பேசுவது வழக்கம்.''

''நான் இப்போது எதற்காக உன்னை வரவழைத்திருக் கிறேன் என்று தெரியுமா?''

''தெரியாது'' என்றான் மோகன்.

''இதுவரை நீ என்னென்னவோ வேலைகள் செய்திருக்கக் கூடும். ஆனால் எனக்காக செய்யப் போவது ஒரு வினோத மான வேலை.''

''என்ன?''

''ஒரு கொலை செய்யவேண்டும்'' என்றான் தினகர் மேசை யில் இருந்த பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே.



## 3

''நீங்கள் ஜோக்கடிக்கிறீர்கள்'' என்றான் மோகன்.

''இல்லை. வெகு சத்தியமாகச் சொல் கிறேன். ஆனால் கொலை என்பது கடைசியான நடவடிக்கை. அதற்கு முன் நீ செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது'' என்றான் தினகர்.



ஒரு பென்சன் அண்ட் ஹெட்ஜஸ் சிகரெட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிகரெட்டை உருவி உதட்டில் பொருத்தினான். லைட்டர் க்ளிக் என்றது. நீல ஜோதி பாம்பு நாக்காய் மேல் எழுந்து வளைந்தது. புகையிலை பற்றியது. புகை எழுந்தது. அறை முழுக்க விரும்பத்தக்க புகையிலை மணம்.

அவன் சிகரெட்டை ஆழமாய் இழுத்தான். புகையை வெளியில் விட்டான். கைகள் லேசாக நடுங்கின. நிச்சயம் நரம்புத் தளர்ச்சி இல்லை. சொல்லப் போகும் காரியத்தைப் பற்றிய எண்ணம் கொடுத்த நடுக்கமாகக் கூட இருக்கலாம்.

''அவள் பெயர் வேதா. நான் அவளைக் காதலித்தேன். நல்ல அழகி. நீ இதுவரை பார்த்திருக்கும் பெண்களை எல்லாம் தூக்கிச் சாப்பிடக் கூடியவள். என்னை அவள் மதிக் கவே இல்லை. அவள் அழகில் மையல் கொண்டு, அவளது நீளமான தலைமுடியின் பாலே நடனம் கண்டு பைத்தியமாகி, அவளது இடுப்பு அசைவின் ரிதத்தால் உன்மத்தமடைந்து நான்தான் அவளைத் துரத்தித் துரத்திக் காதலித்தேன். கடைசியில் காதலுக்கு சம்மதித்தாள். என்னை நேசித்தாள். ஆனால் இன்றைக்கு...?''

''என்ன ஆயிற்று?'' என்று கேட்டான் அசுவாரசியமாக.

மோகனுக்கு இந்தக் காதலில் எல்லாம் நம்பிக்கை இல்லை. எல்லாக் காதலுக்கும் உண்மையான காரணம் ஹார்மோன்கள்தான் என்பது அவனது மாறா நம்பிக்கை. எல்லாக் காதல்களுக்கும் காமம்தான் அடிப்படை.

''என்னை மிரட்டுகிறாள்.''

''எப்படி?'' என்றான் மோகன்.

''நான் அவளுக்கு நிறைய கடிதங்கள் எழுதியிருக் கிறேன்.''

''காதல் கடிதங்கள்?''

''ஆம்! மேலும் எங்கள் காதலின் விளைவாக அவள்
இன்னும் ஆறுமாதங்களில் அம்மாவாகப் போகிறாள். இந்த
நிலையில் நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள
முடியாது. அப்பாவிடம் சொன்னால் உயிலில் இருந்து உடனே
விலக்கி வைத்து விடுவார். அதனால் கருவைக் கலைக்கச்
சொன்னேன். சம்மதிக்கவில்லை. பணம் கொடுப்பதாகச்
சொன்னேன். சம்மதிக்கவில்லை. அவளை நான் கல்யாணம்
செய்து கொள்ள வேண்டுமாம். இல்லாவிட்டால் நான்
எழுதிய கடிதங்களை எல்லாம் அப்பாவிற்கு அனுப்பிவிடுவ
தாகச் சொல்கிறாள். நான் கெஞ்சி விட்டேன். கை நீட்டி
அடித்துப் பார்த்துவிட்டேன். கொஞ்சநாள் பொறுத்து அவ
ளையே நான் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்லிப்
பார்த்துவிட்டேன். எதற்கும் ம்ஹூம் தான். கடைசி கடைசி
யாக அவளிடம் ஒரு வாரம் - ஏழு நாட்கள் நேரம் வாங்கி
யிருக்கிறேன். ஏழாவது நாள் முடிவில் நான் அவளை
அப்பாவின் சம்மதத்துடன் கல்யாணம் செய்து கொள்வதாகச்
சொல்லி இருக்கிறேன். எப்படியும் அது நடக்காது. நடக்கப்
போவதில்லை. எனவே -''

தினகர் பேசுவதை நிறுத்தி விட்டு சிகரெட்டை பாழாக்
கினான். உடனே இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

''அவளைக் கொல்ல வேண்டும். அப்படித்தானே?''

தினகர் மோகனை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களில்
தயக்கம் தெரிந்தது.

''முதலில் அவளுக்கு நான் எழுதிய கடிதங்கள் அத்தனை
யும் வேண்டும். அப்புறம் கடைசியில் அவளிடம் என் சம்பந்
தப்பட்ட ஆதாரங்கள் எதுவும் இல்லையென்று தீர்மானமாக
முடிவானவுடன் அவளைக் கொல்ல வேண்டும்'' என்றான்
தினகர்.



''நான் இதுவரை ரத்தம் சிந்த வைத்திருக்கிறேன். கை, கால்களை உடைத்திருக்கிறேன். ஆறுமாதம் படுக்கையை விட்டு நகராதபடி செய்திருக்கிறேன். ஆனால் கொலை..? ஸாரி, இதுவரை நான் யாரையும் கொலை செய்ததில்லை. எனவே...''

''என்னைக் கொல்லவரும் பாம்பைக் கொல்வது தப்பா?''

''அப்படியானால் நீங்களே கொல்லலாமே.''

''அதுதான் என் ஆசையும் கூட. ஆனால் நான் அவளோடு பழகியதை, பேசியதை, காதலாக இருந்ததை ஊட்டியில் பல பேர் பார்த்திருக்கிறார்கள். அதனால் இப்போது அவள் செத்துப் போனால் என்னை நோக்கிப் பல சுட்டு விரல்கள் நீளும். அந்த சமயத்தில் நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண் டாமா?''

''நான் போலீசில் மாட்டித் தூக்கில் தொங்கினால் பரவா யில்லை. அப்படித்தானே?''

''போலீசில் மாட்டினால்தானே? யாரோ ஒரு மோகனை வேதாவிற்குத் தெரியாது. வேதாவைக் கொல்ல வேண்டிய அவசியம் மோகனுக்கு என்ன என்று போலீஸ் கேட்டுப் பார்க்காதா? கொலை என்றால் ஒரு மோட்டிவ், ஒரு வலுவான காரணம் வேண்டும். மோகனைப் பொறுத்த வரை மோட்டிவ் இல்லை. எனவே போலீஸ் உன்னைத் தேடவே தேடாது. அவள் வாழ்க்கையில் நீ இல்லவே இல்லை என்பதால். மேலும் இன்றைக்குக் கொலை என்பது ஒரு திருட்டுக்காக நடக்கிறது. ஒரு சின்னக் கோபச் சண்டைக்காக நடக்கிறது. ஒரு கற்பழிப்பிற்காக நடக்கிறது. அதனால் போலீஸ் உன்னை எப்படி மோப்பம் பிடித்து வரும் என்று நினைக்கிறாய். 'வா, வந்து என்னைப் பிடித்துக் கொள்' என்ற நீயாக போலீஸுக்குத் தடயம் எதுவும் விட்டு வைக்காத வரை உனக்கு என்ன

தயக்கம்? கொலை என்றால் எத்தனையோ வழிகள். தற் கொலை மாதிரி தெரிகிற மாதிரி தூக்கில் தொங்கவிடலாம். இல்லை விபத்து போல் தெரிகிற மாதிரி ஒரு மலையுச்சியில் இருந்து விழுந்து சாகடிக்கலாம். இந்த தினத்தில், இந்த மணியில், இந்த நிமிஷத்தில், இந்த வினாடியில் எவ்வளவு பேர் செத்துப் போகிறார்கள் தெரியுமா? எனக்கும் தெரியாது. ஆனால் செத்துப் போகிறவர்கள் எல்லாம் கொலையாகித் தான் செத்துப் போகிறார்கள் என்று போலீஸ் நினைக்க ஆரம்பித்து, ஒவ்வொருத்தரும் செத்துப் போனது எதனால் என்று ஆராய ஆரம்பித்தால் அப்புறம் இந்தியா முழுக்க முழுக்க போலீஸ்காரர்கள் இருந்தாலும் போதாது."

''ஓ.கே. எவ்வளவு கூலி?''

''எவ்வளவு வேண்டும்?''

''இருபது லட்சம்.''

''விளையாடுகிறாயா?''

''இல்லை. ஆனால் நான் செய்யப் போவது ஒரு கொலை. இதுவரை செய்ததில்லை. மாட்டிக்கொண்டால் தூக்கு அல்லது ஆயுள் தண்டனை. இல்லாவிட்டால் வாழ்நாள் முழுக்க நான் கொலை செய்த பெண் என் கனவில் வந்து என்னை சித்ர வதை செய்வாள். யார் கண்டது? எனக்குப் பைத்தியம் கூடப் பிடிக்கலாம். எனக்கு இருபது லட்சம் என்பது இன்றைய விலைவாசியில் அப்படி ஒன்றும் பெரிய தொகையாகத் தெரியவில்லை. உங்கள் சொத்து ஒரு இருபது முப்பது கோடி இருக்கலாம். அதற்கு மேலேயே இருக்கலாம். உங்களுக்கு ஒரு மாத வட்டிப் பணம். ஒரு பென்ஸ் கார் இதை விட அதிக விலை விற்கிறது.''

''ஓ.கே. ட்வெண்டி லாக்ஸ்.''



''அட்வான்ஸ் பத்து லட்சம். பழைய நோட்டுகளாக வேண்டும். புது நோட்டுகள் வேண்டாம். ஒரு ஃபேக் நோட் கேஸில் மாட்டி நான் உள்ளே போகத் தயாராக இல்லை.''

''தருகிறேன். ஆனால் சொன்னபடி வேலை முடியா விட்டால்...''

''வேலை முடியும். வேதாவால் உங்களுக்குத் தொந்தரவு இருக்காது.''

''சரி. அவள் செத்துப் போனது உறுதியானவுடன் நான் மிச்சம் பத்து லட்சத்தைத் தருகிறேன்.''

''டன். எனக்கு வேதாவின் போட்டோ வேண்டும் அவள் அட்ரஸ் வேண்டும்.''

''தருகிறேன்.''

தினகர் எல்லாவற்றுக்கும் தயாராக இருந்தான் என்பது அடுத்த ஐந்து நிமிடங்களில் தெரிந்து விட்டது.

மோகன் கையில் பத்து லட்சம் ஒரு சூட்கேஸில் போட்டுக் கொடுத்தான்.

வேதாவின் போட்டோவைக் கொடுத்தான். அவளது முகவரியைக் கொடுத்தான்.

மோகன் அந்தப் பணத்தையும் மற்றவற்றையும் எடுத்துக் கொண்டு அறையில் இருந்து வெளியேறினான்.

மோகன் வெளியே வந்ததும் செக்ரட்டரி மறுபடி டாக்டர் அறை கம்பவுண்டர் போல் உள்ளே சென்றான்.

கம்ப்யூட்டர் பெண் சட்டென்று எழுந்து மோகனை நெருங்கினாள்.

அவனுடைய சட்டைப் பாக்கெட்டில் ஒரு பேப்பரை வைத்துவிட்டு, உடனே தன் இருக்கைக்குத் திரும்பி

உட்கார்ந்து பழையபடி கம்ப்யூட்டர் எலியைத் தடவத் தொடங்க, உள்ளே நுழைந்த செக்ரட்டரி வெளியே வந்தான்.

மோகன் ஆச்சரிய பிரமிப்பில் இருந்தான்.

அந்தப் பெண் சொல்ல வந்தது என்ன? பாக்கெட்டில் வைத்திருக்கும் காகிதத்தில் என்ன செய்தி இருக்கிறது?

செக்ரட்டரி மோகனைப் பார்த்து, "யூ மே கோ" என்றான்.

போகாவிட்டால் கழுத்தில் கை வைத்துத் தள்ளுவான்.

"ஒன் மினிட் செக்ரட்டரி."

"யெஸ். மிஸ்டர் மோகன்."

"இந்த மாதிரி இங்கிலீஷ்தனமான இடங்களுக்கெல்லாம் வந்தால் ஸ்காட்ச், காஷ்யூ அது இது என்று சர்வ் செய்து பார்த்திருக்கிறேன். இங்கே எனக்கு எதுவுமில்லையா?"

செக்ரட்டரி முறைத்தான். பின் புன்னகைத்தான்.

"கம்."

செக்ரட்டரி அவனை அடுத்த அறைக்குக் கூட்டிச் சென்று ஷெல்ஃபைத் திறந்து இரண்டு கோப்பைகளை எடுத்தான்.

அந்த ஷெல்ஃப் முழுக்க கோப்பைகளும், பாட்டில்களும்.

பாட்டில்களில் மேல்நாட்டு ஈஸ்ட்மென் கலர் மதுவகைகள்.

மோகன் இரண்டு விரற்கடை ஸ்காட்ச் அருந்தினான். செக்ரட்டரி இரண்டு விரற்கடை ஸ்காட்ச் அருந்தினான்.

கடைசி வினாடி வரை இங்கிலீஷ்தனமாகவே செயல்பட்ட செக்ரட்டரிக்கு நன்றி கூறிவிட்டு அந்த மாளிகையை விட்டு வெளியேறினான் மோகன்.





# 4

வேதா.

வேதா பிறந்தது ஒரு பிப்ரவரி மாதம் பத்தாம் தேதி. அப்பா, அம்மா, தம்பி. வேதாவின் அப்பாவிற்கு ஊட்டி சொந்த ஊர் இல்லை. பிழைக்க வந்த ஊர். சேரிங் கிராஸில் ஒரு பேக்கரி இருக்கிறது. ஊட்டி வருக்கிகள் டன் கணக்கில் விற்பனையாகும் பேக்கரி. அப்பாவிற்கு பணக்கஷ்டம் இல்லை. அம்மாவிற்கு வீட்டில் வேலை. தம்பி லவ்டேலில் படிக்கிறான். கோயமுத்தூர் கல்லூரியில் படிப்பை முடித்த வேதாவிற்கு ஊட்டியில் பொழுது போவது மிகச் சிரமமாக இருந்தது. அப்பாவின் ரொட்டிக்கடை ஒரு போர். வீடே பேக்கரி மாதிரியான ஒரு வாசனையுடன் இருப்பதால் அவளுக்கு வீட்டில் இருக்கவும் பிடிப்பதில்லை.

பொட்டானிக்கல் கார்டன், தொட்டபெட்டா, ஏரிக்கரை, ரயில்வே ஸ்டேஷன், சேரிங்கிராஸ் என்று ஊட்டியின் அத்தனை சொர்க்கத் தீவுகளும் அவளுக்கு அலுத்து விட்டது. போர்.

ஊட்டி எந்நேரமும் நொச நொசப்பான மழை. குளிர், துவைக்கப்படாத ஸ்வெட்டர் என்ற அடையாளங்களுடன் கூடிய ஊர். நேற்றுப் பார்த்த முகம் இன்றிருக்காது. இன்று பார்க்கும் முகம் நாளை இருக்காது என்பதுதான் ஊட்டியில் வேதாவிற்கு ஒரே ஆறுதல். அதனால் அந்த முகங்கள் அதிகமாகத் தெரியும் கார்டனுக்கு அவள் போய்விடுவாள். தேன்நிலவுக்கு வந்த ஜோடிகள் ஒருத்தரை ஒருவர் மோப்பம் பிடித்து மற்றவர் அறியமாட்டார்கள் என நினைத்து முத்தமிடுவதை வேடிக்கை பார்ப்பாள்.

வேதா மணவாழ்வின் ரகசியங்களை அறியத் துடிப்பாய் இருந்த ஒரு தருணத்தில்தான், தினகர் அவள் வாழ்க்கையில் குறுக்கிட்டான்.

அவளுடைய நாணம், உடை, பாவனை, ஆண்களை ஆர்வமுடன் நோக்கிய தன்மை யாவையும் சேர்ந்து வேதாவை மிக எளிதாக மடக்கலாம் என்ற செய்தியை தினகருக்கு அறிவிக்க -

தினகர் அவளுடைய கண்ணுக்குத் தெரியாமல் விரித்த வலையில் அவள் மிக எளிதாகச் சிக்கினாள்.

வேதாவின் வீடு ஃபிங்கர் போஸ்டில். அவளுடைய அப்பா புதிதாக இடம் வாங்கிக் கட்டிய வீடு. இன்னும் வீட்டுச் சரிவை அடைய சரியான பாதை இல்லை. இரவு நடக்கும் போது பாதையில் வெளிச்சத்திற்காக விளக்கு இல்லை. இருந்தும் வேதாவிற்கு அந்த வீடு சொர்க்கம்.

சின்ன வீடுதான். ஹாலில் ஒரு பாமரேனியன். சுவரில் வால் போஸ்டர். வால் போஸ்டரில் ஓடை, செடிகள், கொடிகள், கூழாங்கற்கள். அப்புறம் ஒரு படுக்கை அறை. தெரு பார்த்தது. பாத்ரூமுடன் கூடியது. அது அவளுடைய படுக்கை அறை. அந்த அறை முழுக்க அவளது புகைப்படங்கள். அவளது அந்தரங்கத்தில் குறுக்கிட விருப்பமில்லாததால் அந்த அறைக்குள் யாரும் நுழைவதில்லை. அந்த அறையில்தான் தினகரின் புகைப்படம் ரகசியமான ஓரிடத்தில் இருக்கிறது. அவன் எழுதிய அத்தனை கடிதங்களும் இருக்கின்றன. அறைக்கதவை மூடிக்கொண்டு அந்தக் காதல் கடிதங்களை அவள் உருகி உருகி படிப்பாள்.

இப்போது அவற்றைப் படித்தால் கண்ணீர் வருகிறது. என்ன செய்யலாம்? எல்லாம் கைமீறிப் போய்விட்டது. அபார்ஷன்? ச்சே. அதற்குத் துணிவில்லை. அம்மா, அப்பாவிற்குத் தெரியாமல் எத்தனை குற்றங்கள்தான் செய்வது?

அபார்ஷன் வேண்டாம். பார்க்கலாம். இன்னும் ஏழு நாட்கள் இருக்கின்றன. ஏழாவது நாளின் முடிவில் தினகர்



அவளுக்கு நல்ல செய்தி தருவதாகச் சொல்லியிருக்கிறான். வெளிநாடு போயிருக்கும் அப்பா திரும்பி வந்தவுடன் அவர் அனுமதி பெற்று கல்யாணம் என்று சத்தியம் செய்திருக்கிறான்.

அம்மா, அப்பாவிற்கு அவளுடைய காதல் அதிர்ச்சியாக இருக்கும். கோபம் வரும். ஆனால் எல்லாம் எல்லை மீறி விட்டது எனப் புரிந்ததும் கோபம் அடங்கிப் போய்விடும். பேரனோ, பேத்தியோ வந்துவிட்டால் கோபம் எல்லாம் காலை நேரப் பனியாக மறைந்து விடும்.

அதுவரை? அதுவரை?

ரகசியம் காப்பாற்றப்படத்தான் வேண்டும்.

வேதா எழுந்தாள். பெருமூச்சு விட்டாள். பாத்ருமிற்குள் நுழைந்து வயிறை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். தினகரோடு, அவள் நெருக்கமாக, மிக நெருக்கமாக இருந்த நாளை நினைத்துக் கொண்டாள்.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்ற பாரதியின் ஒரு வரி நினைவிற்கு வந்தது.

வீட்டை ஒரு முறை சுற்றி வந்தாள். அம்மா அப்பாவின் படுக்கை அறை எளிமையாக இருந்தது. விரும்பத்தக்கதாக இருந்தது. அப்புறம் அம்மாவின் தர்பாரான சமையல் அறை. பின்னால் சிறு தோட்டம். ஊட்டியின் அத்தனை குரோட்டன்களும் ஒரே இடத்தில் வந்து சேர்ந்து வளரும் இடம். சின்னச் சின்னப் பூக்கள் இதழ் விரிக்கும் இயற்கை முற்றம். வேதாவிற்கு அந்த இடம் ஒரு சொர்க்கபூமி. பொழுது போகாத தருணங்களில் அந்தத் தோட்டம்தான் அவளுக்கு லைப்ரரி,

சினிமா தியேட்டர், காதலனுடன் கொஞ்சம் லவாஸ் பார்க் எல்லாம்.

அவளுக்கு இருந்த மன உளைச்சலில் தோட்டம் கூட இப்போது அவள் மனதைக் கவரவில்லை.

எங்கேயாவது போய் வந்தால்தான் மனம் ஓரளவாவது திசை திரும்பும் என்று தோன்றியது. அம்மா சமையல் அறையில் ஏதோ ஒரு புது 'சமைத்துப் பார்' ஐட்டத்தில் மூழ்கியிருந்தாள். இப்போது இடியே விழுந்தால் கூட அம்மா திரும்பிப் பார்க்க மாட்டாள்.

வேதா வீட்டை விட்டு வெளியே புறப்பட்டாள்.

தோட்டத்தில் இருந்த பூக்கள், ''வேதா போகாதே. போகாதே'' என்று மவுனமாக அலறின.

வேதாவின் காதில் அந்த அலறல் விழவில்லை.

படிகளில் இறங்கினாள்.



## 5

மோகன் அந்த மாளிகையை விட்டு வெளிப்பட்டான். ஸ்காட்ச் அவன் ரத்தத்தில் கலந்து அவன் நரம்புகளை எல்லாம் உயிர்த்தெழ வைத்திருந்தது. துடிப்பாக இருந்தான். மேகங்களை அப்படியே தாவிப் பிடித்துப் பாக்கெட்டில் போட்டுக் கொள்ளும் மனநிலையில் இருந்தான்.

மோட்டார் பைக்கை அடைந்தான். கையில் இருந்த சூட்கேஸ் அவனுக்குள் ஆயிரம் உற்சாக வெடிகளை வெடிக்க வைத்தது. பெட்ரோல் டாங்க் மேல் சூட்கேஸை வைத்து உட்கார்ந்து ஸ்டார்ட் செய்தான்.

அவனுக்கு நிறைய வேலைகள் இருப்பது நினைவுக்கு வந்தது.



முதல் வேலையாக மோட்டார் பைக்கை ஒப்படைக்க வேண்டும். அதற்கு ஒரிஜினல் மோகனாகப் போகவேண்டும்.

ஒரிஜினல் மோகன்?

ஆம். யெஸ்.

மோகன் எதிலுமே ரிஸ்க் எடுப்பதில்லை. அதேபோல் தினகரிடமிருந்து அவனுக்கு அழைப்பு ஒரு நண்பன் மூலமாக வந்தபோதும் அவன் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை.

மோகனுடைய முக்கியமான செயல்முறைகளில் ஒன்று, 'எந்த பார்ட்டியை சந்திக்கப் போனாலும் ஒரிஜினல் முகத்தோடு போகாதே.'

அதேபோல் இந்த தினகரைச் சந்திக்க வரும்போதும் அவன் ஒரிஜினல் முகத்துடன் வரவில்லை.

எனவே -

உதகமண்டலம் ரயில்வே ஸ்டேஷன் வாசலில் மோட்டார் பைக்கை நிறுத்தினான். இறங்கினான். ஸ்டாண்ட் போட்டான். சுற்றிலும் ஒரு பார்வை. ஓ.கே.

சூட்கேஸைக் கையில் எடுத்துக் கொண்டு மெல்ல நடந்து பப்ளிக் டாய்லெட்டிற்குள் நுழைந்தான்.

கதவைத் தாள் போட்டுக் கொண்டான்.

முகத்தில் இருந்த தாடியை எடுத்தான். வாயில் இருபுறங்களிலும் அடைத்து வைத்துக் கொண்டிருந்த ரப்பர் கட்டைகளை எடுத்தான். தலையில் இருந்த 'விக்'கை எடுத்தான். ஒரிஜினல் தலைமுடி நரையும் கருப்பும் கலந்து உப்பும் மிளகுமாக இருந்தது. ஆனால் அது அப்படி ஒன்றும் வயதான தோற்றத்தைக் கொடுத்து விடவில்லை. வலதுகால் ஷூவில் குதிகாலுக்குக் கீழே வைத்திருந்த இன்னொரு ரப்பர்

கட்டையை எடுத்தான். அவன் தன்னுடைய முயற்சி எதுவு மில்லாமலே விந்தி விந்தி நடப்பதற்கு உபயோகப்படும் ஒரு பொருள்.

இப்போது மோகன் முற்றிலும் மாறியிருந்தான். அவன் முகத்தில் ஒரு மென்மை. அணிந்திருந்த சட்டையைக் கழற்றித் திருப்பி அணிந்தான். உட்புறம் வேறு நிறத்தில் இன்னொரு சட்டை. பாண்டைக் கழற்றினான். உள்ளே ஒரு ஹாஃப் பாண்ட். ஜீன்ஸ் துணி. அதன் பாக்கெட்டில் இருந்த மெல்லிய நைலான் துணியினாலான ஒரு பையை உதறி னான். ஒரு பெரிய பையாக மாறியது. அதன் ஜிப்பைத் திறந் தான். மேக்கப் சாதனங்களை வைத்தான். பாண்டை வைத் தான். சூட்கேஸைத் திறந்து அதில் இருந்த நோட்டுக் கற்றை களை இந்தப் பையில் வைத்து ஜிப்பை இழுத்து மூடினான்.

காலி சூட்கேஸ். ஒரு பெருமூச்சு விட்டான். மாட்டிக் கொள்ளாமல் இருக்க எவ்வளவு எவ்வளவு ஏற்பாடுகள்.

சட்டையின் உட்புறம் கையை விட்டு பாக்கெட்டில் இருந்த துண்டு பேப்பரை எடுத்தான். கம்ப்யூட்டர் செக்ரட்டரி பெண் கொடுத்தது. அதை அங்கேயே பிரித்துப் பார்த்திருக்க வேண்டும். இருந்தும் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை.

துண்டு பேப்பரைப் படித்தான்.

அதில் ஒரே ஒரு சின்ன வாக்கியம் இருந்தது. கட்டளை போல் இருந்தது.

CONTACT 23546.

23546 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

ஊட்டியில் அந்த ஐந்து எண்களும் ஒரு தொலைபேசி எண்ணைத்தான் குறிக்கின்றன என்று குழந்தை கூடச் சொல்லும், சிரித்துக் கொண்டான்.



இரண்டு மூன்று ஐந்து நான்கு ஆறே.. எனக்கு என்ன செய்தி வைத்திருக்கிறாய்?

காகிதத்தை மறுபடி உள் பாக்கெட்டில் வைத்தான். டாய்லெட்டில் இருந்து வெளிப்பட்டான்.

அவனைப் பார்த்தால் ஊட்டிக்குப் புதிதாக வந்த ஒரு பயணி போல் இருந்தது. மோட்டார் பைக்கில் ஏறினான். அவன் முதுகில் நைலான் பை ஊசி மணி விற்கிறவளின் முதுகுக் குழந்தை போல் காட்சி தந்தது.

சூட்கேஸ் பழையபடி பெட்ரோல் டாங்க் மேல்.

வண்டியை ஸ்டார்ட் செய்தான். வினாடியில் வேகம் பிடித்தான். அவனுக்கு நீலகிரியின் அத்தனை இண்டு, இடுக்குகளும், மூலை முடுக்குகளும் பழக்கம். மனிதர்களின் கால்கள் படவே படாத அபாயமான பள்ளத்தாக்குகளைக் கொண்ட பாறைச் சிகரங்கள் எல்லாம் அவன் பார்த்துக் கெட்டவை.

அப்படி ஒரு மலைச்சிகரம் நோக்கிச் சென்றான்.

அவன் சென்ற இடம் ஊட்டியின் பொதுவான சூழ்நிலை யில் இருந்து வெகுவாக மாறுபட்டிருந்தது.

அந்த இடத்தில் டூரிஸ்டுகள் இல்லை. சுள்ளி பொறுக்க வரும் பெண்கள். சிறுவர்கள் இல்லை. புல் மேயும் ஆடு மாடுகள் இல்லை. அடர்த்தியாக மரங்கள் இருந்தன. மரங் களின் கிளைகளில் மேகங்கள் இளைப்பாறின. அவனது மூச்சுக்காற்று பனிக்காற்றாக மாறியது.

சற்றுநேரம் பைக்கில் அமர்ந்தபடி சூழ்நிலையை ரசித் தான்.

பறவைகள் டிர்ரக், டிர்ரக் என்றும் சிக், சிக் என்றும் சட், சட் என்றும் அக்கூ, அக்கூ என்றும் ஒரு வினோதமான

இசைக் கச்சேரியை அரங்கேற்றிக் கொண்டிருந்தன. சில பட்டாம்பூச்சிகள் வழிமறந்து போனவை போல் இலக்கில் லாமல் அலைந்து கொண்டிருந்தன.

மோகன் பைக்கில் இருந்து இறங்கினான். சூட்கேஸை எடுத்துக்கொண்டு சிகர நுனியில் நின்றான். காற்று அவனை அசைத்துப் பார்த்தது.

சூட்கேஸைத் திறந்து பார்த்து அதில் எங்கும் ஒன்று மில்லை என்பதை உறுதி செய்துகொண்டு கீழே வீசினான்.

அது பள்ளத்தாக்கைப் போய் அடைவதற்கு முன் தன் அடையாளத்தைச் சுத்தமாக இழந்து சின்னச் சின்ன பிளாஸ் டிக் சில்லுகளாக மாறிவிடும் என்று அவனுக்குத் தெரியும்.

மறுபடி ஊட்டியை அடைந்தான்.

பைக் நண்பன் பஸ்-ஸ்டாண்டை ஒட்டி இருக்கும் ஊர் பிரதேசத்தில் பீடாக்கடை வைத்திருப்பவன்.

மோகனுக்கும், அந்த பீடா ரவிக்கும் இடையில் நல்ல நட்பு நிலவினாலும் மோகனைப் பற்றி ரவிக்குத் தெரிந்தது அவன் ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸி வைத்து நடத்து கிறான் என்பதுதான்.

மோகன் கொலை செய்ய ஒத்துக்கொள்வான் என்பது அவனுக்குத் தெரியாது. தெரியவேண்டிய அவசியம் இல்லை என்று மோகன் தீர்மானித்தான்.

சில ரகசியங்கள் சில தனிப்பட்ட மனிதர்களோடு எரிந்து அல்லது புதைந்து போக வேண்டியவை.

பைக்கைத் திருப்பிக் கொடுத்தான். ஒரு பீடா வாங்கிப் போட்டுக் கொண்டான். புறப்பட்டான்.

**மோ**கனுக்கு ஊட்டியில், குன்னூரில் என்று இரண்டு இடங்களிலும் உள்ள வங்கிகளில் கணக்கு இருக்கிறது.



ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு விதத் தேவைக்காக அந்த வங்கிகளில் அவன் கணக்கு தொடங்கினான்.

பத்து லட்ச ரூபாயை முதல் வேலையாக பன்னிரண்டு வங்கிகளிலும் பிரித்துப் பிரித்துப் போட்டான்.

அந்த வேலையை அவன் முடிக்கும் போது பிற்பகல் இரண்டு மணிக்கு மேலாகிவிட்டது சாப்பிட்டான். அடுத்து வேதாவை எப்படி அணுகலாம் என்று சற்று நேரம் யோசித் தான்.

அவள் தினகரைக் காதலிப்பவள். எனவே அவளைத் தன்னுடைய காதல் வலையில் சிக்கவைத்து, ஏதோ ஒரு மலை சிகரத்திற்குக் கூட்டிப் போய்த் தள்ளிவிடுவது என்பது நடக்காத காரியம். அந்த வழி ஒத்துவராது.

அடுத்த வழி துப்பாக்கி அல்லது கத்தி.

நிறைய ரத்தம் வீணாகும். பெண்கள் வீணாக ரத்தமிழப் பது நன்றாக இருக்காது. திரைப்படங்களில், பத்திரிகைகளில், விபத்தில் சிக்கிய, வெடிகுண்டு வெடித்தபோது மாட்டி இறந்த பெண்களின் படங்களைப் பார்த்தாலே அவனுக்கு உடம்பு முழுக்கப் பதறும்.

எனவே குரூரமான கொலைகள் வேண்டாம். மேலும் அது போலீஸ்காரர்களும் அழைப்பிதழ் வைப்பது போல் அவர்கள் மோப்பம் பிடித்துத் தேடத் தொடங்குவார்கள். அந்த வழியும் வேண்டாம்.

வினோதமான ஒரு வழியாக இருக்க வேண்டும்.

என்ன வழி என்று சற்று நேரம் யோசித்தான்.

தூக்கு தண்டனை கைதிகளுக்கு முன்கூட்டியே மரணம் அறிவிக்கப்படுவது போல் வேதாவுடைய மரணத்தையும் அறிவித்துவிட்டால்...?

தூக்கு தண்டனை கைதிகள் மரண நாள் நெருங்க நெருங்க ஓரளவு மரணத்திற்குத் தயாராகி விடுவார்கள். மிகப் பயந்தவர்கள் மாரடைப்பில் கூட இறந்து போவார்கள். மனதால் என்றைக்கோ செத்துப் போயிருப்பார்கள். மனதால் செத்துப்போனவர்கள் உடல்ரீதியாக சாக நேரும் போது நிறைய எதிர்ப்பு காட்ட மாட்டார்கள். சாவு ஏற்கனவே முடிவான ஒரு விஷயம்தானே என்று தயாராக இருப்பார்கள்.

அப்படிப்பட்ட ஒரு மனோரீதியான அணுகுமுறையைத் தான் வேதாவின் விஷயத்தில் கையாள வேண்டும் என்று தீர்மானித்தான்.

அந்தத் தீர்மானம் அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

அவனுடைய அறைக்குப் போனான். அவனுடைய அறை கிரீன் ஃபீல்டில் ஒரு ஹோட்டலில் மூன்றாவது மாடியில் இருந்தது.

அது ஒன்றும் வெகு நாகரீகமான லாட்ஜ் இல்லை. ஊட்டியில் டூரிஸ்டுகள் வரத் தொடங்கிய காலத்திலேயே கட்டப்பட்டு விட்ட லாட்ஜ் போலும்.

அதனால் வர்ணப்பூச்சுகள் இன்றி, குப்பைகள் எல்லாம் அகற்றப்படாமல் அழுக்கும். கறுப்புமாக இருந்தது அந்த லாட்ஜ்.

அங்கே திருட்டுக் காதலர்கள் வருவார்கள், காசு குறைவாய் உள்ள டூரிஸ்டுகள் வருவார்கள். வெள்ளைக்காரர்கள் வருவார்கள்.

அந்த லாட்ஜிற்கு இரண்டு வாசல், மோகனுக்கு அது ஒரு வசதியாக இருந்தது. அவன் எப்போது போகிறான், எப்போது வருகிறான் என்பதை யாரும் கண்டுகொள்ள முடியாது.

அந்த வசதிகளுக்காகத்தான் அங்கே அவன் அறை எடுத்திருந்தான். மாதாமாதம் வாடகைப் பணம் என்பது



அட்வான்ஸாகவே விடுதியை நடத்துபவரிடம் போய்ச் சேர்ந்து விடுவதால் மோகனைப் பற்றி விடுதிக்காரர் கவலைப்படுவதே இல்லை.

அறை எளிமையாக இருந்தது. ஒரு கட்டில் இரண்டு தலையணைகள். ஒரு மேசை. ஒரு நாற்காலி. ஒரு மண் குவளை. அதன் மேல் கவிழ்த்து வைக்கப்பட்ட எவர்சில்வர் டம்ளர். ஒரு ஷெல்ஃப். அதில் தொங்கிய உடைகள். கீழே தரையில் வைக்கப்பட்டிருந்த சூட்கேஸ். ஒரு பெரிய கண்ணாடி. அதன் கீழ் டிராயர். டிராயரில் மேக்-அப் சாதனங்கள்.

மோகனின் தொழிலுக்கு அந்த மேக்-அப் சாதனங்களை மூலதனமாக நினைத்துக் கொண்டிருந்தான்.

அறையில் நுழைந்ததும் பழையபடி மறுபடி மேக்-அப்பை மாற்றிக் கொண்டான். காலையில் தினகரைச் சந்திக்கப் போனபோது இருந்த அதே மேக்-அப்.

அறையைப் பூட்டிக்கொண்டு மறுபடி சாலையை அடைந்தான்.

பொதுத் தொலைபேசி கூண்டை அடைந்து, நம்பர் ஒற்றி 23546-ஐக் கூப்பிட்டான்.

முதல் மணி அடித்தவுடன் போன் மறுபக்கம் உயிர் பெற்றது.

க்ளிக் டக். யாரோ ரிசீவரை எடுத்திருந்தார்கள்.

மோகன் காசு போட்டான். எதிர் முனையில் இருந்து ஏதாவது குரல் வருகிறதா என்று காதில் வைத்துக் கேட்டான்.

எதுவும் இல்லை. மகா அமைதி.

எதிர்முனை போன் ஏர்-டைட்டான ஓர் அறையில் வைக்கப்பட்ட மாதிரி சுற்றொலிகள் எதுவும் கசியாமல் மவுனமாக இருந்தது.

''மோகன்'' என்றான் மோகன்.

''ஹலோ'' என்று ரகசியமான பெண்குரல் ஒன்று பதிலாக வந்தது, ''நான் மாயா.''

''கம்ப்யூட்டர் பெண்?''

''ஆம். ஆம். ஆம்.''

''மாயா. அழகான பெயர். நான் மிக ரசிக்கிறேன்.''

''தாங்க்ஸ். பெயரை மட்டுமா, மோகன்?''

''இப்போதைக்கு ஆம்.''

''வெரி க்ளவர்.''

''என் புத்திசாலித்தனம் இருக்கட்டும் மாயா. நான் உங்களை நீ என்று ஒருமையில் உரிமையோடு கூப்பிடலாம் இல்லையா?''

''பை ஆல் மீன்ஸ். தாராளமாகக் கூப்பிடலாம். நான் நட்பை விரும்புகிறவள்.''

''நானும் நட்பை விரும்புகிறவன்தான். எதுவும் தப்பாக எண்ணாமல் உன்னை, 'உன்னை' என்று கூப்பிட அனுமதித்தாயே. தாங்க்ஸ். சொல். எதற்கு உன்னைத் தொடர்பு கொள்ளச் சொன்னாய்?''

''போனில் பேச முடியாது மோகன். நேரில் வா. சொல்கிறேன். நீ வர வேண்டும். வரவேண்டியது அவசியம்.''

''இடத்தைச் சொல்.''

''ஃபேர்ன் ஹில் குவார்ட்டர்ஸ் தெரியுமா?''

''ம்.''

''அதேதான். பத்தாம் நம்பர் வீடு.''



''வருகிறேன்.''

''எப்போது?''

''இப்போது?''

''ரைட். உனக்காகக் காத்திருக்கிறேன். உனக்கு என்ன பிடிக்கும் சொல் வைத்துக்கொண்டு காத்திருக்கிறேன்.''

''எனக்கு ஸ்காட்ச் பிடிக்கும். ஸ்காட்சுடன் சாப்பிட ப்ளம் கேக் பிடிக்கும்.''

''வித்தியாசமான டேஸ்ட். உடனே வா. தினகரின் கேஸில் நீ ஈடுபடுவதற்கு முன் என்னை வந்து சந்திக்க வேண்டும் நீ.''

''ரைட்'' என்றான் மோகன்.

ரிசீவரை ஹுக்கில் மாட்டினான். டொக் டக் என்று அவன் போட்ட காசை மிஷின் ஜீரணிக்கும் சத்தம் கேட்டது.

மாயா.

உச்சரிக்கும் போதே போதையாக இருந்தது. எதற்கு அழைக்கிறாள்? அது அவளுடைய வீடு என்றால் அங்கே அவள் தனியாகவா இருக்கிறாள்? வீட்டில் அம்மா, அப்பா என்று யாருமே இருக்க மாட்டார்களா?

இதில் என்னவோ ஒரு நிழல் படிந்து இருப்பதாகத் தோன்றியது அவனுக்கு. வருவது வரட்டும் என்று மாயாவை நோக்கிப் புறப்பட்டான் மோகன்.



# 6

ஃபேர்ன்ஹில் குவார்ட்டர்ஸ்.

ஊட்டியில் இருந்து சற்று விலகி இருக்கும் பிரதேசம். மனிதர்கள் அதிகமாக வராத

இடம். ஊட்டியின் சுற்றுப்புற கிராமங்களில் இருக்கும் சிறு சிறு வீடுகளில் அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வசிப்பார்கள். சுற்றுலாப் பயணிகள் எல்லாம் வந்து தொந் தரவு செய்யாத இடம். அதே மாதிரி ஃபர்ன்ஹில் குவார்ட் டர்ஸும் அமைந்திருந்தது.

நம்பர் பத்து குரோட்டன்களுக்கு நடுவில் ஒளிந்திருந்த மாதிரி அமைந்திருந்தது. வீட்டுக்கு நேர் எதிரே மலைச்சரிவு. சரிவின் கீழே வளைந்து வளைந்து சென்ற கறுப்பு ரிப்பன் சாலை. அந்தச் சாலையில் ஏதோ ஒரு பாறை மறைத்த பகுதியில் ஒரு லாரி மேடேறிக் கொண்டிருந்தது. இன்ஜினின் ரீங்காரம் மட்டும் மோகனின் காதுகளை எட்டியது. லாரி தெரியவில்லை. ஒரு டாட்டா சுமோ இறக்கத்தில் எந்தவித சத்தமும் இன்றி பொம்மை போல ஊர்ந்து இறங்கியது. அந்த நான்கு மணி மாலை வெயிலில் ஓர் ஓவியக் காட்சி போல் தெரிந்தது.

பத்தாம் நம்பர் வீட்டுப்படியை மோகன் மிதித்தவுடன் கதவு திறந்து கொண்டது.

''வெல்கம்'' என்றாள் மாயா.

மாயா!

கம்ப்யூட்டர் டேபிள் அருகே பார்த்தபோது மாயாவை அவ்வளவு அழகியாக இருப்பாள் என்று அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

மாயா அவ்வளவு அழகியாக இருந்தாள்.

அழகு என்றால் வெறும் முக அழகு மட்டும் இல்லை.

அவள் உடலின் ஒவ்வொரு பாகமும் செதுக்கப்பட்டது போல் இருந்தது. இடுப்பின் சரிவு. வயிறின் குழைவு. எல்லாம்.



உள்ளே நுழைந்தவுடன் கதவைச் சாத்தினாள்.

''உட்கார் மோகன்'' என்றாள்.

உட்கார்ந்தாள். அவனுக்கு எதிரில் டீப்பாய் இருந்தது. ஸ்காட்ச் இருந்தது. இரண்டு கோப்பைகள் இருந்தன. ஆரஞ்சு ஜூஸ் இருந்தது. ஒரு ப்ளேட்டில் ப்ளம் கேக்குகள். கூடவே இன்னொரு தட்டில் ஆவியுடன் சிக்கன் டிக்கா.

''என்ன பார்க்கிறாய்? இந்த வீட்டில் நான் மட்டும் தான். அம்மா, அப்பா எல்லாம் கோயமுத்தூரில் இருக்கும் அக்கா வீட்டிற்குப் போய் இருக்கிறார்கள். இரவு வந்து விடுவார்கள். அதனால் பரவாயில்லை. நீ இங்கே ஃப்ரீயாக இருக்கலாம்.'' என்று அருவி போல் பேசிக் கொண்டே ஸ்காட்சை எடுத்து ஒரு கோப்பையில் இரண்டு விரற்கடை ஊற்றினாள். அவளுக்கு ஒரு கோப்பையில் ஆரஞ்சு ஜூஸை ஊற்றிக் கொண்டாள்.

அவன் ஸ்காட்சை எடுத்து மெல்ல சீப்பத் தொடங்கினான். துளித்துளியாய் நெருப்பு அவன் தொண்டையில் இறங்கி மார்பில் பரவியது. மாயா ஆரஞ்சு ஜூஸை எடுத்து உறிஞ்சத் தொடங்கினாள்.

பேச்சு சற்று நேரம் பொதுவாக இருந்தது. மாயாவின் சொந்த ஊர், பிறப்பு, வளர்ப்பு, அக்கா என்று சற்றுநேரம் சுற்றி வந்தது. அவளுடைய வருமானத்தில்தான் இப்போது குடும்பம் நடப்பது பற்றியும், அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையே நடக்கும் ஈகோ சண்டை பற்றியும் தெரிந்து கொள் வது அவனுக்கு அவசியமற்ற ஒன்று என்று அவனுக்குத் தோன்றிய நேரத்தில் அவனுள் லேசாக உற்சாகத் தெர்மாமீட் டரில் கோடு மேலேறிக் கொண்டிருந்தது.

''மாயா. நீயும் ஒரே ஒரு ஸிப் ஸ்காட்ச் குடித்துப் பாரேன்'' என்றான் பேச்சை மாற்றுவதற்காக.

மாயா தயங்கவில்லை. அவளுடைய டம்ளரில் ஸ்காட்ச் ஊற்றிக் கொண்டாள். ஸிப் பண்ணத் தொடங்கினாள்.

''என்னை ஏன் வரவழைத்தாய் மாயா? உன் குடும்பம் பற்றிப் பேசவா?''

''நிச்சயமாக இல்லை'' என்றாள் மாயா. ''உன்னிடம் சில படங்கள் காட்ட வேண்டும். அதற்காகத்தான் அழைத்தேன்.''

''என்ன படங்கள்?''

''என்னோடு வா'' என்று எழுந்தாள்.

மோகன் எழுந்தான். ஸ்காட்ச்சின் தீவிரம் அவனை லேசாகத் தடுமாற வைத்தது.

அவள் வீட்டினுள் சென்றாள். அசைந்த அவளது பின்பக்கங்கள் மோகனின் நரம்புகளை ஸ்காட்சின் உதவியோடு முறுக்கேற்றி விட்டன.

மோகன். வேண்டாம். அமைதிப்படு. பஞ்சும் நெருப்பும் என்று இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். பற்றும் போது நெருப்பு பின்விளைவுகளைப் பற்றி யோசிப்பதில்லை. நீயும் அப்படி பின்விளைவுகளை யோசிக்காமல் இருந்துவிடாதே.

மோகன் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு நடந்தான்.

மாயா ஒரு படுக்கை அறையில் நுழைந்தாள். அதில் இருந்த ஓர் அலமாரியைத் திறந்தாள். அதிலிருந்து ஒரு போட்டோ ஆல்பத்தை எடுத்தாள்.

''இதைப் புரட்டிப் பார்'' என்றாள்.

மோகன் கட்டிலில் அமர்ந்து கொண்டு அதைப் புரட்டினான்.



முதல் பக்கத்து போட்டோவிலேயே அவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

முதல் போட்டோவில் மாயாவும், வேதாவும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடி காட்சி அளித்துக் கொண்டிருந்தார்கள்.

இருவர் முகங்களிலும் சிரிப்பு.

அடுத்தடுத்த போட்டோக்களில் வேதாவும், மாயாவும் இணைந்திருந்த காட்சிகள் தான்.

''இது வேதாவும் நானும் மலப்புழாவிற்கு போன போது எடுத்தது.''

''இது வேதாவும் நானும் திருவனந்தபுரம் போன போது எடுத்தது.''

''இது மைசூர் பிருந்தாவன். இந்த செடி யானைக்குப் பக்கத்தில் நின்று எடுத்தே ஆக வேண்டும் என அடம்பிடித்து அவள் எடுத்துக் கொண்டது.''

ஒவ்வொரு போட்டோவிற்கான விளக்கத்தின் போதும் மாயா அவனை இன்ச் இன்ச்சாக நெருங்கி இருந்தாள். அவள் உடல் அவன் மேல் எங்கெங்கோ பட்டது அவனுக்கு இன்ப வேதனையாக இருந்தது.

அவளுடைய விஸ்கி கலந்த வெப்பமான மூச்சுக்காற்று அவனைத் தகித்தது.

மாயாவும், வேதாவும் இவ்வளவு நெருங்கிய தோழிகள் என்ற செய்தி அவனுக்கு அதிர்ச்சியாகக் கூட இருந்தது.

''ஏன் மாயா, நீயும் வேதாவும் இவ்வளவு நெருங்கிய நண்பர்களா? ஐ மீன் தோழிகளா?'' என்று கேட்டுக் கொண்டே திரும்பினான் மோகன்.

அவன் உதடுகள் மிக நெருக்கத்தில் இருந்த அவள் உதடுகளைப் பக்கத்தில் உரசி மயங்கின.

அவ்வளவுதான்.

மோகன் தனது கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை அறியாமல் அறுத்துக் கொண்டு வெளிப்பட்டான்.

மீனின் வாய் மூச்சுக்குத் திறப்பது போல, குஞ்சுப் பறவையின் அலகுகள் தாய் தரும் தீனிக்குத் திறப்பது போல அவளது உதடுகள் மெல்லப் பிளந்து திறந்தன.

அவளது அபாரமான பல்வரிசை, பெப்பர்மின்ட் சுவாசம்.

''கிஸ் மீ மோகன்'' என்றாள்.

மோகன் அவளை அப்படியே சாய்த்தான்.

அரைமணி நேரத்திற்குப் பின் மோகனை ஒரு குற்ற உணர்வு தாக்கியது. மாயா எழுந்தாள். டாய்லெட்டிற்குள் நுழைந்து வெளிப்பட்ட போது மறுபடி ப்ளாஸ்டிக் உறையில் இருந்து உருவப்பட்ட பூங்கொத்து போல மென்மையாக, புதிதாக வெளிப்பட்டாள்.

அவனைப் பார்த்த பார்வையில் வெட்கம் இருந்தது.

தலைகுனிந்தாள். அவள் கண்கள் மோகனின் கண்களைச் சந்திக்க மறுத்தன.

''ஸாரி மாயா'' என்றான் மோகன்.

''எதற்கு?'' என்றாள் மாயா புருவங்களை ஆச்சரியமாய் உயர்த்தி.

''உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்.''

''நானும் தான்.''



''தப்பாக நடந்து கொண்டு விட்டேன்.''

''தப்பு, ரைட் எல்லாம் நம்மைப் போன்ற மனிதர்கள் வரையறுப்பதுதான் மோகன். எனக்குப் பிடித்த ஹோட்டலில் ஒருவேளை சூப் அருந்தினால் அது தப்பாகி விடுமா? அது போலத்தான் இது என்று நினைத்துக் கொள்ளேன். என்ன?''

''சரி'' என்றான் மோகன். ஸ்காட்ச் கிளாஸைக் கையில் எடுத்துக் கொண்டு.

''நீ வேதாவைக் கொல்லத்தான் போகிறாயா மோகன்?''

மாயா மிக மென்மையான குரலில்தான் கேட்டாள்.

ஜப்பான் மீது வெடிகுண்டு விழுந்தபோது கூட சத்தமின்றி அமைதியாகத்தான் விழுந்தது.

அது போலத்தான் தோன்றியது மோகனுக்கு.

சடாரென்று திரும்பி மாயாவைப் பார்த்தான்.

மாயா சின்னதாகத் தலையைச் சாய்த்து இருந்தாள். அவள் உதடுகளில் ஒரு சின்னப் புன்முறுவல் ஒன்று அமர்ந்திருந்தது.

சற்று நேரத்திற்கு முன் அவளுடன் தான் இருந்ததை, அதனால் தான் அடைந்த ஆனந்தத்தை எண்ணிப் பார்த்தான்.

''மாயா.. மாயா...'' என்று வார்த்தை வராமல் திணறினான்.

''சொல்லு மோகன். நீ வேதாவைக் கொல்லப் போகிறாயா?''

''அது எப்படி உனக்குத் தெரியும் மாயா?''

''தெரியும். தினகரிடம் நான் எவ்வளவு நாட்களாக செக்ரட்டரியாக இருக்கிறேன். வேதாவிடம் எவ்வளவு நெருங்கிய தோழியாக இருக்கிறேன். வேதா - தினகர் காதல் தெரியாமல்

இருக்குமா? வேதாவும் தினகரும் மிகவும் நெருக்கமாக இருந்த விவரம் தெரியாமல் இருக்குமா? நான் தினகரின் அறையில் ஒரு மைக்ரோபோனை வைத்திருக்கிறேன். அதன் மூலம் தினகர் பேசுவதை எல்லாம் ஒட்டுக் கேட்டு விடுவேன். அப்படித்தான் இப்போது ஒட்டுக் கேட்டேன். உன்னிடம் போட்டோ கொடுத்தது, முகவரி கொடுத்தது, அட்வான்ஸாகப் பத்து லட்சம் கொடுத்தது எல்லாம் எனக்குத் தெரியும் மோகன்.அதனால்தான் உன்னைப் பார்க்க வேண்டும் என்று கூறினேன். சொல். நீ வேதாவைக் கொல்லப் போகிறாயா?''

''கை நீட்டிப் பணம் வாங்கிவிட்டேன். கொன்றுதான் ஆகவேண்டும்.''

''கொல்லாதே மோகன். பணத்தோடு எங்கேயாவது காணாமல் போய்விடு.''

''ஏன்?''

''நீ உயிரோடு இருக்க வேண்டாமா மோகன்?'' என்று நிதானமாய்க் கேட்டாள் மாயா.

''இது என்ன ப்ளாக்மெய்லா மாயா?''

''இல்லை. உன் பேரில் இருக்கும் அக்கறையால் சொல்கிறேன். வேதா ஒரு காலத்தில் என் தோழி. ஆனால் இப்போது இல்லை. நான் தினகரிடம் வேலைக்குச் சேர்ந்தவுடனேயே அவள் என் மூலமாகத் தினகருக்கு அறிமுகமாகிவிட்டாள். உடனே தன் சாமர்த்தியத்தை உபயோகித்து தினகரைக் காதலித்தாள். தினகர் அவள் விரித்த வலையில் அழகாக விழுந்தான். காதல் கடிதங்கள் எழுதினான். அவளுடன் வெகு அந்தரங்கமாக இருந்தான். அவள் அவன் கருவைச் சுமக்கத் தொடங்கியவுடன் கல்யாணப் பேச்சை எடுத்தாள். தினகருக்கு அவளைக் கல்யாணம் செய்யும் எண்ணம்



கிடையாது. ஆனால் வேதாவிற்கு அவனை அவ்வளவு சுலபமாக விட்டுவிடும் எண்ணம் கிடையாது. அவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அத்தனை கோடிகளுக்கும் சொந்தக்காரியாக வேண்டும் என்பதுதான் அவள் லட்சியம். அந்த லட்சியத்திற்கு யார் இடையூறாக இருந்தாலும் அவள் அழித்து விடுவாள்.எனக்கு வேதா பற்றித் தெரியும். அதனால்தான் நான் ஒதுங்கிக் கொண்டேன். நீயும் ஒதுங்கி விடு.''

''மாயா. உளறாதே. வேதா என்ன சூனியக்காரியா? கேவலம் ஒரு பெண். அவளால் என்ன செய்து விடமுடியும்?''

''உனக்கு வேதா பற்றித் தெரியாததால் இப்படி எல்லாம் கேட்கிறாய். எனக்கு அவளைப் பற்றித் தெரிந்ததால்தான் உன்னை இவ்வளவு எச்சரிக்கிறேன். ஊர் உலகத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஒரு லட்ச ரூபாய்க்கு ஒன்பது பேரைக் கொல்லக்கூடியவர்கள். அத்தனை பேரையும் விட்டுவிட்டு தினகர் ஏன் இருபது லட்ச ரூபாய்க்கு உன்னை விலை பேசவேண்டும்?''

மாயா சொன்னதில் அர்த்தம் இருந்தது.

''ஆம். ஏன்?''

''நீதான் இளித்தவாய் என்பதால், ஏற்கனவே இரண்டு பேர் வேதாவைக் கொல்லப் பார்த்துவிட்டு முடியாமல் இந்த ஊட்டியின் பள்ளத்தாக்குகளில் எலும்பாய் கிடக்கிறார்கள். நீ மூன்றாவது ஆள்.''

''என்ன?'' என்றான் மோகன். அவன் உடல் சிலிர்த்தது.

மாயா அவனுடைய கோப்பையில் இன்னும் கொஞ்சம் ஸ்காட்சை ஊற்றினாள்.



# 7

திரும்பி வரும்போது மோகனின் மனதை மாயாவை விட வேதாதான் நிறைத்திருந் தாள்.

வேதா அவ்வளவு தூரம் மோசமான வளா?

பத்து லட்ச ரூபாயைப் பறிகொடுத்துவிட்டு தினகர் அவ்வளவு எளிதில் சும்மா இருந்து விடுவானா?

ஒரு பெண் இவ்வளவு கொடூரமாக இருக்கிறாள் என்றால் அவளைக் கொல்வதில் என்ன தவறு?

வயலில் இருக்கும் களையைப் பிடுங்கவும், காலடியில் ஓடி வந்து கொண்டிருக்கும் நட்டுவாக்கலியைக் கொல்ல வும் யாராவது யோசிப்பார்களா?

அவன் பஸ்ஸில் வந்து பஸ் ஸ்டாண்டில் இறங்கிக் கொண்டான்.

அறைக்குப் போக பிடிக்கவில்லை. வேதாவின் முகவரி அவன் மனதில் இருந்தது. ஃபிங்கர் போஸ்ட். அங்கே செல்வதற்கு இன்னொரு பஸ்ஸில் ஏறவேண்டும்.

சேரிங்கிராஸ் பக்கம் போய் ரொம்ப நாட்கள் ஆகிறது.

அங்கேதான் ஒரு டீக்கடையில் காலிஃப்ளவர் மாசலா சூடா கக் கிடைக்கும். அதைச் சாப்பிட வேண்டும் போலிருந்தது.

சேரிங்கிராஸ் நோக்கிப் போனவன், 'இண்டியா பேக்கரி' என்ற ரொட்டிக் கடையில் இருந்து இறங்கிய ஒரு பெண்ணைப் பார்த்து அதிர்ந்தான்.

அது வேதா.

வேதா உண்மையிலேயே மகா அழகியாகத்தான் இருந் தாள். அவள் சேலை கட்டியிருந்த விதம், தலைவாரியிருந்த



விதம், பொட்டு வைத்திருந்த விதம் எல்லாம் இணைந்து அவளை உலக அழகி லெவலுக்குக் கொண்டு போயின.

போட்டோவில் உயிரற்ற பிம்பமாகப் பார்த்தபோது தெரி யாத அழகு, அத்தனையும் இப்போது நேரில் பார்த்த போது தெரிந்தது.

மோகன் அப்படியே ஒதுங்கி நின்றான். வேதா அவனை இப்போது பார்க்கக் கூடாது. அது முக்கியம்.

அவள் பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தாள்.

அவள் நடையில் தெரிந்த நளினம் அவனுள் கவிதை களைப் பிறக்க வைத்தது. தென்றலில் அசையும் ரோஜாவைப் போல் அசைந்து, அசைந்து சென்ற அவளைப் பற்றியா மாயா இப்படி எல்லாம் சொன்னாள்.

வேதா பஸ் ஸ்டாண்ட் அருகே நெருங்கிய போது, திடீரென்று நான்கு பேர் அவளை நெருங்கினார்கள்.

அவர்கள் நான்கு பேரும் நிச்சயம் முரடர்கள். அவர்களைப் பார்த்தாலே அது எழுதிவைத்த மாதிரி தெரிந்தது.

அவர்கள் நால்வரும் வேதாவை நெருங்கியபோது வேதா பயந்தாளா இல்லையா என்று புலப்படவில்லை. ஆனால் மோகன் ஆர்வமாகக் காத்திருந்தான்.

வேதா அலறவில்லை. பயப்படவில்லை. மெதுவாகப் பின்னால் திரும்பினாள். அவன் இருந்த திசையைப் பார்க்க முயற்சி செய்தாள் என்று அவனுக்குத் தோன்றியது.

மோகன் சட்டென்று அங்கே இருந்த நிழலில் ஒதுங் கினான்.

வேதா இப்போது நன்றாகத் திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் என்ன உணர்ச்சி விளையாடுகிறதென இங்கே யிருந்து பார்க்கும்போது புலப்படவில்லை.

அவள் மறுபடி திரும்பி பழையபடி நடந்தாள். அவர்கள் நால்வரும் விலகிக் கொண்டார்கள்.

பஸ்-ஸ்டாண்டில் இருந்து புறப்பட்ட பஸ் ஒன்றில் ஏறினாள்.

அது எங்கே போகிறதென்று மோகனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. பஸ்ஸை நோக்கி விரைவாக நடந்தான்.

கால் ஷூவில் ரப்பர் கட்டை வைத்திருந்ததால் அவனால் ஓட முடியவில்லை.

பஸ் ஸ்டாண்டை விட்டு வெளிப்பட்டு உடனே இடது, இடது என்று திரும்பி அவனிடமிருந்து விலகிச் சென்றது.

அவன் பஸ்-ஸ்டாண்டை நெருங்கியபோது அந்த நால்வரும் மறுபடியும் இருட்டில் இருந்து திடீரென முளைத்தார்கள்.

மோகன் குழம்பிப் போனான்.

அவர்கள் அவனை மெல்ல, மெல்ல நெருங்கினார்கள்.

அவர்களில் ஒருவன் சட்டென்று ஒரு கத்தியை உருவினான்.

இன்னொருவன் சட்டைக் காலருக்குப் பின்னால் இருந்து ஒரு உருட்டுக் கட்டையை எடுத்தான்.

''என்ன பிரதர்? தனியாக இருக்கும் பெண்ணிடம் வம்பு பண்ணுகிறாயா? ''

''இல்லை. நான்.. நான்...''

''டேய். எனக்கு உன்னைத் தெரியும். உன்னை மாதிரி எத்தனை ஆட்களை நாங்கள் பார்த்திருப்போம்? இன்றைக் குத்தான் பொம்பளை பொறுக்கியை நாங்கள் பார்த்திருப்பது போல் பேசுகிறாயே.''



''நான் என்ன சொல்கிறேன் என்றால்...''

''நீ ஒரு மயிரும் சொல்ல வேண்டாம்.''

எப்போது அவர்கள் அடித்தார்கள் என்றே தெரியவில்லை. ஒருவன் மோகனின் தோளில் கட்டையை இறக்கியிருந்தான்.

சற்று தூரத்தில் பஸ் - ஸ்டாண்ட். அங்கே ஆயிரம் மக்கள். அப்படி இருக்கும்போது இவர்கள் அவனைச் சூழ்ந்து அடிக் கிறார்கள் என்றால் அவர்களுக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்!

அவன் ஓடத் தொடங்கினான்.

''வேதாம்மாவை ஃபாலோ பண்ணிவிட்டு நீ தப்பித்து ஓடி விடுவாயா என்ன? டேய். அவனைப் பிடியுங்கள்.'' என்று ஒருவன் கூச்சலிட்டான்.

மோகன் ஓடினான். அவனுக்குக் கிடைத்த ஒரே வழி ஏரிக்கரை பக்கம்தான்.

அந்தத் திசையில் ஓடினான்.

*'நீதான் இளித்தவாய் என்பதால். ஏற்கனவே இரண்டு பேர் வேதாவைக் கொல்லப் பார்த்துவிட்டு முடியாமல் இந்த ஊட்டியின் பள்ளத்தாக்குகளில் எலும்பாய்க் கிடக்கிறார்கள். நீ மூன்றாவது ஆள்.'*

மாயா சொன்ன வாக்கியங்கள் அவன் மனதில் மின்ன, மோகன் ஓடினான்.

அது இரவு நேரம். வானில் நிலவை மேகம் மூடியிருந்தது. காற்றில் இருந்த குளிர் மக்களை ஏரிப்பக்கம் அந்த இரவு நேரம் வராமல் செய்திருந்தது.

எனவே ஏரிக்கரையில் அவன் மட்டும் தனியனாய் உணர்ந் தான்.

மட்டக் குதிரைகள் ஒரு நான்கைந்து மலைச் சரிவில் வளர்ந்திருந்த புற்களை மேய்ந்து கொண்டிருந்தன.

மோகன் அந்தக் குதிரைகளை நெருங்கி ஒரு குதிரையை பலங்கொண்ட மட்டும் உதைத்தான்.

அது கனைத்துக் கொண்டு நடுச்சாலைக்கு ஓடியது.

மற்ற குதிரைகளும் பயந்து நடுச்சாலைக்கு ஓடின.

மோகனைத் துரத்தி வந்தவர்கள் குதிரைகளால் ஓட்டம் தடைப்பட்டார்கள்.

ஆனாலும் ஒரு வினாடிதான்.

மறுபடி சுதாரித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

மோகனுக்கு மூச்சிரைத்தது.

ஹா, ஹா என்று மூச்சு விட்டான். வாய் திறந்து, கண்கள், விரிய, வயிறின் குடல் குலுங்கி வலிக்க அவன் ஓடிய ஓட்டம் இதுவரை அவன் அறியாத ஒன்று.

பின்னால் அவர்களின் காலடிகளின் தப.. தப...

அவர்கள் நெருங்குகிறார்கள். நிராயுதபாணியாக அவர்களிடம் மாட்டிக் கொள்ளாதே. ஓடு.. ஓடு... ஓடு...

மோகன் ஓடினான்.

அவர்களைத் துரத்தி வந்த நால்வரில் ஒருவன் தன் கையில் இருந்த கட்டையைச் சுழற்றி வீசினான்.

அது பூமராங்போல சுழன்று, சுழன்று வந்து மோகனின் இரு கால்களுக்கிடையில் நுழைந்து அவன் கால்களை மிகப் பலமாகத் தாக்கியது.

மோகன் வலி தாங்காமல் அலறினான்.



அவன் ஓட்டம் தடைப்பட்டது. ரேஸ் குதிரையின் கால் மடங்கிய மாதிரி அவன் கீழே விழுந்தான்.

அவன் மூச்சிரைப்பு அவனை அலறக்கூட அனுமதிக்க வில்லை.

அவர்கள் நான்கு பேரும் அவனைச் சூழ்ந்தார்கள்.

ஒருவன் அப்படியே மடங்கி முட்டியால் அவன் வயிற்றில் மோத, மோகனின் வாயில் இருந்து குபுக் என்று திரவம் வெளிப்பட்டது.

"ஏண்டா நாயே. உனக்கு வேதாம்மா மேல் கைவைக்கும் அளவிற்கு துளிர்த்து விட்டதா? நீ என்ன அவ்வளவு பெரிய ஆளா? அவ்வளவு பெரிய ரவுடியா? உன்னை... உன்னை... என்ன செய்யலாம் பிரதர்?'' என்று அவன் நிமிர்ந்து மற்ற மூவரிடம் கலந்தாலோசித்தான்.

''கொல்.. கொல்.. கொன்றுவிடு. ஒரு கல்லைக்கட்டி உடலை ஏரியில் வீசிவிட்டால் அந்த உடல் மேலே வர எப்படியும் ஆறு மாசம் ஆகும். மேலே வந்தாலும் வரலாம். இல்லாவிட்டால் அப்படியே கீழே இருக்கும் சேறில் மாட்டிப் புதைந்து போகலாம். யோசிக்காதே. கொன்று விடு."

அவன் சட்டென்று ஒரு பட்டனை அழுத்த, ப்ளேடு ஒன்று எட்டிப் பார்த்தது. ரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் இருந்து வந்த விளக்கு வெளிச்சத்தில் கத்தி பிரதிபலித்து நட்சத்திரங்களை வாரி இறைத்தது.

அவன் கத்தியை உயர்த்தினான்.

"நோ.. நோ.. நோ..." என்று மோகன் கத்தினான்.

அவனால் கைகளை அசைக்க முடியவில்லை. காரணம் இரண்டு கைகள் மேலும் ஒருவன் ஷூக் கால்களால் அழுத்தி நின்றிருந்தான்.

அவனால் கால்களை அசைக்க முடியவில்லை. காரணம் அவனது இரு கால்கள் மேலும் ஒருவன் உட்கார்ந்திருந்தான்.

உயர்த்தப்பட்ட கத்தி கீழே இறங்கப்போகும் தருணத்தில் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

ஏரிக்கரையின் திருப்பத்தில் இருந்து ஒரு கார் தனது ஹெட்லைட் வெளிச்சத்துடன் திரும்பியது.

ஹெட்லைட் வெளிச்சம் சாலையைப் பெருக்கிக் கொண்டே வந்தது.

அவர்கள் நால்வரும் சட்டென்று அவனை அப்படியே நடுச்சாலையில் விட்டுவிட்டு ஓடத் தொடங்கினார்கள்.

கார் அவன் அருகில் வந்து நின்றது.

காரின் டிரைவிங் சீட்டில் இருந்து ஒரு டிரைவர் இறங்கினான்.

மோகன் அருகில் ஓடி வந்தான்.

"என்ன ஆயிற்று?" என்று பரபரப்பாகக் கேட்டுக் கொண்டே மோகனுக்குக் கை கொடுத்தான்.

''வழிப்பறி'' என்றான் மோகன் சுருக்கமாக.



## 8

மோகனின் ஆத்திரம் ஒரு எரிமலைக்கு இருக்கும் ஆத்திரத்தைவிட அதிகமாய் இருந்தது.

ஒரு பெண், இவ்வளவு தூரம் தன்னை மிரட்டுவதா? அடியாட்களை வைத்து மிரட்டும் அளவு இருக்கிறாள் என்றால் அவள் எவ்வளவு தைரியசாலியாய் இருக்க வேண்டும்.



அவளைக் கொல்லாமல் விடக்கூடாது.

நேரடியாக மோதுவது நிச்சயம் ஆபத்தான விஷயம்.

உடல்பலம் என்பது வேறு, மனபலம் என்பது வேறு.

வேதாவின் மனபலம்தான் அவளை இந்த அளவு நடந்து கொள்ள வைக்கிறது. அந்த மனதை முதலில் அடித்து நொறுக்க வேண்டும். அதில் பீதியை நுழைக்க வேண்டும்.

எவ்வளவு பெரிய பலசாலியாக இருந்தாலும் கண்ணுக்குத் தெரியாத எதிரி என்றால் பயந்துதானே போகிறான்.

இந்திரஜித் அப்படி மாயாவியாய் இருந்துதானே ராமாயணத்தில் ஒரு சூறாவளியைக் கிளப்பினான்.

மோகன் அந்த வழிதான் சிறந்த வழி என்று தீர்மானித்தான்.

யோசித்தான்.

தீர்மானித்தான்.

முடிவெடுத்தபடி செயல்படுவதற்காக, மேக்-அப் டிராயரைத் திறந்தான்.

வேதாவிற்கு ஆச்சரியமாய் இருந்தது.

திடீர் திடீர் என்று அவளுடைய வாழ்க்கையில் வினோதமான நிகழ்ச்சிகள் நடக்கிற மாதிரி அவளை ஓர் உணர்வு தாக்கியது.

நேற்று அப்பாவின் பேக்கரியில் இருந்து வீட்டிற்குப் போவதற்காக பஸ்-ஸ்டாண்ட் நோக்கி நடக்கும் போது அவளை யாரோ ஒருவன் தொடர்ந்து வந்த மாதிரி தோன்றியது.

அவளைத் தொடர்ந்தவனுக்கு ஒரு கால் ஊனம் போலும், சற்று விந்தி விந்தி நடந்து வந்தான். தாடி இருந்தது. குருவி

ஒன்று கூடு கட்டலாம் போல் அடர்ந்து வழிந்த தலைமுடி, கண்களைக் காட்டாமல் இருக்கவோ என்னவோ, இருள் நேரத்திலும் அவன் அணிந்திருந்த குளிர் கண்ணாடி.

அவளுக்கு பயமாக இருந்தது. எதற்காக அவன் அவள் பின்னால் வர வேண்டும்? கொள்ளையடிக்கவா? அவளிடம் இருக்கும் காசு பணத்தைப் பறிக்கவா? நிச்சயம் இந்த இடத்தில் அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லை. அவ்வளவு சுறுசுறுப்பான பிரதேசம் அது.

அதனால் பின்னால் வருபவனைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படாமல் நடந்த பொழுது திடீரென்று அலாவுதீன் விளக்கைத் தேய்த்து உருவான மாதிரி நான்கு தடி தடி ஆட்கள் அவளை வழிமறித்து நின்றார்கள்.

அவளுக்கு மூச்சே நின்று விட்டது.

கத்தவேண்டும் போல் தோன்றியது. ஆனால் பயம் அவளை அலற அனுமதிக்கவில்லை.

அவளுடைய கண்கள் விரிந்து, வாய் அகன்று கிட்டத் தட்ட மயங்கி விடும் நிலையை அவள் எய்திய போது, நால்வரில் ஒருவன் பேசினான்.

"மேடம் பயப்படாதீர்கள். நாங்கள் மஃப்டியில் இருக்கும் போலீஸ்காரர்கள். உங்களுக்குப் பின்னால் ஒரு ஆள் வரு கிறான். அவன் உங்களைத்தான் தொடர்ந்து வருகிறானா?"

வேதாவின் பயம் அப்படியே வடிந்து போனது.

ஹப்பாடா. போலீஸ்காரர்கள்தான். மெல்லப் பின்னால் திரும்பினாள். அவள் பின்னால் வந்து கொண்டிருந்தவன் ஒரு நிழலில் ஒடுங்குவது தெரிந்தது.

"ஆம். ஆனால் இப்போது அவன் நிழலில் மறைந்திருக் கிறான். அவன் என்னை ஃபாலோ செய்கிறானா, என்ன என்று



எனக்குத் தெரியவில்லை. ஆனால் என் பின்னால் வந்து கொண்டிருந்தான்."

"பரவாயில்லை மேடம். நாங்கள் ஈவ் டீஸிங் ப்ரவென்ஷன் ஃபோர்ஸைச் சேர்ந்வர்கள். டூரிஸ்ட் ஸ்பாட்களில் எல்லாம் ஈவ் டீஸிங் நிறைய இருப்பதால் கவர்ன்மென்ட் எங்களை இப்படி மஃப்டியில் செக் பண்ணச் சொல்லியிருக்கிறது. நீங்கள் எங்கே போக வேண்டும்?"

"ஃபிங்கர் போஸ்ட்."

"அதோ பஸ். புறப்படப் போகிறது. நீங்கள் போய் ஏறிக் கொள்ளுங்கள். நாங்கள் அவனைப் பார்த்துக் கொள்கிறோம்."

வேதா ஓடிப் போய் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். பஸ் உடனே புறப்பட்டு விட்டது. அந்த நான்கு போலீஸ்காரர் களும் அந்த விந்தி விந்தி நடந்த இளைஞனும் என்ன ஆனார் கள் என்று அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை.

இப்போது நினைத்தால் ஆச்சரியமாக இருந்தது. உடலில் ஒரு மின் அணு பாதம் முதல் உச்சி வரை புகுந்து புறப்பட்ட மாதிரி இருந்தது.

எதனால் இப்படி திடீரென்று நேருகிறது?

அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டாள்.

இன்றைக்கு அவள் எப்படியும் கோயமுத்தூர் போவது என்று தீர்மானித்திருந்தாள். கோயமுத்தூரில் அவளுக்கு வேலை இருந்தது. பேக்கரிக்கு வேண்டிய சில பேக்கிங் பவுடர், எஸன்ஸ் ஐட்டங்கள் எல்லாம் மொத்தமாக வாங்க வேண்டும்.

கோயமுத்தூரில்தான் கிடைக்கும். அப்பா அவளைப் போகவேண்டாம் என்று சொல்கிறார். ஆனால் அவளுக்கு

ஊட்டி அலுத்து விட்டது. அதனால் கோயமுத்தூர் போவதில் பிடிவாதமாக இருந்தாள்.

கோயமுத்தூர் பஸ்ஸில் ஏறி அமர்ந்தாள்.

மோகன் தாடி இல்லாமல் இருந்தான். அவனுடைய நைலான் பையில் வேறொரு வேடத்திற்கான ஏற்பாடுகள் இருந்தன. வேதாவை அவள் வீட்டில் இருந்து புறப்படும் போதில் இருந்து தொடர்ந்து வந்தான். வேதாவால் இந்த முறை அவன் தொடர்வதை அறிந்து கொள்ள முடியவில்லை. காலை நேரம் என்பதால் ஆபீஸ் போகிறவர்கள், டூரிஸ்டுகள் என்று நிறைய பேர் அலைந்து கொண்டிருந்ததால் அவன் அவளைத் தொடர்வதை வேதாவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

வேதா கோயமுத்தூர் செல்லும் பஸ்ஸில் ஏறியதும் அவன் புருவங்கள் லேசாக உயர்ந்தன. அவ்வளவுதான். மற்றபடி உணர்ச்சிகள் எதுவும் காட்டாமல் அவன் கோயமுத்தூர் பஸ்ஸில் ஏறி ஒரு மூலையில் அமர்ந்து ஒரு தினசிரியில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

கோவை. வேதா தேவையானவற்றை வாங்கிக் கொண்டாள். ஒரு ஜூஸ் கடையில் ஜூஸ் குடித்தாள். பசித்தது. ஹோட்டலில் தனியாக சாப்பிட அவளுக்கு விருப்பம் இல்லை. இப்போது சாப்பிட்டால் நிச்சயம் வாந்தி வரும் என்று தோன்றியது.

பஸ் பயணம் அவள் வயிற்றில் இருக்கும் கருவிற்கு ஒத்துப் போகவில்லை போலும். தலைசுற்றியது. அதனால் எலுமிச்சை ஜூஸே போதும் என்று தீர்மானித்து வாங்கினாள்.

ஜூஸ் குடிக்கும் போது ஃப்ளாஷ்பேக்காக அவளும் தினகரும் தலையைத் தலையை மோதிக் கொண்டு ஒரே டம்பளரில் ஜூஸ் குடித்தது நினைவிற்கு வந்தது.



அவள் காதலைப் பற்றித் தெரிந்தால் அப்பா என்ன நினைப்பார்? என்ன செய்வார்? அம்மா எப்படி எடுத்துக் கொள்வாள்?

இன்னும் ஆறு நாட்களில் தினகர் முடிவு தெரிவிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறான். அவன் முடிவு அவளுக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்று மிக விரும்பினாள்.

பாதகமாக இருந்தால் அவள் வாழ்க்கை என்ன ஆகும்?

கடவுளே, கடவுளே.

நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

அவள் ஜூஸ் டம்ளரை கடைக்காரனிடம் கொடுத்து விட்டு, காசைக் கொடுத்துவிட்டு, பஸ்-ஸ்டாண்ட் நோக்கி நடக்கும் போது எதிரில் அந்த வினோதமான ஆளைப் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டாள்.

சாலையில் அந்த ஆள் வந்து கொண்டிருந்தான். அவன் தலைமுடி மேலே தூக்கி கொண்டையாக வாரப்பட்டிருந்தது. மார்பில் ஒரு மான் தோல் போர்த்தியிருந்தான். இடுப்பில் ஒரு வேஷ்டி. இரு கால்களுக்கும் இடையில் நுழைந்து பின்னால் செருகப்பட்டிருக்க, கையில் ஒரு துந்தனாவுடன் வந்து கொண்டிருந்தான். அவன் தலையில் மயிற்பீலி செருகப்பட்டிருந்தது.

'ணிங், ணிங்' என்று ஒலி எழுப்பிக் கொண்டே வந்தவன் தன்னைக் கடந்து போகப் போகிறான் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது, சட்டென நின்றான்.

அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

அவள் கண்களைப் பார்த்தான்.

வேதாவின் கண்கள் லேசான பயத்தில் விரிந்தன.

"தாயீ.. தாயீ.. தாயீ.." என்று அவன் விம்மினான்.

''என்னப்பா?'' என்றாள் வேதா.

''நான்மறையைக் குறிக்கும் சொல்தானே தாயீ உன் பெயர்?''

''ஆமாம்!''

''வேதவல்லியா தாயி.''

''ஆமாம்! உனக்கெப்படித் தெரியும்?''

''நீ இப்போது கன்னி கழிந்து விட்டாய்தானே தாயீ?''

வேதாவிற்கு பக்கென்றது. அவள் கை அவளை அறியாமல் வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டது.

அவள் தலை மேலும் கீழுமாய் அசைந்தது.

''இப்படி ஒரு வரம் வாங்கி வந்திருக்கிறாயே தாயீ. இன்னும் ஆறே நாளில் உன் ஆவி அடங்கிப் போகும் தாயீ. போ. மனசைத் தேற்றிக் கொள். அடுத்த ஜன்மத்திலாவது ஆண்டவன் உனக்கு நல்ல பிறப்பை அளிக்கட்டும்.. போ தாயீ.. போ...''

சொல்லிவிட்டு அவன் ணிங், ணிங் என ஓசைப்படுத்திக் கொண்டே போய்விட்டான்.

வேதாவிற்கு தன்னைச் சுற்றியிருக்கும் எல்லாமே சுற்றுவது போல் இருந்தது. காலுக்குக் கீழே பூமி சரிவது போல் இருந்தது. உலகம் திடீரென்று இருண்டது.

நடுச்சாலையில் அவள் மடங்கி, தொய்ந்து, அறுந்த திரை போல் விழுந்தாள்.



## 9

மோகன் அவளிடமிருந்து விலகி பஸ்-ஸ்டாண்ட் டாய்லெட்டிற்குள் நுழைந்து தனது துந்தனா வேஷத்தைக் கலைத்தான். துந்தனா வெறும் டகர டப்பா ஒரு மரக்கம்பு. ஒரு கம்பி கொண்டது. அதை உடைத்து உருத்தெரியாமல் ஆக்கினான்.



முற்றிலும் புதிய ஆளாய், நாம் தினசரி சந்திக்கும் ஒரு எளிய, அப்பாவியான முகத்தோற்றத்துடன் வெளிப்பட்டான்.

வேதா நடுச்சாலையில் மயங்கி விழுந்தது அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. என்னையா ஆள் வைத்து அடித்து மிரட்டுகிறாய்? என்னையா கொல்லப் பார்க்கிறாய்? இதற்கு முன் இரண்டு பேரைக் கொன்று எலும்புகள் கூடக் கிடைக்காமல் செய்திருக்கிறாயா?

அவ்வளவு பெரிய ஆளா நீ?

உனக்கு அவ்வளவு வலிமையா?

உனக்கு இந்த மாதிரியான ஒரு அணுகுமுறைதான் சரிப்பட்டு வரும். பார்த்துவிடலாம். இன்றைக்கு ஆறாம் நாளுக்குள் உன் இதயம் தானாக அதன் துடிப்பை நிறுத்திக் கொள்ளாவிட்டால் என் பெயர் மோகன் இல்லை.

உன்னை ஊட்டியில் மறுபடி சந்திக்கிறேன் - வேதா. குட்பை.

மோகன், வேதா என்ன ஆனாள் என்பது பற்றிக் கவலைப்படாமல் மேட்டுப்பாளையம் பஸ்ஸில் ஏறினான்.

வேதாவிற்கு விழிப்பு வந்தது. சுற்றிலும் அவளையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த முகங்கள் அவள் கண் விழித்ததைக் கண்டதும் மெல்ல மெல்ல ஒன்றிரண்டாகக் கலையத் தொடங்கின.

சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

அவள் இருந்த இடம் ஒரு வீட்டின் முன் அறை.

''நான் எப்படி இங்கே வந்தேன்?'' என்று பக்கத்தில் இருந்த ஒரு பெண்ணைக் கேட்டாள் வேதா.

''நடு ரோட்ல திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துட் டேம்மா. நாங்கதான் உன்னை வீட்டுக்குள்ள கூட்டி வந் தோம். என்ன ஆச்சி? எதுக்கு மயக்கம் போட்டு விழுந்தே? பசி மயக்கமா? இல்ல உடம்புல வேற ஏதாவதா? உன் வீடு எங்கே? நல்ல வேளை. நாங்க பாத்துட்டோம். சட்னு உன்னைத் தூக்கிட்டு வந்துட்டோம். இல்லன்னா நீ உயிரோடு இருப்பி யான்னே தெரியாது. கோயமுத்தூர்ல இன்னிக்கு வண்டி ஓட்றவன் எல்லாம் கண்ணு மண்ணு தெரியாம ஓட்டறாங்க. ஒரு லாரி பஸ்னு எதிர் எதிர்ல. ஏதாவது ஒரு சக்கரம் ஏறி யிருந்தா என்ன ஆயிருக்கும் கண்ணு?'' என்று அந்த பெண் கேட்டாள்.

வேதாவிற்கு அந்த துந்தனாக்காரன் சொன்ன வாக்கு நினைவிற்கு வந்தது.அதனால் மயங்கி விழுந்தது புரிந்தது. அவள் உடல் அவளையறியாமல் இன்னொரு முறை சிலிர்த்தது.

எழுந்து கொண்டாள்.

''ஒன்றுமில்லை. சாதாரணமான தலை சுற்றல்தான். நான் புறப்படுகிறேன். எல்லாவற்றுக்கும் தாங்க்ஸ்'' என்று சொல்லி விட்டு அவர்களிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்து ஆட்டோ பிடித்து பஸ்-ஸ்டாண்டை அடைந்தாள். ஊட்டி பஸ்ஸில் ஏறினாள்.

அவள் மனம் துந்தனாக்காரனையே சுற்றிச் சுற்றி வந்தது.

திடீரென்று எதற்கு அவன் அவள் முன் வந்து நிற்க வேண்டும்? எதற்கு அவள் முகத்தைப் பார்த்து அவ்வளவு வாட்டமடைய வேண்டும்? எதற்கு அவள் பெயரை அவ் வளவு சரியாகச் சொல்லி அவள் பிரமிப்படையச் செய்ய வேண்டும்? எதற்கு அவள் வயிற்றில் கரு சுமப்பதை அவ்வளவு தெளிவாகச் சொல்ல வேண்டும்? கடைசியில் எதற்காக அவள் ஆறு நாட்களில் இறந்து விடுவாள் என்னும்



கறுப்புச் செய்தியைச் சொல்லிவிட்டு அவளிடம் இருந்து விலக வேண்டும்?

உலகில் பிறந்த அத்தனை பேருக்கும் வாழ வேண்டும் என்ற ஆசைதான் பிரதானமாக இருக்கும். தொழுநோய் வந்து உடம்பெல்லாம் உதிர்ந்த பின்னும் இருப்பவர்கள், கண்கள் குருடாகி, கால்கள் முடமாகி அசைய முடியாத ஒரு நிலையை அடைந்த பின்னும் இருப்பவர்கள், பிச்சை எடுத்தாவது சாப்பிட்டு பிளாட்ஃபாரங்களிலும், சாக்கடை ஓரங்களிலும் காலம் கழிப்பவர்கள் - எல்லோரையும் செலுத்துவது எது?

உயிர் வாழ வேண்டும் என்ற ஆசைதானே?

எப்படி அவளுக்கு மட்டும் செத்துப்போக மனம் வரும்? இது என்ன இப்படி ஒரு நிலைமை? செத்துப் போகப் போகிறேனா? அதுவும் ஆறு நாட்களில்? கான்ஸர், டி.பி. எய்ட்ஸ் என்று எந்தவிதக் காரணமுமின்றி இன்னும் ஆறு நாட்களில் இறந்து போகப் போகிறேனா?

அவளுக்குப் பயமாக இருந்தது.

தூக்கு தண்டனை அடைந்த கைதிகளுக்குக் கூட கீழ் கோர்ட்டில் இருந்து, மேல் கோர்ட், உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் இது எதிலும் தண்டனை ரத்தாகா விட்டால் ஜனாதிபதியின் கருணை மனு என்று எவ்வளவோ வாசல் களைத்தாண்டி தான் இறுதியில் வேறு வழியே இல்லாத போது தூக்கு தண்டனை என்று முடிவாகும்.

ஆனால் இங்கே?

ஆறே நாட்களில் அவள் செத்துப் போக வேண்டுமா?

அப்படி அவள் உயிர் வாழாமல் சட்டென்று செத்துப் போவதற்கு செய்த பாவம்தான் என்ன ?

அம்மா, அப்பாவிடம் சொன்னால் நிச்சயம் தாங்கமாட் டார்கள். அவர்களிடம் சொல்லக் கூடாது என்று நினைத்துக் கொண்டாள்.

இன்னும் ஆறே நாட்கள். இந்த ஆறு நாட்களில் அவள் எப்படி இருக்கப் போகிறாள்? பழைய சிரிப்பு இருக்குமா? பழைய கலகலப்பு இருக்குமா?

ச்சே. யாரோ ஒரு துந்தனாக்காரன் சொன்னதைப் போய் அதுதான் சத்தியவாக்கு மாதிரி எடுத்துக் கொண்டு ஏன் மனம் இவ்வளவு அல்லாட வேண்டும்? நெருப்பில் விழுந்த பூச்சரம் போல பொசுங்க வேண்டும். தண்ணீரில் விழுந்த எலிக்குஞ்சு போல தவிக்க வேண்டும்.

வேண்டாம் வேதா. உற்சாகமாக இரு.

உனக்கு ஒன்றும் நேர்ந்து விடாது. நீ செத்துப்போக மாட்டாய்? அப்படியே செத்துப்போவது என்றால்தான் என்ன?

நிரந்தரமாய்த் தூங்கிப் போவதுதானே?

செத்துப்போகும் அந்தத் தருணத்தில் வேண்டுமானால் ஒரு வேளை தாங்க முடியாத வலி இருக்கலாம். அதற்குப் பின்?

அமைதிதானே? மாறா அமைதிதானே? நீயே செத்துப் போன பின்னர் உன் இறப்பின் காரணமாக யார், யார் எவ் வளவு வருத்தப்பட போகிறார்கள் என்பதெல்லாம் உனக்குத் தெரியப் போவதில்லை.

தைரியமாய் இரு வேதா.

வாழ்க்கை இருந்தால் வாழலாம். முடிந்து விட்டது என்ற நிலை வந்தால் செத்துவிட்டுப் போகலாம்.

வேதா ஊட்டியில் வந்து இறங்கும்போது இருள் கவிந் திருந்தது. காற்றில் குளிர் அதிகரித்திருந்தது. கை கால்களில் எல்லாம் குளிர் தாக்கியதால் விறைப்பாக உணர்ந்தாள்.

பஸ்ஸில் இருந்து இறங்கும்போது ஒரு கையில் பேக்கரி சாமான்கள். மடக்கிப் பிடித்திருந்த அந்தக் கை வலித்தது.



ஆட்டோ பிடித்து வீட்டுக்குப் போகலாமா என்று யோசித்தாள். ஸ்வெட்டர் எடுத்து வராதது முட்டாள் தனம் என்று இப்போதுதான் புரிந்தது. ஆட்டோவில் வேறு குளிரும். பஸ்ஸில் போனால் குளிர் தெரியாது.

ஃபிங்கர் போஸ்ட் பஸ் எங்கே என்று பார்த்தாள்.

ஃபிங்கர் போஸ்ட்டிற்கு ஒரு பஸ் புறப்பட்டுக் கொண்டிருந்தது. அவள் கத்திக் கொண்டே ஓடினாள்.

"ஸ்டாப்... ஸ்டாப்."

அந்த பஸ் திரும்பியது. நின்றது.

டிரைவர் தன் எதிரில் வந்த ஒரு கார் ஒதுங்கிப் போவதற் காகத்தான் நிறுத்தினான் என்பதைக் கவனிக்காமல் தனக் காகத்தான் நிறுத்தியிருக்கிறான் என்று நினைத்து வேதா பஸ்ஸின் படியில் காலை வைத்தாள். ஒரு கையால் படியில் இருந்த கைப்பிடியைப் பற்றினாள்.

இன்னொரு கையில் பை தொங்கியது.

யாராவது ஒரு கை கொடுத்தால் பஸ்ஸிற்குள் ஏறிவிட லாம் என்று அவள் எண்ணிய நேரத்தில் பஸ் புறப்பட்டது.

வேதாவின் கை வழுக்கியது. அவளது இன்னொரு கையில் பாரம் அவளை வேறு புறம் இழுத்தது.

பஸ்ஸில் யாரோ அவள் நிலையைப் பார்த்துவிட்டு இனம் புரியாமல் கத்த, வேதா அந்தக் கணத்தில் தன் சாவு நெருங்கி விட்டதை உணர்ந்தாள்.



## 10

வேதாவிற்கு விழிப்பு வெகு திடீரென வந்தது.

விழித்ததும் முதலில் உணர்ந்தது முன் தலையில் வலி. அபாரமான ஊசிக்குத்தல் போன்ற வலி.

நாசியில் டிங்க்ச்சர் ஐயோடின், ஃபினாயில், மருந்து என ஆஸ்பத்திரி வாசனை ஏறியது.

கண் திறந்தாள்.

''ஷீ ஈஸ் கமிங் பேக், தாங்க் காட். இட்ஸ் எ மிராக்கிள்'' என்று யாரோ ஒருவர் யாரிடமோ அவள் பிழைத்தது ஒரு அற்புதமான செயல் என்று சொன்னது கேட்டது.

காட்சி மங்கலாகத் தெரிந்தது. சிறகு போல் வெள்ளைத் துணியைக் கொண்டையில் கோர்த்துக் காட்சியளித்த செவிலிகள். தர்மா மீட்டர். ஸ்டெதாஸ்கோப்.

''வேதா... வேதா...'' அம்மாவின் குரல். அப்படியானால் அவள் சாகவில்லையா? அம்மா நான் உயிருடன் இருக்கி றேனா? என்ன நடந்தது? நினைவிற்கு வந்தது.

பஸ்ஸில் இருந்து இறங்கவும் முடியாமல், ஏறவும் முடியாமல் தவித்ததும், கடைசியில் காலை கீழே வைத்ததும், பஸ் அதற்குள் வேகம் பிடித்திருந்ததால் அவள் கால் தரையில் பட்டு, அவள் ஒரு வாஷிங் மெஷினின் துணி போல் புரட்டி எடுக்கப்பட்டதும், சாவின் வாசல் என்று நினைத்ததும், யாரோ அவளைத் தாங்கியதும், தாங்கியது யார் என்று அவள் கடைசி வினாடியில் பார்த்ததும்...

ஆமாம்.. அவன் எங்கே?

அவளைக் காப்பாற்றினானே, அந்த இளைஞன் எங்கே?

அவன் முகத்தில் அவ்வளவு அப்பாவித்தனம் தெரிந்ததே. அவ்வளவு அப்பாவி போல் தோன்றிய அவனா அவளை அப்படித் தாங்கினான்?

''அம்மா.. அம்மா... என்னை ஒரு ஆள் காப்பாற்றினார் அம்மா. அந்த ஆளுக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லையே?''



வேதா அந்தக் கேள்வியைக் கேட்டதும், பதில் இன்னொரு திசையில் இருந்து வந்தது.

''என்னையா கேட்டீர்கள்? நான் திண்டுக்கல் பூட்டு மாதிரி, சேலம் கிரானைட் கல் மாதிரி ஃபர்ஸ்ட் கிளாஸ் கண்டிஷனில் இருக்கிறேன்.''

அவனை வேதா இப்போது நேருக்கு நேர் பார்த்தாள்.

அவன்தான் அவளைக் காப்பாற்றியவன். அவளைத் தாங்கிப் பிடித்தவன்.

''நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் அவன்.

''ஓ.கே. மண்டையில் லேசாக வலிக்கிறது. மற்றபடி ஒன்றும் இல்லை. உங்களுக்கு ஒன்றும் அடிபடவில்லையே?''

''நத்திங். ஐ'ம் ஆல்ரைட். காலில் ஒரு சிராய்ப்பு. பாண்ட் கிழிந்து விட்டது. முழங்கால் இருக்கும் இடத்தில் அதனால் பாண்டை ஷார்ட்ஸ் ஆக மாற்றி விடலாம் என்று தீர்மானித் திருக்கிறேன். சட்டைதான். பச்.. அகால மரணம் ஏற்பட்டு விட்டது. அதனால் அதை கிச்சனில் சூடான பாத்திரத்தை ஏற்றி இறக்கும் சட்டித் துணியாக யூஸ் பண்ணப்போகிறேன். சட்டைத் துணி சட்டித் துணி ஆகிவிட்டது. எப்படி? தானாக அமைந்த ஒரு சின்னக் கவிதை வரி. ஏதோ ஒரு புத்தகத்தில் யெஸ்... ஊஞ்சலில் ஜோக்கூ என்று போடுகிறார்கள். அதற்கு எழுதி அனுப்பினால் பப்ளிஷ் ஆகும் என்று நினைக்கிறேன். பப்ளிஷ் ஆகும் இல்லையா? பைதிபை.. என் ஹியரிங் எய்ட்... அதுதான் செவிட்டு மிஷின் அது கீழே விழுந்து அதன் மேல் பஸ் ஏறி பச்சக். என் கூலிங்கிளாஸ் கண்ணாடி இரண்டையும் பஸ்ஸின் ஹெட்லாம்ப் மாட்டிக் கொண்டிருக்கிறது. அதற்குப் போய் இப்படி ஒரு ஆசை பாருங்கள். தட்ஸ் ஆல். நீங்கள் கவலைப்பட்டதற்கு தாங்க்ஸ்.''

அவன் சரளமாக அருவி கொட்டுவது போல் பேசினான்.

அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. சிரித்தாள்.

''தாங்க்யூ.. தாங்க்யூ மிஸ்டர்... மிஸ்டர்...''

''ஏ.எஸ்.ஐ.வி. பிரகாஷ்.''

''இவ்வளவு இனிஷியல்களா?''

''ஆம். ஏமாந்த சோணகிரி கம் இளிச்சவாயன் பிரகாஷ்.''

இப்போது அந்த அறையில் இருந்த அத்தனை பேரும் சிரித்தார்கள்.

''ஓ.கே. ஸீ யூ.. பை.. பை...''

அவன் மற்றவர்கள் பதிலுக்குக் காத்திராமல் நடந்தான்.

''என்ன வேதா.. அவனை ஒரு நாள் வீட்டுக்கு வரச் சொல்லிக் கூப்பிடுவாய் என நினைத்தேன்'' என்று அம்மா ஆதங்கப்பட்டாள்.

''எனக்குத் தோன்றவே இல்லை அம்மா'' என்றாள் வேதா.

அம்மாவும், வேதாவும் எழுந்து போய் வெளியே பார்த்த போது அவன் சென்ற திசையில் ஒரே ஒரு வௌவால் மட்டும் பறந்து கொண்டிருந்தது.

இங்கே போய் வவ்வாலா?

எப்படி?

வவ்வால் பொதுவாகப் பாழடைந்த கட்டிடங்களில் தானே இருப்பது வழக்கம்?

அவளுடைய மூளைக்குள் மறுபடியும் 'ஆறு நாட்களில் மரணம்' என்ற துந்தனாக்காரனின் வாக்கு வட்டமிடத் தொடங்கியது.

பஸ்ஸில் தவறி விழுந்தது கூட அந்த வாக்கு காரணமா கத்தானா?

வேதாவிற்குக் குழப்பமாக இருந்தது.





# 11

அடுத்த நாளே வேதாவிற்கு சரியாகி விட்டது. தலைவலி, கிலை வலி என்று எதுவும் இல்லை.

வீட்டில் உட்கார்ந்தால் அந்த துந்தனாக் காரன் நினைவு வந்தது. அவள் மூடைக் கெடுத்தது. பாயைப் பிறாண்ட வைத்தது.

அதனால் அப்பாவின் பேக்கரிக்குப் போகலாம் என்று தீர்மானித்தாள். வீட்டில் அவள் இயல்பாக இல்லாமல் இருப்பது தெரிந்து விட்டால் அம்மா தொணதொணப்பாள். கவலைப்பட ஆரம்பித்து விடுவாள்.

அவளுக்கு உண்மை தெரிந்து விட்டால் அதை விட வேறு வினையே வேண்டாம். ஐந்தாவது நாள் வேதாவிற்கு மரணம் நேருகிறதோ என்னவோ அவளுக்கு நேர்ந்துவிடும்.

அப்பாவின் பேக்கரி நோக்கிப் புறப்பட்டாள்.

உற்சாகமாக இருக்க வேண்டும். உற்சாகமாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இருப்பதிலேயே நல்ல புடவையைத் தேர்ந்தெடுத்துக் கட்டிக் கொண்டாள். முடியை அப்படியே படரவிட்டு ஒரு க்ளிப்பை மாட்டிக் கொண்டாள். ஒற்றை ரோஜாவைச் செருகிக் கொண்டாள். வாசனையாக இருக்கட்டும் என்று சென்ட்டை ஸ்ப்ரே செய்து கொண்டாள்.

வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

வாசலில் இருந்து குரோட்டன்கள் அவளைப் பார்த்து கையசைத்தன. குரோட்டன்களுக்கு நடுவே ரத்தச் சிகப்பில் பூத்திருந்த ரோஜாக்கள் இரண்டு அவளைப் பார்த்து தலையசைத்தன.

''பை... பை..'' என்றாள்.

உற்சாகமாக உணர்ந்தாள்.

பிரதான சாலையை நோக்கி நடந்தாள்.

அவள் பிரதான சாலையை அடைய வேண்டுமானால் கிட்டத்தட்ட ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும்.

முதல் அரை கிலோ மீட்டர் வெறும் பாறைகளால் உரு வாக்கப்பட்ட மேடான பாதை. அந்தப் பாதையில் விளக்குகள் எதுவும் இல்லை. பகல் நேரத்தில் மட்டும் வெளிச்சம் இருக்கும். இருட்டிய பின் நிலவு இருந்தால் மங்கலான வெளிச்சம் இருக்கும்.நிலவு இல்லாவிட்டால் இருட்டு. இருட்டு. இருட்டுதான். சுற்றிலும் சில் வண்டுகள் ரீங்காரம். எங்கோ தொலை தூரத்து மரங்களில் உட்கார்ந்து இரைதேடும் ஆந்தைகளின் 'கழ்க்' 'கழ்க்' 'கழ்க்'.

வேதாவிற்கு அந்த மாதிரி இரவு நேரங்களில் அந்த வழியே நடப்பது பிடிக்கும். அவளிருக்கும் பிரதேசத்தில் திருட்டுப் பயம் என்பதே கிடையாது. அதனால் அங்கே குடியிருக்கும் மற்றவர்கள் எல்லாம் கைகளில் டார்ச் எடுத்துக் கொண்டு வந்தாலும் அவள் டார்ச் எதுவும் எடுத்து வரமாட்டாள். இருட்டில் அவளுக்குக் கண் பழகிவிடும். காலுக்குக் கீழ் இருக்கும் ஒவ்வொரு கல்லும் அவளுக்குப் பழக்கமான கல் என்பதால் அந்தக் கற்கள் அவளை ஒரு போதும் ஏமாற்றியதில்லை. கால்வாரி விட்டதில்லை. வெகு இயல்பாக பகல் நேரத்தில் நடப்பது போலவே நடந்து வீட்டை நோக்கி இறங்குவாள். இருளோடு, இருளாகக் கலந்து இறங்குவது அவளைப் பொறுத்தவரை ஒரு மகத்தான அனுபவம். அந்த அனுபவத்திற்காகவே அவள் இருட்டிய பின் வருவது பழக்கம்.

இன்றைக்கு அந்தப் பாதையில் பகல் வெளிச்சத்தில் மேலேறிய போது மூச்சிரைத்தது. எப்போதும் இப்படி அவளுக்கு மூச்சிரைத்ததேயில்லை. இன்றைக்கு மட்டும் ஏன் இப்படி?



அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல் இன்னும் ஐந்து நாட்களில் அவளுக்கு மரணம் நிச்சயம் என்றவுடன் அவளுக்கு அப்படித் தோன்றுகிறதா என்ன?

மேடேறினாள். பிரதான சாலையை நோக்கிச் செல்லும் ஒரு தார்ச்சாலையில் அந்த கல் சாலை முடிந்தது.

தார்ச்சாலையின் இருபுறமும் மரங்கள். மரங்கள். மரங்கள்.

மரங்களில் ஓய்வெடுக்கும் சிறு குஞ்சுகளின் மழலை கீச்கள். சூரியன் அந்த மரங்களின் ஊடே, கிளைகளின் ஊடே, இலைகளின் ஊடே எட்டிப் பார்க்க முயன்று தோற்றுப் போய் சிறு சிறு சில்லுகளாக தார்ச்சாலையில் அங்கொன்று இங்கொன்றாக விழுந்திருந்தான்.

ஷூட்டிங் ஸ்பாட் தேடிவரும் படக்கம்பெனிகள் அத்தனை பேருக்கும் இந்த இடம் ஒரு சொர்க்கபுரி. இன்றைக்கு அந்தச் சாலையில் ஷூட்டிங் எதுவும் நடைபெறவில்லை.

கோல்ஃப் கிரவுண்டை நோக்கிச் சென்ற சில மாருதி ஜிப்ஸிகளும், சில டாட்டா சுமோக்களும் வளைவில் திரும்பி மேலேறி அவளைக் கடந்தன.

வேதா பஸ்-ஸ்டாண்டை அடைந்தாள்.

பஸ்-ஸ்டாண்டில் கூட்டம் அதிகமாக இருந்தது. அத்தனை கண்களும் அவள் வந்து சேர்ந்தவுடன் அவளையே பார்த்தன.

வேதாவிற்கு அந்தக் கண்கள் பழக்கமானவை. எப்போதும் அது அவளுக்குப் பெருமையாகக் கூட இருக்கும்.

இன்றைக்கு அப்படி இல்லை. அவளைப் பார்க்கும் பார்வைகளில் ஒரு பரிதாபம் கலந்து இருந்த மாதிரி தெரிந்தது அவளுக்கு.

எல்லோரும் தான் இன்னும் ஐந்து நாட்களில் இறந்து போகப் போகிறாள் என்று துந்தனாக்காரன் கூறியதை அறிந்தவர்கள் போல் தென்பட்டார்கள்.

பஸ் வந்து அவளை உரசி நின்றது. பதறிப் போய் பின்னால் விலகினாள். கூட்டம் முண்டியடித்துக் கொண்டு ஏறியது. அவள் வேடிக்கை பார்த்தாள். அந்தக் கூட்டத்தில் முட்டி, மோதி ஏறுவதற்குப் பயமாக இருந்தது.

பஸ் புறப்பட்டு விட்டது.

''ஹலோ வேதா'' என்று ஒரு குரல் கேட்டது.

திடுக்கிட்டுப் போய்த் திரும்பினாள்.

புன்னகையோடு அவன் நின்றிருந்தான். வேதாவை விபத்தில் இருந்து காப்பாற்றியவன். சிரிக்கச் சிரிக்கப் பேசிவிட்டுத் திடீரென மாயமாய் மறைந்து போனவன். பேசிய சிறு நேரத்திற்குள் பரிதாபத்தைச் சம்பாதித்தவன்.

அதே ஏமாந்த சோணகிரி இளிச்சவாய் பிரகாஷ்.

''ஹலோ ஏ.எஸ்.ஐ.வி.'' என்று சிரித்தாள் வேதா. ''ஸாரி, உங்களைக் கிண்டல் பண்ணுவதற்காகச் சொல்லவில்லை. நீங்கள் சொன்னதை நான் திருப்பிச் சொன்னேன். அவ்வளவு தான்.''

''இட்ஸ் ஓ.கே.'' என்றான்.

அவனை வேதா நேருக்கு நேர் பார்த்தாள்.

சலவை மடிப்புடன் ஒரு வெள்ளை அரைக்கைச் சட்டை அணிந்திருந்தான். காலில் ஒரு ரீபோக் ஷூ அணிந் திருந்தான். வெளிர் சாம்பல் நிறத்தில் சாக்ஸ் அணிந்திருப்பது, ஜீன்ஸ் பாண்டை மடித்து விட்டிருந்ததால் தெரிந்தது. கறுப்பு நிறத்தில் ஜீன்ஸ், இடுப்பில் பெல்ட் இல்லை. கலைந்த



தலைமுடி. மீசை இல்லை. மேலுதட்டில் ஒரு சிறு குழிவு தெரிந்தது. மோவாயில் ஒரு குழிவு. அப்படி குழிவு இருந்தால் அதிர்ஷ்டம் என்று சொல்வார்கள். ரிம்லெஸ் கண்ணாடி அணிந்திருந்தான். கூலிங்கிளாஸ் இல்லை ப்ளெய்ன் கிளாஸ். எனவே அவன் கண்களைப் பார்க்க முடிந்தது. அந்தக் கண்களில் வழிந்த கருணை, அப்பாவித்தனம் எல்லாமாகச் சேர்ந்து அவள் இதயத்தை என்னவோ செய்தன. இடது காதில் ஒரு ஹியரிங் எய்ட் பொருத்தியிருந்தான். அதன் ஒயர் சட்டையின் இடது பாக்கெட்டில் இருந்த பாட்டரிக்குச் சென்றது. அவளால்தானே அவனுடைய கண்ணாடி, ஹியரிங் எய்ட் எல்லாமே காலியாகி விட்டது.

''என்ன நீங்கள் பாட்டுக்கு சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டீர்கள்? ஒரு தாங்க்ஸ் சொல்லலாம் என்று பார்த் தால் ஆளைக் காணவில்லை. அப்புறம் ஹியரிங் எய்ட், கண்ணாடி எல்லாம் பாழாகிப்போய்விட்டது என்று சொன் னீர்கள். அவற்றைத் திருப்பித்தர முடியாது. அட்லீஸ்ட் அதற்கான பணத்தையாவது உங்களிடம் கொடுத்தால் தானே என் மனம் சமாதானம் ஆகும். ஏமாந்த சோணகிரி இளிச்சவாய் என்று உங்களுக்கு யார் பட்டம் கொடுத்தார்களோ.. தெரி யாது.ஆனால் சரியாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். எவ் வளவு ஆயிற்று அந்த ஹியரிங் எய்டிற்கும், கிளாஸிற்கும்?''

''நான் காசு வாங்க மாட்டேன்.''

''ஏன்?''

''காசு என்ன பெரிய காசு. இன்றைக்கு வரும். நாளைக்குப் போகும். ஒரு பாக்கெட்டில் இருக்கும் பணத்தை அல்லது கரன்ஸி பேப்பரை எடுத்து இன்னொரு பாக்கெட்டில் போட்டால் கணக்கு சரியாகிவிடுமா? காசு என்ன பண்ணி விடும்? உண்மையான அன்பை சம்பாதித்துத்தருமா? போன உயிரை மீட்டுத் தந்துவிடுமா? இல்லை ஒரு உயிரை

உருவாக்குமா? காசு என்பது மனிதன் படைத்தது. அதனால் அதைக் கொடுத்து ஒரு உண்மையான அன்பைக் கொச்சைப்படுத்த வேண்டாம் வேதா.''

வேதா பிரமித்துப் போய் அவனைப் பார்த்தாள்.

எவ்வளவு பெரிய விஷயம்? எவ்வளவு எளிமையாகச் சொல்லிவிட்டான்?

''ஐ'ம் ஸாரி. உங்கள் மனதை நோகடிக்க வேண்டுமென்று நான் அப்படிச் சொல்லவில்லை பிரகாஷ். ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சம் உயிர் வாழ சோறு தேவைப்படுகிறது. துணி தேவைப்படுகிறது. இருக்க இடம் தேவைப்படுகிறது. இதெல்லாம் வேண்டும் என்றால் காசு வேண்டும். காசை, பணத்தை மையமாக வைத்துத்தானே இந்த உலகத்தின் இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உங்கள் தேவைக்கு நீங்கள் சம்பாதித்துத்தானே ஆகவேண்டும். அதனால் கேட்டேன். எவ்வளவு?''

''வேண்டாம். என்னிடம் இருக்கிறது. வாங்கிவிட்டேன். இப்போது எனக்குத் தேவை இல்லை. எங்கே போகிறீர்கள்? ரொட்டிக் கடைக்குத்தானே? இந்த பஸ்ஸில் ஏறி இடிபட வேண்டாம். நான் ஆட்டோவில் கொண்டு விடுகிறேன். சரியா?''

அவன் அவள் பதிலுக்குக் காத்திருக்கவில்லை.

''ஆட்டோ'' என்று அழைத்தான். ஆட்டோ வந்து நின்றது.

''ஏறுங்கள்'' என்றான். வேதாவின் வாய் அடைத்துப் போய் இருந்தது. அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை. ஏறிக் கொண்டாள்.

அவனும் பக்கத்தில் ஏறிக் கொண்டான். பேக்கரிக்குச் சற்று முன் ஆட்டோவை நிறுத்தச் சொன்னான். இறங்கினான். அவளும் இறங்கினாள்.



''போங்கள்'' என்றான். ஆட்டோவிற்கு அவனே காசு கொடுத்தான்.

வேதா பேக்கரி நோக்கி நடந்தாள்.

அவளுக்கு பிரமிப்பாய், ஆச்சரியமாய் இருந்தது.

பிரகாஷிற்கு அவள் பெயர் எப்படித் தெரிந்தது என்று தெரியவில்லை. ஒருவேளை அம்மாவிடம் கேட்டு தெரிந்து கொண்டிருக்கலாம். பேக்கரிக்குப் போவது எப்படித் தெரியும்? பேக்கரி அப்பாவுடையது என்று தெரிந்திருந்தால் தானே அவ்வளவு இயல்பாக 'ரொட்டிக் கடைக்குத் தானே?' என்று கேட்க முடியும். அது எப்படித் தெரியும்? ஒரு வேளை அதையும் அம்மாவிடமே கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறானோ!

அவன் கண்கள் கருணையைப் பொழிந்தன. ரைட், முகம் அப்பாவித் தனமாக இருந்தது. அதுவும் கரெக்ட்.

ஆனால் யாவற்றையும் மீறி பிரகாஷின் நடத்தையில். அவனுடைய செய்கைகளில் ஏதோ ஒரு சரிகைப்பட்டை அளவு விபரீதம் கலந்திருப்பதாக அவளது உள்ளுணர்வு கூறியது.



## 12

மோகன் தன் அறையை அடைந்தான். இனிமேல் வேதா மாலை நேரம்தான் பேக்கரியில் இருந்து புறப்படுவாள். அதுவரை அவனுக்கு பேக்கரி பக்கத்தில் நின்று தன்னுடைய ஹியரிங் எய்டும், கண்ணாடியும் பொருந்திய முகத்தை மற்றவர்கள் மனதில் பதிகிற மாதிரி செய்துவிடக் கூடாது.

நாளைக்கு வேதா இறந்த பின் இந்த முகத்தை யாராவது குறிப்பாகச் சொல்லித்தேட ஆரம்பித்து எவனாவது ஒரு

புத்திசாலி போலீஸ் அதிகாரி மோப்பம் பிடித்துத் தன் அறை வரைக்கும் வருவதை அவன் விரும்பவில்லை.

அறைக்குள் நுழைந்ததும் முதல் வேலையாக ஹியரிங் எய்ட்டைக் கழற்றினான். கண்ணாடியைக் கழற்றினான். மீசை வழிக்கப்பட்ட மேலுதட்டைத்தடவிப் பார்த்தான்.

மீசை அவனுக்கு மிகப் பிரியமான ஒன்று வேதாவிற்காக மீசையை எடுக்க வேண்டியதாகி விட்டது. இன்னும் ஐந்து நாட்களுக்குத் தினம்தினம் முகத்தை ஷேவ் செய்தே ஆகவேண்டும். அதுவரை ஒட்டு மீசைதான் ஒட்டு தாடிதான்.

மேக்-அப் டியாரைத் திறந்தான்.

எப்படியோ இந்த மேக்-அப் கலையை அவன் ஷூட்டிங் கம்பெனியில் ஒரு மேக்-அப் மேனுக்கு ஒரு மாத காலம் அஸிஸ்டெண்டாய் இருந்து கற்றுக் கொண்டு விட்டான். அவனுடைய திருட்டுத் தனங்களுக்கு எல்லாம் மேக்-அப் கலை உதவி செய்யும் என்று அவனது அசைக்க முடியாத நம்பிக்கைதான் அவனை அந்தக் கலையைக் கற்றுக் கொள்ளச் செய்தது. ஊட்டியில் அதற்கு வாய்ப்புகளும் அதிகம். தினம் ஒரு படப்பிடிப்புக் கம்பெனி வந்து இறங்குவ தால் காச, பணம் எதுவும் கேட்காத அஸிஸ்டெண்டை எல்லா மேக்-அப் மேன்களும் வரவேற்கத்தான் செய்தார்கள்.

மேக்-அப்பை பழையபடி மாற்றி முடித்தபோது அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கண்ணாடியில் ஒரு முறை பார்த்துக் கொண்டான். திறந்தான்.

லாட்ஜ் பையன் நின்றிருந்தான்.

"என்னடா?"

"உங்க பேருக்கு இந்தக் கவர் வந்ததுங்க" என்று ஒரு கடித உறையை நீட்டினான் பையன்.

மோகன் அதை வாங்கிக் கொண்டான்.

பையன் அலாவுதீன் பூதம் போல் உடனே மறைந்து விட்டான்.



கடிதத்தின் உறையைப் பிரித்தான்.

உள்ளே ஒரே ஒரு துண்டுச் சீட்டு இருந்தது.

அதில் கீழ்க்கண்ட செய்தி, படம் பார்த்து கதை சொல் பாணியில் இருந்தது.




கம்ப்யூட்டர் பெண் என்றால் மாயா. மாயாவைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. டெலிபோன் ரிசீவர் படம் போட்டிருக்கிறது என்றால் தொலைபேசி மூலம் தொடர்பு கொள் என்று அர்த்தம். அதெல்லாம் சரி. அதற்கு எதற்காக மண்டையோட்டுப் படமும் இரண்டு எலும்புத் துண்டுகளும்.

மோகனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பொதுவாக அபாயத்தை அறிவிக்கும் ஓர் அறிவிப்பாகத்தான் மண்டையோடு உபயோகமாகும்.

ஒருவேளை தினகர் வேதாவைக் கொல்லச் சொல்லி அவனை ஏவிவிட்டு. கூடவே வேறு ஏதாவது டபிள் கிராஸ் வேலை செய்கிறானா?

மாயாவைச் சந்தித்தே ஆக வேண்டும். அவளை எப்படி இரண்டு நாட்களாக நினைக்காமல் இருக்க முடிந்தது? அவளுடன் எப்படி இரண்டு நாட்களாக போனில் தொடர்பு கொள்ளாமல் இருக்க முடிந்தது.

அவள்தானே வேதாவைப் பற்றி எச்சரித்தவள், அவள் தானே வேதாவிடம் விளையாட்டு வேண்டாம் என்றவள்.

வேதாவைப் பார்த்து அவளைத் தொடர்ந்து போய், அவள் ஏவிய ஆட்களிடம் அடி வாங்கியதில் ரோஷம் பிறந்து, வேதாவைக் கொல்ல ஒரு புதுமையான திட்டம் போட்டு -

முதலில் வேதா. அப்புறம் வேதாவை ஜெயித்த செய்தியோடு மாயா என்று இருந்து விட்டது அவனுக்குள் லேசாக உறுத்தியது.

லாட்ஜில் இருந்து வெளிப்பட்டான். அதே விந்தி விந்தி நடக்கும் நடை. டெலிபோனை நாடினான். தன்னை யாரும் கவனிக்கவில்லையே என்று பார்த்துக் கொண்டான். இந்த மேக்-அப்பில் இருக்கும் போதுதான் வேதாவின் ஆட்களிடம் அடிபட்டது. எனவே ஜாக்கிரதை, எச்சரிக்கை, ஜாக்கிரதை, எச்சரிக்கை என்று மண்டைக்குள் ஒரு விளக்கு பளிச், பளிச் என்று எரிந்தது.

நம்பரை ஒற்றினான்.

எதிர்முனையில் மணி ட்ரிங், ட்ரிங் என்று பழைய காலத்து துப்பறியும் நாவல்களில் அடிப்பது போல் அடித்துக் கொண்டே இருந்தது.

மாயா இல்லையா? தினகரின் ஆபீஸில் இருக்கிறாளா?

பொதுவாக இந்த நேரம் அவள் வீட்டில் இருப்பது தானே வழக்கம். எதிர்முனையில் ரிசீவர் எடுக்கப்பட்டு விட்டது.

''ஹலோ.. ஹலோ..''என்றான்.

எதிர்முனை கிசுகிசுப்பாய், ''ஹலோ'' சொல்லியது.

மாயாவின் குரல்தான்.

''கம்ப்யூட்டர் பெண்?'' என்று உறுதிப்படுத்திக் கொள்ளக் கேட்டான்.

பதில் இல்லை. அந்த ஹலோவே ரொம்பவும் கிசுகிசுப் பாய்த்தான் கேட்டது.



''மோகன் ஸ்பீக்கிங்.''

எதிர்முனையில் மறுபடி மவுனம்.

''ஹலோ'' என்று பொறுமையில்லாமல் இரைந்தான் மோகன்.

''டைஹி.. டைஹி.. டைஹி...'' என்று மூச்சிரைப்புடன் ஒரு குரல் ஒலித்தது.

மாயாவின் குரல் போல் இல்லை அது. வேறு ஏதாவது ராங் நம்பரா? இல்லை, மாயாதான் அவனுடன் விளையாடு கிறாளா?

''ஹலோ... மோகன் ஸ்பீக்கிங்'' என்றான் மறுபடி.

பதில் இல்லை. மவுனம். அமைதியான மவுனம்.

ஏதோ ஒரு குருவியின் கீச் கீச் ரிசீவர் வழியாகக் கேட்டது. ஏதோ ஒரு பொருள் கீழே விழுந்து உருள்வது போல் கேட்டது.

நிச்சயம் ராங் நம்பர்தான். யாரோ விளையாடுகிறார்கள். இல்லையென்றால் ஒரு சின்னக் குழந்தை.

நம்பரை வெட்டினான். மறுபடி அதே நம்பரை அழைத் தான். இந்த முறை இரண்டு, மூன்று, ஐந்து, நான்கு, ஆறு தானே என்று ஒவ்வொரு எண்ணாக உறுதி செய்து கொண்டு அழுத்தினான்.

எதிர்முனையில் உடனே எங்கேஜ்ட் சவுண்ட் கேட்டது.

''ச்சே,'' என்று அலுத்துக் கொண்டு, இன்னொரு முறை நம்பரை வெட்டி இன்னொரு முறை போன் செய்தான்.

மறுபடி பழையபடி எங்கேஜ்ட் குருவியின் குக்கூஊஊஊஊ....

ரிசீவரை கொக்கியில் எறிந்தான். வெளிப்பட்டான்.

ஃபார்ன்ஹில் வரைக்கும் போக வேண்டும். ஆட்டோ வேண் டாம். தனி ஆட்டோ என்றால் ஆட்டோ டிரைவர் நாளைக்கு

இந்த மாதிரி ஒரு ஆளை ஏற்றிப் போனேன் என்று சொல்வதற்கு வசதியாகப் போய்விடும்.

பஸ்தான்.

பதினைந்து நிமிடக் காத்திருப்பிற்குப் பின் ஃபார்ன்ஹில் பக்கம் செல்லும் பஸ் ஒன்று வந்தது ஏறினான். இறங்கினான். நடந்தான்.

நம்பர் பத்து.

அந்தத் தெருவே அமைதியாக இருந்தது. பிற்பகல். உண்ட களைப்பில் உலகமே உறங்கிக் கொண்டிருந்தது. தெருவில் யாரும் இல்லை. ஊட்டியில் கொழுத்த தெரு நாய் ஒன்று ஒவ்வொரு தொட்டியாகப் பார்த்துக் கொண்டே வந்து, மோகனைப் பார்த்து முறைத்து விட்டு, அப்படியே பின் வாங்கிச் சென்றது.

மோகன் பத்தாம் நம்பர் வீட்டு வாசலில் கால் வைத்தான். காலிங்பெல் குமிழை அழுத்தினான். வீட்டுக்குள் ஒலித்த சங்கீதம் வெளியில் கசிந்தது.

அந்த ஒரு அழுத்தலுக்கு நீளமான ம்யூஸிக் நோட். அது முடிவதற்குள் இரண்டு தடவை வந்து கதவைத் திறக்கலாம். திறக்கவில்லை. ஏன்?

அவன் இன்னொரு முறை காலிங்பெல்லை அழுத்தினான். மறுபடி ம்யூஸிகல் நோட். இந்த முறையும் ஏமாற்றம்.

அவன் கதவில் கை வைத்தான். 'அட!' வியந்தான். காரணம்? கதவு திறந்திருந்ததுதான். அவன் கை வைத்ததும் கதவு லேசாக உள்வாங்கியது.

அவன் கதவை முழுதாகத் திறந்தான்.

''மாயா...''



பதில் இல்லை.

மாயாவின் அம்மா, அப்பா இல்லாவிட்டால் வேறு யாராவது. யாருமே வீட்டில் இல்லையா?

''மாயா'' என்று மெல்ல அழைத்தான். பதில் இல்லை.

உள்ளே நுழைந்தான். அவன் இதயம் தன் வேகத்தைக் கூட்டிக் கொண்டது. வேகம் எடுக்கும் ரயிலின் ஒலியைப் போல.

முன்னறை காலியாக இருந்தது.

படுக்கை அறை லேசாகத் திறந்து இருந்தது.

திடீரென்று 'கீச்' 'கீச்' என்று குருவியின் ஓசை கேட்டது.

அதுவும் படுக்கை அறையிலிருந்து அந்தக் குருவி ஓசை அவனுக்கு வினோதமாக இருந்தது. டெலிபோன் ரிசீவரில் கேட்ட அதே குருவி ஓசை.

அப்படியானால்... அப்படியானால்.. அவன் ரிசீவரில் கேட்டது மாயாவின் குரலைத்தானா?

வேறு ஏதோ உருளும் சத்தம் வேறு கேட்டதே.

அவன் படுக்கை அறையை நெருங்கினான். ஷூக்காலால் மெல்லத் தள்ளினான். கதவு திறந்து கொண்டது.

அதிர்ந்தான்.

மாயா படுக்கையில் பாதியும், தரையில் பாதியுமாகக் கிடந்தாள். அவள் கழுத்து அறுபட்டிருந்தது. கழுத்தின் வெட்டுப்பகுதியில் இருந்து ரத்தம் வந்துக் கொண்டிருந்தது. தரையில் அவளைச் சுற்றி ரத்தம். கட்டிலில் அங்கங்கே ரத்தத் திட்டுக்கள். அவள் முகத்தில் ஒரு ஈ அமர்ந்து பறந்தது. அவள் இறந்து விட்டதை சந்தேகமறத் தெரிவித்தது.

டெலிபோன் ரிசீவர் அவளது கையில் சிக்கியிருந்தது. ஒரு ஃப்ளவர் வாஸ் தரையில் உருண்டு கிடந்தது. மேலிருந்து தொங்கிக் கொண்டிருந்த கூண்டு ஒன்றில் இரு லவ் பேர்ட்ஸ் உருண்டை விழிகளால் சுற்று முற்றும் பார்த்து விட்டு 'சிக், சிக்' என்றன.

மோகன் வாயில் உமிழ்நீர் அசுர வேகத்தில் சுரந்தது.

வாந்தி வருவதற்கான அறிகுறி.

'மாயா. ஐயோ மாயா' என்ற நெஞ்சம் அலறியது.

அந்த அறை அலங்கோலமாகக் கிடந்தது. சூறாவளி ஒன்று சுற்றுப்பயணம் செய்த மாதிரி.

யார்? யார் மாயா? யார்?

எதையாவது தொட்டு விட்டேனா என்ன?

அந்த இடத்தில் அதற்கு மேல் நிற்பதற்குப் பயமாக இருந்தது.

உடனே வெளியேறு, உடனே வெளியேறு என்று மனம் கட்டளையிட்டது.

அப்படியே பின்வாங்கி வெளியேறும் நேரம், படுக்கை யறையை ஒட்டியிருந்த பாத்ரூமில் இருந்து 'சிலுங்' என்று பாட்டில் ஒன்று கீழே விழுந்து உடையும் சத்தம் கேட்டது.



## 13

மோகன் உறைந்து போய் நின்றான்.

பக்கத்தில் இருக்கும் பாத்ரூமில் கொலை காரன் இருக்கிறான். மோகன் என்ன செய்ய லாம் என்று யோசித்தான். அவன் கையில் ஆயுதம் ஏதாவது வைத்திருக்கக் கூடும்.



'மாயா' என்று மோகன் அழைத்தது அவனுக்கு நிச்சயம் கேட்டிருக்கும். அப்படியானால் எப்படி தான் உள்ளே இருப்பதைக் காட்டிக் கொடுக்கிற மாதிரி அந்த சிலுங் சத்தம்.

இல்லை. ஒரு வேளை, பூனை நாய் என்று ஏதாவது ஒரு செல்லப் பிராணியா?

மோகன் பாத்ரூமை நோக்கி நடந்தான். அதன் கதவை காலால் பலங்கொண்ட மட்டும் உதைத்தான். ''ஹாண்ட்ஸ் அப்'' என்று கத்தினான்.

உள்ளேயிருப்பது யாராக இருப்பினும் அந்த ஹாண்ட்ஸ் அப்பிற்குப் பணிந்து கைகள் இரண்டையும் உயர்த்துவான். அந்த மாதிரியான ஒரே ஒரு தங்கத் தருணத்தில் அவன் மேல் பாய்ந்து அவனை...

பாத்ரூமில் யாரும் இல்லை.

பாத்ரூம் வெண்டிலேட்டர் எந்தவிதக் கம்பிகளும் இன்றி திறந்து இருந்தது. ஒரு ஷாம்பு பாட்டில் பாத்ரூம் தரையில் விழுந்து நொறுங்கி இருந்தது.

மோகன் சட்டென்று பாய்ந்தான். தரையில் பரவி இருந்த ஷாம்பு மேல் கால் வைக்காமல் பாத்ரூமின் வெஸ்டர்ன் டாய்லட் மீது கால் வைத்து ஏறி எட்டிப் பார்த்தான்.

வீட்டின் பின்புறம் சரிவாக இறங்கியது.

சரிவில் யாரோ ஒரு பெண்ணின் முதுகுப் பக்கம் தெரிந்தது. அவசர அவசரமாக இறங்கிக் கொண்டிருந்தாள்.

இரு. இரு. யாரோ ஒரு பெண்ணா அது?

இல்லை. அது வேதா.

அவள்தான். அவளேதான். வேதாவிடம்தான் அவன் அந்தப் புடவையைக் காலையில் பார்த்தான்.

வேதாவா? வேதாவா? வேதாவா?

அவனால் நம்பவே முடியவில்லை.

அவன் கீழே இறங்கினான். ஷாம்பூவில் ஏதோ ஒன்று பளபளப்பாய்த் தெரிந்தது.

குனிந்து பார்த்தான். நகையில் பதிக்கப்படும் கல் அது.

அரை மிளகு சைஸில் இருந்தது. பட்டை தீட்டப்பட்டு மின்னியது அந்தக் கண்ணாடிக் கல்.

மோகன் அந்தக் கல்லைப் பொறுக்கிப் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

அவனை ஆத்திரம் தின்றது.

வேதாவை ஊசி ஊசியாக் குத்தி சாகடிக்க வேண்டும் போல் இருந்தது. இவ்வளவு செய்து விட்டு ஒரு பெண் அவ்வளவு எளிதில் அவனிடமிருந்து தப்பி விடுவதா?

எப்படி? எப்படி? எப்படி?

யோசித்தான்.

அவனுக்கு ஒரு வினோதமான வழி தோன்றியது. உடனே செயல்படுத்தத் தீர்மானித்தான்.

வேதா பேக்கரியில் இருந்து மாலை நான்கு மணிக்கே புறப்பட்டு விட்டாள்.

இருட்டுவதற்குள் வீடு போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்றுதான் அவ்வளவு விரைவாகப் புறப்பட்டாள்.

அப்பா கடையை மூடிவிட்டு வருவதற்கு இரவு ஒன்பது மணி ஆகிவிடும். அப்பாவின் ஸ்கூட்டரில் வீட்டிற்குப் போனால் இரவு பத்து மணி ஆகிவிடும். அவளுக்கு சீக்கிரம் வீடு போய்விட வேண்டும் போல் இருந்தது.



அவளுடைய மரணத்திற்கு யாரோ ஒருவன் நாள் குறித்து விட்டபின், அம்மாவுடனும் பொழுதைக் கழிக்க வேண்டும் போல் இருந்தது.

அதனால் சீக்கிரம் புறப்பட்டாள்.

கூடலூர் செல்லும் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். பின் சீட்டின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள். ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

பஸ் புறப்பட்ட பின், ''ஹலோ'' என்ற குரலைக் கேட்டு, கேட்ட குரலாக இருக்கிறதே என்று நிமிர்ந்து பார்த்தால் ஏ.எஸ்.ஐ.வி. பிரகாஷ் நின்று கொண்டிருந்தான்.

''ஹலோ'' என்றாள். ''நாம் அடிக்கடி சந்திக்கிறோம்'' என்றாள்.

''இல்லை. நான் உங்களைத் தொடர்ந்து கொண்டே இருந்தேன்.''

வேதாவின் முகம் மாறியது.

''என்னையா? ஏன்?'' என்று கேட்டாள்.

''நீங்கள் இன்றைக்கு எங்கே போனீர்கள், என்ன செய்தீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள் என்று எல்லாம் தெரியும். என் கண்ணில் இருந்து உங்களை நான் தவறவிட மாட்டேன்.''

''எனக்குப் புரியவில்லை.''

''பரவாயில்லை. அப்புறம் சொல்கிறேன். இன்றைக்கு ஃபிங்கர் போஸ்டில் இறங்கியவுடன் என் வீடு வரைக்கும் வருவீர்களா, ப்ளீஸ். ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ் அம்மா உங்களைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.''

''என்னையா? எதற்கு?''

பிரகாஷின் பேச்சு ஒரு புதிராக இருந்தது.

"ஃபிங்கர் போஸ்டில் இறங்கியவுடன் சொல்கிறேன்."

ஃபிங்கர் போஸ்ட்.

முதலில் பிரகாஷ் இறங்கினான்.

வேதா இறங்கினாள். பிரகாஷ் சட்டென்று அவள் கைகள் இரண்டையும் பற்றிக் கொண்டான். அவன் கண்களில் கண்ணீர்.

"வேதா ப்ளீஸ். என் வேதனை உனக்குத் தெரியாது. நான் ஏன் இப்படி நடந்து கொள்கிறேன் என்று உனக்குக் கேட்கத் தோன்றும். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது போல் தோன்றும். ஆனால் எல்லாவற்றுக்கும் பின்னால் ஒரு காரணம் இருக்கிறது. நான் ஒரு அடிபட்ட காதலன். தோற்றுப் போன காதலன். எனக்குக் கிடைத்த மாதிரி ஒரு காதலி யாருக்குமே கிடைக்க மாட்டார்கள். அவளோடு சந்தோஷமாக நூறு வருஷம் வாழப் போவதாக நினைத்துக் கொண்டிருந் தேன். ஆனால்.. ஆனால்...

"என்ன ஆயிற்று?" என்று படபடப்பு தாங்காமல் கேட்டாள் வேதா.

"செத்துப்போய் விட்டாள்."

திக்கென்றது. இதயம் அடித்துக் கொண்டது.

"எப்படி?"

"ஒரு லாரிச் சக்கரத்தின் கீழ் மாட்டி. கூழாகிப் போய் விட்டாள். மூன்று வருடம் ஆகிவிட்டது. அதற்குப் பின் உன்னைப் பார்த்தேன். பஸ்ஸில் இருந்து விழப்போன போது நான் யாரோ ஒரு பெண்ணைக் காப்பாற்றுவதாகத்தான் நினைத்தேன். உன் முகத்தைப் பார்த்தபின்தான் நான்



அப்படியே அதிர்ந்து போனேன். ஏன் தெரியுமா? செத்துப் போன காதலி நீயேதான். அவள்தான் நீ. நீதான் அவள். உன்னைக் காப்பாற்றி விட்டு வீட்டுக்குப் போய்ப் படுத்தேன். கனவு வந்தது. கனவில் நீயும் செத்துப் போனாய். மலை உச்சியில் இருந்து கீழே விழுந்து. அதுவும் உன்னை யாரோ பிடித்து தள்ளிவிட்டார்கள். எந்த இடம் தெரியுமா வேதா? கோல்ஃப் கிரவுண்டைத் தாண்டியவுடன் ஒரு காட்டுப்பாறை போகுமே அதில் போனால் ஒரு தனிச்சிகரம் வருமே. அந்த சிகரத்தின் மறுபக்கம் பள்ளத்தாக்கு. அந்தப் பள்ளத்தாக்கில் உன்னை யாரோ தள்ளி விடுவது போல் கனவு. நானும் மாயாவும் - அதுதான் என் காதலியின் பெயர் - அந்த சிகரத் திற்குப் போய்த்தான் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். பறவைகள் எல்லாம் எங்களைப் பார்த்துவிட்டு ஆனந்தமாக கீறிச்சிடும். மேகம் வந்து அவள் கன்னத்தைத் தொட்டுத் தடவி விட்டுப் போகும். நானும் அவளும் எங்களை மறந்து போய் உட்கார்ந்திருப்போம். அந்த இடத்தில் இருந்து உன்னைத் தள்ளுவதாகக் கனவில் பார்த்தவுடன் நான் ரொம்பவும் பயந்துவிட்டேன். விழித்துப் பார்த்தால் உடம்பு வியர்த்து இருந்தது. உடம்பு நடுங்கியது. நீ சாகக் கூடாது. நீ சாகக் கூடாது. உன்னை கைவிடக் கூடாது. அதனால்தான் உன்னை ஒரு நிமிஷம் விடாமல் துரத்திக்கொண்டே இருக் கிறேன். அம்மா, 'இது என்னடா பைத்தியக்காரத்தனம்?' என்று கேட்டாள். ஆமாம். நான் பைத்தியம்தான். காதல் பைத்தியம் அம்மாவுக்கு உன்னைப் பார்க்க வேண்டுமாம். என் காதலி மாதிரியே நீ இருப்பதை அவள் நம்பமாட்டேன் என்று சொல் கிறாள். அவளால் வர முடியாது. ஒரு கால், ஒரு கை விழுந்து படுத்து விட்டாள். வருகிறாயா வேதா? வருவாயா வேதா?"

வேதாவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

தான் சாகப்போவதாக அவன் எப்படி கனவு காண முடியும்? அதுவும் அவளைப் பார்த்து ஒரு துந்தனா எண்ணி இன்னும்

ஆறு நாட்களுக்குள் செத்துப் போகப்போகிறாய் என்று வாக்கு சொன்ன பின்.

''என்ன யோசிக்கிறாய் வேதா? நான் உன்னை எதற்கும் வற்புறுத்த மாட்டேன். என்னைக் காதலி என்று சொல்ல மாட்டேன். தொந்தரவாக இருக்க மாட்டேன்.''

''வருகிறேன்'' என்றாள் வேதா.

''போகாதே, போகாதே' என்று மரத்தில் இருந்து ஒரு சீட்டுக்குருவி வீறிட்டது.

அதன் மொழி புரியாமல் அதைப் பார்த்து ஒரு புன்னகை யுடன் செல்லக் கையசைத்து விட்டு வேதா அவன் பின்னால் அவன் இறங்கிய சரிவில் இறங்கினாள்.

கீழே சரிவில் ஒரே ஒரு வீடு அனாதையாக இருந்தது.

கொஞ்சம் பாழடைந்த மாதிரி. தனிமை என்றால் அப்படி ஒரு தனிமை.

இந்த வீட்டிலா இவர்கள் இருக்கிறார்கள்.

''உள்ளே வா வேதா.''

லக்ஷ்மணன் போட்ட கோட்டைத் தாண்டிய சீதை போல், வாசல்படி தாண்டி வீட்டுக்குள் நுழைந்தாள் வேதா.

சட்டென்று கதவைச் சாத்தி தாள்போட்டான் பிரகாஷ்.

''என்ன.. என்ன... என்ன பிரகாஷ் இது?''

பிரகாஷ் சிரித்தான். முகத்தில் அப்பாவித்தனம் இல்லை. ஒரு குரூரம் இருந்தது.

கைக்கெட்டும் தூரத்தில் நிற்கும் ஆட்டுக்குட்டியைப் பார்த்து புலி சிரிப்பது போல் சிரிப்பு.



''வேதா. உன் திட்டம் எனக்குத் தெரியாது. நீ என்னை எப்படிக் கொல்லப் போகிறாய் என்று எனக்குத் தெரியாது. உன் மன வலிமை எவ்வளவு தூரம் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் உன்னை விடுவதாக இல்லை.''

''பிரகாஷ் என்ன பேசுகிறாய் நீ?'' என்று கீறிச்சிட்டாள் வேதா.

''நான் உன்னைக் கொல்லாமல் கொல்லப் போகிறேன். நீ அவ்வளவு பலசாலியா? இரண்டு பேரை எலும்புகூட கிடைக்காதபடி கொல்லும் அளவுக்கு நீ கொடுமைக்காரியா? உனக்கு அடியாட்களா? என்னை ஏரிக்கரையிலேயே அடித்துக் கொல்ல ஏற்பாடு செய்து விட்டு, நீ ஒன்றும் நடக்காதது போல் வீடு திரும்பி விட்டால் நான் ஏமாந்து விடுவேனா? உன்னை நான் பஸ்ஸில் இருந்து காப்பாற்றவில்லை. நீ கைப்பிடியைப் பிடித்த கையை இழுத்து சாலையில் சுழற்றிப் போட்டவன் நான்தான். பஸ் சக்கரத்தில் மாட்டுவாய் என்று பார்த்தேன். தப்பித்து விட்டாய். இன்றைக்கு மாயாவைக் கொன்றுவிட்டு என்னைப் பார்த்து ஒன்றும் அறியாதவள் போல் சிரிக்கிறாய். உன்னை விடமாட்டேன். யாரைத் தேடுகிறாய்? அம்மாவையா? கால், கை இல்லாமல் விழுந்த வளையா? அது ஒரு கதை. நான் பின்னியது. அப்புறம் என் காதலி. லாரியில் அடிபட்டுச் செத்தாள் என்று சொன்னேனே. அதுவும் நான் பின்னிய கதைதான். உனக்குத் தெரியும். ஆனால் தெரியாதது போல் நடித்துச் சிரித்து என்னுடன் வந்திருக்கிறாய். உன் நெஞ்சமுத்தம் என்னைப் பிரமிக்க வைக்கிறது. எப்படியும் நீ சாகத்தான் போகிறாய். அதற்குமுன் உன்னைத் தொடாமல் விட்டால் நான் ஆண் என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தமே இல்லை.. அதனால்...''

பிரகாஷ் அவளை நெருங்கினான்.

வேதாவிற்கு ஒன்றும் புரியவில்லை. இரண்டு பேரைக் கொன்றாளா? அவனை ஏரிக்கரையில் அடித்தாளா?

மாயாவைக் கொன்றாளா? என்ன இது என்ன சொல்கிறான் அவன்?

பைத்தியம். உண்மையிலேயே பைத்தியம். சைக்கோ பத்.

அவளைக் கெடுத்து விட்டுக் கொன்றபின்தான் அவன் வெறி அடங்கும். துந்தனாக்காரனின் வாக்கு பலிக்கப் போகிறது.

வேதா.. ஓடு.. ஓடு.. தப்பித்து ஓடு.எப்படியாவது தப்பித்துக் கொள்.

பிரகாஷ் என்னும் மோகன் அவளை இன்னும் நெருங்கிக் கொண்டிருந்தான்.

வேதா மூலையில் மாட்டிய பூனை போல் கண்களில் பாப்பா மின்ன அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



## 14

வேதா தன்னைச் சுற்றிலும் பார்த்தாள்.

ஏதாவது ஒரு ஆயுதம். ஒரு கம்பி. ஒரு கல். ஒரு பூ ஜாடி. ஒரு பழக்கத்தி - ஏதாவது ஒன்று.

ம்ஹூம். அவளுக்கென்று உதவ அந்த வீட்டில் எதுவுமில்லை. அழுக்கும் தூசியும் நிறைந்த காலியான பாழடைந்த வீடு அது.

அவள் நோக்கத்தைப் புரிந்து கொண்டு மோகன் சிரித்தான்.

''உன்னைப் பற்றி தெரியும் வேதா. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் இல்லையா? அதான் எதுவும் கிடைக்காமல் பார்த்துக் கொண்டேன். நோ சான்ஸ். நீ தப்பிக்கவே முடியாது.



பயம் தன் கூர்மையான நகங்களால் அவளை உடம்பெங்கும் பிறாண்டியது. வயிற்றில் சிக்கி எலி பிறாண்டுவது போல. அட்ரினலின் கூடுதலாய்ச் சுரந்தது. கைகளில் வளர்ந்திருந்த நகங்கள்தான் ஆயுதம்.

வேதா சட்டென்று அவன் மேல் பாய்ந்தாள்.

மோகன் விலகினான். அவளைப் பிடிக்கப் பார்த்தான். உதைத்தாள். கண்ணாடி வளையல்களை அவன் முகத்தில் உடைத்தாள். அடித்தாள். கடித்தாள். திமிறினாள். தாவினாள். கதவை நோக்கி ஓடினாள்.

சட்டென்று தாளை நீக்கி வெளியே பாய்ந்தாள்.

அது இன்னொரு அறை என்று அப்புறம் புரிந்தது. வீட்டுக்கு வெளிப்புறம் செல்லும் கதவு என நினைத்திருந்தாள். சுழன்று, சுழன்று திரும்பியதில் கதவு மாறிப் போனதைக் கவனிக்காமல் -

கடவுளே! கடவுளே!

எனக்கு மட்டும் ஏன் இப்படி?

அவன் வருவதற்குள் கதவைச் சாத்தி அதன் மீது தன் முழு பாரத்தையும் அழுத்தினாள்.

அவன் கதவை மோதினான். அவள் முதுகு அதிர்ந்தது.

திறந்து விடுவான். திறந்து விடுவான்.

கதவை இன்னும் நன்றாக அழுத்தினாள். முதுகின் பின்னால் கதவு மோதுவது நின்றது.

என்ன செய்கிறான் அவன்?

வேதா நின்றிருந்த அறையில் வேறு ஏதோ ஓரிடத்தில் கதவு திறந்து அவன் நுழைந்தான். ப்ஹா ப்ஹா என்று

உறுமலாய் மூச்சிரைத்தான். புள்ளிச் சிறுத்தை போல் தெரிந்தான்.

வேதா தான் சாய்ந்திருந்த கதவைத் திறக்கப் பார்த்தாள். முடியவில்லை. வெளிப்புறம் தாள் போடப்பட்டிருந்தது.

அவன் விகாரமாக சிரித்தான்.

வேதா பார்த்தாள். கண்ணெதிரே கம்பிகள் இல்லாத ஜன்னல். அதை நோக்கிப் பாய்ந்தாள்.

அவன் குறுக்கில் பாய்ந்தான்.

வேதாவின் புடவை அவன் கையில் சிக்கியது.

''இந்தப் புடவையுடன்தானே மாயாவைக் கொன்றாய். இது எதற்கு உனக்கு?''

இழுத்தான். பைத்தியம்! பைத்தியம் உளறுகிறது!

வேதா ஒரு சுவரில் மோதி தடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டது போல் நின்றாள். கால்களை உதைத்தாள். அவன் இழுத்தான். குனிந்து கீழே கிடந்த ஏதோ ஒன்றை எடுத்து அவன் மேல் எறிந்தாள்.

அவன் நெருங்கி வந்தான். வேதா தன் தலையைக் குனிந்து அவன் முகத்தில் மோதினாள்.

சரியான மோதல் அது.

அவன் மூக்கில் இருந்து சிகப்புக் கோடு வழிந்தது. முகத்தைப் பொத்திக் கொண்டான்.

அந்த ஒரு கணம் வேதாவிற்குப் போதுமானதாக இருந்தது.

ஜன்னல் கதவைத் தள்ளித் திறந்தாள். யோசிக்காமல் வெளியே குதித்தாள். குதித்தது ஒரு மேட்டின் மேல். சரிவு அவளைச் சரிக்கப் பார்த்தது. உருட்டியது. எழுந்தாள். வெளியே இருட்டி இருந்தது.



ஓடினாள். திசை புரியாத ஓட்டம்.

பின்னால் காலடியின் தபதப. அவனும் துரத்துகிறான்.

இன்னும் வேகமாக ஓடினாள். இருட்டில் எதிலோ தடுக்கி விழுந்தாள்.

பூமியில் புதைந்திருந்த ஒரு மரத்தின் வேர்ப்பகுதி.

சட்டென்று மரத்தின் பின்னால் உட்கார்ந்தாள்.

அவனுடைய அசைவுகள் அவள் கண்களுக்குத் தெரியாவிட்டாலும் காதுகளுக்குக் கேட்டன. வேதாவின் நரம்புகள் விடைத்துக் கொண்டன. தொண்டை வறண்டிருந்தது. உடம்பெங்கும் வியர்வை ஊற்றெடுத்தது.

அவளுக்கு சற்று தூரத்தில் ஒரு டார்ச் வட்டம் மெல்ல நகர்ந்தது.

வேதா இன்னும் ஒடுங்கிக் கொண்டாள். அவள் கால்களில் ஏறி ஒரு எலி மிரண்டு ஓடியது. அவள் மூச்சை இறுக்கிப் பிடித்தாள். அவளுக்கு அருகில் ஒரு மரக்கிளை முறிந்து கிடந்தது.

அதை எடுத்தாள்.

அந்த சரசரப்பு அவனைக் கவர்ந்தது.

டார்ச் வெளிச்சம் அவள் முகத்தில் விழுந்து நிலைத்தது. கண்கள் கூசின. வேதா, தன் கையில் இருந்த மரக்கிளையால் அவன் மார்பில் அடித்தாள்.

மரக்கிளை இரண்டாய் முறிந்தது. டார்ச் எகிறியது. அவன் மல்லாந்து விழுந்தான்.

வேதா திரும்பிப் பார்க்காமல் ஓடினாள்.

பூமி சுருண்டும், புரண்டும் சீரில்லாமல் இருக்க கவலைப் படாமல் ஓடினாள். அவன் எழுந்திருப்பதற்குள் அவனுக்கும்

அவளுக்கும் இடையில் நூறடி இடைவெளி. அங்கங்கே மரங்கள், செடி கொடிகள், கோரைப் புற்கள்.

எங்கே ஃபிங்கர் போஸ்ட்டு? எங்கே வீடு?

வேதா இதயத்தைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினாள். சரேலென்று பூமி மேடேறியது. மூச்சிரைக்க ஏறினாள்.

ஃபிங்கர் போஸ்ட்.

வீடு நோக்கி ஓடினாள். அவள் வீட்டுக்குச் செல்லும் தார்ச் சாலை. ஐயோ. யாரும் இருக்க மாட்டார்களா? என்ன ஊட்டி இது? இப்படி ஆறரை மணிக்கே மக்கள் தத்தம் வீடுகளில் குளிருக்குப் பயந்து முடங்கிப் போக.

அவள் வீட்டுக்குச் செல்லும் இருட்டுப்பாதை.

கற்கள் இடறின. எங்கிருந்தோ ஓர் ஆந்தை கழ்க் கழ்க் என்றது.

வவ்வால் ஒன்று அவள் முகத்தை அடித்துப் பறந்தது.

அவள் பாறைக்கற்களில் கால் வைத்து இடறி விழுந்து எழுந்து ஓடினாள். அதோ வீடு. அதோ வீடு.

வீட்டை நெருங்கினாள்.

வாசல் விளக்கு வெளிச்சத்தில் காலையில் பார்த்த ரோஜா இதழ் இதழாய்ப் பிய்த்து கீழே கிடந்தது தெரிந்தது.

அதன் கீழ் ஒரு பொம்மை இருந்தது. சின்ன பெண் பொம்மை. அந்த பொம்மை அவளை நினைவுபடுத்தியது. அதன் கழுத்தில் ஒரு சின்ன கயிறு இறுக்கப்பட்டிருந்தது.

என்ன இது?

அந்த பொம்மை வேதாவை நினைவுபடுத்தியது.



பிரகாஷ் வெறும் பைத்தியமா? இல்லை ஆவியா? இல்லை மந்திரவாதியா?

அம்மா எங்கே? அம்மா எங்கே?

''அம்மா.. அம்மா.''

பதில் இல்லை. வீட்டுக்குள் நுழைந்தாள்.

எல்லா அறைகளிலும் இருட்டு. அம்மா இல்லை. வீட்டை திறந்து போட்டு விட்டு அம்மா எங்கே போயிருப்பாள்?

வேதா தனது படுக்கையறைக்குள் நுழைந்தாள். விளக்குப் போட்டாள். அவள் தலையில் ஏதோ இடித்தது.

என்னவென்று பார்த்தாள்.

இரு கால்கள்.

அவ்வளவுதான்.

வேதாவின் தொண்டையில் இருந்து இனம் புரியாத ஒரு ஒலி பீறிட்டு, வெடித்துக் கிளம்பியது.

அவள் அப்படியே சரிந்தாள்.

அவளது இதயம் தனது துடிப்பை மெல்ல மெல்ல குறைத்துக் கொள்ளத் தொடங்கியது.



## 15

வேதாவை மயங்கி விழச் செய்த அந்தக் கால்கள் இன்னொரு பொம்மைக்குச் சொந்தமானவை. அது கொஞ்சம் பெரிய சைஸ் பொம்மை. அதன் கழுத்தில் ஒரு கயிறு கட்டப்பட்டு வீட்டுக் கூரையில் இருந்து தொங்கியது. ஊசலாடியது. அது பார்ப்பதற்கு வேதாவைப் போல் இருந்தது. வேதாவின் புடவை ஒன்றைக் கட்டிக் கொண்டு வேதாவின் முத்துமாலை ஒன்றை மாட்டிக் கொண்டு, வேதாவின் தலைமுடி போலவே படர

விட்டு ஒரு கிளிப் மாட்டி, அதில் ஒரு ஒற்றை ரோஜா செருகப்பட்டு...

வேதாவின் அம்மா படபடப்புடன் வீட்டில் நுழைந்தாள்.

மாலை ஐந்து மணி சுமாருக்கு அவள் வீட்டில் டீ தயாரித்துக் கொண்டிருந்த போது ஒரு சிறு பையன் வீட்டுக் கதவைத் தட்டினான்.

''வேதாக்கா பஸ்ஸில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறாள்'' என்ற தகவலைச் சொல்லி விட்டு ஓடி விட்டான்.

போட்டது போட்டபடி போட்டுவிட்டு, நெஞ்சம் வெடிக்க கதவுகளை எல்லாம் திறந்து போட்டுவிட்டு அவள் ஓடினாள்.

எந்த ஆஸ்பத்திரியிலும் வேதா இல்லை.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. வந்தவன் யார்? ஏன் அப்படிச் சொன்னான்? சரியா வீடு பார்த்துதான் வந்தானா?

பேக்கரிக்கு போன் செய்து கேட்டால், வேதா நான்கு மணிக்கே புறப்பட்டு விட்டதாக கடைப்பையன் ஒருவன் செய்தி சொன்னான்.

வேதாவிற்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது. கடவுளே. கடவுளே. காப்பாற்று. வேதா வீட்டில் இருக்கிறாளா என்று தெரிந்து கொள்ள வீட்டிற்குள் நுழைந்தாள். வீடு திறந்து இருந்தது. அது சரி. ஆனால் விளக்குகள் எப்படி எரிகின்றன?

''வேதா.''

அவளது படுக்கையறையில் தரையில் பரவிக்கிடந்த வேதாவைப் பார்த்தாள். அவள் புடவை எல்லாம் ரத்தம்.

அம்மாவிற்கு எதுவும் புரியவில்லை.

''வேதா'' என்று தீனமாக அலறினாள்.



டாக்டர் கைகளைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

''என்ன டாக்டர்? எப்படி இருக்கிறாள் எங்கள் மகள்?''

''அவளுக்கு ஒன்றுமில்லை. சரியாகி விடுவாள். ஏதோ அதிர்ச்சி. ரொம்பப் பயந்து போயிருக்கிறாள். அதனால் அவளுடைய கரு கலைந்து விட்டது. அபார்ஷன் ஆகிவிட்டது. ஐ'ம் ஸாரி'' என்றார் டாக்டர்.

''அபார்ஷனா... டாக்டர்... வேதாவிற்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை டாக்டர்.''

''ஐ'ம் வெரி, வெரி ஸாரி. அதற்கு நான் என்ன பண்ண முடியும்? அவளுக்கு இதுதான் நடந்திருக்கிறது. அவள் கண்விழித்தவுடன் கண்டபடி பேசாதீர்கள். மனம் வெறுத்துப் போய் உங்கள் பெண் உங்களுக்கு இல்லாமலேயே போய்விடக் கூடும்.''

வேதாவின் அம்மாவும், அப்பாவும் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

மோகன் தன் அறைக்குள் நுழைந்தான்.

அவன்தான் பொம்மைகளை கயிறு கட்டி மாட்டியிருந்தவன், அவன்தான் ஒரு பையனைப் பிடித்து வேதாவின் அம்மாவை வீட்டை விட்டு வெளியில் அனுப்பியவன்.

வேதாவைத் தன் கைப்படக் கொல்லும் எண்ணம் அவனுக்கு இல்லை.

எவ்வளவு பலசாலியாக இருந்தாலும் அமானுஷ்யமான விபரீதங்கள் ஒரு மனிதனின் இதயத்தை வெடிக்கச் செய்ய வல்லவை என்று அவனுக்குத் தெரியும்.

அந்த அதிர்ச்சியைத்தான் அவன் அவளுக்குத் தந்தான்.

அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. வேதாவைக் கற்பழித்து விடுவது போல் ஒரு துரத்தல். அவள் முன் ஒரு பைத்தியக்கார வேஷம். துந்தனாக்காரன் போல் வேஷம் போட்டு அவன் சொன்ன வாக்கு. தூக்கில் தொங்கும் பொம்மை.

ஒரு பெண் செத்துப் போக இவை போதும் என்று தீர் மானித்தான்.

வேதாவை ஆஸ்பத்திரிக்கு அள்ளி எடுத்துப் போவதைப் பார்த்தவுடன் அவன் புருவங்கள் உயர்ந்தன.

வேதா இன்னுமா சாகவில்லை?

அவனும் ஆஸ்பத்திரிக்குப் போனான்.

வேதாவின் கரு கலைந்த செய்தி கேட்டு அவன் மனம் சந்தோஷப்பட்டது.

தினகரை அவள் மிரட்ட அவள் கரு ஒரு காரணம். அந்தக் காரணம் இப்போது இல்லை. மிஞ்சியிருப்பது இன்னும் ஒரே ஒரு ஆயுதம்தான்.

தினகர் அவளுக்கு எழுதிய கடிதங்கள். அவை எங்கே என்று தேடிக் கண்டு பிடித்துவிட்டால் தினகரை அவள் மிரட்ட முடியாது.

அந்தக் கடிதங்களை எப்படியாவது மீட்க வேண்டும்.

அவனுக்குக் களைப்பாக இருந்தது. தூங்க வேண்டும் போல் இருந்தது.

'நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்த நேரத்தில் அவன் தானாகத் தூங்கிப் போனான்.

''பாவி.. பாவி! இப்படிச் செய்து விட்டாயே சொல்லு. யார் அவன்?''

அம்மாவும், அப்பாவும் நூறாவது முறையாகக் கேட்டார்கள்.

வேதா உதடுகளை இறுக மூடிக் கொண்டிருந்தாள். அம்மா அடித்த அறைகளை மவுனமாகத் தாங்கி கொண்டாள்.



வெளியில் உலகம் இன்னொரு புதுக்காலையைத் தொடங்கி இருந்தது.

இரவு அவள் அடைந்த பீதிகளுக்கெல்லாம் ஒரு முடிவு ஏற்பட்டிருந்தது. இனி இரவுகளே வராமல் இருந்தால் நல்லது எனத் தோன்றியது. பசித்தது.

''பசிக்கிறது அம்மா'' என்றாள்.

''செத்துப் போ. உனக்கு ஒன்றும் கிடையாது. யார் அவன் என்று சொல். அவன் காலில் விழுந்தாவது உன்னை ஏற்றுக் கொள்ளச் சொல்கிறேன்'' என்றார் அப்பா.

''பசிக்கிறது.''

''ச்சீ. தரித்திரமே. எனக்குப் பெண்ணே பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறேன்.வாடி. என்ன நெஞ்சழுத்தம் அவளுக்கு. யார் என்று சொன்னால்தான் அவளுக்கு எதுவும் கொடுக்க வேண்டும். அதுவரை பச்சைத் தண்ணீர் கூட அவளுக்கு நீ கொடுக்கக் கூடாது.''

தினகர்.

என் நிலையைப் பார்த்தீர்களா தினகர்?

ஆறு நாட்களில் சாவேன் என்று எவனோ ஒருவன் துந்தனாவை மீட்டிச் சொல்லிவிட்டுப் போகிறான்.

என்னைக் கொன்றுவிட வேண்டும் என்று ஒரு பைத் தியக்காரன் துரத்துகிறான்.

வீட்டில் என்னை மாதிரியே பொம்மை தூக்கில் தொங்கி என்னை சாகச் சொல்கிறது.

இப்போது அம்மாவும், அப்பாவும் செத்துப்போகச் சொல் கிறார்கள்.

தினகர் நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். ஏழு நாள் கெடுவிற்கு இன்னும் இரண்டு நாட்கள் தானே இருக்கின்றன.

அதுவரை பொறுக்க முடியாது தினகர்.

வேதா எழுந்தாள். அறைக்கதவு திறந்து மெல்ல வெளிப் பட்டாள். அவள் உடல் வெகு பலவீனமாக இருந்தது. நடக்க முடியாமல் தவித்தாள்.

இருப்பினும் காலை நேரக்காற்று ஆறுதலாக இருந்தது.

''எங்கே போகிறாய்?'' என்று நர்ஸ் அவள் பாதையை மறித்துக் கேட்டாள்.

''டெலிபோன் பண்ண வேண்டும். இங்கே டெலிபோன் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டாள் வேதா.

அறைக் கதவு தடதடவென்று தட்டப்பட்டது.

மோகனின் அபாரமான தூக்கம் தடைப்பட்டது. எழுந் தான். வெளியே விடிந்து விட்டிருந்தது.

கதவைத் திறந்தான். லாட்ஜ் பையன் நின்றிருந்தான்.

''என்னடா?''

''இந்தக் கவர் உங்களுக்கு வந்ததுங்களாம் சார். முந்தா நேத்தே. மானேஜர் மறந்துட்டாராம்'' என்று பையன் ஒரு கவரை நீட்டினான். போய் விட்டான்.

அது கொஞ்சம் பெரிய கவர். பாரமாய் இருந்தது. என்ன இருக்க முடியும் அதற்குள்?

பிரித்தான்.

உள்ளே இருந்து ஒரு டைரி வழுக்கிக் கொண்டு வந்தது.

திறந்தான்.

மாயாவின் அந்தரங்கம் என்று முதல்பக்கத்தில் எழுதி யிருந்தது.

**இந்த டைரியை**

**நீங்கள்**

**புரட்டுகிறீர்கள் என்றால்**

**நான்**



**உயிருடன்**

**இல்லை.**

**மாயா.**

மாயாவின் கையெழுத்தில் மாயா எழுதிய டைரி.

அவன் மனம் துணுக்குற்றது. மாயா இதை எப்போது அனுப்பினாள்? டைரியைப் புரட்டினான். அதைப் படிக்கப் படிக்க அவன் முகம் பலவாறு மாறியது. ஸ்டேஜ் ட்ராமாவில் கதாநாயகன் அழுவதை, சிரிப்பதை, ஆத்திரப்படுவதை, கோபப்படுவதை எல்லாம் கலர் கலர் விளக்குகளால் ஃபோகஸ் செய்து மாற்றி மாற்றிக் காட்டுவார்களே.. அது மாதிரி அவன் முகம் மாறியது.

மாயாவைக் கொன்றது வேதா இல்லை.

ஐயோ, மாயாவைக் கொன்றது வேதா இல்லை.

யார் கொன்றது என்பதையும் டைரி சொல்லியது.

இந்த டைரி ஒரு நாள் முன்னதாக அவனிடம் வந்திருக்கக் கூடாதா?

சட்டென்று மண்டையில் ஒரு மின்னல் அடித்தது.

மாயாவிற்கு நேற்று போன் பண்ணிய போது, 'டைஹி டைஹி' என்று ஏதோ ரகசியமாகக் கேட்ட போது என்னவோ, ஏதோ என்று நினைத்தது எவ்வளவு தப்பு?

'டைஹி, டைஹி' என்று மாயா சொன்னது டைரியைக் குறிப்பிட்டுத்தானா?

இந்த டைரியை அவன் முன்னாலேயே கொண்டு வந் திருந்தால்.. வந்திருந்தால் மாயாவை இழந்திருக்க மாட்டேனே...

இப்போது என்ன செய்வது? என்ன செய்வது?

மோகன் உடன் புறப்பட்டான்.

வேதா நம்பர் ஒற்றி விட்டுக் காத்திருந்தாள்.

அவள் தொடர்பு கொண்டது தினகரின் பார்சனல் நம்பருடன். எதிர்முனையில் மணி போயிற்று.

காத்திருந்தாள்.

போன் எடுக்கப்பட்டு, தினகரின் குரல் ''ஹலோ'' என்று ஒரு நாயின் குறைப்பாக வெளிப்பட்டது.

''தினகர், நான் வேதா பேசுகிறேன் தினகர்'' என்றாள்.

''வேதாவா, நீ இன்னும் சாகவில்லை?'' என்று தினகரின் குரல் அவள் காதில் ஈயத்தைப் பாய்ச்சியது.

ரிசீவரை பொம்மை போல் மாட்டினாள் வேதா.

''வேதாவா. நீ இன்னும் சாகவில்லை?'' என்று கேட்டு விட்டு ரிசீவரை பொட்டென்று தினகர் வைத்து போது, மோகன் அந்த அறைக்குள் நுழைந்தான்.

''ஹலோ தினகர்'' என்றான்.

''மோகன். வாட் ஹாப்பண்ட்? வேதா இப்போதுதான் போனில் பேசினாள்'' என்று எலும்பைத் தொலைத்த நாய் போல தினகர் கத்தினான்.

''தினகர் நான் உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும்'' என்றான் மோகன்.

வேதா முடிவு செய்துவிட்டாள்.

தினகர்கூட அவள் உயிர் வாழ்வதை விரும்பவில்லை. இனிமேல் அவளுக்கு வாழ்க்கையில் எதுவும் மிச்சம் இல்லை, வாழ்வில் நம்பிக்கையும் இல்லை.

வீட்டில் தினகர் அவளுக்கு எழுதிய கடிதங்கள் இருக் கின்றன. அவற்றை அழித்துவிட வேண்டும். அவள் செத்த பின் அம்மா, அப்பாவிற்கு தினகரைப் பற்றித் தெரிய வந்தால் விபரீதங்கள் மேலும் வெடிக்கும். தினகர் பணம் படைத் தவன். அவனிடம் போய் அம்மாவும் அப்பாவும் மோதினால் அவன் தன்னுடைய பண பலத்தாலேயே அவர்களை நசுக்கி



விடுவான். அம்மா, அப்பாவிற்கு அந்தக் கடிதங்கள் கிடைக்கக் கூடாது.

அவள் தன் அறைக்குச் சென்றாள்.

அழைப்பு மணியை அழுத்தினாள்.

ஆஸ்பத்திரி நர்ஸ் வந்து எட்டிப் பார்த்தாள்.

''என் அம்மா, அப்பா இருந்தால் கூப்பிடுங்கள் சிஸ்டர்.''

''என்ன?'' என்று கோபத்துடன் அம்மா வந்து நின்றாள்.

''என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவன் யார் என்று தெரிய வேண்டும். அவ்வளவுதானே?''

''ஆமாம்.''

''அந்த பிரகாஷ்தான். என்னை பஸ்ஸில் இருந்து காப்பாற்றியதாகச் சொன்னானே. அவன்தான். அவன் ஒரு பைத்தியம். அது எனக்கு நேற்றுதான் தெரிந்தது. முடிந்தால் அவனைத் தேடிக் கண்டு பிடிக்கச் சொல். கண்டுபிடித்து அவனை எனக்குக் கல்யாணம் பண்ணி வைத்தாலும் சரி, இல்லை, அவனைக் கல்லால் அடித்துக் கொன்றாலும் சரி, எதுவும் எனக்கு சம்மதம்தான்.''

அம்மா விக்கித்துப் போய் நின்றாள்.

''என்னை வீட்டுக்குக் கூட்டிப் போ. பசிக்கிறது.''

அம்மா உருண்டை பிடித்துத் தந்த சாதத்தை சாப் பிட்டாள் வேதா. கடைசி வேளை உணவு. அவளால் கண் ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் கன்னத்தில் வழிந்த நீரைப் பார்த்துவிட்டு, வேதா நடந்ததை நினைத்து அழுவதாக எண்ணினாள்.

வேதா நடக்கப் போவதை எண்ணி அழுவது தெரிந்திருந் தால் அம்மா என்ன செய்திருப்பாளோ!

சாப்பிட்ட பின் அறைக்கு வந்தாள். அவளுடைய அலமாரி யில் கீழ்த்தட்டில் பத்திரங்கள் வைப்பதற்கென இருந்த

ரகசியத் தட்டில் ஒளித்திருந்த தினகரின் கடிதங்களை எடுத்தாள். படித்தாள்.

ஒவ்வொன்றாக தீ வைத்துக் கொளுத்தினாள்.

எல்லாம் எரிந்து முடிந்ததும் ஒரு பெருமூச்சு விட்டாள்.

எழுந்தாள். அம்மா அவளைக் கவனிக்காத ஒரு தருணத்தில் வீட்டை விட்டு வெளியேறினாள்.

கோல்ஃப் கிளப் தாண்டி காட்டுக்குள் ஒரு பாதை மேடேறியது.

அந்தப் பாதையில் நடந்தாள் வேதா.

பாதையின் முடிவில் ஒரு சிகரம் வரும். சிகரத்தின் மறுபக்கம் பள்ளத்தாக்கு. தினகரும் அவளும் அங்கேதான் சந்திப்பது வழக்கம்.

பிரகாஷ் எப்படி அதே இடத்தைச் சொன்னான் என்று அவளுக்குத் தெரியவில்லை. இருந்தும் அந்த சிகரத்தை நோக்கி நடந்தாள்.

அங்கிருந்து குதித்து விட்டால் போதும் -

எலும்பு கூட மிஞ்சாது. அங்கே வந்து தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடும் என்று யாரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

அம்மாவிற்கோ, அப்பாவிற்கோ அவளது உடல்கூட கிடைக்கக் கூடாது. அவள் செத்துப் போனது தெரிந்தால் வேதனை அதிகரிக்கும். வாழ்நாள் முழுக்க அவள் சாவு அவர்கள் நினைவில் பாரமாகிப் போகும்.

அவள் செத்ததே தெரியாமல் போய்விட்டால், 'வேதா எங்கோ ஓடிவிட்டாள்' என்று நினைத்துக் கொள்ளக் கூடும். திட்டக்கூடத் திட்டுவார்கள். அவள் குடும்பத்தில் இல்லாததே நல்லது என்று நினைப்பார்கள்.



வேதா சிகரத்தை அடைந்தாள்.

தூரத்தில் சூரியன் மேகங்களுக்கிடையில் தங்கமாய் ஒளிர்ந்தான். மரக்கிளைகளில் பட்சிகள் வந்து அடைந்து கொண்டிருந்தன.

காற்று ஜூம், ஜூம், என்று இடைவிடாமல் ரீங்கரித்தது.

இந்த இடம்தான் தினகர் அவளை இடுப்பில் தொட்டது.

இந்த இடத்தில்தான் தினகர் அவள் மடியில் படுத்தது.

இந்த மரத்தடியில் இருக்கும் புல் படுக்கையில்தான்....

வேதா கண்களை மூடிக் கொண்டு, தீர்மானமாக சிகரத்தை நோக்கி நடந்தாள்.

''துணைக்கு நானும் வரலாமா வேதா?'' என்று ஒரு குரல் அவளை அறைந்தது.

வேதா வீலென்று கத்திக் கண்களைத் திறந்தாள்.

எதிரில் அவள் வழியை மறித்துக் கொண்டு பிரகாஷ் நின்றிருந்தான்.



## 16

''என் பெயர் மோகன். பிரகாஷ் இல்லை. நான் ஒரு ரவுடி. அனாதை ரவுடி. தினகர் என்னைக் கூப்பிட்டு உன்னைக் கொல்லச் சொன்னான். இருபது லட்சம் காசு கேட்டேன். பத்து லட்சம் அட்வான்ஸ் வாங்கினேன். உன்னைக் கொல்வதற்காகப் புறப்பட்டேன்.

''ஒரு விஷயம் தெரிந்து கொள் வேதா. எனக்கு உன்னைக் கொல்லும் எண்ணமே கிடையாது. நான் வாழ்க்கையில் செட்டில் ஆகாதவன். நிரந்தர வருமானமில்லாதவன். அன்பு என்பதை அறியாதவன். அதனால் உன்னைக் கொல்வதை விட, வேறொரு எண்ணத்தைச் செயல்படுத்தலாம். நீ சம்மதித்தால் என்றுதான் உன்னை அணுகினேன்.

''ஆனால் நடுவில் மாயா என்னைச் சந்தித்தாள். என்னிடம் தன்னைக் கொடுத்தாள். நீ மிகப்பெரிய கொலை காரி என்றாள். என் ஆண்மையை அது சீண்டியது. அதற்கேற்ற மாதிரி ஏரிக்கரையில் என்னை நான்கு பேர் உன் ஆட்கள் போல் அடித்தார்கள்.''

''அதனால் உன்னைக் கொல்வது என்று தீர்மானித்தேன். கொலைக் குற்றத்திற்காக ஜெயிலுக்குப் போனதில்லை. எனவே என் கையால் நான் உன்னைக் கொல்வதை விட, நீயே தற்கொலை முடிவிற்கு வர வேண்டும் என்று விரும் பினேன். அதன் முதல் கட்டமாகத்தான் கோயமுத்தூரில் துந்தனாக்காரன் போல் வேஷம் போட்டு 'ஆறு நாட்களில் நீ சாவாய்' என்று சொல்லி ஒரு பய விதையை உனக்குள் விதைத்தேன்.''

''அப்புறம் ஊட்டி பஸ் விபத்து. அது நான் எதிர்பாராத ஒன்று. நானும் உன்னை பஸ்ஸில் இருந்து இழுத்தேன் என்றாலும் பஸ்ஸின் டயருக்கடியில் நீ சிக்கிச் சாகிற மாதிரி இல்லை. நீ தப்பித்தாய். ஆனால் பயம் அதிகரித்தது.''

''மறுநாள் காலை உன்னைச் சந்தித்து விட்டு மாயாவிடம் இருந்து அழைப்பு வந்தது என்று போனேன். மாயா செத்திருந்தாள். பாத்ரூமில் ஒரு வைரக்கல்லைத் தவற விட்டு ஒரு பெண் ஓடினாள். அது நீ. அப்படித்தான் நான் நினைத்தேன். உன்னைப் பழிவாங்கும் வெறி அதிகமாகி விட்டது.''

''மாலை உன் வீட்டிற்கு ஆளனுப்பி, உன் அம்மாவை அகற்றினேன். பொம்மைகள் இரண்டை தூக்குப் போட்டுத் தொங்க விட்டு வந்து உன்னைச் சந்தித்து ஒரு ஒதுக்கப்பட்ட வீட்டிற்குக் கூட்டிப் போய் உன்னை மிரட்டினேன். அங்கேயும் உன்னைக் கொல்ல நினைக்கவில்லை. உன் சாவைத் தேடி நீயே ஓடுகிற மாதிரி பயமுறுத்தி விரட்டினேன். உன் கரு கலைந்தது. நீ ஆஸ்பத்திரியில்.''



''அப்போதுதான் மாயாவிடமிருந்து ஒரு டைரி வந்தது. அதில் மாயா சில உண்மைகளை எழுதியிருந்தாள். தின கரிடம் இருந்து உன்னை ஒதுக்கிவிட்டு, அவனைத் தான் அடையத் திட்டம் போட்டிருந்தாள் மாயா. அவளுடைய காதல் தினகரிடமிருந்த கரன்ஸியின் மீது.

''இந்தத் திட்டத்திற்கு தினகரின் இங்கிலீஷ் செக்ரட்டரி உதவினான். நான் உன்னைக் கொல்லாமல் விட்டு விட்டால் என்ன செய்வது என்றுதான் மாயா என்னை வரவழைத்து உன்னைப் பற்றி ஒரு ராட்சசியாக படம் போட்டுக் காட்டினாள். இங்கிலீஷ் செக்ரட்டரி வைத்த ஆட்கள், உன் ஆட்கள் என்று சொல்லி என்னை ஏரிக்கரையில் அடித்துப் போட்டார்கள்.''

''நான் உன் மேல் கோபம் கொண்டு துரத்தத் தொடங் கினேன். எல்லாம் சரியாக நடந்த நேரத்தில் செக்ரட்டரிக்கும் மாயாவிற்கும் சண்டை. பணப் பங்கீட்டில் செக்ரட்டரி மாயாவை ஒதுக்கி விட்டு இன்னொரு சாயாவை ஏற்பாடு செய்து அவளை வைத்து தினகரை வளைக்கத் திட்டம் போட்டான். மாயா இடைஞ்சல் என்று அவளைக் கொன்று விட்டான். நான் அங்கே வரப் போகிறேன் என்பதை யூகித்து பாத்ரூமில் காத்திருந்து ஒரு ஷாம்பு பாட்டிலை உடைத்து அதில் ஒரு வைரக் கல்லைத் தவற விட்ட மாதிரி, போட்டு, உன் மாதிரி புடவை கட்டித் தப்பித்து ஓடினான்.''

''உனக்கு தினகர் ஒரு புடவை எடுத்தால் அதே மாதிரி ஒரு புடவை மாயாவிற்கும் எடுப்பான் என்று உனக்குத் தெரிந் திருக்காது. செக்ரட்டரிக்குத் தெரியும். மாயாவின் சாவை போலீஸ் திருட்டுக்காக நடந்த சாவு என்று பத்திரிகைகளில் செய்தி கொடுத்து விட்டது.''

''ஆனால் மாயாவின் டைரி எனக்கு உண்மைகளைச் சொல்லி விட்டது. நான் தினகரைப் பார்த்துப் பேசினேன். செக்ரட்டரி இப்போது போலீஸ் கஸ்டடியில். அவளுக்கு

உதவ வந்த இன்னொரு பெண்ணும் போலீசில். தினகர் இன்னும் பல பெண்களை சமாளிக்க வேண்டி இருக்கிறது.''

''நான் அவனிடம் சொன்னேன். 'எனக்கு பேசியபடி இன்னும் 10 லட்சம் கொடு. நானும் வேதாவும் உன் வாழ்க்கையில் இருந்து காணாமல் போய் விடுகிறோம்' என்று. கொடுத்தான். இப்போது என்னிடம் 20 லட்சம். உன்னைத் தேடி வந்தால் நீ தற்கொலை நோக்கிப் போய் கொண்டிருந்தாய்.''

''வேதா, மை டியர். நான் உன்னை உண்மையாகக் காதலிக்கிறேன். என் ஹியரிங் எய்ட் ஒரு வேஷம். நான் பைத்தியம் இல்லை. ஆனால் உன்மேல் பைத்தியம் ஆகிவிட்டேன். இவ்வளவு அப்பாவியான உன்னைப் பாடாய்ப் படுத்தியதை நினைத்தால் எனக்கு என் மேல் வெறுப்பு வருகிறது. தினகரிடம் நீ ஏமாந்தது உன்னை அறியாமல் நடந்தது. பணத்திற்காக நீ அப்படி நடந்து கொள்ளவில்லை. அது ஒரு மோசமான கனவு. மறந்து விடு. தினகர் உனக்கு ஏற்றவன் இல்லை. நான் உனக்கு ஏற்றவன் என்று நினைத்தால், வா சேர்வோம். இருபது லட்சத்தில் ஒரு புது வாழ்க்கையைத் தொடங்குவோம்.''

''இல்லை. செத்துத்தான் போகப் போகிறேன் என்றால் சொல். நானும் வருகிறேன். சேர்ந்தே சாவோம். என் வாழ்க்கையின் ஒரு நம்பிக்கை நீ. என்னை மனிதனாக மாற்றியவள் நீ. நீயே இல்லையெனில் எனக்கு வாழ்க்கை வேண்டாம்.''

''வா. வேதா. வாழலாம். இல்லாவிட்டால் வா. வேதா சாகலாம்.''

வேதாவிற்கும் மோகனுக்கும் வேதாவின் அம்மா, அப்பாவே முன் நின்று கல்யாணத்தை நடத்தி வைத்தார்கள்.